www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka
பக்கம் 20
ரூபா 11/00
දිනමුරසු වාරමලර් ஜூலை 13–19,1997

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 213



## ஆபத்தான யுத்தமுனை

## பற்றி எரிந்த பயணிகள் கப்பல்

## முற்றுகைக்குள் முற்றுகை



## குஷ்பு கையாண்ட கைகுலுக்கல் தந்திரம்

சூடு – சுவை – சுவாரசியம் அது தான் தினமுரசு

படிப்பகம்

www.padippakam.com

# முரசம்

## கோயபல்ஸாக முடியுமா?

அன்புள்ள உங்களுக்கு
வணக்கம்.

ஹிட்லருக்கு
ஒரு கோயபல்ஸ்.
பொய்யை மெய்யாக்கும்
வாய்வித்தை தெரிந்தவன்!
கோயபல்ஸ்
செத்துப் போனான்.
கோயபல்ஸாக மாறுவதற்கு
யாரெல்லாமோ முயன்றும்
வெற்றி பெற்றாரில்லை.
கோயபல்ஸாக மாறுவதுகூட
அத்தனை சுலபமில்லை.
பொய் சொல்பவர்களெல்லாம்
கோயபல்ஸாக மாறவும் முடியாது!
உண்மை பேசுகிறவர்களெல்லாம்
காந்தியாக மாறவும் இயலாது!
சமீபத்திய
வானொலிச் செய்திகளை
செவிகொடுத்துக் கேட்டவர்கள்
என் முடிவை
ஏற்றுக் கொள்ளக்கூடும்!
கோயபல்ஸ்
சொன்ன பொய்கள்
ஹிட்லருக்கு
பிரமாதமாக உதவியிருக்கின்றன!
தங்களைக் கோயபல்ஸ்
என நினைக்கும் சிலர்
தங்கள் பொய்களால்
தங்கள் தரப்புக்களையே
சேதப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.
சமீபத்தில் ஒரு செய்தி!
இது ஒலித்தது
நம்நாட்டு வானொலியில்!
"காயப்பட்டவர்களுக்கு
சிகிச்சை கொடுக்க முடியவில்லை.
சிறு காயப்பட்டோரைக்கூட
சயனைட் கடிக்க உத்தரவு.
அல்லது சுட்டுக் கொல்கிறார்கள்!"
அதுதான் செய்தி.
அதே செய்தியறிக்கையில்
அடுத்த பந்தியைக் கேளுங்கள்;
"பயங்கரவாதிகளின் முகாமில்
காயமடைந்த நானூறு பேருக்கு
சிகிச்சையளிக்கப்படுகிறது!"
முதலில் சொன்னதை
தாமே மறுதலிக்கிறார்கள்!
முன்னுக்குப் பின்னாக,
எத்தனை சுவையான முரண்பாடு?
பிரபாகரன்
நாட்டைவிட்டு
தப்பியோடப் போவதாகவும்
புலிகள் பயந்துபோய் இருப்பதாகவும்
வானொலிச் செய்தி சொன்னதை
நீங்களும் கேட்டிருப்பீர்கள்!
போரில்
எதிரெதிர் தரப்புக்கள்
பிரசார யுத்தத்தில்
ஈடுபடுவது வழக்கம்தான்!
எதிர்த்தரப்பை குழப்ப,
மக்களை உற்சாகப்படுத்த,
தமது அணிகளை தைரியப்படுத்த
என்று பல காரணங்களில்
பொய்யான செய்திகள்-
வதந்திகள் என்பவற்றையும்
முடுக்கிவிடும் நிகழ்வுகள்
போர்க் காலத்தில் புதியவையல்ல!
ஆனால்-பிரபாகரன்
பற்றிய செய்தியை
மூவின மக்களுமே
தமாஷாகத்தான் எடுத்துக் கொண்டனர்!
'ஜயசிக்குறுய்'
படைகள்மீது
இரண்டு ஊடறுப்புக்கள் மூலம்
பாரிய தாக்குதல்களை
புலிகள் தொடுத்திருந்தனர்.
அத் தாக்குதலின்
புழுதிப்படலம் அடங்க முன்னரே
"புலிகள் தப்பியோட ஆயத்தம்!"
என்று செய்தி சொன்னால்
எவர்தான் சிரியாரோ?
முன்னர்
'லங்காபுவத்' செய்தி என்றால்
எவருமே நம்புவதில்லை.
யாராவது பொய் சொன்னால்
"என்ன லங்காபுவத்தா?"
என்று கேலி செய்யுமளவுக்கு
அதன் பொய்கள் பிரசித்தம்!
இன்னொரு விடயம்:
கோயபல்ஸ்
வாழ்ந்த காலம் வேறு;
நாம் வாழும் காலம் வேறு.
உலக செய்திச் சேவைகள்
உள் வீட்டுக்குள் வந்துவிட்டன.
அதுதவிர, அனுபவங்கள் காரணமாக
பொய்களை இனம் காணவும்
மக்கள் கற்றுக் கொண்டுள்ளனர்!
எனவே-மறுபடி
கோயபல்ஸ்"கள்
அந்தக்கால வீரியத்தோடு
தோன்றுவது அத்தனை சுலபமல்ல!
என்ன, கோயபல்ஸ்
பற்றிய என் கருத்தில்
உங்களுக்கும் உடன்பாடுதானே?!
மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்

# ஆன்மீகம்

## பாக்கியவான்கள்



பிரிவுகள் பிணக்குகளாலும், ஏற்றத்தாழ்வுகள் சாதி மத வேறுபாடுகளாலும்; பிரிந்து வாழ்கின்ற, வெறுப்புக்களாலும் வேதனைகளாலும் மனமுடைந்து வாழ்கின்ற, மக்களை நாம் காணுகின்றோம்.

இவ்வாறான மக்கள் நடுவிலிருக்கும் பகைமையைப் போக்கி, சமாதானம் உண்டு பண்ணுகின்றவர்களாக, மற்றவர்கள் நல் வாழ்வு வாழ, ஆத்துமத்திலும்; சரீரத்திலும், வளமும் செழிப்பும் பெற, கடவுளுக்கு நேராக நடத்தி, கடவுளோடு அவர்களை ஒப்புரவாகச் செய்து, தெய்வ சமாதானத்தை அவர்கள் பெறும்படி செய்கின்றவர்கள், பாக்கியவான்கள் என ஆண்டவர் இயேசு கூறுகின்றார்.

"சமாதானம் பண்ணுகின்றவர்கள் பாக்கியவான்கள். அவர்கள் தேவனுடைய புத்திரர் எனப்படுவார்கள்." (மத் 5:9)

சிலர் எப்போது பார்த்தாலும், மனிதர் நடுவிலே பிரிவினைகளையும் பிளவுகளையும் உண்டு பண்ணுவதையே தொழிலாக கொண்டிருக்கிறார்கள். தன்னுடைய நோக்கத்தை குறிக்கோளை அடைய, தான் நினைத்த காரியத்தில் வெற்றி பெற, இவ்வாறான செயல்களில் இறங்குகின்றார்கள். இவ்வாறான எண்ணங்கள் மாறி, மற்றவர்களிடையே சமாதானத்தையும் நலலுறவையும் ஏற்படுத்தும் நற்பணியைச் செய்து, ஆண்டவர் இயேசுவின் நற்பாக்கியத்தை பெற்றுக்கொள்வோமாக.

சகோ. எஸ். யேசுநாதன், செங்கலடி.

## வாழ்க்கைக்கு சில சிந்தனைத்துளிகள்

* இறைவனின் தரிசனத்தை எதிர்பார்த்திருப்பவர் இறைவணக்கத்தில் எவரையும் கூட்டுச் சேர்க்காமல் நற்செயலையே செய்ய வேண்டும். (குர்ஆன்)
* ஒவ்வொரு பொருளையும் துலக்கிச் சுத்தமாக்கும் பொருளொன்று உள்ளது. இதயத்தை துலக்கிச் சுத்தமாக்குவது அல்லாஹ்வை திக்ரு செய்வதாகும். (ஹதீஸ்).
* நீர் அறியாத ஒன்றைப் பின் தொடராதே நிச்சயமாக கேள்வி, பார்வை, இதயம் ஆகியன பற்றியும் மறுமையில் கேள்வி கணக்கு கேற்கப்படும். (குர்ஆன்).
* இறைவனை திக்ரு செய்பவனுக்கும் திக்ரு செய்யாதவனுக்கும் உதாரணம் உயிருள்ளவனும் உயிரற்றவனும் போலாகும். (ஹதீஸ்)
* இவ்வுலகில் எவன் (ஞானமற்ற) குருடனாக இருக்கிறானோ அவன் மறுமையிலும் குருடனாகவும் பெரும் வழி கேடனாகவும் இருப்பான். (குர்ஆன்)
* உறவினருக்கும் ஏழைகளுக்கும் வழிப்போக்கர்களுக்கும் அவரவர் பாத்தியத்தை கொடுத்து விடுங்கள் வீண் விரயம் செய்யாதீர்கள். (ஹதீஸ்)
* நீங்கள் அளக்கும் போது பூரணமாகவே அளவுங்கள் சரியான எடையைக் கொண்டே நிறுங்கள் ஏனெனில் அளவு நிறுவையில் மோசடி செய்வோருக்கு கேடே கேடுதான். குர்ஆன்.)
* நிச்சயமாக தர்மம் இறைவனின் கோபத்தைத் தடுத்து விடும் தீய மரணத்தைத் தடுத்து விடும் (ஹதீஸ்)

எம்.எம். முகம்மது ஸாகிர், சாய்ந்த மருது-10.

# கவிதைப் போட்டி இல. 210



## பரிசுக்குரிய கவிதை

### யாரின் முற்றுகை?

ஆறறிவும் ஐந்தறிவும்
ஐயத்துடன் நோக்குவது!
சுற்றத்தார் வருகை கண்டா?
சுற்றி வளைப்பின் சேதி கேட்டா?

சீ. எடிசன்- ஆட்டுப்பட்டித் தெரு, கொழும்பு-13.

## இடம் உள்ளவரை இடம்பிடித்துள்ள வியக்கவைத்த கவிதைகள்:

### எதிர்காலம்

எந்த தாக்குதலுக்கு
பதுங்கு
"நிலை" இது.

சுபா வரன்- கண்டி.

### துணிந்து நில்!

வீட்டுக்குள்ளும் "விபரீதம்"
விளையும் காலம் இதுவன்றோ?!
"கேட்டைத்" தடுக்க உயிர்த்தோழன்
கையில் இருக்க கலங்குவதேன்?!

எஸ். ஸப்ரீனா- அநுராதபுரம்.

### போகுமா

மாடியில் ஏறினாலும்,
குடிசையில் கிடந்தாலும்.
ஒட்டிவந்த அவலங்கள்
எட்டிப்போக முடியுமா?

பா. சுபாஹரி- நெளுக்குளம்,
வவுனியா.

### துணை

காவலுக்கு வந்தவரே
களவெடுக்கும் காலமிதில்
நாலுகால் ஜீவனிதே
நம்பிக்கையான துணை!

சி.மு.சுந்தரேசன்-அரசினர்
வைத்தியசாலை, மஸ்கெலியா.

### பகுத்தறிவு

ஆறறிவுகளை ஓரம்கட்டு!
ஆபத்துக்கள் குறையும்
ஐந்தறிவுகளோடு ஒன்று படு!
ஐயமில்லா துணைகளாகும்.

மனசு-நீர்கொழும்பு.

### 87

இறங்க வேண்டாம்
கீழே
இந்தியன் ஆமி....!

சி.கிரவுஞ்சன்-
நெளுக்குளம்.

### தேடுதல்கள்

எட்டிப் பார்த்து
என்ன பயன்....
அவர்கள்தான்!
அடையாள அட்டையுடன்
இறங்கிவா..!

நிலாபபிரியன் 'ஜயந்தன்'-
துறைநீலாவணை-08.

### நடப்பது..!

எட்டிப்பார்!
சிந்திக் கிடப்பதும் மனித உதிரந்தான்!
சிதறிக் கிடப்பதும் மனித உடல்கள்தான்!
நடப்பது நாய் வேட்டையல்ல
மனித வேட்டை!
விட்டு விடு நாயை
நீயோடித் தப்பிவிடு!

ந. ரதீஸ்வரன்-பிரதான வீதி, தம்பிலுவில்-02.

# கவிதைப் போட்டி இல. 213



கவனியுங்கள்! எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்பட வேண்டிய கடைசித் திகதி- 19.07.1997

முகவரி: கவிதைப் போட்டி இல.213
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

# வாசக(ர்)சாலை



இனிய முரசே!

நீ தாங்கி வரும் அனைத்து அம்சங்களும் வரவேற்கத்தக்கதே. அதிலும் பூலான்தேவி, இராமாயணம், ரசிகன் தரும் கொள்ளை ராணி அருமையிலும் அருமை. கொள்ளை ராணி தொடரை சுவைபடத் தரும் ரசிகனுக்கு நன்றிகள் பல.

தங்கராஜா மனோகர், காலி.

என் அன்பு முரசே!

நீ சுமந்து வரும் அனைத்து அம்சங்களுமே பிரமாதம். அதிலும் அற்புதன் எழுதும் அரசியல் தொடர் தமிழர்களின் வரலாற்றில் மறக்க முடியாத ஓர் அற்புதமான படைப்பாகும். ஈழப்போராட்டத்தினை அருமையாக எழுதும் அற்புதனுக்கு எனது பாராட்டுக்கள்.

மேலும் எக்ஸ்ரே ரிப்போர்ட் ஒவ்வொரு யுத்தகள நிலவரங்களையும் துல்லியமாக எடுத்துக் காட்டுகின்றது. ஆசிரியர் எழுதும் முரசம் யாவும் பிரமாதமே. நிறைவான முரசில் குறையேதுமே இல்லை. தொடரட்டும் முரசின் பணி! மலரட்டும் வாசகர் உள்ளங்கள்!

செ.கிருஷ்ணா, மட்டக்களப்பு.

தேனினும் இனிய முரசே!

நீ வாராவாரம் சுமந்து வரும் அனைத்து விடயங்களும் மிக மிகச் சிறந்தவை. இதனால் எல்லோர் மத்தியிலும் தனிமதிப்பைக் கொண்டுள்ளாய். ஆதலால் ஒவ்வொரு வாரமும் திருமலை கப்பல் துறைமுகத்தில் காத்து நின்று, யாழ் செல்லும் பயணிகளிடம் எனது சக நண்பர்களுக்கு பொதி செய்து அனுப்பும் பொறுப்புக்குள்ளானேன். இல்லையேல் குறை கூறி மடலுக்குமேல் மடல் வந்து விடும்.

தினமுரசே, யாழ்ப்பாண மக்களின் கரங்களில் தவழ்ந்து விளையாட ஏன் அஞ்சுகிறாய்?

உன் பிரியமுள்ள வாசகி,
செல்வி காராளசிங்கம் சுனித்தா, (நீர்வையூர்)

## ஏன் வரவில்லை?

இனிய முரசே!

உன்னில் வரும் அத்தனை அம்சங்களும் அருமையிலும் அருமை. யாழ். மாவட்டத்தில் உனக்கு நல்ல வரவேற்பு இருக்கிறது.

பல நூறு மைல்கள் தொலைவில் இருக்கும் நாடுகளுக்குச் செல்லும் நீ, சில நூறு மைல்கள் தொலைவில் இருக்கும் யாழ் மாவட்டத்துக்கு ஏன் வருவதில்லை? யாழ்ப்பாணத்திற்கு இப்பத்திரிகையை அனுப்பி வைத்தால் மிகவும் நல்லது. அல்லது உங்கள் கொழும்பு அலுவலகத்துக்கு சந்தாப்பணம் அனுப்புகிறோம்.

பத்திரிகையை தபாலில் அனுப்பி வையுங்கள். தயவுசெய்து இரண்டில் ஒன்றை எமக்காக விரைவாகச் செய்யுங்கள்.

க.தனுறாஜ், சாவகச்சேரி.

சந்தாக்கள் ஏற்கப்படுகின்றன.
-நிர்வாகி

## அவித்த பருப்பு

இனிய முரசுக்கு!

கூட்டணித் தலைவருக்கு மடல் ஒன்று- விருந்து அவருக்கு கசந்திருக்கலாமென்றாலும் சத்துள்ள விருந்துதான். எப்போதுமே வெளிப்படையாகச் சொல்லாது 'அதற்குள் எல்லாம் இருக்கிறது' என்று கதை சொல்லுவதே இவர்கள் பிழைப்பாகிவிட்டது. முன்னர் மாவட்ட சபைக்கும் இதையே சொன்னார்கள். மக்களுக்கு எதுவும் தெரியாது; தாங்கள் சொல்வதை வாய்பிளந்து கேட்டுக்கொண்டிருக்க வேண்டியவர்கள் என்பதுதானே இவர்களின் ஆசை! எதிர்பார்ப்பு! எத்தனை காலத்துக்கு ஒரே பருப்பை அவித்துக் கொண்டிருக்கப்போகிறார்கள்?

சி.செல்லத்துரை, வவுனியா.

## நடக்காவிட்டால் என்ன?

முரசே! அவசரப் பிரச்சனைகள் தொடர்பாக தமிழ்க்கட்சிகள் பேச்சு நடத்தட்டும். ஆனால் பேசப்படுகின்ற, செய்வதாக உறுதியளிக்கப்படுகின்ற விஷயங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றனவா என்று இக் கட்சிகள் எப்போதாவது மீளவும் கவனித்தனவா? இதனை அதிரடி அய்யாத்துரையாரும் கோடிட்டுக் காட்டியிருந்தார். தமிழ்க் கட்சிகளுக்கு தாங்கள் கேட்பதை தருகிறார்கள் என்று விளம்பரம் போடத்தானே விருப்பம்? சொன்னதை தரவில்லை என்று ஒப்புக்கொண்டால் அடுத்த கட்டம் என்னவென்று முடிவு செய்யவேண்டுமே. அதற்கு தயாரில்லாதபோது காரியம் 'நடந்ததா இல்லையா? என்று ஏன் கவனிக்கப்போகிறார்கள்?

திருமதி விஜிதா ரகுநாதன், கொழும்பு-06.

## அவலை நினைத்து....!

வன்னிப் போர்முனை பற்றிய முரசின் முன்கூட்டிய கணிப்புக்கள், விபரிப்புக்கள் பொருந்தி வருகின்றன. வன்னி 'யுத்தம் அவலை நினைத்து உரலை இடித்த கதை'யாகியுள்ளது. மக்கள்தான் அகதிகளாகவும், அலைந்து திரிகின்றவர்களாகவும் அவலம் சுமக்கின்றனர். தொலைக்காட்சியும், வானொலியும் சொல்லுகின்ற செய்திகள் வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுகின்றன.

பி.பரமேஸ்வரன், வவுனியா.

அன்பின் முரசே!

நீ தரும் ஒவ்வொரு விடயமும் தேன் முத்தாகவே உள்ளது. அதிலும் பூலானும், சிந்தியாவின் கேள்வி பதிலும் 'தேன் முத்திலே தங்கம்' கலந்துள்ளது, அதை உரசும் பொழுது சுவைதான் வருகின்றது.

பி.பவானி, தலவாக்கலை.

## எம் கதி என்ன?

'முரசு' வாசகர்சாலையில் முஸ்லிம் காங்கிரசின் தனிமாகாணக் கோரிக்கை நியாயம் என்று பாரூக் என்பவர் கூறிய கருத்தை பிரசுரித்திருந்தீர்கள். தென்கிழக்கு மாகாண சபை அம்பாறையில் அமையும் என்றால், அந்த மாவட்டத்துக்கு வெளியே வாழும் முஸ்லிம்களின் தொகை அதிகமல்லவா? அவர்களுக்கு என்ன தீர்வு சொல்கிறது முஸ்லிம் காங்கிரஸ்?

என். நியாஸ், மன்னார்.

## தீர்மானிக்க இயலாது

ஆசிரியருக்கு!

முஸ்லிம்களுக்கு தனியொரு மாகாணம் தேவையா இல்லையா, என்பதை முதலில் தீர்மானிக்க வேண்டியவர்கள் முஸ்லிம் மக்கள்தான்; தமிழ்க் கட்சிகளல்ல. எப்படி தமிழ் மக்களின் தலைவிதியை சிங்கள அரசியல் கட்சிகள் தீர்மானிக்க முடியாதோ, அதுபோல முஸ்லிம்களின் தலைவிதியை தமிழ்க் கட்சிகள் தீர்மானிக்க முடியாது. இதனை உணர்ந்து தமிழ்-முஸ்லிம் சமூக ஒற்றுமைக்கு ஏற்ப இரு சமூக கட்சிகளும் நடந்துகொள்ளவேண்டும்.

ஏ.தனபாலசிங்கம், திருக்கோணமலை.

என் பிரிய முரசே!

உன் பல வருட அபிமானிகளில் நானும் ஒருத்தி. நாடு விட்டு நாடு வந்தும் உன்னை காணாமல் ஒரு வாரமும் இருந்ததில்லை. எப்போது திங்கள் வரும்- நீ என் கைகளில் தவழ்வாய் என்று வழி மேல் விழி வைத்து காத்திருப்பேன். பூலான் தேவி அசத்துகிறாள், போங்கள். ரசிகனின் இலக்கிய நயம் அருமையிலும் அருமை. சுமதியும் மைத்ரேயியும் இருவேறு துருவங்கள். மற்றும் அரசியல் தொடர், சிறுகதை, சினிவிசிட் முதல் கடைசி பக்கம் வரை அருமையோ அருமை.

வீ.கௌரி-மொகமட் ரம்சான், தகர் நகர்-குவைத்.

அதிரடி முரசாரே!

'ஈழத்தமிழர் விவகாரம்' என்ற 'திரைப்படத்தில்' 'இரட்டை வேடத்தில்' நடிக்கும் கருணாநிதியை கலைஞர்களோடு (ரகுமான், மீனா) 'கலைஞராக' முன்னட்டையில் வெளியிட்டமை உமது 'உரசல்' குறும்பையா! (ஹி... ஹி... ஹி....)

சி. ஆனந்த், வெள்ளவத்தை.



படிப்பகம்

www.padippakam.com

# வன்னியில் கரும்புலிகளின் அணிவகுப்பு!

# கரும்புலிகள் தினத்தில் பெயர் கொடுத்தனர்

## இதுவரை 105 கரும்புலிகள் பலி!

**இம்மாதம்- ஜூலை 5ம் திகதி கரும்புலிகள் தினத்தை தமது கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் புலிகள் அமைப்பினர் பெரியளவில் அனுஷ்டித்துள்ளனர். வன்னியிலும், திருமலையிலும் கரும்புலிகள் தினம் பாரியளவில் அனுஷ்டிக்கப்பட்டது.**

1987 ஜூலை 5ம் திகதி- முதற் கரும்புலி கப்டன் மில்லர் பலியானார். இம்முறை பத்தாவது கரும்புலிகள் தினம் புலிகள் அமைப்பினரால் அனுஷ்டிக்கப்பட்டது.

ஜூலை 5ம் திகதி மாலை 4 மணிக்கு வன்னியில் உள்ள புலிகளின் பிரதான தளத்தில் கரும்புலிகளின் நினைவாக சுடர் ஏற்றிவைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து கரும்புலிகளின் அணிவகுப்பு இடம்பெற்றது. புலிகளின் கொடி ஏற்றிவைக்கப்பட்டதுடன், புலிகளின் கீதமும் இசைக்கப்பட்டது.

இதுவரை கரும்புலித் தாக்குதலில் 105 கரும்புலிகள் பலியாகியுள்ளனர். அந்த 105 கரும்புலிகளின் படங்களும் வைக்கப்பட்டிருந்தன.

கரும்புலிகளாக தம்மையும் இணைத்துக் கொள்ளுமாறு புலிகள் இயக்க உறுப்பினர்கள் பலர் பெயர் கொடுத்துள்ளனர்.

கரும்புலிகளாக விரும்பும் உறுப்பினர்களில் யாரைத் தெரிவு செய்வது என்பதை பிரபாகரனே தெரிவு செய்வது வழக்கமாகும்.

கடந்த ஆண்டைவிட இம்முறை பெரியளவில் கரும்புலிகள் தினம் வன்னியில் புலிகளால் அனுஷ்டிக்கப்பட்டுள்ளது.

### திருமலையில்

திருக்கோணமலையிலும் ஜூலை 5ம் திகதி கரும்புலிகள் தினம் பாரியளவில் அனுஷ்டிக்கப்பட்டது. திருமலை மாவட்ட தம்பலகாமப்பகுதி பாடசாலை ஒன்றின் மைதானத்தில் கரும்புலிகள் தினக் கூட்டம் நடைபெற்றது. திருமலை மாவட்ட புலிகளின் அரசியல் பிரிவு பொறுப்பாளர் தங்கன் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

தம்பலகாமப் பகுதி புலிகளின் துணைப் பொறுப்பாளர் பிரகாஷ் புலிக்கொடியை ஏற்றி வைத்தார். புலிகளின் தம்பலகாமம் அரசியல் பிரிவு பொறுப்பாளர் வெங்கடேஷ் தியாகச் சுடர் ஏற்றிவைத்தார். பாடசாலை மாணவர்களும் ஆசிரியர்களும் பொதுமக்களும் பொதுக் கூட்டத்திலும், ஊர்வலத்திலும் கலந்து கொண்டனர். மாலையிடப்பட்ட கரும்புலிகளின் படங்களுடன் ஊர்வலம் நடத்தப்பட்டது. விளையாட்டுப் போட்டிகள், மற்றும் கலாசார நிகழ்ச்சிகள் என்பனவும் இடம்பெற்றன.

கிளிநொச்சி ஸ்கந்தபுரத்திலும், மன்னாரில் தட்டச்சான மருதமடு என்ற இடத்திலும் பெருமளவான மக்கள் கலந்து கொண்ட ஊர்வலங்களும், பொதுக்கூட்டங்களும் நடைபெற்றன.

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளிலும் கரும்புலிகள் தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

கரும்புலிகள் தினமான ஜூலை 5ம் திகதி முதல் ஒருவாரகாலத்தை தமிழர் துயர் துடைப்பு வாரமாக அனுஷ்டிக்கும்படி வெளிநாடுகளில் உள்ள தமிழர்களிடம் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் வேண்டுகோள் விடுத்திருந்தது. இடம்பெயர்ந்த தமிழ் மக்களுக்கு நிவாரண உதவிகள் வழங்குமாறும் புலம்பெயர்ந்த தமிழர்களிடம் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் கோரியுள்ளது.

இதேவேளை கரும்புலிகள் தினத்தை முன்னிட்டு நாடெங்கும் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டிருந்தன. தேடுதல் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

# "கருணாநிதி நினைத்தால் முடியும்!"

## டாக்டர் ராமதாஸ் தெரிவிப்பு!

தமிழகத்தில் இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவான பந்த் வெற்றிபெறாமைக்கு தமிழக முதல்வர்மீது குற்றம் சாட்டியுள்ளார் பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் ராமதாஸ். அவர் தெரிவித்துள்ளதாவது:

'பந்த் வெற்றி பெறவில்லை. அது வெற்றி பெற்று விடக்கூடாது என்பதற்காகக் கலைஞர் பெருமுயற்சி எடுத்துக் கொண்டார். இப்போது தி.மு.க. எதிர்கட்சியாக இருந்திருந்தால், இந்த பந்த்தின் அவசியம், இலங்கையில் மக்கள் படும் துன்பங்கள் பற்றியெல்லாம், மனம் உருகும்படி 'முரசொலி'யில் கடிதம் எழுதியிருப்பார் கலைஞர்.

தமிழகத்தில் இதே காரணத்திற்காக, கடந்த ஆட்சிக்காலத்தில் வா.மு. சேதுராமன் என்கின்ற தமிழறிஞர் பந்த்திற்கு அழைப்பு விடுத்தார். அன்று வா.மு. சேதுராமனை வைத்து பந்த் நடத்தியதே கலைஞர்தான். இப்போது பந்த் தேவையில்லை என்பதற்கு அவர் சொன்ன காரணங்கள்,எள்ளி நகையாடத்தக்கவை.

தமிழக அரசு நினைத்தால்-கலைஞர் நினைத்தால் இலங்கைப் பிரச்சனையில் உடனே தீர்வு கிடைக்கும். 'இலங்கையில் நடக்கின்ற தமிழர்கள் மீதான தாக்குதல்களை நிறுத்தச் சொல்லுங்கள்; பாதிக்கப்பட்ட மக்களுக்கு மருந்தும், உணவும் உடனே கிடைக்கவேண்டும், என்று கலைஞர் குஜ்ராலிடம் கடுமையாக ஒரு வார்த்தை சொன்னால் போதும்; சந்திரிக்கா அரசைக் கண்டித்து ஓர் அறிக்கை விடுத்தால் கூடப் போதும்.

மேலும், சட்டமன்றத்தை உடனடியாகக் கூட்டி, சண்டையை நிறுத்தச் சொல்லி ஒரு கண்டனத் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும். 'கச்சதீவை மீட்போம்' என்று இன்னொரு தீர்மானமும் நிறைவேற்ற வேண்டும். இப்படியெல்லாம் செய்தால் பிரச்சனை தீர வழியிருக்கிறது. ஆனால் இதையெல்லாம் கலைஞர் செய்வாரா என்பது கேள்விக்குறி.

### சிறு திருத்தம்

உள்ள விசேட இணைப்பில் தங்கத்துரை மீதான தாக்குதல் நடந்ததெப்படி? என்ற தலைப்பின்கீழான தகவலில் ஒரு திருத்தம். தங்கத்துரை ஏ.கே.-47 துப்பாக்கியால் சுடப்பட்டதாக சம்பவத்தைக் கண்டவர் கூறியதாக உள்ளது. ஆனால் கைக்குண்டை ஒருவர் உருட்டிவிட்டு அது வெடித்ததும் இன்னொருவர் பிஸ்டலால் தான் தங்கத்துரையை நெருங்கிச் சுட்டார். பிஸ்டலால் வெடிவைத்தபடியே பின்வாங்கிச் சென்றார். தானியங்கியில் சுட்டதால் குண்டுகள் சரமாரியாகப் பாய்ந்தன என்பதே சரியான தகவலாகும்.

# தங்கத்துரைக்கு குறி! –கூட்டணிக்கு எச்சரிக்கை!

## விசாரணையில் தெரிவிப்பு!

தமிழர் விடுதலைக் கூட்டணி பா.உ. தங்கத்துரை கொலை தொடர்பாக மூன்றுபேர் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்கள் கைது செய்யப்பட்டதை அடுத்து முக்கிய தகவல்கள் வெளியாகியுள்ளன.

புலிகளின் உயர்பீடத்தில் இருந்து கிடைத்த உத்தரவை அடுத்தே தங்கத்துரையின் நடமாட்டங்கள் கண்காணிக்கப்பட்டு வந்தன.

முதலில் கிடைத்த உத்தரவுப்படி தங்கத்துரையின் நடமாட்டங்களை கண்காணிப்பது, அவர் கலந்துகொள்ளும் கூட்டங்களுக்கு செல்வது என்பதுதான் வேலை. உளவுப் பிரிவைச் சேர்ந்தவர்கள் அப் பணியில் ஈடுபட்டனர்.

கடந்த சில மாதங்களாக தங்கத்துரை கண்காணிக்கப்பட்டார் என்று தற்போது கைதாகியுள்ளவர்கள் கூறியுள்ளனர்.

அதற்கு ஆதாரமாக, தங்கத்துரை திருமலையில் கலந்துகொண்ட நிகழ்ச்சிகள் சிலவற்றில் எடுக்கப்பட்ட புகைப்படங்களும் மூவரில் ஒருவரது வீட்டில் இருந்து கைப்பற்றப்பட்டுள்ளன.

வேவு பார்த்தல், கண்காணித்தல் என்பவற்றில் இருவர் ஈடுபட்டிருந்தனர். இருவர் தாக்குதலில் நேரடியாகக் குதித்தனர். மொத்தமாக தாக்குதல் குழு நாலுபேரைக் கொண்டதாக இருந்தது.

ஒருவர் கைக்குண்டை வீச, இன்னொருவர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தார். அவர்களில் ஒருவர் மட்டுமே கைதுசெய்யப்பட்டுள்ளார். ஒருவர் பொலிசாரின் வலையில் இருந்து தப்பிச்சென்றுள்ளார். தப்பிச் சென்றவர் பெயர்-குமார் என்று கூறப்படுகிறது. கைதானவர் பெயர்-ஜெரோம் (இனியவன்). இவர் நீண்ட காலமாக புலிகள் இயக்க உறுப்பினராக இருக்கிறார்.

### நோட்டம் பார்த்தனர்

சம்பவம் நடைபெற்ற இடத்தில் உளவு பார்த்தபடி இருந்தவர்கள் இருவர். யார் வருகிறார்கள்; யார் போகிறார்கள். என்று கண்காணித்தபடி இரண்டுபேரில் ஒருவர் சைக்கிளில் சுற்றித்திரிந்தார். அவரது பெயர்-நிஜன். இவர் துறைமுக அபிவிருத்தி சபையில் காவலாளியாகப் பணியாற்றியவராம். மற்றொருவர் ஒட்டோ பாபு. இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நிஜன் என்பவரின் நடவடிக்கை காரணமாகவே அவரும் ஏனைய இரண்டுபேரும் மாட்டிக்கொள்ள நேர்ந்தது என்று அறியப்படுகிறது.

சம்பவம் நடந்த பின்னர் தாக்கியவர்கள் இருவரும் ஓடிவிட்டனர். சம்பவ இடத்தில் சாதாரண ஆளாக நின்று தாக்குதல் விளைவுகளைப் பார்ப்பதும், தங்கத்துரை பலியாகி விட்டாரா என்பதை உறுதிப்படுத்துவதும் நிஜனின் வேலை. அதனால் நிஜன் சைக்கிளுடன் சம்பவம் நடைபெற்ற இடத்தை நெருங்கினார்.

அப்போது தங்கத்துரையின் பாதுகாவலர்களில் ஒருவர் அவரது சைக்கிளை வாங்கிக்கொண்டு அருகிலுள்ள பொலிஸ் சென்றிப் பொயின்டுக்கு தகவல் சொல்லச் சென்றிருக்கிறார்.

பின்னர் சைக்கிளை பொலிஸ் நிலையத்தில் வைத்துவிட்டார். சைக்கிளை சென்று எடுக்காவிட்டால் சந்தேகம் வரக்கூடும் என்பதால் நிஜன் சைக்கிளைக் கேட்டுச் சென்ற போதுதான் சந்தேகம் வந்து விசாரிக்கப்பட்டதாகவும், விசாரணையில் சில உண்மைகளை சொல்ல நேர்ந்ததாகவும் தெரியவருகிறது. நிஜனின் சகோதரர் சுஜன் கைது செய்யப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளார்.

நிஜன் வீட்டிலிருந்தே தாக்குதல் திட்டம் தீட்டப்பட்டதாகவும் விசாரணைகளில் தெரிய வந்துள்ளதாம்.

கூட்டணியினருக்கு எச்சரிக்கை விடுக்கும் ஒரு கட்டமாகவே இத் தாக்குதல் நடத்தப்பட்டதாக கைதானவர்கள் தெரிவித்தனர் என்றும் அறியவருகிறது.

### உள்ளே நடந்திருந்தால்...

தங்கத்துரை எம்.பி.யுடன் பாடசாலை அதிபர் வருவார் என்பது தாக்க வந்தவர்களுக்கு தெரியாது. தங்கத்துரை எம்.பி.யை தீர்த்துக்கட்டவே உத்தரவு. அந்த உத்தரவை நிறைவேற்றும்போது ஏனையோர் அதற்குள் மாட்டிக்கொண்டனர்.

இதேவேளை, தாக்கியவர்கள் திறப்பு விழா நடைபெற்ற இடத்திற்கு சென்று தாக்கியிருந்தால் பாரிய உயிரிழப்பு ஏற்பட்டிருக்கும். மாணவிகள் உட்பட ஆசிரியர்கள் பலரும் பலியாகி இருப்பர். திருமலையின் கல்வி நிலை பின்னடைந்திருக்கும் என்று கூறப்படுகிறது.

இதேவேளை தங்கத்துரை கொலையை அடுத்து பல்வேறு ஊகங்கள் கிளம்பியதால், திருமலையில் உள்ள ஏனைய தமிழ்க்கட்சிகளிடமும் பொலிசார் விசாரணைகள் நடத்த திட்டமிட்டிருந்தனர். பின்னர் சம்பவம் தொடர்பான மூவர் கைதானதால் அத்தகைய விசாரணைகள் நடத்தப்படவில்லையாம்.

# 150 கோடியில் மாளிகை!

## ஐ.தே.கட்சி எதிர்ப்பு!

ஜயவர்த்தனபுர கோட்டேயில் 150 கோடி ரூபா செலவில் ஜனாதிபதி மாளிகை கட்டுவதற்கு ஐ.தே.கட்சி எதிர்ப்புத் தெரிவிக்கும்.

ஆக 70 கோடி ரூபாவுக்கு ஐ.தே.க. புதிய பாராளுமன்றத்தை நிர்மாணிக்கத்திட்டமிட்டபோது ஸ்ரீ.ல.சு.கட்சி கடுமையாக எதிர்த்தது. கட்டடம் கட்டி முடிந்ததும் ஒரு 5 நட்சத்திர ஹோட்டலைப்போல் காட்சி அளிக்கிறது என்று கிண்டலடித்தனர். தாங்கள் ஆட்சிக்கு வந்தால் அக்கட்டடத்தை 5 நட்சத்திர ஹோட்டலாக மாற்றப்போவதாகக் கூறினார்கள்.

"கோட்டேயில் இராஜதானி இருக்கும் போது அங்கு குடியிருந்த மன்னர்கள் எல்லோரும் வீழ்ச்சி அடைந்தனர். ஆகவே அப்பக்கம் எம்மவர்கள் குடியிருக்க நினைக்கவே போவதில்லை" என்று திங்கட்கிழமை நடைபெற்ற ஐ.தே.க. பாராளுமன்றக்குழுக் கூட்டத்தில் ரணில் விக்கிரமசிங்கா கூறினார்.

# பஸ்சேவை நடத்தக் கோரிக்கை!

(ஏறாவூர் நிருபர்)

மட்டக்களப்பிலிருந்து கண்டி, நுவரெலியா, பதுளை, ஹட்டன் போன்ற பகுதிகளுக்கான பஸ்சேவை முன்னர் சில காலமாக இடம் பெற்று வந்தது.

மட்டக்களப்பு-கொழும்பு நெடுஞ்சாலை பொதுப்போக்குவரத்திற்காக ஓட்டமாவடியில் தடைப்படுத்தப்பட்டு பிந்தி விடப்பட்டு வந்ததால் இந்தச் சேவைகள் நிறுத்தப்பட்டன.

எனினும் தற்சமயம் நேரகாலத்துடனேயே வாகனங்கள் ஓட்டமாவடியைக் கடந்து கொழும்பு நெடுஞ்சாலையில் செல்ல அனுமதிக்கப்படுகின்றன. எனவே நிறுத்தப் பட்டிருக்கும் பஸ்சேவையை வழமைபோல் ஆரம்பிக்கவேண்டுமென்று பயணிகள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

பதுளைக்கான பஸ்சேவை மட்டக்களப்பு-பதுளை வீதி மூடப்பட்டுள்ளதால் நிறுத்தப்பட்டுள்ளது. அந்த பஸ்சேவையை அம்பாறை பிபிலைக் கூடாக நடத்துமாறு பயணிகள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

இதனிடையே, கடந்தவாரம் முதல் முன்னர் காத்தான்குடியிலிருந்து ஆரம்பிக்கப்பட்ட பதுளைக்கான தனியார் பஸ்சேவை மீண்டும் மன்னம்பிட்டி, மஹியங்கனை, பிபிலைக் கூடாக நடைபெறுகிறது.

இது பதுளைப் பகுதிக்கான பயணிகளுக்கு பெரும் ஆறுதலைக் கொடுத்துள்ளதாயினும் பஸ் கட்டணம் வழமையான கட்டணத்தைவிட மூன்று மடங்கு அதிகமாக அறவிடப்படுகிறது.

# யாழில் தேடுதல் வேட்டை!

யாழ் குடாநாட்டில் பெருமளவான புலிகள் ஊடுருவியுள்ளதையடுத்து படையினர் தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

வடமராட்சியில் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளில் 27.06.97 முதல் ஒரு வாரமாக படையினர் தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டனர்.

வல்லிபுரம் பகுதியில் இருந்தும், எழுதுமட்டுவாள் பகுதியில் இருந்தும் இரண்டு முனைகளால் கனரக வாகனங்கள் சகிதம் படையினர் நடவடிக்கையில் இறங்கினர்.

நாகர்கோவில், அம்பன், குடாரப்பு, மாமுனை ஆகிய பகுதிகளில் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது. இந்த நடவடிக்கையில் மூவர் சுட்டுக் கொல்லப்பட்டனர் என்றும், அவர்கள் புலிகள் என்றும் படையினர் தெரிவித்துள்ளனர். மூவரது சடலங்களும் பருத்தித்துறை வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டன.

இந்த நடவடிக்கைக்கு பின்னரே வடமராட்சியில் நெல்லியடி வதிரி வீதியில் படையினர்மீது புலிகள் தாக்குதல் ஒன்றை நடத்தினார்கள். இரண்டு இராணுவத்தினர் பலியானதாகத் தெரிகிறது.

# கூட்டணி வட்டாரங்கள் கவலை!

தங்கத்துரை எம்.பி கொலை தொடர்பாக இதுவரை வன்னியில் புலிகளின் தலைமைப்பீடம் மறுப்பு எதனையும் வெளியிடவில்லை.

இதேவேளை, தங்கத்துரை எம்.பி.யின் நெருங்கிய உறவினர் ஒருவர், புலிகள் மறுத்ததுபோலவும், புலிகள் இக் கொலையைச் செய்யவில்லை என்றும் கூறிவருகிறார். எதிர்வரும் தேர்தலில் தங்கத்துரையின் வாரிசாக போட்டியிடப் போவதாகவும் அவர் கூறியிருக்கிறார். புலிகள் சுட்டது என்றால் அனுதாபத்தைத் திரட்ட முடியாது என்பதாலேயே குறிப்பிட்ட உறவினர் மட்டுமல்லாமல், கூட்டணியில் உள்ள சிலரும் பல்வேறு விதமாகப் பேசிவருகின்றனர்.

சமீப காலத்தில் கூட்டணியின் நிலைப்பாடு மக்களால் வெறுப்புக்குள்ளாகியுள்ளது. இந் நிலையில் புலிகளும் தமக்கு குறிவைப்பதாகத் தெரிந்தால் மக்கள் மத்தியில் கடும் எதிர்ப்புத் தோன்றும் என்று கூட்டணி வட்டாரங்கள் கவலை அடைந்துள்ளன.

எங்கு மக்கள் பலியானாலும், பாலியல் வல்லுறவுக்கு உள்ளானாலும் அதற்கொரு விசாரணை நடத்தக் கோருவதே கூட்டணியினரின் அணுகுமுறை என்பது தெரிந்ததே.

அரசின் விசாரணைகளில் நம்பிக்கை இருப்பதால்தான் அவ்வாறு கோருகிறார்கள் என்பதே அர்த்தமாகும். ஆனால் தங்கத்துரை எம்.பி. கொலை தொடர்பாக பொலிஸ் விசாரணையில் வெளியாகியுள்ள உண்மைகள் அரச தரப்பால் கூட்டணியினருக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் அரசியல் ரீதியில் தமக்கு பாதிப்பு ஏற்படும் என்பதால், இந்த விடயத்தில் மட்டும் விசாரணைகளை நம்பாதது போல நடந்து கொள்வார்கள் என்றே தெரிகிறது.

# குற்றம் செய்தால் எலிச்சிறை- புலிகள் வழங்கும் தண்டனை!

புலிகள் இயக்கத்தினர் தமது ஆளுகைக்குள்ளும் அதற்கு அப்பாற்பட்ட பகுதிகளிலும் பொதுமக்களிடமிருந்து தமக்குக் கிடைக்கும் முறைபாடுகளைத் தமது காவல்துறை மூலம் விசாரித்துத் தீர்வு கண்டு வருகிறார்கள். படையினரின் கண்காணிப்பின் கீழுள்ள பகுதிகளிலிருந்து புலிகள் இயக்கத்தினரின் காவல்துறை நிலையத்திற்கு விசாரணைக்காகச் செல்வோர் தாம் போகுமிடத்தைச் சுருக்கமாக "காது" (காவற்துறை)க்குச் செல்வதாகக் கூறிவிட்டே பயணம் செய்கின்றனர்.

காவல் துறைக்குச் சென்று திரும்புவோர் அங்கு நடக்கும் விசித்திரமான தண்டனைகளையும் கூறி வியந்து கொள்கின்றனர்.

கோழி திருடியவர் தான் எந்த அளவினையுடைய கோழியைக் களவாடினார் என்பதைப் பொறுத்துத் தண்டனைக் காலம் அமையும். அதற்கேற்ப அவர் முட்டை வாங்கி வந்து அடைவைத்து குஞ்சானதும் அவை வளர்ந்து களவாடிய கோழியின் அளவினதானவுடன் உரியவரிடம் கொடுக்க வேண்டும். இதேபோல் வாழைப்பழக்குலையைத் திருடியவர் வாழைக்குட்டி வாங்கிவந்து அதை நட்டு அதனை வளர்த்து வாழைக் குலையைத் தான் திருடிய சொந்தக்காரருக்குக் கொடுக்கவேண்டும்.

காதல் ஏமாற்றுச் சமாச்சாரங்களில் ஈடுபட்டோர் சாரைப்பாம்பு, எலிகள் உள்ள கூண்டில் அடைக்கப்படுகிறார்களாம்.

இதேபோல் சற்றுக் கடின குற்றவாளிகளுக்கு- இருட்டறை பங்கர் சிறை. அல்லது சோடா போத்தல் மூடியினால் 100 யார் தூரத்திலிருந்து நீர் அள்ளி வந்து 220 லீட்டர் கொள்ளளவு கொண்ட 2 பரல்களை நிரப்ப வேண்டும். இதேபோல வித்தியாசமான குற்றச் செயல்களில் ஈடுபட்டோருக்கு அவரவர் குற்றம் புரிந்த செயல்களுக்கேற்ப தண்டனை வழங்கப்படுகிறதாம்.

எது எப்படியிருப்பினும் புலிகள் இயக்கத்தின் ஆளுகைக்குள் உள்ள பகுதிகளில் இன்னமும் குற்றச் செயல்கள் நடக்கவே செய்கின்றன.

# அண்ணன் 'ரெலோ'வில், தங்கை 'புலி' இயக்கத்தில்!

மட்டக்களப்பு- செங்கலடிச் சந்தியில் முற்றிலும் படையினரதும் புளொட், ரெலோ, பொலிஸார் ஆகியோரினதும் முழுக் கண்காணிப்பின் கீழுள்ள பகுதிக்குள் புலிகள் இயக்கத்தின் புலனாய்வுப் பிரிவினர் மூவர் ஊடுருவித் தாக்குதல் நடத்த முனைந்த வேளையில் ஒருவர் அகப்பட்டுப் போனார்.

முதல் நாளிரவே சம்பந்தப்பட்ட 'புலி' இயக்க உறுப்பினர்கள் அங்கு வந்து தங்கியிருந்திருக்கலாம் என்று கூறப்படுகிறது. புளொட், ரெலோ உறுப்பினர்கள் போலவே பாசாங்கு செய்து தேநீர்க் கடையொன்றில் தேநீர் குடித்துக் கொண்டிருந்தபோது, அங்கு வந்த புளொட் உறுப்பினர்மீது தாக்குதல் நடத்தப்பட்டது. புளொட் உறுப்பினரைத் தாக்கி விட்டு 'புலி' உறுப்பினர் ஒடி மறைந்து கொள்வதைக் கண்ட ரெலோ உறுப்பினர் சிவஞானம் என்பவர் அவர்மீது சுட்டார். அதனால் செங்கோடன் என்ற புலி உறுப்பினர் கொல்லப்பட்டார். அவரிடமிருந்து T-56 இயந்திரத்துப்பாக்கி ஒன்றும், கிரனைற் ஒன்றும், சயனைட் குப்பியும் கைப்பற்றப்பட்டது.

புலி உறுப்பினரைச் சுட்டவரான சிவஞானம் என்பவர் முன்னர் புலிகள் இயக்கத்தில் இருந்து தற்சமயம் ரெலோவில் இணைந்து செயற்பட்டு வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. இவரது தங்கை தற்சமயம் புலிகள் இயக்கத்தின் பெண்கள் பிரிவில் தீவிர உறுப்பினராக உள்ளார்.

மேற்படி சம்பவத்தில் புளொட் உறுப்பினர் ஒருவரும் பொதுமக்கள் மூவரும் காயங்களுக்குள்ளானார்கள்.

# கடற்புலிகள் கடத்திய மீனவர்கள்!

## விடுவிக்குமாறு வேண்டுகோள்!

திருமலையில் இறக்கக்கண்டியில் உள்ள முஸ்லிம்கள் 39 பேர் புலிகளால் கடத்திச் செல்லப்பட்டுள்ளனர். 02.07.97 அன்று இரவு இச் சம்பவம் நடைபெற்றது.

கடத்திச் செல்லப்பட்ட முஸ்லிம்களை விடுதலை செய்யுமாறு திருமலை வாழ் முஸ்லிம்கள் என்ற பெயரில் வெளியான பிரசுரத்தில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. ஆயினும் யாரால் கடத்தப்பட்டனர் என்ற விபரம் அதில் தெரிவிக்கப்படவில்லை.

அமைச்சர் அஷ்ரப் அவர்கள் இக் கடத்தல் தொடர்பாக புலிகளுக்கு வேண்டுகோள் விடுத்திருந்தார். தமிழ்-முஸ்லிம் மக்களின் ஒற்றுமை கருதி, கடத்தப்பட்ட முஸ்லிம்களை விடுதலை செய்யுமாறு கூறியிருந்தார்.

ஆனால் இச் சம்பவம் பற்றி கிடைத்துள்ள தகவலின்படி இந்த நடவடிக்கை சமூக விரோத உணர்வுடன் நடந்ததல்ல என்பது தெரியவருகிறது. கடற்படையினருக்கும், கடற்புலிகளுக்கும் இடையே ஏற்பட்ட மோதல் ஒன்றில் படகில் இருந்து குதித்த கடற்புலிகள் நீந்திக் கரை சேர்ந்தனர்.

நீந்தி வந்த கடற்புலிகளை பிடித்த மீனவர்கள் குழு ஒன்று படையினரிடம் அவர்களை ஒப்படைத்தது. இந்த விடயம் கடற்புலிகளுக்குத் தெரியவந்ததை அடுத்தே அப்பகுதியைச் சேர்ந்த மீனவர்கள் கடத்திச் செல்லப்பட்டனர் என்று தெரிகிறது.

எனினும் இதுவரை மீனவர்களைக் கடத்திச் சென்றது தொடர்பாக புலிகள் எதுவும் தெரிவிக்கவில்லை.

# பரிசு கொடுத்தனர் புலிகள்!

## பறித்தெடுத்தது இராணுவத் துணைப்படை!

கரும்புலிகள் நினைவு தினத்தையொட்டி புலிகள் இயக்கத்தினர் தமது ஆளுகைக்குள். உள்ள பகுதிகளில் பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்தினர். படையினரின் கண்காணிப்பின் கீழ் உள்ள பகுதிகளிலிருந்தும் அநேகம் பேர் புலிகள் நடத்திய நிகழ்ச்சிகளில் பங்கு பற்றுவதற்காக புலிகளின் அழைப்பின் பேரிலும், தனித்த முறையிலும் சென்றிருந்தனர். விளையாட்டுக் குழுக்களும் இதிலடங்கும். நிகழ்ச்சிகளில் வெற்றியீட்டியோருக்குப் புலிகளால் கரும்புலி ஞாபகார்த்தமாகப் பரிசுப் பொருட்களும் வழங்கப்பட்டன. பரிசுப் பொருட்கள் ஒன்றிரண்டில் புலிகளின் சின்னமும் பொறிக்கப்பட்டிருந்தனவாம்.

தமது கண்காணிப்பின் கீழ் உள்ள பகுதிகளில் இருந்து கொண்டு புலிகளிடம் சென்று பரிசு வாங்கிய விபரத்தை அறிந்து கொண்ட 'இராணுவத் துணைப்படை' என்று அழைக்கப்படும் ராசிக் கும்பல், பரிசு பெற்றோரை அழைப்பித்து எச்சரித்துவிட்டு பரிசுப்பொருட்களைப் பறித்துக் கொண்டனராம். மட்டக்களப்பு-செங்கலடி பகுதியில் சுமார் 12 ஆயிரம் ரூபா பெறுமதியான விளையாட்டு உபகரணங்கள் பறிக்கப்பட்டதாகக் கூறப்பட்டது.


படிப்பகம்

www.padippakam.com

## சவுதியைவிடத் தூரமா தலவாக்கலை?

### மலையகத்தில் தபால் சேவை சீர்குலைவு!

மலையகத்தின் தோட்டப்புறங்களுக்கான தபால் விநியோகம் மிகவும் சீர்குலைந்துள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கிறார்கள். நாட்டின் இதர பகுதிகளிலிருந்து மலை நாட்டின் தோட்டப் புறப்பகுதிகளுக்கு அனுப்பி வைக்கப்படும் தபால்கள் மிக நீண்ட நாட்களின் பின்னரே உரியவர்களின் கரம் கிட்டுவதாகப் புகார் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையிலிருந்து மத்திய கிழக்கிற்கோ அல்லது மேற்கு நாடுகளுக்கோ அனுப்பப்படும் தபால்கள் சாதாரணமாக ஒருவார காலத்தில் கிடைத்துவிடுவதுண்டு. இதேவேளை உள்நாட்டின் இதர பகுதிகளிலிருந்து மலைநாட்டின் தோட்டப் புறப் பகுதிகளுக்கு அனுப்பப்படும் தபால்கள் 10 நாட்கள் கழித்தே கிடைப்பதாக தோட்டப்புற மக்கள் விசனம் தெரிவிக்கிறார்கள்.

குறிப்பாக பண்டாரவளை, தலவாக்கலை, பசறை, லுணுகலை, ஹாலி-எல, மஸ்கெலியா போன்ற பகுதிகளுக்கான தபால் சேவைகள் மிகவும் சீர்கெட்டுள்ளன. அத்துடன் இப்பகுதிகளுக்குச் சேரும் தபால்கள் (அரச அலுவல்கள், தனிப்பட்ட அஞ்சல்கள்) அனைத்தும் தபால் கந்தோரிலிருந்து தோட்ட நிருவாகத்தினரிடமே ஒப்படைக்கப்படுகின்றன. ஆனால் அவை உரிய வேளைக்கு விநியோகிக்கப்படுவதில்லை. சில தினங்கள் வைத்திருந்துவிட்டு ஞாபகம் வந்தாலே தோட்ட நிருவாகத்தினால் உரியவர்களிடம் கையளிக்கப்படுகிறது. பெரும்பாலான தபால்கள் உரியவர்களைச் சென்றடைவதில்லையாம்.

இதனால் சிலர் தமது அலுவல்களை முடிச்சுக் கட்டிப்போட்டுவிட்டு பல மைல் தூரம் மலையேறி நடந்து வந்து தபாலகத்திற்குச் சென்று தமக்குக் கடிதம் வந்துள்ளதா என்று பார்க்கச் செல்கிறார்கள். சிலர் லீவு போட்டுவிட்டுச் செல்கிறார்கள்.

அடையாள அட்டை இல்லாவிட்டால் பதிவுத் தபால்களைப் பெறமுடியாது. எனவே தோட்ட அலுவலகங்களிலிருந்து தபால் எடுக்க வருபவரின் அறிமுகத்துடனும் சிபார்சுடனுமே கடிதத்தைப் பெறவேண்டும். இத்தனைக்கும் அவரை 'முகம் சுழிக்காமல்' பார்த்துக்கொள்ள வேண்டும்.

தோட்டப் பகுதிகளில் நிலவிவரும் தபால் சீர்கேட்டை நீக்க, தோட்ட அலுவலகங்களில் உப-தபால் நிலையங்களைத் திறக்கவேண்டும்; அல்லது வேறுபகுதிகளில் உள்ளது போல் தபாலகங்களிலிருந்து நேரடியாகவே வாடிக்கையாளர்களிடம் தபால்காரர்கள் மூலம் தபால் விநியோகிக்கும் நடைமுறை இங்கும் கொண்டு வரப்படவேண்டும் என்று பொதுமக்கள் கூறுகிறார்கள்.

இந்த விடயங்கள் தமிழ் பேசும் அமைச்சராக இருந்த தபால் தந்தித் தொலைத் தொடர்புகள் பிரதி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டும் இதுவரை பலனேதும் கிட்டவில்லையென்றும் சொல்லப்படுகிறது.

## பாதைச் சீர்கேட்டால் பயணிகள் அவஸ்தை!

### ஆனாலும் தேர்தல் விளம்பரங்கள் சிரிக்கின்றன!

மலைநாட்டின் தோட்டப்புறப் பகுதிகளில் பல வருட காலமாக பாதைகள் சீர் செய்யப்படாது குன்றும் குழியும் நிறைந்து காணப்படுகின்றன. பதுளை-பசறை, லுணுகலை பகுதிகளில் இந்நிலைமை மிகவும் சீர்கெட்டுக் காணப்படுகிறது.

பிரதான வீதியிலிருந்து ஆயிரக்கணக்கான அடி உயரத்தில் மேலேறிச் செல்லும் தோட்டப்புற மக்கள் இப்பாதைச் சீர்கேடுகளால் சொல்லொண்ணாப் பயணத் துயரத்தை அனுபவித்து வருகிறார்கள். கீழிருந்து மேல்நோக்கி பொருள் பண்டங்கள் வாங்கிக் கொண்டு மூட்டை முடிச்சுக்களுடன் தோட்ட லயன்களை அடையும்போது போதுமென்றாகி விடுகிறது.

தமது உடலுழைப்பைச் சாறாய்ப்பிழிந்து வியர்வை உதிர நாடியான பொருளாதாரத்தைத் தேடித்தரும் இவர்களுக்கு தங்கள் குடியிருப்புகளுக்குச் செல்லும் வீதிகளையாவது செப்பனிட்டுக் கொடுக்க முடியாதா? என்ற கேள்வி எழுப்பப்படுகிறது. கரடு முரடான பள்ளம் படுகுழி நிறைந்த பாதைகளினூடே காலில் செருப்புத் தானும் இன்றி கல் தடுக்கி விழும் தோட்டப்புற மக்களின் துயர்துடைக்க எவரும் ஆர்வம் காட்டுவதாகத் தெரியவில்லையென்று பசறை-ஹோலண்ட்ஸ் தோட்ட மக்கள் தினமுரசுக்குத் தெரிவித்தார்கள்.

எது எவ்வாறிருப்பினும் இந்த அலங்கோலப் பாதைகளின் மேல்- ஆங்காங்கே கடந்த உள்ளூராட்சித் தேர்தலின்போது வாக்குக் கேட்டு பெரிய அளவில் எழுதப்பட்ட 'இலங்கை தொழிலாளர் காங்கிரஸுக்கே வாக்களியுங்கள்' என்ற வாசகங்கள் காணப்படுகின்றன.

ஆயிரமாயிரம் தோட்டத் தொழிலாள மக்களும், ஆசிரியர்களும், மாணவர்களும் நாளாந்தம் ஏறி இறங்கிப் பயணம் செய்யும் தோட்டப் புறப்பாதைகள் சீர்செய்யப்படவேண்டும் என்பதை அம்மக்கள் தினமுரசு வாயிலாக வருத்தம் தெரிவித்து வலியுறுத்துகிறார்கள்.

## பொலிஸ் அதிகாரி விசாரணையில்....!

### வடக்கில் பொருள் சுருட்டல்?

வட பகுதியில் கடமையாற்றும் ஒரு பொலிஸ் அதிகாரியின் இல்லத்தில் ஏராளமான பொருட்களை பொலிசார் கண்டுபிடித்துள்ளனர். விலை உயர்ந்த மின்சார உபகரணங்களும் இதில் அடங்குமாம்.

அம்பலாங்கொடையில் உள்ள இப் பொலிஸ் உயர் அதிகாரியின் இல்லத்தில் பெருந்தொகையான இப்பொருட்கள் குவிந்திருப்பதற்கான காரணம்பற்றி பொலிசார் விசாரணை நடத்தியதில், வட பகுதியிலிருந்து இடம் பெயர்ந்த மக்களிடமிருந்தோ அல்லது அவர்களால் கைவிடப்பட்ட வீடுகளிலிருந்தோ இப்பொருட்கள் களவாடப்பட்டுள்ளன என்ற உண்மை தெரிந்திருக்கிறது.

இப் பொலிஸ் அதிகாரியிடம் விசாரணை நடைபெறுவதாகத் தெரிகிறது.

இதற்கிடையே சில வருடங்களுக்கு முன்னர் கொழும்பில் அதி உயர்ந்த கல்லூரியில் இடம்பெற்ற சம்பவத்தையும் குறிப்பிட வேண்டியிருக்கிறது.

இக்கல்லூரியில் ஆசிரியையாகப் பணி புரிந்த ஒருவர், ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வகையான தங்க ஆபரணங்களை அணிந்து வருவாராம். ஒரு நாள் போட்டுவரும் நகை, மறுநாள் போட்டுவரப்படாமல், பதிலாகப் புதுப்புது நகைகள் தொடர்ந்தமையினால் சக ஆசிரியைகளுக்குச் சந்தேகம் ஏற்பட்டதாம். ஒரு நாள் அவர்களின் சந்தேகம் தீர்ந்துவிட்டது. பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த அந்த ஆசிரியையின் கழுத்தில், சைவக்குடும்பப் பெண்களுக்கே உரித்தான தாலிக்கொடி தொங்கியதாம்.

"இந்த நகை மிக அழகாக இருக்கிறதே- இதனை எங்கே செய்தெடுத்தீர்கள்?" என்று சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த ஆசிரியை கேட்டு வம்புக்கிழுத்திருக்கிறார். ஒரு பிரபலமான பெரும்பான்மையினத்தவரின் நகைக்கடையில் வாங்கியதாக அவ்வாசிரியை கூறினாராம். அந்த ஆசிரியருடன் கூட இருந்த ஏனைய ஆசிரியைகள் சிரிப்பை அடக்க முடியாமல் சிரித்திருக்கின்றனர்.

அடுத்த நாளிலிருந்து அந்த ஆசிரியை நகைகள் எதுவும் அணியாமல் கல்லூரிக்கு வரத் தொடங்கிவிட்டாராம்.

அந்த ஆசிரியையின் கணவர் '90ம் ஆண்டுகளில் கிழக்குப் பிரதேசத்தில் உயர்தர இராணுவ அதிகாரியாகக் கடமையாற்றியவராம்.

## முஸ்லிம் மாதர் நிறுவனம் சமாதான முயற்சி!

(ஏறாவூர் நிருபர்)

நாட்டில் ஏற்பட்டுள்ள யுத்தச் சீரழிவுகளினால் வளர்ந்து வரும் அழிவுகளைத் தடுத்து நிறுத்தி, வன்முறையும் பதில் வன்முறையும் அற்ற விதத்தில் அஹிம்சை வழிக்கூடாக சமூகங்களுக்கிடையில் சமாதானமும் புரிந்துணர்வும் அடையப் பெற வேண்டும் என்ற நோக்கில் இலங்கை முஸ்லிம் மாதர் மாநாட்டு நிறுவனத்தின் ஏற்பாட்டில் சமாதான நிறுவனத்தின் அனுசரணையுடன் "அஹிம்சை வழியில் தகராறுகளுக்குத் தீர்வு காணுதல்" (NON-VIOLENT CONFLICT RESOLUTION) எனும் பயிற்சி நெறியொன்று கொழும்பு-கனுபோவிலவில் உள்ள வயது வந்தோர் கல்வி நிலையத்தில் கடந்த வாரம் இடம் பெற்றது.

இலங்கையிலுள்ள முஸ்லிம் பெண்கள் அமைப்புக்களான இலங்கை முஸ்லிம் மாதர் மாநாட்டு அமைப்பு, முஸ்லிம் மாதர் யுவதிகள் லீக், சோனகப் பெண்கள் அமைப்பு, கல்வி வட்டம், அகில இலங்கை முஸ்லிம் மாதர் லீக், பையத்-பஹாய் அமைப்பு, வயது வந்தோர் கல்வி நிறுவனம், முஸ்லிம் பெண்கள் சமூக நல லீக் என்பவற்றைச் சேர்ந்த பல பிரதிநிதிகள் பயிற்சி நெறியில் பங்குபற்றினர்.

சர்வதேச சமாதானமும் சேவையும் நிறுவனத்தைச் சேர்ந்த ஜெனிபர் இங்ராம், மற்றும் கொழும்பிலுள்ள சமாதான அமைப்பைச் சேர்ந்த கௌசல்யா எஸ்மொண்டே, செல்வி.மொனிகா அல்பிரட், திரு.கசப்ப தியபெதனகே ஆகியோரால் பயிற்சிகள் வழங்கப்பட்டன.

மேற்படி சமாதான அமைப்பின் அனுசரணையுடன் ஏற்கனவே தமிழ், முஸ்லிம், சிங்கள சமூகங்களையும் உள்ளடக்கிய அனைத்து மதங்களையும் சேர்ந்த பலருக்கு சமாதானத்திற்கும் புரிந்துணர்விற்குமான, வன்முறையற்ற அஹிம்சை வழியில் தகராறுகளுக்குத் தீர்வு காணும் பல பயிற்சி நெறிகள் வழங்கப்பட்டு வருவதாக சமாதான அமைப்பைச் சேர்ந்த செல்வி மொனிகா அல்பிரட் 'முரசு'க்குத் தெரிவித்தார்.

## பிஸ்டல் குழு தாக்குதல்

### செய்தியில் திருத்தம்

மூதூரில் புலிகளின் பிஸ்டல் குழுவினர் பாஸ்கரன் என்பவரை சுட்டுக்கொன்றனர். புலிகள் இயக்கத்தில் இருந்து வெளியேறி இராணுவத்தினருடன் இணைந்திருந்தவரே இவராவர். இச் செய்தியில், பாஸ்கரன் பச்சனூரில் வைத்து சுடப்பட்டதாக தவறுதலாக இடம்பெற்றுவிட்டது. பச்சனூர் இராணுவத்தினருடன் இணைந்து செயற்பட்ட பாஸ்கரன் மூதூரில் வைத்து சுடப்பட்டார், என்பதே சரியானதாகும். மூதூர் பிரதேசசபை அருகிலேயே துப்பாக்கிச் சூடு இடம்பெற்றது.செய்தியில் ஏற்பட்ட தவறுதலுக்கு வருந்துகிறோம். (ஆ.ர்)

விளம்பரப் பகுதி

## பெருகிவரும் பிக்பொக்கட்காரர்கள்

(மன்னார் நிருபர்)

மன்னார் நகரில் என்றுமில்லாத அளவுக்கு களவுகளும், பிக்பொக்கெட்காரர்களின் தொல்லைகளும் அதிகரித்துவிட்டன.

மன்னாரிலிருந்து வவுனியா செல்லும் பஸ்ஸில் இடம்பிடிப்பதற்காக முண்டியடித்து ஏறும் பயணிகளோடு பயணிகளாக திருடர்கள் தம் கைவரிசையைக் காட்டி வருகின்றனர்.

பணம், நகைகள் என்பன இவ்வாறு திருடப்படுகின்றன. இது வரை பல பேரிடம் நடைபெற்று வரும் இத்திருட்டு கைங்கரியத்தை முடிவுக்கு கொண்டுவர சிவில் உடைகளில் பொலிஸார் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

சிறுமிகளின் கழுத்துகளில் போடப்பட்டிருந்த சங்கிலி, மற்றும் ஏனைய தங்க நகைகள் 'லபக் லபக்' கென்று அபேஸ் பண்ணிக் கொண்டு ஆசாமிகள் தப்பி விடுகின்றனர்.


**1997 G.C.E (A/L)** புதிய பாடத்திட்ட பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு **BRIGHT** ன் **10** மாதிரி வினாவிடை நூல்கள் வெளிவந்துவிட்டன

★ கணக்கீடு ★ பொருளியல் ★ தமிழ்
★ இந்துநாகரிகம் ★ இஸ்லாமிய நாகரிகம்
★ தூயகணிதம் ★ இரசாயனவியல்
★ பிரயோக கணிதம் ★ வணிக புள்ளிவிபரவியல்
★ அரசியல் மூலதத்துவம் விலை : 197.50

மாதிரி வினா விடைகளை V.P.P யில் பெற விரும்புவோர் 20/= முத்திரையுடன் தொடர்பு கொள்க

வெளிவரவுள்ளவை
★ தாவரவியல் ★ பௌதிகவியல் ★ இஸ்லாம்

1997 G.C.E (O/L) மாணவர்களுக்கு கடந்த 10 வருடகால வினாவிடை Bright வெளியீடுகள் வெளிவருகின்றன

**90 DAYS SPOKEN ENGLISH**
**POSTAL TUITION**

ஆங்கிலம் பேச. எழுத. வாசிக்க மூன்றே மாத காலத்தில் நவீன உளவியல் அணுகு முறையின் கீழ் மாணவர்கள் உவந்து ஏற்கக்கூடிய முறையில் பாடத்திட்டம் அமைக்கப்பட்டுள்ளது.

பாடநூல்கள் யாவும் இருபத்தொராம் நூற்றாண்டின் எதிர்பார்க்கைக்கு ஏற்ற வகையில் நவீன பாணியில் அச்சிடப்பட்டுள்ளன.

கட்டணம் இக்கல்வி நெறிக்கான கட்டணம் 350/- மாத்திரமே.

வெளிநாட்டு மாணவர்களுக்கு US$ 25.00

பாடக்கட்டணத்தை The Director - BBC எனும் பெயருக்கு Sea Street SPO மாற்றக் கூடியதாகக் காசுக் கட்டளையுடன் உங்கள் பெயர். விலாசத்தையும் இணைத்து அனுப்பி வைக்கவும்.

**BRIGHT BOOK CENTRE (PVT) LTD.**
S-27, First Floor, P. O. Box - 162,
Colombo Central Super Market Complex,
Colombo - 11. T.P. 434770, 074-718592



**மனோதத்துவ வைத்தியம்**

பிரபல மனோதத்துவ நிபுணர்
**Dr. P. ஆறுமுகம்** அவர்களை
ஜூலை 20 முதல் 31 வரை

கொழும்பில் Dr. P. Arumugam. Ahamed Tourist inn. Bang Building No:10. Reclamation Road, (Entrance Bankshall St., Opposite Ranjanas) Colombo 11. T.P. 436383, 436390 கொழும்பு நாட்களில் மட்டும் செல்டெல் No. 078-71101.

கொழும்பில் முன்கூட்டியே பதிவு செய்யலாம்



**காண்டம்**

முனிவர் அருளிய ஏடுகளில் அமைந்த காண்டம் எனும் நாடி ஜோதிடத்தில் உங்கள் பலன்களை

**ரிஷி. S.மணி**

மூலம் அறிய வாருங்கள்
வெளிநாட்டிலுள்ளவர்களும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பார்க்கலாம்.

**S. MANI**
144 2/1, காலி வீதி,
வெள்ளவத்தை,
கொழும்பு - 6.
T.P. 586218



**சித்தர் மாந்திரீகம்**

அதிஷ்ட கரமான வாழ்க்கை அமைய வேண்டுமா? காதல் விவகாரம் கைகூட வேண்டுமா? தொழில் சிறந்திட வேண்டுமா? இல்லற வாழ்வு இனித்திட வேண்டுமா? இவ்விதமாக உங்கள் பிரச்சனைகள் எதுவாயினும் உடனடியாக பூரணவெற்றி பெற்றிட ஒரு தடவை மட்டக்களப்பு கோளாவில் மணி மாந்திரீகச் சித்தர் "சக்திசரவணா"வுடன் தொடர்பு கொள்ளுங்கள். சங்கடங்கள் தீர சக்தி சரவணாவை நாடுங்கள். சோதிட ரீதியாக உத்தரவாதமான எதிர்காலப்பலன்கள் எம்மிடம் அறியலாம். வெளிநாட்டு அன்பர்களுக்கான சிறந்த துரித விசேட சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. உங்கள் வெற்றியும், திருப்தியும் எமது குறிக்கோளாகும்.

1ந் திகதி முதல் 20ந் திகதி வரை தொடர்பு
SHAKTHY SARAVANA,
8/2, SRI SIDDARTHA ROAD,
KIRILAPONE, COLOMBO-5.
TELE PHONE: 823465.
(பொலிஸ் நிலைய எதிரில்)

21ந் திகதி முதல் 30ந் திகதி வரை தொடர்பு
SHAKTHY SARAVANA,
82, MANIKKAVASAGAR ROAD,
TRINCOMALEE.
TELE PHONE: 026-20347

வியாழன் விடுமுறை



**றெறாசோ ஷிப்ஸ்**
(TERRAZZO CHIPS)

★ கலர்பவுடர் (Pigments) (Holland, Germany)
★ வெள்ளை சீமெந்து (Asano)
ரூபா 9/- க்கு மேல்

**றம்சன்ஸ்**

443, பழைய சோனகத் தெரு.
கொழும்பு – 12.
தொலைபேசி – 431511, 434411



**பழுது பார்த்தல்**

வீடியோ கமெரா,
போட்டோ கமெரா
திருத்திக்கொடுக்கப்படும்

**நியூ விக்ரேஸ்**
**New Victors**

401/3, Galle Road,
Colombo-06.
(Hongkong bank அருகாமையில்)
T.P-594492



**நன்றி நவிலல்**



08-06-97ல் நடைபெற்ற எமது மகன் திவாகர சர்மாவின் உபநயன வைபவத்தில் நேரிலும், தொடர்பு சாதனங்களினூடாகவும் உபநீதன் திவாகரனை மனமார வாழ்த்திய உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது உளம் கனிந்த நன்றிகள்.

எஸ்.கே. பத்மநாபன் (முகுந்தன்)
மைதிலி பத்மநாபன்
27, வட எல்லை வீதி,மட்டக்களப்பு.



INTERNATIONAL DIVINE MEDICAL SERVICES INDIAN CLINIC

**'மந்திரயோகி' மாந்திரீக மருத்துவம்**

APPROVED CHARITY அரசாங்கப் பதிவு இல. HA14/BT/176

'எல்லாப்புகழும் இறைவனுக்கே'

கர்ம-காலபலனினால், தீயசக்திகளினால், தீவினைகளினால் தீராத உடல்மனநோய்கள், காதல், திருமணம், தொழில், வெளிநாட்டுப் பிரயாணம், வேறுகாரியத்தடைகளும், காதலர்கள் ஒன்றுசேர முடியாமை, கணவன் மனைவி குடும்பப்பிரச்சினைகள், வேண்டியவர்கள் வெறுத்தல், பிரிந்து செல்லல், வேறு பிரச்சினைகளும் ஏற்படலாம். இவைகளுக்கு இறைவனருளி முனிவர்கள் கையாண்ட கைகண்ட புராதன பாரம்பரிய மருந்து, மந்திர யந்திரவசியங்களினால் நிவாரணம் பெற்று இன்பமாக வாழ, தகாத உறவை, போதை வஸ்த்தை மறப்பிக்க, வேறு (மருத்துவ) காரியங்களுக்கு வரமுடியாதவர்கள், வெளிநாட்டவர்கள் மஹா சக்தி உபாசகர் "மந்திரயோகி" டாக்டர் சக்தியானந்தபாபாவிற்கு [(D.H.M.D.Ac) (இலங்கை) M.B.B.S.(H).S.M.P (இந்தியா)] முழுப்பெயர்களுடன் கோரிக்கைகளை எழுதி கடல்கடந்தும் உடன்வேலை செய்யும் அதி ஆகர்ஷணசக்தி வாய்ந்த இறைபரிகாரப்பொருட்களை தபாலில் பெற்று விருப்பங்களை உடன் நிறைவேற்றிக்கொள்கின்றார்கள். 12ரூபா 50சத முத்திரைகள் இரண்டும் விரும்பிய குருதட்சணையும் (மணியோடர்) அனுப்புபவர்களின் விடயங்கள் முதலில் கவனிக்கப்படுகின்றன. விஷ(பாம்பு) கடிக்கு மந்திரத்தினால் விஷமிறக்கி மருந்து கொடுத்து இலவசமாக அவசரசிகிச்சை அளிக்கப்படுகின்றன.



நாடவேண்டிய பெயர், விலாசம்

YOGI.DR.SACKTHYANANTHEBABA
GURUSACKTHY CENTRE (INDIAN CLINIC)
(KALLADY) BATTICALOA (P.O), SRI LANKA.

குருசக்தி நிலையம், (பிள்ளையார் கோவில் வீதி), (வேலூர்), கல்லடி-மட்டக்களப்பு, இலங்கை.



**தையல் கலை**

எமது கல்லூரியின் தொகுதி ஆறிற்கான பாட நெறிகள் இப்போது ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. வெளிநாட்டில் தையல் கலையை முறையாகவும் விஞ்ஞான ரீதியாகவும் கற்று அநுபவமிக்க ஆசிரியரால் ஆண், பெண், சிறுவர்களுக்கான எல்லாவித நவீன உடைகளையும் விஞ்ஞான முறையில் (Scintific Cutting) வெட்டுவதற்கு சிறந்த வரி விளக்கப்படங்களுடன் தபால்மூலம் கற்பித்து 'டிப்ளோமா' சான்றிதழும் வழங்கப்படுகிறது. இதுவரை ஆயிரக்கணக்கானோர் இப்பாடங்களைப் பெற்று பயனடைந்திருக்கிறார்கள். நேர்முக வகுப்புகளும் உண்டு விபரங்களுக்கு

Royal School of Scientific Tailoring
S-29, 3rd, Floor C.C.S.M. Complex
Colombo - 11 அரசு பதிவிலக்கம் W/A 449

வெளிநாடுகளில் வசிப்பவர்களும் விண்ணப்பிக்கலாம்




படிப்பகம்

www.padippakam.com

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# முற்றுகைக்குள் முற்றுகை! அழுத்தங்களும்- உடைப்புக்களும்!

நாரதர்

'ஜயசிக்குறுய்' மீதான புலிகளின் ஊடறுப்புத் தாக்குதல்களின் பின்னர் படை முன்னேற்றம் தாமதப்பட்டுள்ளது.

வன்னியில் படை நடவடிக்கை தொடங்கப்பட்டு இரண்டு மாதங்களாகிவிட்டன.

60 நாட்களில் 'ஜயசிக்குறுய்' படைகள் வவுனியாவில் இருந்து முன்னேறியுள்ள தூரம் ஆக 20 கிலோமீட்டர்கள். அதிலும் சண்டையிட்டு முன்னேறிய தூரம் 10 கிலோமீட்டர்கள்தான்.

கிட்டத்தட்ட 25 ஆயிரம் படையினர் குவிக்கப்பட்டு, அதில் 20 ஆயிரம் படையினர் வரையாவது முன்னரங்க முனைகளில் குவிக்கப்பட்டுத்தான் நடவடிக்கை ஆரம்பமானது.

**புலிகளின் வன்னித் தளத்தையும், அதன் இதயமான முல்லைத்தீவையும் முற்றுகையிடச் சென்ற படையினர், இப்போது புலிகளின் முற்றுகைக்குள் சிக்கியுள்ளனர்.**

கண்ணுக்குத் தெரியாத பொறி அல்லது வலை போன்றதுதான் புலிகளின் முற்றுகை.

படையினரின் முற்றுகையும், அவர்களின் பலமும் கண்ணுக்குத் தெரியக் கூடியது. ஆனால் தம்மை முற்றுகையிட்டுள்ள புலிகளின் பலத்தையோ அடுத்த கட்ட நகர்வையோ படையினர் அறிந்து கொள்ள முடியாது.

'செய் அல்லது செத்துமடி' என்று தொடர் அழித்தொழிப்பு யுத்தத்துக்கு தயாராகிவிட்ட கெரில்லாக்களை எதிர்நோக்கியபடி படைகள் தொடர்ந்தும் ஒரே இடத்தில் தரித்திருக்க முடியாது.

**ஒன்றில் தொடர்ந்து முன்னேறிச் செல்ல வேண்டும்; அல்லது புறப்பட்ட இடத்துக்கே திரும்பிவர வேண்டும்.**

கைப்பற்றிய இடங்களை பலப்படுத்தி வருவதாக அரச பிரசார சாதனங்கள் கூறிக்கொண்டிருக்கின்றன.

ஆனால் கள நிலவரம் படைத்தரப்புக்கு திருப்தியானதாக இல்லை. படையினர் மத்தியில் உற்சாகமான நிலை காணப்படவில்லை.

மரபுப்படைகளால் ஓய்வின்றித் தொடர்ந்து போரிடமுடியாது. போதிய தூக்கம் தேவை; ஓய்வு தேவை. தொடர்ந்து தூங்கமுடியாமல் போனால் உடல்-உளத் தளர்ச்சிகள் ஏற்படும். சண்டையிடும் திறன் பாதிக்கப்படும்.

போரில் எதிரியை இழுத்தடித்து களைக்கச் செய்யும் உத்தியும் இருக்கிறது. இந்த உத்தியானது எதிர்க்கும் ஆற்றலை அழிப்பது என்பதில் அடக்கம்.

எதிரியை அழிப்பது உடல் ரீதியாக! எதிர்க்கும் ஆற்றலை அழிப்பது உளரீதியாக!

எதிர்க்கும் ஆற்றலை அழிக்க இரு பிரதான வழிகள் உண்டு.

ஒரு வழி: எதிரிக்கான உணவு விநியோகம் மற்றும் வெளித்தொடர்புகளுக்கான பாதைகளை தடைசெய்து முற்றுகையிடல்.

யாழ்ப்பாணம் கோட்டை முகாம் தாக்குதலின்போது இத்தகைய தந்திரத்தை புலிகள் கையாண்டனர்.

இரண்டாவதுவழி: எப்போதும் தாக்குதலை எதிர்பார்க்கச் செய்து நிம்மதியாக தூங்கவிடாமல் தடுப்பது. அடிக்கடி சிறு தாக்குதல்கள் நடத்துவது மூலம் தொல்லை கொடுத்து நிம்மதியைக் குலைத்துக்கொண்டிருப்பது.

இந்த இரண்டாவது உத்தியைத்தான் வன்னிக் களத்தில் புலிகள் அநேகமாக ஒவ்வொருநாளும் கையாண்டு வருகின்றனர்.

'ஜயசிக்குறுய்' படைகள்மீது மோட்டார் தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன; சிறு சிறு குழுக்களாக வந்து படைகளின் பக்கவாட்டில் தாக்கிவிட்டு மறைகிறார்கள்.

'ஹிட் அன்ட் ரன்' (Hit and Run) எனப்படும் தாக்கி விட்டு ஓடுதல் உத்தி இது. தாக்கிவிட்டு ஓடும் கெரில்லாக்களை படையினர் தொடர முடியாது. தொடர்ந்து துரத்திச் சென்றால் காட்டுக்குள் புக வேண்டும். அங்கே புலிகளின் பொறிக்குள் மாட்டிக்கொள்ள நேரலாம்.

சிறு சிறு தாக்குதல்கள் மூலம் படையினரின் உளவியல் பலத்தை சிறுகச் சிறுக சேதமாகிவிட்டு திடீரென்று பாரிய அழித்தொழிப்புத் தாக்குதலை நடத்துவதுதான் புலிகளின் தந்திரமாகும்.

இன்னொரு அழித்தொழிப்புத் தாக்குதலை புலிகள் மேற்கொண்டால் படையினரின் மத்தியில் பாரிய பின்னடைவுகள் ஏற்படவே செய்யும்.

தற்போதுகூட படையினரின் மனநிலை மற்றும் படைகள் மத்தியிலான முரண்பாடுகள் காரணமாகவே 'ஜயசிக்குறுய்' நடவடிக்கையை நீண்டநாள் நிறுத்திவைக்க வேண்டி ஏற்பட்டுள்ளதாம்.

அரசாங்கம் தொடர்ந்து படை நடவடிக்கையை முன்னெடுக்கவே விரும்பு கிறது. பிரதி பாதுகாப்பு அமைச்சர் அநுருத்த ரத்வத்தை "என்ன நேர்ந்தாலும் படை நடவடிக்கை தொடரும்" என்று கூறிவருகிறார். ஆனால் 'செய் அல்லது செத்துமடி' கட்டம் இரண்டின் பின்னர் படை உயரதிகாரிகள் பலர் "படைகளுக்கு போதிய ஓய்வு தேவை. மீள் சீரமைப்பு அவசியம்" என்று உறுதியாகக் கூறிவிட்டனராம்.

ஆனால் இந்நிலை நீடிக்க முடியாது. தொடர்ந்து முன்னேறுவதா? பின்வாங்குவதா? என்பதை படைத்தரப்பு தீர்மானிக்க வேண்டும். ஏனெனில் தற்போது இடை நடுவில் நிற்பது போலவே படையினரின் நிலை இருக்கிறது.

படையினரின் தலைப்பகுதியிலும் இரு பக்கவாட்டுப் பகுதிகளிலும் புலிகள் முன்னேறி தாக்கக்கூடிய நிலை உள்ளது.

குறைந்தது புளியங்குளம் வரையாவது சென்று ஓமந்தை- நெடுங்கேணி சாலையைக் கைப்பற்றி அங்கே தடுப்பு அரண் அமைத்தால்தான் படையினரின் பாதுகாப்பு ஓரளவு கெட்டிப்படுத்தப்படும்.

ஆனால் அது அத்தனை சுலபமல்ல.

ஓமந்தை-நெடுங்கேணி சாலையை படையினர் கைப்பற்றுவதை புலிகளின் அணிகள் உக்கிரமாக எதிர்க்கும்.

மணலாற்றில் இருந்து நெடுங்கேணிவரை சென்று நிலை கொண்டுள்ள படைகளால் புலிகளின் எதிர்ப்பைமீறி நகர முடியவில்லை.

இந்நிலையில் புளியங்குளத்தில் இருந்துதான் படைகள் அச் சாலையைக் கைப்பற்ற நகரவேண்டும்.

புளியங்குளத்தில் இருந்து நெடுங்கேணி 20 கிலோமீட்டர் தூரத்தில் இருக்கிறது.

**இந்தச் சாலை வழியாக செல்லும் படையினர் சாலையின் இரு புறமிருந்தும் புலிகளின் கிடுக்குப்பிடித் தாக்குதலுக்கு முகம் கொடுக்க வேண்டியிருக்கும். புலிகளின் ஊடறுப்புத் தாக்குதல்களுக்கு மேலும் வசதியான களங்கள் தான் இனிமேல் வரப்போகின்றன. காரணம், வன்னியின் பூகோள அமைப்பு.**

மரபுப்படை தனது பாரிய வலுமூலம் முன்னேற சாதகமானதுதான். ஆனால் மரபுப் படையின் பலம், மறு தரப்பின் பலம் என்பவற்றையும் கணிப்பிட்டாக வேண்டும்.

'ஜயசிக்குறுய்' படை நடவடிக்கை ஆரம்பிக்கும்போது இருந்ததைவிட இப்போது புலிகளின் பலம் அதிகமாகியுள்ளது. அதேசமயம் இரண்டு பெரிய அழித்தொழிப்பு சமர்களை எதிர்கொண்ட படைத்தரப்பின் பலம் பின்னடைந்துள்ளது.

இவ்வாறான ஒரு மாற்றத்தை ஏற்படுத்தியது சாதாரண கணிப்புக்களுக்கு அப்பாற்பட்டதாகும். புலிகளின் போரிடும் திறன், திட்டமிடல், உளவியல் பலம் என்பவற்றின் காரணமாகவே இந்த மாற்றம் சாத்தியமானது.

**தமது ஆட்பலம், ஆயுதபலம் என்பவற்றின் சக்திக்கு மீறிய தாக்குதல்களை புலிகளால் நடத்தக்கூடியதாக இருப்பதில்தான் இராணுவக் கணிப்புக்களை தலைகீழாக்கும் இரகசியம் பொதிந்து கிடக்கிறது.**

பூகோள நிலைகள், படைபலம் என்பவை சாதகமாக இருந்தால்கூட உரிய வழிநடத்தல், சரியான திட்டமிடல், தருணத்தை கண்டறிதல், அணிகளை உரியவகையில் பிரித்தனுப்புதல், எல்லாவற்றுக்கும் மேலாக உளவியல் பலம் என்பவை இல்லாமல் போனால் களநிலவரத்தை எந்தவொரு அணியும் தனக்குச் சாதகமாக்க இயலாது.

புலிகளின் ஆட்பலம், ஆயுதபலம் என்பவற்றையும், தமது பாரிய படை வலுவையும் கணக்கிட்டே புலிகளின் வன்னித்தளத்தை முற்றுகையிடும் களத்தில் படைத்தரப்பு கால்வைத்தது.

**ஆனால், புலிகளின் தாக்குதல்கள் அவர்களது ஆட்பல, ஆயுதபலம் என்பவற்றை பல மடங்கு மீறியதாக அமைந்தமையானது படைத் தரப்புக்குப் பின்னடைவுகளை ஏற்படுத்தியுள்ளது.**

வன்னிச் சமரில் ஆட்பலத்தை இழந்ததுடன், புலிகள் மேலும் பலமாகக் கூடியளவில் படைக்கல வலுவையும் அவர்களிடம் படையினர் பறிகொடுத்துள்ளனர்.

'ஜயசிக்குறுய்' நடவடிக்கை ஆரம்பமாக முன்னர் புலிகளிடம் வன்னித் தளத்தில் இரண்டு ஆட்டிலெறிகள் இருந்தன. அவற்றுக்கான ஷெல்கள் பற்றாக்குறையாக இருந்தன. மிக முக்கியமாக மருந்துப் பொருட்கள் போதியளவில் இருக்கவில்லை.

**'ஜயசிக்குறுய்' படைகள்மீது இரண்டு அழித்தொழிப்பு சமர்களை நடத்திய பின்னர் பெருந்தொகையான ஆயுதங்கள் புலிகளால் கைப்பற்றப்பட்டன. மருந்துப் பொருட்கள் கிட்டத்தட்ட இரண்டு லொறிகள் அளவுக்கு தாண்டிக்குளத்தில் இருந்துமட்டும் கொண்டு செல்லப் பட்டதாகத் தெரிகிறது. இதுதவிர கனரக மோட்டார்கள், பெருந்தொகையான ஷெல்கள் என்பவை கைப்பற்றப்பட்டன.**

பெரியமடு-ஓமந்தை ஊடறுப்பில் மற்றொரு நீண்டதூர ஆட்டிலெறி பீரங்கியும், பெருந்தொகையான ஷெல்களும் புலிகளால் கொண்டு செல்லப்பட்டன.

இப்போது மூன்று ஆட்டிலெறிப் பீரங்கிகள் மூன்று முனைகளில் படையினரை நோக்கி நிறுத்தப்பட்டுள்ளன. போதியளவு ஷெல்களும் இருக்கின்றன.

கெரில்லாக்களை எதிர்த்துப் போரிடும் ஆட்பலம் கூடிய படையினருக்கு, ஆட்டிலெறி பீரங்கியால் உள்ள பயன்பாட்டைவிட, பெருந்தொகையாக நீண்ட நிலப்பரப்பில் நகரும் படைகளை குறிவைக்கும் கெரில்லாக்களுக்கு, ஆட்டிலெறிகளின் உபயோகம் அதிகமாகும்.

படையினர் தமது ஆட்டிலெறிகளை கெரில்லாக்களின் மறைவிடம் எதுவென்று தெரியாமல் ஒரு குத்துமதிப்பாகத்தான் ஏவிவிடுகிறார்கள். ஆனால் படையினர் எந்த நிலப்பரப்பில் நகர்கிறார்கள் என்பது இரகசியமல்ல. எனவே ஆட்டிலெறிகளை புலிகள் ஏவினால் படையினர் தரப்பில் இழப்புக்கள் ஏற்படும்.

புலிகள் ஆயுதங்களை இந்தியாவிடம் இருந்தும் அன்று பெற்றனர். பின்னர் பிரேமதாசா அரசிடம் இருந்தும் பெற்றனர். ஆயினும் தமது சொந்த முயற்சியால் அவர்கள் பெற்ற ஆயுதங்களே அதிகமாகும்.

சொந்த முயற்சியால் இருவழிகளில் தமக்குரிய ஆயுதங்களைப் பெற்றுக்கொள்கின்றனர்.

ஒன்று: பணம் கொடுத்து வெளியுலக கறுப்புச் சந்தையில் பெற்ற ஆயுதங்கள். விமான எதிர்ப்பு ஆயுதங்களும் அவ்வாறே பெறப்பட்டன.

இரண்டு: படையினரிடமிருந்து கைப்பற்றிக் கொண்ட ஆயுதங்கள் மற்றும் கடற்படைப் படகுகள் மற்றும் சாதனங்கள்.

கடற்புலிகளின் பலம் கடற்படையினரிடமிருந்து கைப்பற்றப்பட்ட படகுகள் மற்றும் சாதனங்கள் ஊடாகவே வரிவுபடுத்தப்பட்டது. பூநகரி கடற்படைத் தளம்மீதான தாக்குதலில் சக்திவாய்ந்த படகுகள் புலிகளால் கைப்பற்றப் பட்டன. கடற்புலிகளால் பயன்படுத்தப்படும் ராடர் சாதனங்களும் கடற்படையினரிடம் இருந்து கைப்பற்றப்பட்டவையே.

புலிகளுடன் போரிடும் படையினரே புலிகளுக்குத் தேவையான ஆயுதங்களையும், சாதனங்களையும் கொடுத்து பலப்படுத்துவதாகவே யுத்த வரலாறு அமைந்திருக்கிறது.

வன்னி யுத்தத்தின் மூலம் கனரக ஆயுதங்களையும், அதற்கான ஷெல்களையும் படையினர் இழந்துள்ளனர். இவை அவற்றின் எண்ணிக்கையைவிட, பயன்பாட்டில் கடந்தகாலத்தில் இழக்கப்பட்ட ஆயுதங்களைவிட சக்தி கூடியவையாகும்.

குறைந்தது நூறு துப்பாக்கிகளை இழப்பதைவிட ஒரு ஆட்டிலெறி பீரங்கியை இழப்பது படையினருக்கு தாக்கம் கூடியதாகும். அதேபோல ஆட்டிலெறி ஷெல்களை இழப்பதும் ஆபத்தானதுதான். இவற்றை புலிகள் அழித்தால்கூட பொருள் நஷ்டம்தான். புலிகள் கைப்பற்றுவதுதான் ஈடுசெய்ய முடியாத நஷ்டமாகும்.

**அதுமட்டுமல்லாமல் 'ஜயசிக்குறுய்' படைகள்மீதான ஊடறுப்பு அனுபவங்கள், தாக்குதல்கள், பெறப்பட்ட வெற்றிகள் மூலமாக புலிகளின் அணிகளது உளவியல் பலமும் முன்பைவிட மேலோங்கியுள்ளது. அடுத்த ஊடறுப்புக்கு எப்போது உத்தரவு வரும் என்று உற்சாகமாகக் காத்திருக்கும் மனோநிலை தோன்றியுள்ளது.**

வன்னித்தளத்தில் தொடர்ந்து போரிட்டுக் கொண்டிருப்பதுமூலம் புலிகளை தமது தளத்தை பாதுகாக்கும் தற்காப்பு யுத்தக் கட்டத்துக்குள் செல்ல வைக்கலாம். அதனால் புலிகளின் அணிகள் ஏனைய பகுதிகளில் இருந்து வன்னிக்குச் சென்று தளத்தை காக்க உதவிக்கு விரையவேண்டியிருக்கும். எனவே புலிகளின் பலம் ஒரே பகுதியில் முடங்கும் என்ற கணிப்பும் பொய்யாகிவிட்டது.

ஏனைய பகுதிகளில் முன்பைவிட புலிகளின் அணிகளின் எண்ணிக்கை அதிகமாகிவிடுவதுடன், பரவலான தாக்குதல்கள் மூலம் வடக்கு–கிழக்கின் சகல பகுதிகளிலும் படையினரின் நடமாட்டங்களுக்கும், நிலைகொள்ளலுக்கும் அச்சுறுத்தலாக புலிகள் மாறியுள்ளனர்.

**கடைசியாக கிடைத்த தகவலின்படி யாழ் குடாநாட்டிலும் புலிகளின் ஊடுவல் அதிகமாகியுள்ளது. இதைவிட வவுனியா, திருமலை, மட்டக்களப்பு நகர்களிலும் புலிகளின் ஊடுருவல் பலமாகிவருகிறது.**

வவுனியாவில் தாண்டிக்குளச் சமருக்குப் பின்னர் புலிகளின் ஊடுருவல் கூடியிருக்கிறது. எப்போது வேண்டுமானாலும் அங்கு அதன் பிரதிபலிப்பு எதிரொலிக்கலாம்.

இதற்கிடையே கொழும்பு நகரிலும் கரும் புலிகள் ஊடுருவியுள்ளதாக தகவல் கிடைத்துள்ளதாக பாதுகாப்பு தரப்பு எச்சரித்துள்ளது.

எனவே-புலிகளின் பலத்தை ஓரிடத்தில் முடக்க முடியாமல் போயிருப்பதோடு, படையினர்தான் தமது பெரும்பான்மையான பலத்தை- வன்னியில் -20 கிலோமீட்டர் பகுதியில் முடக்கிவிட்டு நிற்கின்றனர்.

தற்போது 'ஜயசிக்குறுய்' படையினர் தற்காப்பு கட்டத்தில் நிற்கின்றனர். புலிகளின் தளத்தை முற்றுகையிடச் சென்ற நிலையில் புலிகளின் முற்றுகைக்குள் சிக்கிய நிலைதான் இது.

தற்போதைய இடத்திலேயே தொடர்ந்து படைகள் நிலைகொண்டிருந்தால் புலிகளின் முற்றுகை மேலும் இறுகும். தாமதிக்கும் ஒவ்வொரு நாளும் மற்றொரு அழித்தொழிப்பு சமருக்கு புலிகள் தயாராக கால அவகாசம் கொடுப்பதுபோன்றதுதான்.

எனவே தொடர்ந்து முன்னேறுவதா? தொடங்கிய இடத்துக்கே திரும்புவதா என்பதை படையினர் மிக விரைவாக தீர்மானித்தாக வேண்டும்.

தொடர்ந்து நிலைகொள்வதாக இருந்தால் புளியங்குளம்வரை சென்று, பின்னர் வடகிழக்காக திரும்பி ஓமந்தை- நெடுங்கேணி சாலையைக் கைப்பற்றியாக வேண்டும். ஆனால் அந்தச் சாலை 20 கிலோமீட்டர்.

அல்லது புளியங்குளத்தில் இருந்து வவுனியா-யாழ் சாலை வழியாக மாங்குளம் செல்வதாக இருந்தால் 21.5 கிலோமீட்டர் தூரத்தைக் கடக்கவேண்டும்.

இதுவரை கடந்த தூரத்தைவிட களநிலவரம் உக்கிரமாக இருக்கும். இரு புறமிருந்தும் தாக்கக்கூடிய வாய்ப்பு புலிகளுக்கு மேலும் அதிகரிக்கும்.

இல்லாவிட்டால் நெடுங்கேணியில் உள்ள படையினர் புளியங்குளம் நோக்கி வரவேண்டும். ஆனால் புலிகளின் முற்றுகைக்குள் சிக்கும் அபாயம் உண்டு. நெடுங்கேணியில் உள்ள படைபலம் 20 கிலோமீட்டர் தூரத்தை கைப்பற்றி நிலைகொள்ளும் அளவுக்கு போதுமானதா என்பது கேள்விக்குறி.

நெடுங்கேணியில் இருந்து முன்னேறும் படை அணிகள் புலிகளின் ஊடறுப்புக்கு உள்ளானால், மணலாற்று முகாமில் இருந்து துண்டிக்கப்பட்டு இடையில் தொங்கும் அபாயமும் இருக்கிறது.

எனவே புளியங்குளத்திற்கு சற்று முன்பாக நிலைகொண்டுள்ள 'ஜயசிக்குறுய்' படையினர்தான் அடுத்த நகர்வையும் மேற்கொண்டாக வேண்டும். படைபலம் அதிகமாக உள்ளதால் பாரிய நகர்வுகளை அவர்களே மேற்கொண்டாக வேண்டும்.

'ஜயசிக்குறுய்' படையினர் ஓய்வு எடுக்காவிடாமல் தடுக்க மற்றொரு தாக்குதலை புலிகள் நடத்தக்கூடும் என்பதால் தடுக்க தந்திரோபாய நகர்வுகள் சிலவற்றை படையினர் மேற்கொள்கின்றனர்.

கிளிநொச்சி முகாமில் உள்ள படைகள் வடக்கச்சி நோக்கி நகர முற்பட்டன. புலிகளின் முல்லைத்தளத்தை அச்சுறுத்தும் நகர்வே அதுவாகும்.

ஆனால் புலிகளின் எதிர்த்தாக்குதல் காரணமாக அம்முயற்சி உரம் பெறவில்லை.

**இப்போது மூன்று முனைகளில் புலிகளின் பாரிய தாக்குதலை படையினர் எதிர்பார்க்கின்றனர். ஒன்று: புளியங்குளத்தில் 'ஜயசிக்குறுய்' படையினரின்மீது. இரண்டாவது. நெடுங்கேணியில் நிலைகொண்டுள்ள படையினர்மீது. மூன்று: கிளிநொச்சியில் நிலைகொண்டுள்ள படையணிகள்மீது.**

எங்கே தாக்க புலிகள் திட்டமிடுகிறார்கள் என்பதை ஊகிப்பது சிரமம்.

இதேவேளை மறுபடி கடற்புலிகளின் தாக்குதல் படகுகள் கடற்பிராந்தியத்தில் நடமாட ஆரம்பித்துள்ளன.

வடக்கு-கிழக்கு கடற்பிராந்தியத்தில் போக்குவரத்தை நிறுத்தும் முடிவோடு கடற்புலிகள் இறங்கியுள்ளனர்.

வன்னியில் பொருளாதாரத் தடையை இறுக்குவது மூலமாக, அங்கிருந்து மக்களை வேறு பகுதிகளுக்கு நகர்த்தும் அரசின் முயற்சியை முறியடிக்கும் தந்திரமும் இதில் உண்டு.

**வன்னியில் இருந்து மக்கள் வெளியேறுவதை நேரடியாக தடுத்தால் மக்களுடன் முரண்பட நேரும் என்பதால், 'மிஷன்' கப்பலை வழிமறித்து தீயிட்டுள்ளனர் புலிகள்.**

கப்பலில் இருந்த பொருட்களையெல்லாம் தமது படகுகளில் ஏற்றிவிட்டு அதனை தீயிட்டனர் கடற்புலிகள்.

அதன்பின்னர் இரண்டாவது கப்பலும் 8.07.97ல் கடத்தப்பட்டது. இத்தோடு மூன்று கப்பல்களை புலிகள் கடத்திவிட்டனர்.

முதல் கப்பல் ஐரிஸ் மோனா. பின்னர் அதனை பருத்தித்துறைக் கடலில் நிறுத்தியிருந்த இடத்தில் விமானப்படை குண்டுவீசி தகர்த்தது. மிஷன் கப்பல் புலிகளால் தீயிடப்பட்டது.

தற்போது புலிகளின் பிடியிலுள்ளது மொராங்-பொங் கப்பல். அதனை புலிகள் தகர்க்க வேண்டும். அல்லது விமானப்படை தகர்க்கவேண்டும். மீட்டெடுப்பது கடினம். உள்ளே குண்டு இருக்கலாம். அல்லது ஐரிஸ் மோனா கப்பலை கடத்தி கடற்படைக்கு வலை விரித்ததுபோல கடற்புலிகள் தந்திரம் செய்யலாம். எனவே கடற்படையினர் அருகே செல்வது சிரமம்தான்.

முன்னர் புலிகள் ஒரு எச்சரிக்கை விடுத்திருந்தனர். 166வது முரசில் அந்த எச்சரிக்கை வெளியாகியிருந்தது.

**"மக்களுக்கான விநியோகம் என்ற பெயரில், படையினரின் பொருட்களையும் கொண்டு செல்லும் கப்பற் போக்குவரத்தை தாக்குவோம்!" என்று புலிகள் எச்சரித்திருந்தனர். தற்போதைய கப்பற் தாக்குதல்களுக்கு புலிகள் அதனைத்தான் திரும்பவும் கூறக்கூடும்.**

மொத்தத்தில் அரசியல்-இராணுவ பொருளாதார ரீதியான அழுத்தங்களை ஓரிடத்தில் குவித்து தம்மை தனிமைப் படுத்தும் வியூகங்களை ஊடறுக்க புலிகளின் கவனம் சகல பக்கங்களிலும் திரும்பியுள்ளது.


புலிகளால் தாக்கப்பட்ட 'மிஷன்' கப்பல்.

## அதிரடி அய்யாத்துரை



**தமிழ்க் கட்சி ஒன்று** புதிய தீர்வு யோசனையை அட்டகாசமாக ரெடி பண்ணிக் கொண்டிருக்கிறதாம். முதல்கட்டமாக மாகாண சபைக்கு தேர்தல் நடத்துமாறு கேட்கப்போகினமாம். பிறகு கட்டம் கட்டமாக முன்னேறுவினமாம். ச்சா.. இதெல்லோ யோசனை? "நாங்கள் பசியாறவும் வாய்ப்புத் தந்துபோட்டு நீங்களும் விளையாடுங்கோ, நாங்கள் ஏன் குறுக்கே வருகிறோம்" எண்டு அதிகாரத் தரப்பாருக்கு சொல்லாமல் சொல்லுகினம். 'பொதி எதற்கு? பொரி கிடைத்தால் போதும்' எண்டு நினைக்கினம். ம்ஹூம் ஒருநாளும் உருப்படப்போறதில்லை. கிடைத்த கடைசி சந்தர்ப்பத்தையும் கைகழுவிக் கொண்டிருக்கினம்.

**அவர் ஒரு தமிழ்க் கட்சியின்** முன்னாள் முக்கியஸ்தர். பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர். புரட்சியான முன்னணியாக்கும் எண்டு நம்பி தமிழ்க் கட்சியில் இணைந்தவர். கட்சிக்காக கொஞ்சம் கஷ்டப்பட்டும் உழைத்தவர். இனிமேலும் சரிப்பட்டுவராது எண்டு இலண்டனுக்கு சென்றுள்ளார். அவரை என் நண்பர் ஒருத்தர் சந்திச்சு கதைத்தவராம். "உங்கள் கட்சி என்ன செய்கிறது?" எண்டு கேட்க அவர் விரக்தியாகச் சிரித்துவிட்டு சொன்னாராம்: "தலைவருக்கு அமைச்சு ஒன்றின் ஆலோசகர் எண்ட பதவி மூலம் கைநிறையச் சம்பளமும் வருகுது. கொஞ்சத் தோழர்கள் மட்டும் கஷ்டப்பட்டு உழைக்கிறார்கள். மொத்தத்தில் நஷ்டமில்லாத பிஸினஸ்," எண்டாராம். இத்தனைக்கும் குறிப்பிட்ட கட்சித் தலைவருக்கு அவர் பொல்லாத விசுவாசியாக இருந்தவர். தலையைச் சுத்துற கலாசாரம் வளர்ந்துபோட்டுது. கடைசியாக எங்கள் தலையைச் சுற்றவும் நினைச்சவை. அதுதான் விலகிப்போட்டேன்" என்றவராம்.

**எட்டுத் தமிழ்க் கட்சிக் கூட்டம்** எண்டு செய்தி பார்த்திருப்பியள். முதலில் ஐந்து கட்சி பிறகு எட்டுக் கட்சி. 'ஆஹா வளர்ச்சிதானே' எண்டு நினைச்சுப் போடாதேயுங்கோ. வெட்டி ஒட்டங்கள் எல்லாம் கலாதியாக நடக்குதாம். ஐந்து கட்சிக்குள் ஒரு கட்சியை வெட்டிவிட சில கட்சிகள் திட்டமிட்டதாம். அதேநேரம் ஐந்து கட்சிகளுக்குள் வெகுஜன சபையில் இல்லாத கட்சிகளை வெட்டிவிட்டுப்போட்டு, பொதி பற்றி பொது அபிப்பிராயம் திரட்ட இரகசியக் கூட்டம் ஒன்றை கூட்டினாராம் நிலமானவர். ஐந்து கட்சிகளுக்குள் மீதி மூன்று கட்சிக்கும் காய் வெட்டிப்போட்டு ரெண்டு கட்சிகள் நிலமானவரின் கூட்டத்துக்கு போனவையாம். மலையக தனித்துவக் கட்சியும் ஆஜராம். ஆனால் மலையக சிஷ்யர் கட்சிக்கு வெட்டாம். என்ன தலை சுத்துதோ? இதுதானுங்கோ ஒற்றுமை? சும்மா பத்திரிகைச் செய்திகளைப் பார்த்துப்போட்டு எங்கள் கட்சிகளைப் பற்றி குறைச்சு மதிப்பிடக்கூடாது. சுழியோட்ட மன்னர்கள்!

**வெளிநாட்டு வானொலிச் சேவைக்கு** கூட்டான கட்சித் தலைவர் சம்பத்திய சம்பவம் பற்றி பேட்டி கொடுத்தவர். 'யார் செய்தது எண்டு நினைக்கிறியள்?' எண்டு கேட்டபோது டென்ஷனாகிப்போட்டார். 'நாங்கள் சோகத்தில் இருக்கிறோம், நீங்கள் யார் எண்டு ஆராயச் சொல்லுறியள்?' எண்டு பாய்ந்தாராம். சோகத்தில் இருந்தால் பின்னர் ஏன் பாருங்கோ பேட்டி கொடுக்க போனைத் தூக்கினவர்? எல்லோரும் கண்டிக்க வேண்டும் எண்டுமல்லோ அறிக்கை விட்டவை. யார் எண்டு சொல்லாமல் கண்டியுங்கோ கண்டியுங்கோ எண்டு சொன்னால், கண்டிப்பது எப்படியுங்கோ? 'குற்றம்சாட்ட ஆளில்லாமல் வழக்குப் போடலாமோ? சட்டம் படித்த கட்சிக்கு அது மட்டும் தெரியாதோ? அனுதாபத்தை பயன்படுத்தவும் வேண்டும். யார் எண்டு சொல்லி ஆத்திரத்தை சம்பாதிக்கவும் கூடாது. நல்ல சாணக்கியம்! கூழுக்கும் ஆசை. மீசைக்கும் ஆசை எண்டால் டென்ஷன் வரத்தானே செய்யும்!

**திருவானமலை சபைத்** தலைவரும் தங்கமானவரும் நெருக்கமாகி அடுத்த தேர்தலுக்கு ஆயத்தம் எண்டு சொன்னேன் அல்லோ? சபைத் தலைவர் விட்டுள்ள பிரசரம் அதனை உறுதிப்படுத்தியுள்ளது. "நீ எனக்கிட்ட பணி தொடரும்" எண்டு கூறியிருக்கிறார். 'கட்டவன் பொறுக்கி' என்றும் சாடியிருக்கிறார். எப்பவுமே குப்பையுடன் சம்பந்தப்பட்ட விஷயங்கள்தான் ஞாபகம் வருகுது பார்த்தியளோ? இவர் ஒரு பொருட்டென்று ஒரு தோட்டாவை யாராவது விரயம் பண்ண மாட்டினமோ எண்டு அலைகிற மாதிரியல்லோ பிரசரத்தில் அழுதிருக்கிறார். "அண்ணா உனக்கு அருகில் இடம் வை; நிச்சயம் வருவேன்!" என்கிறார். அப்பிடி என்ன அவசரம்?! சொன்னால் அனுதாபம் வருமாக்கும்!

**ரெண்டு எழுத்து** பெண்களை கிண்டல் செய்து எழுதிய தமிழ்ப் பட நடிகையின் பெயரைக் கொண்ட பெண்மணி தொடர்பாக பல தகவல்கள் கிடைத்துள்ளன. கூட்டான கட்சியின் நிலமானவரின் நட்புக்குரியவராம் அவர். அதற்காக தன் ஆண நண்பரின் கருத்தத்தைத்தான் அவர் பிரதிபலித்திருப்பார் எண்டு நினைக்க முடியுமோ? தமிழே ஒழுங்காக தெரியாத 'டமில் பெண்' தமிழ்ப் பெண்கள் பற்றிப் பேசலாமோ?

இந்த வாரம் ஒரு சித்தர் பாடல். கொங்கணச் சித்தர் பாடியது.

**"வீணாசை கொண்டு திரியாதே யிது**
**மெய்யல்ல பொய்வாழ்வு பொய்க்கூடு**
**காணாத வாலையைக் கண்டு கொண்டால் காட்சி**
**காணலாம் ஆகாயம் ஆளலாமே!"**


படிப்பகம்

www.padippakam.com

அரசியல் தொடர்

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

138

# வடக்கு-கிழக்கில் மோசடித் தேர்தலும் பொம்மை அரசாங்கமும்!

அற்புதன் எழுதுவது

## முன்கூட்டியே முடிவு

தேர்தலின் பின்னர்தான் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படுவது வழக்கம். தேர்தல் முடிந்த பின்னர்தான் எக்கட்சி பெரும்பான்மை இடங்களைப் பிடித்திருக்கிறது என்பதையும் அறிய முடியும்.

ஆனால், வடக்கு-கிழக்கு மாகாண சபைத் தேர்தலை அறிவிக்க முன்னரே அங்கு அதிகாரத்திற்கு வரவேண்டிய கட்சி எதுவென்பதை இந்திய அரசு தீர்மானித்துவிட்டது.

**இந்திய அரசினதும், குறிப்பாக ராஜீவ் காந்தி தலைமையிலான காங்கிரஸ் கட்சியினது இலங்கை தொடர்பான கொள்கை சரியானது என்பதை நியாயப்படுத்தவும் கூடிய பொம்மை அரசாங்கம் ஒன்றை ஏற்படுத்துவதுதான் பிரதான நோக்கமாக இருந்தது.**

அந்தப் பொம்மை அரசுக்கு தன்னை இந்திய வம்சாவளியினராக கூறிக்கொண்ட வரதராஜப்பெருமாளையே முதலமைச்சராக்குவது என்பதையும் கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகம் முன்கூட்டியே முடிவு செய்திருந்தது.

யாழ் பல்கலைகழகத்தில் விரிவுரையாளராக இருந்தவர் வரதராஜப் பெருமாள். 1982ல் வரதராஜப் பெருமாளும், மற்றொரு விரிவுரையாளரான திருநாவுக்கரசுவும் இணைந்து நூல் ஒன்றை வெளியிட்டிருந்தனர்.

அந்த நூலில் இந்தியா ஒரு தரகு முதலாளித்துவ அரசு. சோவியத் யூனியன் ஒரு சமூக ஏகாதிபத்தியம். இந்திய அரசும் சோவியத் யூனியனும் தமது நலன்களுக்காக தெற்கு ஆசியாவில் மேலாதிக்கம் செய்ய முயலுகின்றன என்று கூறப்பட்டிருந்தது.

அக்கால கட்டத்தில் வரதராஜப் பெருமாள் புலிகள் இயக்கத்தினருடனும், புளொட் இயக்கத்தினருடனுமே நெருக்கமான தொடர்புகளை வைத்திருந்தார்.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தினருடன் மேலோட்டமான தொடர்புகளை மட்டுமே வைத்திருந்தார். தயாபரன், சுகு, ரமேஷ் ஆகியோர் வரதராஜப் பெருமாளை கருத்தரங்குகள், வகுப்புக்கள் போன்றவற்றை நடத்துவதற்காக பயன்படுத்தி வந்தனர்.

வரதராஜப் பெருமாளின் நல்ல காலமோ, கெட்ட நேரமோ மட்டக்களப்பில் ஈ.பி.ஆர்.எல்.எஃப். நடத்திய கால் மாக்ஸ் பற்றிய கருத்தரங்கில் கலந்துகொள்ளச் சென்றபோது அவர் கைதுசெய்யப்பட்டார். பின்னர் மட்டக்களப்பு சிறையுடைப்பின் பின்னர் டக்ளஸ் தேவானந்தாவினால் அவர் ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தில் இணைத்துக் கொள்ளப்பட்டார்.

## புத்திஜீவிகளும் கட்சியும்

பெருமாளைக் கட்சியில் சேர்த்துக் கொள்வதை ஈ.பி.ஆர்.எல்.எஃப். யாழ் பிராந்தியக் கமிட்டி விரும்பவில்லை. தயாபரன், சுகு, ரமேஷ், செழியன் போன்றோர் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

**புத்திஜீவியாக தம்மைக் கருதிக்கொள்பவர்கள் கட்சிகளுக்குள் இருந்து செயற்பட முடியாதவர்களாவர். இவர்கள் தோழர்களின் முதுகில் சவாரி செய்வதுடன் தமக்குத்தான் எல்லாம் தெரியும் என்ற மனப்போக்கில் இருப்பர். இவ்வாறானவர்களை புரட்சிகர அமைப்புக்கள் கட்சிக்கு வெளியேவைத்து பயன்படுத்தலாமே தவிர, கட்சிக்குள் கொண்டு வரக்கூடாது என்பதே யாழ் பிராந்தியக் கமிட்டி உறுப்பினர்கள் பலரது கருத்தாக இருந்தது.**

கட்சிக்குள் கீழ்மட்டத்தில் இருந்து படிப்படியாக கடும் உழைப்பாலும், விசுவாசத்தாலும் முன்னேறிவரும் தோழர்களே கட்சியின் முக்கிய பொறுப்புக்களை வகிக்கவேண்டும். புத்திஜீவிகள் கட்சிக்குள் புகுத்தப்பட்டு அவர்கள் கட்சியின் தலைமையாளர்கள்போல சித்தரிக்கப்படுவது வெற்று பகட்டாக இருக்குமே தவிர, கட்சியின் கட்டுக்கோப்பையும், கட்சி உறுப்பினர்களின் விசுவாச உழைப்புக்களையும் சீர்குலைத்து கட்சியை போர்க்குணமற்ற அமைப்பாக்கிவிடும்.

இதனால்தான் வரதராஜப் பெருமாள் போன்றபலரை கட்சிக்குள் கொண்டு வரக்கூடிய சாத்தியங்கள் இருந்தும் ஈ.பி.ஆர்.எல்.எஃப். யாழ் பிராந்தியக் கமிட்டி அதனைச் செய்யாமல் அவர்களை வெளியேயே வைத்து கட்சிக் கொள்கைகளிலோ, கட்சி உறுப்பினர்கள்மீதோ ஆதிக்கம் செலுத்தாமல் பயன்படுத்தி வந்தது.

இவ்வாறான பல்வேறு அணுகுமுறைகளால் ஈ.பிஆர்.எல்.எஃப். இயக்கம் தனித்துவமான அமைப்பாகவும், புரட்சிகர கட்சி என்று கருதப்படும் அளவுக்கு வலிமைபெற்றும் வந்தது என்பதும் குறிப்பிட்டேயாகவேண்டியவை.

**1983க்கு பின்னர் ஆட்கள் சேர்ப்பில் ஈ.பி.ஆர்.எல்.எஃப். தலைமை காட்டிய தாராளமான போக்குக் காரணமாகவே ஈ.பி.ஆர்.எல்.எஃப். படிப்படியாக தனது தனித்துவங்களை இழக்கத் தொடங்கியது.**

1983க்கு முன்னர் யார் பிராந்தியக் கமிட்டி உறுப்பினர்களால் ஏற்படுத்தப்பட்ட இடதுசாரி தோற்றப்பாட்டை பயன்படுத்திக்கொண்ட தலைமை, அக் கோட்பாடுகளுக்கு மாறான பாதையில் செல்லத் தொடங்கியது.

அக் கட்டத்தில்தான் வரதராஜப் பொருமாள் ஈ.பி.ஆர்.எல்.எஃப்.புக்குள் பிரவேசித்தார். ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்புக்குள் ஏற்பட்ட பிளவின் பின்னர் கட்சியின் மத்திய கமிட்டிக்குள்ளும் இடம்பிடித்துக் கொண்டார்.

அதன்பின்னர் இந்திய எதிர்ப்பு, சோவியத் எதிர்ப்பு நிலைப்பாடுகளை கைவிட்டு, தன்னை ஒரு இந்திய அரசினதும், இந்தியாவினதும் தீவிர விசுவாசியாக காட்டிக்கொண்டார்.

இந்திய எதிர்ப்பாளராக இருந்த ஒருவர் பின்னர் இந்திய அரசின் நம்பிக்கையைப் பெற்று, பொம்மை அரசாங்கத்தின் முதலமைச்சராகவும் மாறியது சாதனைதான்.

## திட்டமிட்ட தேர்தல்

ஈ.பி.ஆர்.எல்.எஃப். அதிகாரத்துக்கு வரக்கூடியதாக தேர்தலை நடத்துவதற்கு முடிவு செய்த இந்திய அரசு வடக்கில் போட்டியின்றி அவர்களைத் தெரிவு செய்யும் நிலையை தோற்றுவிக்க நினைத்தது.

வடக்கில் போட்டியின்றித் தெரிவு, கிழக்கில் மட்டும் கண்துடைப்புக்காக ஒரு தேர்தல். வடக்கிலும், கிழக்கிலும் எல்லோருமே போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டால் தேர்தல் கேலிக்கூத்தாகக் கருதப்படும் அல்லவா.

வடக்கு-கிழக்கு மாகாண அரசுக்கு ஜனநாயக தோற்றப்பாட்டை வழங்கினால்தான் தமது சாதனையாக அதனை சுட்டிக்காட்ட இந்திய அரசுக்கும் வாய்ப்பாக இருக்கும்.

கிழக்கில் ஈ.பி.ஆர்.எல்.எஃப்., ஈ.என்.டி.எல்.எஃப். ஆகிய அமைப்புகளுடன், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசையும் போட்டியிட சம்மதிக்க வைத்தது இந்திய அரசு.

தனக்குரிய அரசியல் அந்தஸ்த்தை பெற்றுக்கொள்ளவும், இந்திய அரசின் நட்பைப் பெறவும் கிடைத்த சந்தர்ப்பத்தை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசும் பயன்படுத்திக் கொண்டது. ஐக்கிய தேசியக் கட்சியும் போட்டியிட்டது. சிறீலங்கா சுதந்திரக் கட்சி போட்டியிட மறுத்துவிட்டது.

மாகாணசபைத் தேர்தலுக்கு வேட்பு மனுத் தாக்கல் செய்யும் தினத்தன்று யாழ் நகரில் நடைபெற்றது கூத்து.

பத்திரிகைகள், வானொலி, தொலைக் காட்சிகளில் வேட்பு மனுத் தாக்கல் செய்யும் திகதி அமர்க்களமாக அறிவிக்கப்பட்டது.

வேட்பு மனுத் தாக்கல் செய்யும் தினத்தன்று யாழ்ப்பாணம் அரச தலைமைச் செயலகத்துக்கு செல்லக்கூடிய பாதைகள் எங்கும் இந்தியப் படையினரும், ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தினரும் சுறுசுறுப்பாகக் காணப்பட்டனர்.

யாழ் அரச தலைமைச் செயலகத்தில்தான் (கச்சேரி) வேட்பு மனுத்தாக்கல் செய்ய வேண்டும். வேட்பு மனுத் தாக்கல் செய்யும் கடைசி நேரம் முடியும்வரை வேறு யாரும் வேட்பு மனுத்தாக்கல் செய்யச் செல்லக் கூடாது.

**அதனைக் கண்காணிக்கத்தான் கச்சேரிக்கு செல்லும் பாதைகளில் பயணம் செய்வோர் தடுக்கப்பட்டனர். இந்தியப் படையினர் அவர்களைச் சோதனையிட்டனர்.**

வேட்பு மனுத் தாக்கல் செய்வதற்கு பணம் செலுத்த வேண்டும். அதனால் ஒரு குறிப்பிட்ட தொகைக்கு மேல் பணம் வைத்திருந்தோர் பாடு திண்டாட்டமாகிவிட்டது. அவர்களை திருப்பி அனுப்பிவிட்டார்கள். வேறு சிலரிடம் வேட்பு மனுத் தாக்கல் செய்ய தேவைப்படுவதைவிட குறைந்தளவு பணத்தை மட்டும் விட்டு வைத்துவிட்டு மீதியை எடுத்துக்கொண்டு அப்பாதையில் பயணம் செய்ய அனுமதித்தனர்.

## மீன்வியாபாரிகள்

மீன் வியாபாரிகள் சிலர் யாழ் கச்சேரிக்கு செல்லும் பாதையொன்றில் தடுத்து நிறுத்தப்பட்டனர். சோதனையிட்டபோது அவர்களிடம் உள்ள பணத்தையும் வாங்கி எண்ணிப்பார்த்தனர்.

வேட்பு மனுத் தாக்கல் செய்வதற்கு எவ்வளவு பணம் தேவையோ அதனைவிட கூடுதலாகவே அவர்களிடம் பணம் இருந்தது.

உடனே அவர்கள்மீது இந்தியப் படைக்கும், ஈ.பி.ஆர்.எல்.எஃப். உறுப்பினர்களுக்கும் கடும் சந்தேகம் வந்துவிட்டது. துருவித் துருவிக் கேள்விகள் தொடுத்தார்கள்.

மீன் வியாபாரிகள் போன்று புலிகளின் ஆதரவாளர்கள்தான் வேட்பு மனுத்தாக்கல் செய்ய வந்திருக்கிறார்களோ? என்பதுதான் சந்தேகம்.

படாதபாடுபட்டு தாங்கள் மீன்வியாபாரிகள்தான் என்பதை அவர்கள் நிருபித்தனர்.

**அப்படியிருந்தும்கூட மீன் வியாபாரிகளிடம் இருந்த பணத்தை பறித்துவைத்துக் கொண்டுதான் அவர்களை தொடர்ந்து செல்ல அனுமதித்தனர்.**

புலிகள் தேர்தலை நிராகரித்திருந்தனர். ஆனாலும் மாகாண சபைக்கு ஈ.பி.ஆர்.எல்.எஃப்.வை வரவிடாமல் தடுக்க, சுயேட்சைக் குழுக்கள் என்ற பெயரில் புலிகள் தங்கள் ஆதரவாளர்களை தேர்தலில் நிறுத்தக் கூடும் என்று இந்திய அரசும், ஈ.பி.ஆர்.எல்.எஃப்.வும் சந்தேகித்தன.

அதனால்தான் தம்மைமீறி யாருமே கச்சேரி சென்று வேட்பு மனுத்தாக்கல் செய்யாமல் கடும் கண்காணிப்புச் செலுத்தினார்கள்.

இக் கூத்தின்பின்னர்தான் வடபகுதியில் போட்டியின்றி வேட்பாளர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

ஆயினும் தெரிவு செய்யப்பட்ட வேட்பாளர்களின் பெயர்கள் இரகசியமாக வைக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டதுதான் மற்றொரு வேடிக்கை.

பாதுகாப்புக் காரணங்களுக்காக இரகசியம் காக்கப்படுவதாக கூறப்பட்டது. உண்மையில் பட்டியலை நிரப்ப வேட்பாளர்களாக அறிவிக்கப்பட்டவர்களில் விரல் விட்டு எண்ணக்கூடியவர்கள் தவிர ஏனையோர் மக்களுக்கு அறிமுகமில்லாதவர்கள். சிலர் மக்களின் வெறுப்புக்கு உள்ளான நபர்கள். பட்டியலை உடனே வெளியிட தயக்கம் காட்டியதற்கு அதுவும் ஒரு பிரதான காரணம்.

யாழ்ப்பாணம் மானிப்பாயில் இருந்த சமூகவிரோதப் பேர்வழியான தங்கன் (சுதாகர்) என்பவனைப் பற்றி முன்பு குறிப்பிட்டிருந்தேன் அல்லவா. அந்த ஆசாமியும் மாகாணசபை உறுப்பினராக்கப்பட்டு மக்கள் பிரதிநிதியானவர்களில் ஒருவர்.

வடக்கில் போட்டியின்றி வேட்பாளர்கள் தெரிவுசெய்யப்பட்டதால், கிழக்கில் மட்டும் தேர்தல் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

## கிழக்கில் தேர்தல்

**கிழக்கு மாகாணத்தில் தேர்தல் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டபோதும், அங்கும் தமது விருப்பு வெறுப்புப்படியே தேர்தலை நடத்தி முடிக்க இந்திய அரசு முடிவு செய்தது.**

வாக்காளர்களுக்கான அட்டைகளை விநியோகிக்கும் பொறுப்பு ஈ.பி.ஆர்.எல்.எஃப்., ஈ.என்.டி.எல்.எஃப். இயக்கங்களுக்கு வழங்கப்பட்டது.

வாக்குச் சாவடிகள் முன்பாக ஈ.பி.ஆர்.எல்.எஃப்., ஈ.என்.டி.எல்.எஃப். இயக்கத்தினர் ஆயுதபாணிகளாக நிறுத்தப்பட்டிருந்ததை இந்தியப் பத்திரிகை நிருபர்களே நேரில் கண்டனர்.

இந்து, இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகைகளில் கிழக்கில் நடைபெற்றது மோசடித் தேர்தல் என்பதை வெளிப்படுத்தும் செய்திகளும், தகவல்களும் பிரசுரமாகியிருந்தன.

'இந்து' பத்திரிகை பின்வருமாறு குறிப்பிட்டிருந்தது:

**"கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த ஒரு இலட்சம் அகதிகள் இன்னமும் தங்கள் வீடுகளுக்கு திரும்பவில்லை. இந்தியாவிலும், இலங்கையின் வட மாகாணத்திலும் தங்கியுள்ள கிழக்கு மாகாண அகதிகள் வாக்களிக்க வசதி செய்யப்படும் என்று இந்திய அரசினால் அறிவிக்கப்பட்டது. ஆனால் அவ்வித ஏற்பாடுகள் செய்யப்படவில்லை.**

**அகதிகளின் வாக்குகள் வேறு யாராலோ போடப்பட்டன. திருக்கோணமலையில் உள்ள அகதிகள்கூட வாக்களிக்க இயலவில்லை"** என்பது இந்துவின் படப்பிடிப்பு.

வீடு வீடாகச் சென்ற ஈ.பி.ஆர்.எல்.எஃப்., ஈ.என்.டி.எல்.எஃப். உறுப்பினர்கள் மக்களை கட்டாயப்படுத்தி வாக்குச் சாவடிக்கு அழைத்துச் சென்றனர்.

"நீங்கள் வாக்களிக்க வரமறுத்தால் உங்களை புலிகளின் ஆட்களாகவே கருதுவோம்" என்று துப்பாக்கி முனையில் மிரட்டினார்கள்.

அப்படியிருந்தும் போதிய வாக்காளர்களை திரட்ட முடியவில்லை. அதனால் ஈ.பி.ஆர்.எல்.எஃப்., இ.என்.டி.எல்.எஃப். உறுப்பினர்களே வெகு துரிதமாகச் செயற்பட்டு வாக்குச் சீட்டுக்களில் முத்திரை குத்தி பெட்டிகளுக்குள் கட்டுக் கட்டாக தள்ளி முடித்தார்கள். இதனை 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' நிருபரே குறிப்பிட்டிருந்தார்.

ஈ.பி.ஆர்.எல்.எஃப்., ஈ.என்.டி.எல்.எஃப். உறுப்பினர்களிடையே சுவாரசியமான போட்டியே நடந்தது. யார் கூடுதலாக கள்ள வாக்குப் போடுவது என்பதுதான் போட்டி.

கள்ளவாக்குப் போடும் விடயத்தில் ஈ.என்.டி.எல்.எஃப்.பைவிட ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்பினருக்குத்தான் அதிக வாய்ப்பு இந்தியப் படையினரால் வழங்கப்பட்டது.

கொழும்பிலிருந்து இறக்குமதியான தேர்தல் அதிகாரிகள் பலர் செய்வதறியாது திகைத்து நின்றனர்.

மட்டக்களப்பில் உள்ள வாக்குச் சாவடி ஒன்றில் தேர்தல் அதிகாரியிடம் ஈ.பி.ஆர்.எல்.எஃப். உறுப்பினர்கள் வாக்குச் சீட்டுக் கட்டொன்றை கொடுத்து "என்ன பார்த்துக் கொண்டு நிற்கிறீர்கள். நீங்களும் குத்துங்க" என்று தள்ளிவிட்டனர்.

## ஆறுகோடி ரூபாய்

தேர்தலை முன்னிட்டு ஈ.பி.ஆர்.எல்.எஃப்., ஈ.என்.டி.எல்.எஃப். இயக்கங்களுக்கு இந்திய அரசால் பெருந்தொகையான பணமும் வழங்கப்பட்டது.

வர்ண வர்ண சுவரொட்டிகளை தமிழ்நாட்டில் அச்சிட்டு விமானம் மூலமாகக் கொண்டுவந்து சேர்த்தது ஈ.பி.ஆர்.எல்.எஃப்.

**கிட்டத்தட்ட ஆறு கோடி ரூபாய் தேர்தல் செலவுக்காக ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்திற்கு இந்தியாவால் கொடுக்கப்பட்டது. இத் தகவலை தமிழகத்தில் இருந்து வெளியான 'விடுதலை' பத்திரிகையும் பெரிதாக பிரசுரித்திருந்தது. இந்திய அரசு அச் செய்தியை மறுக்கவில்லை.**

(இலங்கையிலும், இந்தியாவிலும் ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்பினரால் பலருடைய பெயர்களில் வாங்கப்பட்ட சொத்துக்களின் விபரங்கள் பற்றி எமக்கு கிடைத்துள்ள ஆவணங்கள் இந்தியப் படைகாலத்தில் ஈ.பி.ஆர்.எல்.எஃப். இடம் இருந்த பணப் புழக்கத்தை உறுதி செய்கின்றன.)

மட்டக்களப்பு பகுதியில் 83% வீதமானோர் வாக்களித்ததாக அறிவிக்கப்பட்டதைக் கேட்டதும் செய்தியாளர்களுக்கு அதிர்ச்சிமேல் அதிர்ச்சி.

**காலை 7 மணிமுதல் மாலை 4 மணி வரையே வாக்களிப்பு நடைபெற்றது. எங்குமே மந்த கதியில்தான் வாக்குப் பதிவு இடம்பெற்றது. அப்படியிருக்க 83 வீதமானோர் எங்கிருந்து தோன்றினர் என்பது ஆச்சரியமாக இருந்தது.**

கிழக்கு மாகாணத் தேர்தலை ஜனநாயகத் தேர்தலாக சித்தரிக்க இந்திய அரசு தீவிரப் பிரசாரங்களை மேற்கொண்டது.

வடக்கு-கிழக்கு மாகாண அரசாங்கம் ஜனநாயக ரீதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்டதாக உருவாக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

இலங்கையின் வரலாற்றில் வடக்கு-கிழக்கு முதலாவது பொம்மை அரசாங்கத்தை இந்தியா உருவாக்கி முடித்தது.

முதன் முதலில் இலங்கைத் தேர்தலில் மாபெரும் மோசடித் தேர்தல் என்ற சாதனையையும் முன்னுதாரணத்தையும் ஏற்படுத்திய தேர்தல் வடக்கு-கிழக்கு மாகாணசபைத் தேர்தல்தான்.

அதன் பின்னர் வடக்கு-கிழக்கில் நடை பெற்ற எத்தேர்தலும் ஜனநாயக ரீதியான தேர்தல்களாக இடம்பெற முடியவில்லை என்பதும் உண்மை. முதற் கோணல் முற்றும் கோணல் என்பது இதுதானோ?!

## மாலைகளும் மரியாதைகளும்

வடக்கு-கிழக்கு மாகாண அரசாங்கத்தின் முதலமைச்சராக வரதராஜப் பெருமாளை நியமிப்பது என்று முன்கூட்டியே இந்தியா முடிவு செய்திருந்தது அல்லவா.

அதன் பிரகாரம் தேர்தலுக்குப் பின்னர் ஈ.பி.ஆர்.எல்.எஃப். செயலாளர் நாயகம் க.பத்மநாபாவிடம் தனது விருப்பத்தை தெரிவித்தது இந்திய அரசு

பத்மநாபாவுக்கு அடுத்த நிலையில் சுரேஸ் பிரேமச்சந்திரன் போன்ற சீனியர் உறுப்பினர்கள் ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்பில் இருந்தனர். ஆயினும் இந்திய அரசின் கண்டிப்பான கட்டளைப்படி வரதராஜப் பெருமாள் முதலமைச்சராக முடி சூட்டப்பட்டார்.

மாலைகள்-மரியாதைகள்-மட்டற்ற பாதுகாப்பு ஏற்பாடுகள் மத்தியில் வரதராஜப் பெருமாள்தான் தமிழ் மக்களின் தலைவர் என்ற பிரமை தோற்றுவிக்கப்பட்டது. ஈ.பி.ஆர்.எல்.எஃப். தலைவராகவும் வரதராஜப் பெருமாள்தான் கருதப்பட்டார்.

"வடக்கு-கிழக்கில் அமைதி திரும்பிவிட்டது. மக்களால் தெரிவுசெய்யப்பட்ட மாகாண அரசாங்கம் பதவிக்கு வந்துவிட்டது. புலிகளை மக்கள் நிராகரித்துவிட்டார்கள்" என்று இந்திய அரசு தனது கட்டுப்பாட்டில் உள்ள பிரசார சாதனங்கள் மூலம் பிரசாரம் செய்தது.

வடக்கு-கிழக்கு மாகாண முதலமைச்சர் பெருமாளிடம் ஒரு நிருபர் கேட்டார், "புலிகளால் உங்கள் அரசாங்கத்துக்கு நெருக்கடி ஏற்படமாட்டாதா?"

பெருமாள் அந்த நிருபரைப் பார்த்து கேலியாகச் சிரித்துவிட்டுச் சொன்னார்:

"புலிகளா? அவர்கள் சிறு குழுவாக காட்டுக்குள் திரிகிறார்கள். எங்களுடன் பேசவிரும்பினால் வந்து பேசலாம். இல்லாவிட்டால் அவர்களை அழிப்பதைத் தவிர வேறுவழியில்லை."

## துரோகிகளைத் தண்டிப்போம்

மாகாண சபைத் தேர்தலையடுத்து ஜனாதிபதித் தேர்தல், பாராளுமன்றத் தேர்தல் என்பன வரவிருந்தன.

தேர்தல்களில் போட்டியிடுவதும், பதவிகளைப் பெறுவதும் இனத் துரோகமாகும். அவ்வாறானவர்களை என்றோ ஒருநாள் தண்டித்தே தீருவோம் என்று புலிகள் அறிக்கை ஒன்றை விடுத்தனர். போரில் பலியான தமது உறுப்பினர்களின் நினைவாகவே அறிக்கை விடுக்கப்பட்டது. அந்த அறிக்கையில் கூறப்பட்டிருந்தது இதுதான்:

**நெஞ்சில் நிலைத்த தியாகிகளின் நெஞ்சை உருக்கும் நினைவு நாள் இது. உடல்களாய் விழாமல், காற்றோடு காற்றாக கரைந்த உயிர்களை எண்ணுகிறோம்.**

**எத்தனை போர்க்களங்களில் படைகளை எதிர்கொண்டவர்கள். வசந்த காலங்களில் சாய்ந்த மரங்கள். அவர்களை மறக்கமாட்டோம்.**

**அவர்களின் இழப்புக்கள் எதற்காக?**
**மாகாண சபைக்கா?**
**பாராளுமன்றத்தில் இடம்பெறவா?**
**மாலைகள் தோள் சுமக்க தேர்தலில் உலாவரவா?**
**மந்திரிகளாகவா?**

**எங்கள் முன்னோடிகளே! உங்களை சடலங்களாக்கி எங்களுக்கு உயிர் தந்தீர்களே, நாங்கள் உங்களுக்கு துரோகம் செய்யமாட்டோம்.**

**தேர்தல் சந்தையில் தமிழீழத்தை விலைபேசும் வியாபாரிகளை எங்கள் தேசம் மன்னிக்காது. என்றோ ஒருநாள் தண்டித்தே தீரும்!**

**இதோ! உங்கள் இரண்டு ஆண்டு நினைவு நாளில் நாங்கள் எடுக்கும் ஆணை, எங்கள் உயிரும் தமிழீழத்திற்கே."** என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதே வேளை புலிகளுக்கு சாதகமான சூழல் தென்னிலங்கையில் உருவாகும் அறிகுறிகள் தெரிந்தன.

இலங்கை ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளராக பிரேமதாசா தெரிவானார்.

வேட்பாளரானதும் பிரேமதாசா அறிவித்தார்:

"இந்தியப் படையை இங்கிருந்து வெளியேற்றுவோம்!" (தொடர்ந்து வரும்)



வன்னிக்காட்டில் புலியுடன் பிரபா



படிப்பகம்

www.padippakam.com



ஸ்பெஷல் ரிப்போர்ட்

# –தங்கத்துரை மரணம்– ஊகங்களும்–சந்தேகங்களும்!

## படைகளா? தமிழ்க் கட்சிகளா? சம்பந்தனா? புலிகளா?

ஜூலை 5ம் திகதி கரும்புலிகள் நினைவுநாள். நாடெங்கும் பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரமாக செய்யப்பட்டிருந்தன. புலிகளின் இலக்காக கருதப்படக் கூடிய பகுதிகள், நிலைகள், முகாம்கள் யாவும் விழிப்பான பாதுகாப்பு வியூகத்திற்குள் இருந்தன.

கரும்புலித் தாக்குதல் ஒன்றின் செய்தி எங்காவதிருந்து கிடைக்கக்கூடும் என்று செய்தி நிறுவனங்கள்கூட தங்கள் செவிகளை தீட்டி வைத்துக்கொண்டு காத்திருந்தன.

இரவு எட்டுமணியளவில்தான் செய்தி நிறுவனங்களுக்கு அச் செய்தி கிடைத்தது.

முதலில் கிடைத்த அவசரச் செய்தி இதுதான்:

"திருமலை மாவட்ட கூட்டணி எம்.பி. தங்கத்துரை குண்டுவெடிப்பொன்றில் கொல்லப்பட்டார்."

குண்டுவெடிப்பு என்றதும் கரும்புலித்தாக்குதலோ என்று விசாரிப்புக்கள் தொடர்ந்தன.

நடைபெற்றது கரும்புலித்தாக்குதல் அல்ல. சாதாரண தாக்குதல்தான் என்று அடுத்துக் கிடைத்த செய்திகள் உறுதி செய்தன.

இதேவேளை தங்கத்துரை கொல்லப்பட்ட செய்தி பரவியதும் அது தொடர்பான அனுதாபத்தைவிட, அக் கொலை யாரால் செய்யப்பட்டிருக்கும் என்பதுதான் திருமலையில் பரவலாக அலசப்பட்ட, பேசப்பட்ட விடயமாக இருந்தது.

**தங்கத்துரை எம்.பி கொல்லப்பட்டதைவிட, பாடசாலை அதிபர்களும் பலியானது தொடர்பாகவே மக்கள் கவலையோடு பேசிக்கொண்டனர். இது தங்கத்துரை என்ற தனிப்பட்டவர்மீதான வெறுப்பு என்று சொல்வதைவிட தங்கள் பிரதிநிதிகள் என்று சொல்லிக்கொண்டிருக்கும் பாராளுமன்ற உறுப்பினர்கள், மற்றும் தமிழ்க்கட்சிகள்மீது மக்களுக்கு ஏற்பட்டுள்ள அவநம்பிக்கையின் பிரதிபலிப்பு என்றுதான் கருதவேண்டும்.**

தங்கத்துரை எம்.பி. தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்தவர். தங்கள் சிரேஷ்ட தலைவரின் கொலைக்கு யார் காரணம் என்பதை இதுவரை கூட்டணியினர் கூறவில்லை. இனிமேலும் கூறுவார்களா என்பது சந்தேகம்தான்.

தங்கத்துரை கொலையை அடுத்து திருமலையில் உள்ள மக்களிடம் பல்வேறு சந்தேகங்கள் எழுந்துள்ளன. அச் சந்தேகங்களை ஊக்குவிக்கும் வகையிலேயே கூட்டணியினரின் அறிக்கைகளும் அமைந்துள்ளன.

ஆனால் இது ஒரு அரசியல் படுகொலை என்று கூட்டணியினர் அழுத்தம் திருத்தமாகக் கூறியுள்ளனர். அரசியல் படுகொலை என்றால் அரசியல் காரணமும் இருக்க வேண்டும்.

அப்படியானால் தங்கத்துரையை கொல்லவேண்டிய அரசியல் அவசியம் யாருக்கு ஏற்படும்? காரணங்கள் என்ன என்றுதான் நோக்க வேண்டியிருக்கும்.

ஒரு அரசியல்வாதியைக் கொல்வதற்கு நான்கு முக்கிய காரணங்கள் இருக்கலாம்.

1. **அவர் ஒரு முக்கியமான தலைவராக, குறிப்பிட்ட கால அரசியல் நிகழ்வொன்றில் முக்கிய பாத்திரம் வகிப்பவராக இருக்கவேண்டும். பிறிதொரு அரசியல் இலட்சியத்துக்கு சவாலானவராக, பெரும் இடையூறானவராக இருக்கவேண்டும்.**
2. **குறிப்பிட்ட அரசியல் கட்சிக்கு எச்சரிக்கை கொடுக்க விரும்பும் மற்றொரு அணி தனது இலக்குக்கு வாய்ப்பான இடத்தில் அந்த கட்சியின் அரசியல்வாதி ஒருவர் கிடைக்கும்போது அவரைத் தீர்த்துக்கட்டலாம். அதன் மூலம் 'உங்களுக்கும் இதுதான் கதி' என்ற செய்தியை அக் கட்சியினருக்கு தெரிவிக்க விரும்பலாம்.**
3. **ஒரு அரசியல்வாதியைக் கொல்வதால் மக்களுக்குள் கொந்தளிப்பு ஏற்பட்டு சந்தேகம் பிறிதொரு அணிமீது விழும்; குறிப்பிட்ட அணியை பலவீனமாக்க அந்தக் கொலைப்பழி உபயோகப்படும் என்று கருதும் மூன்றாவது தரப்பொன்று கொலையைச் செய்துவிட்டு வேடிக்கை பார்க்கலாம்.**
4. **குறிப்பிட்ட அரசியல்வாதியின் நாற்காலியைப் பிடிக்கத் திட்டமிடும் மற்றொரு அரசியல்வாதி உள்ளிருந்தே சதி செய்து கதையை முடிக்கலாம்.**

இந்த நான்கும்தான் அரசியல் படுகொலை ஒன்றுக்கான காரணமாக இருக்கலாம். இல்லையெனில் பலியான அரசியல்வாதியின் தனிப்பட்ட வாழ்க்கையில்தான் காரணம் தேடவேண்டும்.

தங்கத்துரை 1985க்கு பின்னர் படிப்படியாக தமிழர் விடுதலைக் கூட்டணியில் இருந்து ஒதுங்கியிருந்தவர். அக் காலகட்டத்தில் வெளிநாட்டுக்கு ஆட்களை அனுப்பும் ஏஜெண்டாகவும் தொழில் செய்தவர்.

தந்தை செல்வாவின் புத்திரரான செ.சந்திரகாசனின் அகதிகளுக்கான தொண்டர் நிறுவனத்துடனும் தொடர்புகள் வைத்திருந்தவர். கூட்டணியினருக்கு பிடிக்காத சந்திரகாசனுடன் தொடர்பு கொள்ளுமளவுக்கு கூட்டணியில் இருந்து அந்நியமான ஒருவராகவே அவர் இருந்தார்.

அமிர்தலிங்கத்துக்கும் தங்கத்துரைக்கும் அதிகம் ஒட்டாது. அதுவும் தங்கத்துரை அந்நியமாக ஒரு காரணம். அமிர்தலிங்கத்தின் மறைவின் பின்னரே மீண்டும் கூட்டணியினரோடு ஒட்டிக் கொண்டார்.

**தங்கத்துரை மட்டுமல்ல கூட்டணித் தலைவர்கள் பலரும் இனி அரசியல் சரிப்பட்டுவராது என்ற எண்ணத்தில் தமிழ்நாட்டில் இருந்து சொந்தத் தொழில்களில் ஈடுபட்டவர்கள்தான். உதாரணமாகச் சொல்வதாயின் எல்லைக் காவலர் என அழைக்கப்பட்ட வவுனியா தா.சிவசிதம்பரம் தமிழ்நாட்டில் தோசைக் கடை நடத்தினார்.**

தங்கத்துரை ஏஜென்சி நடத்தியபோது பாதிக்கப்பட்ட யாராவது பழிதீர்த்திருக்கலாமோ? கொலைத்தாக்குதல் நடைபெற்ற முறையானது அக் கேள்வியை நிராகரித்து விடுகிறது.

தனிப்பட்ட காரணங்களுக்காக தனிப்பட்ட சிலர் நடத்தியிருக்கக்கூடிய தாக்குதலல்ல அது.

எனவே அரசியல் காரணங்களில் வலுப்படுத்தும் விதமாக பேசிவருகின்றனர்.

ஒருவேளை புலிகள்தான் காரணம் என்று தெரிந்தாலும்கூட அதனை கூட்டணியினர் வெளிப்படையாக சொல்ல தயங்குவர். அதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன.

ஒன்று: அரசியல் காரணம்.

இரண்டு: அச்சம்.

**புலிகள்தான் இதனைச் செய்தனர் என்று திட்டவட்டமாகத் தெரிந்தால், புலிகள் செய்தது நியாயம் என்று கருதப்படும் நிலைதான் மக்களுக்குள் இருக்கிறது. அதுதவிர, புலிகளுக்கு தாங்கள் எதிரானவர்கள் அல்ல என்று மக்களை நம்பவைத்துக் கொண்டு, கூட்டணியினர் நடத்தும் அரசியல் தந்திரங்களும் அம்பலமாகிவிடும்.**

ஏனெனில் புலிகளும் அரசும் பேச வேண்டும் என்று கூறிக்கொண்டுதான், இனப்பிரச்சனை தொடர்பான சகல விடயங்களையும் தாம் மட்டுமே ஏகப் பிரதிநிதிகள்போல

**ரசம் செய்துவிட்டனர் என்று மக்களிடம் ஏற்பட்டுள்ள வெறுப்பில் இருந்து மீண்டுவிடலாம் என்று கூட்டணி கருதினால் அதில் ஆச்சரியமில்லை.**

ஆனால்–படைத்தரப்போ, அல்லது படைத் தரப்பு சார்ந்தோரோ இவ்வாறான சம்பவத்தில் ஈடுபடமுடியாது.

இரகசியக் கொலைகள் என்பது வேறு பகிரங்க இடத்தில் நடைபெறும் கொலைகள், தாக்குதல் என்பவை வேறு.

பகிரங்க இடத்தில் ஒரு தாக்குதலுக்கு திட்டமிடும்போது உறுதியாக காரியம் முடியும், தாக்குதலில் ஈடுபடுகிறவர்கள் அனைவரும் பத்திரமாகத் திரும்பலாம் என்பதெல்லாம் உத்தரவாதமில்லை.

எனவே இரகசியச் சதிக்கு பகிரங்க இடத்தில் தாக்குதலை திட்டமிட்டு, அது பிசகினால் ஏற்படும் விளைவுகளுடன் ஒப்பிடும்போது, படைத்தரப்போ ஏனைய தமிழ்க்



திருமலை சண்முகானந்தா வித்தியாலயத்தின் கட்டடத் திறப்புவிழாவில் கலந்துகொள்ள வருகைதந்த தங்கத்துரை எம்.பியை திருமலை நகரசபைத் தலைவர் பெ.சூரியமூர்த்தி திலகமிட்டு வரவேற்பதை முதற்படத்திலும் நாடாவை வெட்டி புதிய கட்டடத்தை தங்கத்துரை திறந்துவைப்பதை அடுத்தபடத்திலும் காணலாம் – கடைசிக் கட்டம்.

மட்டும்தான் விடை தேடவேண்டும்.

விடை தேடும்போது நான்கு தரப்பினர் மீது சந்தேகம் திரும்புகிறது.

1. **படைத்தரப்பு**
2. **ஏனைய தமிழ்க்கட்சிகள்.**
3. **தங்கத்துரையின் போட்டியாளரான இரா. சம்பந்தன்.**
4. **புலிகள்.**

சம்பவம் நடைபெற்ற இடம் திருமலை நகருக்குள் பாதுகாப்பு வியூகங்களுக்குள் இருக்கும் பகுதியாகும்.

அதனால்தான் தாக்குதல் நடத்தியவர்கள் எப்படி சுலபமாகத் தப்பினார்கள் என்ற பிரமிப்பு படையினர் தரப்புமீதான சந்தேகமாக திரும்பியிருக்கிறது.

கூட்டணியில் ஒரு சாராரும் இந்த சந்தேகத்தை உறுதிப்படுத்துவதுபோல திருமலையில் வதந்திகளை கிளப்பிவருகின்றனர்.

எங்கே சம்பந்தன்மீது சந்தேகம் திரும்பிவிடுமோ என்ற நினைப்பில் அவரது ஆதரவாளர்கள் சிலரும் குறிப்பிட்ட சந்தேகத்தை

கூட்டணியினர் பேசி முடித்துக் கொண்டிருக்கின்றனர்.

**அரசியல் தீர்வு தொடர்பான நிலைப்பாட்டில் சமீபகாலமாக கூட்டணியினர் மக்களுக்குள் அப்பட்டமாக அம்பலமாகியுள்ளனர். அவசரகால சட்டத்துக்கு எதிர்ப்பு, அரசுக்கு உரிய நேரத்தில் முண்டுகொடுப்பு என்ற இரட்டைப்போக்கு மக்களால் முன்னெப்போதும் இல்லாதவகையில் இனம் காணப்பட்டுவிட்டது.**

இவ்வாறான நிலையில் புலிகளின் குறி தம்மீது திரும்பிவிட்டது என்பதை கூட்டணியினர் ஒப்புக்கொண்டால் சாதாரண அனுதாபத்தைக்கூட மக்களிடம் கூட்டணியினர் எதிர்பார்க்க இயலாது.

**எனவே– படைத்தரப்புமீது சந்தேகம் ஏற்பட்டால் கூட்டணியினருக்கு ஒரு இலாபம் இருக்கிறது. படையினருடன் முரண்படும் அளவுக்கு தமிழ்மக்களுக்காக குரல் கொடுக்கும் கட்சி என்று மக்கள் நினைக்கலாம். அதன்மூலம் அரசுடன் திரைமறைவில் சம**

கட்சிகளோ அந்த விஷப் பரீட்சைக்கு ஒரு போதும் முன்வரமாட்டா.

**தங்கத்துரைக்கு பாதுகாப்பாக ஆயுதங்களுடன் பொலிசார் இருந்தனர். தப்பித்தவறி அவர்கள் உஷாராகி சுட்டுத் தள்ளியிருந்தால், தாக்குதல் குழுவில் ஒருவர் பலியாகி இருந்தால்கூட உண்மை வெளிப்பட்டுவிடும்.**

அப்படி நடக்காது என்று சொல்ல முடியாது. அமிர்தலிங்கத்தை சுட்டுக் கொன்றவர்களை அவரது பாதுகாவலர் ஒருவர் மட்டுமே நின்று சுட்டுத்தீர்த்தார். அதனால்தான் பலியானவர்களில் ஒருவர் புலிகள் இயக்க உளவுப்பிரிவுத் தலைவர் மேஜர் விசு என்ற விபரமும் வெளியாகியது.

சரி, ஒரு வாதத்திற்காக படைத்தரப்பு அல்லது தமிழ்க்கட்சிகள் ஒரு விஷப் பரீட்சைக்கு இறங்கியிருக்கவேண்டு மானால் தங்கத்துரை அந்தளவுக்கு முக்கிய மான ஒருவராக, அவரது மரணம் மூல மாக பெரும்பலன் கிட்டுவதாக இருக்க வேண்டும்.

தங்கத்துரையைப் பொறுத்தவரைஅவர் படைத்தரப்புக்கோ, ஏனைய தமிழ்க்கட்சிகளுக்கோ சவாலான ஒருவரல்ல. அவர்களது பாதையில் குறுக்கிட்டு சவாலாக நிற்பவரும் அல்ல. மட்டக்களப்பு பா.உ. ஜோசப் பரராஜசிங்கமாவது அடிக்கடி அறிக்கைகள் விட்டுக் கொண்டிருப்பார். திருமலையில் படையினரின் நடவடிக்கைகள் தொடர்பாக தங்கத்துரை காட்டமான அறிக்கைகள் விட்டதுமில்லை.

ஏனைய தமிழ்க் கட்சிகளுக்கு கூட்டணி மீது அரசியல் போட்டி இருக்கலாமே தவிர, உணர்வு பூர்வமான கோபம் எழ நியாயமில்லை. ஏனெனில் கூட்டணி செய்யும் அதே காரியத்தைத்தான் ஏனைய தமிழ்க்கட்சிகளும் அரசியல்ரீதியாக செய்து கொண்டிருக்கின்றன.

புலிகள்மீது மக்களுக்கு வெறுப்பை ஏற்படுத்த இப்படி ஒரு காரியத்தை செய்திருக்கலாம் அல்லவா? என்று கேள்வி எழக்கூடும்.

தங்கத்துரை கொலையை அடுத்து மக்களுக்குள் ஏற்பட்டுள்ள அபிப்பிராயங்கள் அக் கேள்வியையும் நிராகரிக்கின்றன. தங்கத்துரை நீண்டகால அரசியல்வாதியாக இருக்கலாம். ஆனால் திருமலையில்கூட அவர்மீதான அதிருப்திகளே பாரியளவில் உள்ளன. இது அனைவருக்கும் தெரியும். எனவே மக்களிடம் வெறுப்பை ஏற்படுத்த தெரிவு செய்யப்படும் இலக்காக இருக்கக் கூடியவர் அல்ல அவர்.

அடுத்தது அரசியல் ரீதியாகக்கூட ஏனைய தமிழ்க்கட்சிகளுக்கு அவர் சவால் அல்ல. ஏனெனில் அடுத்த தேர்தலில் கூட்டணி சார்பாக போட்டியிட அவருக்கு இடம் கிடைக்காது என்பது ஒன்றும் இரகசியமல்ல.

கூட்டணியின் செயலதிபர் சம்பந்தனுடன் முரண்பட்டுக்கொண்டுதான் எம்.பி. பதவியில் இருந்தார் தங்கத்துரை. தேர்தலுக்கு முன்னால் இருவரும் ஒரு கனவான் ஒப்பந்தம் செய்து கொண்டனர். இருவரில் யார் வெற்றி பெற்றாலும் பதவிக்காலத்தை பங்கிட்டுக் கொள்வது என்பதே அந்த ஒப்பந்தமாகும்.

தேர்தல் முடிந்தபின்னர் தங்கத்துரை அந்த ஒப்பந்தத்தை ஏற்க மறுத்துவிட்டார். சட்டப்படி அந்த கனவான் ஒப்பந்தம் செல்லாது என்பதால் தங்கத்துரை தொடர்ந்து பதவியில் இருக்க அனுமதித்தார்கள். எனினும் உட்பூசல் தொடர்ந்தது. பாராளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு கூட சம்பந்தன் சென்றார். தங்கத்துரைக்கு இடம் கொடுக்கப்படவில்லை.

கூட்டணியின் திருமலைக்கிளை தங்கத்துரை பதவி விலகவேண்டும் என்று கோரிக்கை விடுத்தது.

**அடுத்த தேர்தலில் கூட்டணி ரிக்கெற் கிடைக்காது என்று தெரிந்த தங்கத்துரை திருமலை நகரசபைத் தலைவர் சூரியமூர்த்தியுடன் நெருக்கமானார். இருவரும் இணைந்து சுயேட்சைக் குழுவொன்றை உருவாக்கி எதிர்வரும் தேர்தல்களை சந்திக்க திட்டமிட்டுள்ளனர் என்றும் தகவல்கள் முன்பே வெளியாகியிருந்தன.**

அக் கூட்டுக்கு மக்களுக்குள் வரவேற்பிருக்காது. வேண்டுமானால் கூட்டணியின் வாக்குகளை ஓரளவு உடைக்கலாம். அதன் மூலம் ஏனைய தமிழ்க் கட்சிகளுக்குத்தானே இலாபம்.

அதுமட்டுமல்ல, கூட்டணிக்குள் உள்ளவர்களில் ஏனைய தமிழ்க்கட்சிகளுடன் நட்பாக இருந்தவர் தங்கத்துரைதான்.

சமீபத்திய எட்டுக் கட்சிச் சந்திப்புக்களில் கூட்டணி தரப்பில் முக்கிய பாத்திரம் வகித்ததும் அவர்தான்.

சம்பந்தனைவிட தங்கத்துரைதான் ஏனைய தமிழ்க்கட்சிகளின் நண்பர். சம்பந்தன் ஏனைய தமிழ்க்கட்சிகளை அன்று முதலே மதிப்பதில்லை. அதனால் தங்கத்துரைக்கு பதிலாக சம்பந்தன் வருவதால் தமிழ்க்கட்சிகள் எதற்குமே இலாபமில்லை.

**எனவே படைத்தரப்புமீதோ, ஏனைய தமிழ்க் கட்சிகள்மீதோ சந்தேகப்படக்கூடிய காரணங்கள் பலவீனமாக உள்ளன.**

முன்னர் ஈ.பி.டி.பி. தலைவர் டக்ளஸ் தேவானந்தாவின் இல்லம்மீதான தாக்குதலின் போதும் இவ்வாறான சந்தேகங்கள் ஏற்பட்டன. முரசுமட்டுமே புலிகள்தான் தாக்கினார்கள் என்று தெரிவித்திருந்தது. பின்னர் அது உறுதியானது.

கொலன்னாவ எண்ணெய்க் குதம்மீது தாக்குதல் நடத்தியவர்கள் அதற்கு முன்பாக நடத்திய ஒத்திகையான தாக்குதலாகவும் அது அமைந்தது என்பதும், இரண்டிலும் ஒரே தாக்குதல் அணியே பங்கு கொண்டது என்பதும் தெளிவானது.

திருமலையைவிட பாதுகாப்பான கொழும்பு நகரில் நடைபெற்ற தாக்குதலே அதுவாகும்.

**அதேபோல வவுனியா நகரில் பொலிசார் மீது புலிகள் தாக்கியபோதும் புளொட் மீது சந்தேகம் தெரிவிக்கப்பட்டது. பின்னர் புலிகள் அந்த தாக்குதலுக்கு உரிமை கோரினர். பாதுகாப்பு நிறைந்த வவுனியா நகரில் புலிகள் எப்படி தாக்குதல் நடத்த முடியும்? என்பதே அப்போதைய சந்தேகமாக எழுப்பப்பட்டது.**

எனினும் இன்றுவரை ஈ.பி.டி.பி. தலைவர் மீதான தாக்குதலுக்கு புலிகள் உரிமை கோரவுமில்லை. மறுக்கவில்லை.

அரசியல்வாதிகள்மீதான கொலைகளுக்கு புலிகள் உரிமை கோருவதில்லை. ஆனால் துரையப்பா, அமிர்தலிங்கம் ஆகியோரது கொலைகளுக்கு மட்டும் சில காலம் தாமதித்து உரிமை கோரினார்கள்.

(மறுபக்கம் பார்க்க....)

## தாக்குதல் நடந்தது எப்படி?

ஜூலை 5ம் திகதி திருமலை நகரில் கட்டடத் திறப்புவிழா நடைபெற இருந்த வி_யம் அழைப்பிதழ் மூலமாக புலிகளுக்கு தெரியவந்தது.

திருமலை நகரில் புலிகளின் தாக்குதல் அணியொன்று பல்வேறு ரூபங்களில் மக்களோடு மக்களாக கலந்து உறைந்திருக்கிறது.

திருமலை நகரில் பாதுகாப்பு ஏற்பாடுகள் நகருக்கு வெளியே செல்வதையும், உள்ளே வருவதையும்தான் பெருமளவில் கண்காணிக்கலாமே தவிர, நகருக்குள் உறைந்திருக்கும் கெரில்லாக்களை சுலபமாக கண்டறிய முடியாது.

தாக்குதல் ஒன்றை நடத்திவிட்டு தப்பிச் செல்லும் ஒருவரை ஆயுதத்தோடு பிடித்தால்தான் உறுதியாக இனம் காணலாம். ஆனால் நகர்ப்புற கெரில்லாக்கள் பெரும்பாலும் ஆயுதங்களை வேறோர் இடத்தில் வைத்துவிட்டு தாங்கள் வேறோர் இடத்தில் தங்கிக் கொள்ளும் நடைமுறையைக் கடைப்பிடிப்பர்.

பிஸ்டல் அல்லது, ஏ.கே.47 மற்றும் கைக்குண்டுகள்தான் நகர்ப்புற கெரில்லாத் தாக்குதல்களில் பயன்படுத்தப்படும்.

இந்த வகை ஆயுதங்களை சுலபமாக எடுத்துச் செல்லலாம். சுலபமாக மறைக்கலாம்.

ஒரு தாக்குதலை நடத்திவிட்டு குறிப்பிட்ட ஆயுதங்களை ஓரிடத்தில் மறைத்துவைத்துவிட்டு கைவீசிக்கொண்டு காவல்நிலைகளைத் தாண்டிக்கூட செல்ல முடியும்.

எனவே நகர்ப்புற பாதுகாப்பு ஏற்பாடுகள், கெரில்லாக்களை முற்றாகக் கட்டுப்படுத்த இயலாது.

கெரில்லாக்கள் பாரியளவில் அணிதிரண்டு தாக்குதல்களை நடத்துவது சற்றுச் சிரமம். தனிநபராகவோ, சிறு எண்ணிக்கையில் இணைந்தோ தாக்குதல் நடத்துவது சுலபம்.

தங்கத்துரைமீதான தாக்குதலில் குறைந்தது நாலுபேராவது பங்குகொண்டுள்ளனர்.

தாக்குதலில் ஈடுபட்டவர்கள் நீண்டநேரம் காத்திருந்துள்ளனர். அருகிலுள்ள கடை ஒன்றில் குளிர்பானம் குடித்ததாகவும் தகவல்.

சம்பவம் நடைபெற்றது இரவு 7.30 மணி. ஆனால் அதற்கு முன்பாகவே தங்கத்துரை வெளியே வருவார் என்று எதிர்பார்த்திருக்கிறார்கள்.

ஆனால் திறப்பு விழா முடிந்த பின்னரும் தங்கத்துரை தேநீர் விருந்தில் கலந்துகொண்டதும், பிரமுகர்கள் சிலருடன் கதைத்துக் கொண்டிருந்தமையாலும் எதிர்பார்க்கப்பட்ட நேரத்தைவிட தாமதித்தே வெளியே வந்திருக்கிறார்.

அதனால் நன்றாக இருட்டிவிட்டது. இது தாக்குதல் நடத்த வந்தவர்களுக்கு மேலதிக சாதகமாகிவிட்டது. அன்று தெருவிளக்குகளும் எரியவில்லை. தாக்க வந்தவர்களே அதனை நிறுத்தினார்களா, அல்லது திருமலையில் அடிக்கடி நடப்பதுபோல தற்செயலாக நடந்ததா என்பது மர்மமாக இருக்கிறது.

7.30 மணிக்கு தங்கத்துரை கல்லூரி வாசலுக்கு வந்ததும் அவரை சரியாக அடையாளம் காண்பதற்காக சற்றுத் தாமதித்தனர் தாக்குதல் குழுவினர்.

தங்கத்துரை பிக்-அப் வாகனத்தை நோக்கிச் செல்கிறார்.

தாக்குதல் தன்னை நோக்கி நகர்வது தெரியாமல் பாடசாலை அதிபருடனும், வழியனுப்ப வந்தவர்களுடனும் சிரித்துப் பேசியபடி பிக்-அப் வாகனத்தை அண்மித்து கதவைத் திறக்க கைநீட்டிய சமயத்தில் கைக்குண்டு கிளிப் கழற்றி வீசப்படுகிறது.

கிளிப்பை கழற்றிவிட்டு எறியாமல் தரையோடு தரையாக உருட்டிவிட்டிருக்கிறார்கள்.

படுவேகமாக கைக்குண்டு உருண்டுவந்த சத்தம் தங்கத்துரைக்கு சற்று எட்ட நின்ற ஒருவருக்கு கேட்கிறது.

என்ன சத்தம் அது? என்று அவர் பார்க்க நினைத்த நொடியில் பலத்த வெடிச் சத்தம் கேட்டதுதான் தெரியும். சத்தம் கேட்டவர் தன்னையறியாமல் விழுந்து கிடக்கிறார்.

சில உருவங்கள் அசைகின்றன. தங்கத்துரையை குறிபார்த்து ஒருவர் துப்பாக்கியால் சுடுகிறார்.

கைக்குண்டு வெடிப்புச் சத்தத்தால் திணறிப்போன தங்கத்துரை சுதாகரிக்க முன்னரே சுடப்படுகிறார்.

ஏ.கே.47 துப்பாக்கியால்தான் சுடுகிறார்கள். தானியங்கியில் போட்டுச் சுட்டதால் ஒவ்வொன்றாக அல்லாமல் சரமாரியாக துப்பாக்கி ரவைகள் பாய்கின்றன.

தங்கத்துரையின் பாதுகாவலர்கள் திருப்பித் தாக்கக்கூடும் என்பதால் பரவலாக துப்பாக்கிச் சூடு நடத்தியபடியே சுட்டவர்கள் பின்வாங்கிச் செல்கின்றனர்.

தங்கத்துரையின் பாதுகாவலர்கள் திருப்பித் தாக்காமல் இருப்பதற்கான அதிரடி உத்தியாகவே முதலில் கைக்குண்டு தாக்குதலும் நடத்தப்பட்டது.

கைக்குண்டை மட்டும் வீசிவிட்டுப் போனால் தங்கத்துரை உயிர் பிழைக்கவும் வாய்ப்பு உண்டு என்பதால்தான் சிரம முயற்சியெடுத்து நெருங்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளனர்.

இரகசியமான சதிகாரர்கள் என்றால் கைக்குண்டை வீசிவிட்டே ஓடியிருப்பர்.

தங்கள் உயிர் பற்றிய அக்கறையில்லாத துணிச்சலானவர்கள்தான் இப்படியான சிரமம் எடுத்து செயற்படுவர்.

எப்பாடுபட்டாலும் எடுத்த காரியத்தை முடித்தே தீருவது என்ற எண்ணத்தில்தான் தாக்குதலில் ஈடுபட்டவர்கள் துரிதமாகச் செயற்பட்டுள்ளனர்.

தாக்குதலின் போதான இந்தக் குணாம்சம் யார் காரணமாக இருக்கலாம் என்பதைக் கோடிட்டுக் காட்டுகிறது.



படிப்பகம்

www.padippakam.com

# எச்சரிக்கை! அன்றும்-இன்றும்!

**1985** திம்பு பேச்சுவார்த்தை.

இந்திய அரசின் நிர்ப்பந்தம் காரணமாக பேச்சுவார்த்தைக்கும் போர் நிறுத்தத்துக்கும் போராளி அமைப்புக்கள் ஒப்புக் கொண்டன.

பேச்சுவார்த்தை மேசையில் இலங்கை அரசின் சமாதான முகமூடியைக் கிழிப்பது. தமிழீழப்போராட்டத்தின் நியாயத்தை உலகம் உணரச் செய்வது என்ற அடிப்படையில்தான் போராளி இயக்கங்கள் உத்தி வகுத்தன.

ஆனால் கூட்டணியினர் மட்டுமே பேச்சுவார்த்தையில் ஏதாவது கிடைக்கலாம் என்ற நம்பிக்கையில் கலந்து கொண்டனர்.

கூட்டணி பேச்சில் கலந்துகொள்வதை போராளி அமைப்புக்கள் விரும்பவில்லை. ஆனால் இந்திய அரசு கூட்டணியையும் அழைத்தது.

'தம்பிமாருக்கு சண்டைபோடத்தான் தெரியும். அரசியல் பேசுவதென்றால் எங்களால்தான் முடியும்' என்று கூட்டணியினர் ஒரு கருத்தை ஏற்படுத்தி இருந்தனர்.

இயக்கங்கள் வெறுமனே இராணுவ அமைப்புக்கள் மட்டும்தான் என்பதுபோல மிலிட்டன் குறூப் (MILITANT GROUP) என்ற



தங்கத்துரை

பதத்தை பாவித்து இயக்கங்களை குறிப்பிட்டு வந்தனர் கூட்டணியினர்.

திம்பு பேச்சுமூலமாக தாம் வெறுமனே ஒரு இராணுவ அமைப்பல்ல, அரசியல் இராணுவ இயக்கம் என்பதை நிரூபிப்பதுடன், கூட்டணியினருக்கும் எச்சரிக்கை விடத் தீர்மானித்தனர்.

விடுதலைப் புலிகள், ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எஃப்., ஈரோஸ் ஆகிய இயக்கங்கள் ஒரு கூட்டமைப்பாக ஈ.என்.டி.எல்.எஃப். என்ற பெயரில் இயங்கிய நேரம் அது.

திரு. அமிர்தலிங்கம் திம்புவில் இருந்தமையால் சென்னையில் இருந்த முன்னாள் யாழ் எம்.பி. யோகேஸ்வரன் அழைக்கப் பட்டார்.

யோகேஸ்வரன் தன்னுடன் தங்கத்துரையையும் அழைத்துச் சென்றார்.

பிரபாகரன், சிறி சபாரத்தினம், பத்மநாபா, பாலகுமார் ஆகியோர் முன்னிலையில் அன்ரன் பாலசிங்கம் கூட்டமைப்பின் முடிவை தெரிவித்தார்.

திம்பு மாநாட்டுக்கு நாங்கள் நான்கு அடிப்படைக் கோட்பாடுகளை முன்வைத்துள்ளோம். நாங்கள் ஒவ்வொரு இயக்கமும் அரசியல்-இராணுவ அமைப்புக்களாகும். எங்கள் சார்பாக யாரும் பேசத் தேவையில்லை. எங்களால் பேசமுடியும். திம்புவில் எம்முடன் இணைந்து நிற்க புளொட் சம்மதித்துள்ளது. கூட்டணி எங்கள் நிலைக்கு மாறாக செல்லக்கூடாது. இதனை அமுதரிடம் தெரிவித்துவிடுங்கள்" என்றார் பாலசிங்கம்.

அப்போது சிறி சபாரத்தினம் சொன்னார்: 'எமக்கு மாறாக சென்றால் அமுதரை திம்புவில் இருந்து திரும்பிவரும் எண்ணத்தை விட்டுவிடச் சொல்லுங்கள்.'

பின்னர் திம்புவில் கூட்டணியும் இயக்கங்கள் முன்வைத்த அடிப்படைக் கோட்பாடுகளை ஆதரித்தது.

அன்று கூட்டமைப்பினர் அழைத்து எச்சரித்தவர்களில் ஒருவரான யோகேஸ்வரனும் இன்று உயிருடன் இல்லை. இப்போது தங்கத்துரையும் உயிருடன் இல்லை.

அப்போதும் நெருக்கடியான ஒரு தருணத்தில் கூட்டணியினரின் நிலைப்பாடு இயக்கங்களின் அரசியல் பலத்தை பலவீனமாக்கிவிடும் என்பதால்தான் எச்சரிக்கைவிட தீர்மானித்தனர்.

இப்போது ஏனைய கட்சிகள் கிட்டத்தட்ட கூட்டணியினர் போலாகிவிட்டன. இவை அனைத்தும் இணைந்து அரசியல் தீர்வில் குறைந்த பட்ச உடன்பாடுகளுக்கு செல்லலாம் என்ற நிலையில்தான், புலிகள் எச்சரிக்கை விடத் தீர்மானித்தனர் என்று தெரிகிறது.

தீர்வுத் திட்டத்தை முன்வைக்கப் போவதாக அரசாங்கம் கூறிவருகிறது. கூட்டணியினரும் அதனை வரவேற்றுள்ளனர். இந்நிலையில்தான் எச்சரிக்கைவிடும் தீர்மானம் விரைவுபடுத்தப்பட்டதாக தெரிகிறது.

மேலும் இந்த எச்சரிக்கை படலம் தொடரலாம் என்றே நம்பப்படுகிறது.

கூட்டணியினர்மீது மட்டுமல்ல ஏனைய தமிழ்க்கட்சித் தலைவர்கள்மீதும் குறிவைக் கப்படலாம் என்று நம்பகமான தகவல்கள் தெரிவிக்கின்றன.

## பலியானவர்கள் பட்டியல்



அமிர்

தமிழீழ இலட்சியத்தை கைவிடும் எவருமே துரோகிகள் என்றும் அவர்களுக்கு மரணதண்டனை விதிக்கப் படும் என்றும் புலிகள் முடிவு செய்த பின்னர் கொல்லப்பட்ட முன்னாள் பா.உக்கள்.

1. அ. அமிர்தலிங்கம் (காரணமானவர்களும் பலியாகினர். விசு இனம் காணப்பட்டார்)
2. யோகேஸ்வரன்.
3. யோகசங்கரி
4. சாம் தம்பிமுத்து (காரணமான ஒருவர் கைது)

முன்னாள் எம்.பி.களான தர்மலிங்கம், ஆலாலசுந்தரம் ஆகியோர் ரெலோ இயக்கத்தால் கொல்லப்பட்டனர்.

# மரணவீட்டில் அரசியல் வியாபாரம்

**த**ங்கத்துரையுடன் தன்னையும் கொல்ல சதி நடந்ததாக கூறித்திரிகிறார் திருமலை நகரசபைத் தலைவர் சூரியமூர்த்தி.

ஸ்ரீ சண்முகா மகளிர் கல்லூரி அபிவிருத்திசபைத் தலைவர் கணேசலிங்கம் சூரியமூர்த்தி போலவே இருப்பாராம். அதனால்தான் அவரை குறிவைத்துச் சுட்டார்களாம். இப்படி கதை கட்டிவிட்டுள்ளார் சூரியமூர்த்தி.

கணேசலிங்கம் சற்றேறக்குறைய சூரியமூர்த்திபோலவே இருப்பார் என்பது உண்மைதான். ஆனால் கணேசலிங்கம் தான் சூரியமூர்த்தி என்று தவறுதலாக கருதப்பட்டிருக்க முடியாது.

காரணம் என்ன?

சம்பவம் நடைபெற முன்னர் தங்கத்துரையிடம் விடைபெற்றுக் கொண்டு சூரியமூர்த்தி சென்றுவிட்டார்.

நகரசபைக்கு சொந்தமான ஜீப்பில் அவர் வெளியே சென்றார்.

இதனை தாக்குதல் குழுவினர் நிச்சயம் கவனித்தே இருப்பர். சூரியமூர்த்தி உயரமான தோற்றம் கொண்டவர். மெல்லிய உடல்வாகு, வெள்ளை நிற நஷனல் உடை அணிபவர் என்பதால் இருட்டில் கூட தனியாக அடையாளம் காணலாம். வாகனத்தில் அவர் அமர்ந்து சென்றால் தெரிந்துவிடும்.




பி.எஸ்.கணேசலிங்கம்

தாக்குதலுக்கு எந்நேரமும் தயாராக காத்திருந்தவர்கள் கல்லூரியில் இருந்து வெளியேறும் ஒவ்வோர் வாகனத்தையும் கண்களால் அலசியிருப்பர்.

ஒருவேளை தங்கத்துரைகூட வேறு வாகனத்தில் செல்லக்கூடும் என்று நினைத்து விழிப்பாக கண்காணிப்பர்.

குறிப்பிட்ட ஜீப் வெளியே சென்ற



பே.சூரியமூர்த்தி

பின்னரும் அவர்கள் காத்திருந்தமையால் உள்ளே இருப்பது யார், வெளியே இருப்பது யார் என்ற விபரங்கள் தெரிந்தே இருந்திருக்கின்றன.

எப்போதும் இவ்வாறான தாக்குதலில் நோட்டம் பார்க்கும் ஒருவர் தனியாக சுற்றித் திரிவார். ஒரு இலக்கை தீர்மானித்தால் அதன் பாதுகாப்பு ஏற்பாடுகளில் மாற்றம் உண்டா? திடீர் மாற்றங்கள் ஏதேனும் இருக்கிறதா என்று பார்ப்பது அவர் வேலை.

இலக்கு தனிநபர் என்றால் அவர் எங்கே இருக்கிறார். உள்ளே எப்படி சென்றார். எப்படி வெளியே செல்லுவார், செல்கிறாரா? என்றெல்லாம் கண்கொத்திப் பாம்பாக கவனித்தபடி இருக்கவேண்டும்.

ஈ.பி.டி.பி. தலைவர் டக்ளஸ் தேவானந்தாவின் இல்லம்மீதான தாக்குதலின்போது, தாக்குதலுக்கு சில மணிநேரங்கள் முன்பாகவே அவர் வெளியே இருந்து இல்லம் திரும்பியிருந்தார். அதனை கண்காணித்து உளவுப்பிரிவு புலி தகவல் பெற்ற பின்னரே புலிகளின் தாக்குதல் அணி புறப்பட்டு வந்தது.

1996 ஜூலை 4ம் திகதி (கடந்த வருடம்) யாழ்ப்பாணத்தில் மிகப் பாதுகாப்பான அரண்கள், சோதனைகள் மத்தியில் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாமீது தாக்குதல் நடைபெற்றது. மிகத் துல்லியமாக வேவு பார்த்து அமைச்சர் காரை நோக்கி வரும்போது, கொடுத்த சிக்னல்படிதான் கரும்புலி புறப்பட்டு வந்து மோதினார்.

எனவே தாக்குதலுக்கு முன்பாக கண்காணிப்பு இல்லாமல் காரியமாகாது. அப்படி இல்லாவிட்டால் மேடையில் இருக்கக்கூடியதாக புகுந்து தாக்கவேண்டும்.

எனவே சூரியமூர்த்தி வெளியே சென்ற விடயம் தாக்குதலுக்கு வந்தவர்களுக்கு நன்கு தெரிந்தே இருந்தது.

தற்செயலாக கணேசலிங்கம் ஓரளவுக்கு சூரியமூர்த்திபோல இருந்த காரணத்தாலும், அவர் பலியாகிவிட்டதாலும் தனக்குத்தான் குறிவைக் கப்பட்டது. தப்பிவிட்டேன் என்று மார்தட்டித் திரிகிறார் சூரியமூர்த்தி.

அதிலும் புலிகள் தன்னைச் சுட நினைத்தார்கள் என்றால், தானும் ஒரு துரோகி என்று கருதப்படலாம் என்பதால், ஏனைய தமிழ்க்கட்சிகள்தான் கொலைக்கு காரணம் என்றும் கூறுகிறார்.

தங்கத்துரையின் மரணவீட்டில் 'அண்ணருக்கு ஒரு மடல்' என்று (என்ன முரசு பாணியா?) பிரசுரமும் அடித்து விட்டுள்ளார்.

"உன் பக்கத்தில் ஒரு குழி இருக்கட்டும். நான் நிச்சயம் வருவேன். எனக்கும் விரித்த வலைதான் என்றெல்லாம்" புலம்பி அனுதாபம் தேட அலைகிறார் மனிதர்.

ஏற்கனவே உள்ளூராட்சி தேர்தல் நேரத்தில் புலிகளின் ஆதரவு தமக்கிருப்பதாக செய்த பிரசாரம் திருமலை மக்கள் அறிந்ததுதான். இப்படி அக்கடி சூப்பர் அல்வாக்கள் கொடுப்பதில் சூரியமூர்த்தி கில்லாடி. அதற்காக மரண வீட்டிலுமா?

# மற்றொரு எச்சரிக்கை! - அழைத்தால் ஆபத்து!

**தி**ருமலை தாக்குதலில் பொது மக்களும் பலியாகி உள்ளனர். அதனால் புலிகள் இப்படியான தாக்குதலை நடத்தியிருக்கக் கூடுமோ? என்று சந்தேகம் எழுந்துள்ளது.

கறுப்பு ஜூலை என்றும் பின்னர் புலிகளின் கரும்புலிகள் தினமும் மற்றும் தமிழ்பேசும் மக்களது வரலாற்றுடன் துயரம் தோய்ந்த நிகழ்வுகள் பல கொண்டது ஜூலை மாதமாகும்.

முன்னர் ஒரு காலத்தில் பாலம் திறந்துவைப்பதையும், பாடசாலைக் கட்டிடம் திறந்து வைப்பதையும் உரிமைகளை விற்று சலுகைகள் வாங்கும் காரியம் என்று மேடைகளில் முழங்கியவர்கள் கூட்டணியினர்.

யாழ் வளாகம் திறக்க வந்த ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவுக்கே கறுப்புக் கொடி காட்டியவர்கள் திறப்பு விழாவில் மக்கள் கலந்துகொள்ளக்கூடாது என்று ஹர்த்தால் நடத்தியவர்கள் கூட்டணியினர். இன்று அந்த வளாகம்தான் யாழ் பல்கலைக்கழகமாக மாறியுள்ளது.

ஆனால் அதே கூட்டணியினர் இப்போது பாடசாலை கட்டடத் திறப்பு விழாக்களிலும், அபிவிருத்தி விழாக்களிலும் கலந்து கொள்கின்றனர். போதாக்குறைக்கு கரும்புலிகள் தினம் ஜூலை 5 என்று தெரிந்தும்கூட தங்கத்துரை திறப்பு விழாவில் கலந்து கொண்டார். பாண்ட் வாத்தியக் கொண்டாட்டங்களை அனுமதித்தார். முன்னர் திகதி கொடுக்கும்போது நினைவில் இல்லாவிட்டாலும் அன்றைய தினமாவது தெரியாமல் போயிருக்காது. எனவே தவிர்த்திருக்கலாம்.

எனவே இதுவும்கூட புலிகளின் கோபத்தை கொம்பு சீவிவிட்டிருக்கலாம்.

இது ஒருபுறமிருக்க, ஏற்கனவே யாழ் நகரில் அமைச்சர் சிறிபால டி சில்வாமீதான தாக்குதலிலும் பொதுமக்கள் சிலர் பலியாகினர்.

திருமலையிலும் பலியாகியுள்ளனர்.

இத்தகைய தாக்குதல்களில் பொதுமக்கள் பலியாகக் காரணம் இவ்வாறான விழாக்களில் கலந்துகொள்வதால்தான் என்பதே புலிகளின் நிலைப்பாடு.

தவிர்க்க முடியாத பாடசாலை விழாக்களுக்கு இவர்களை அழைக்காதீர்கள். தவிர்க்கக் கூடிய விழாக்களில் கலந்துகொள்ளாதீர்கள் என்பதே புலிகள் தெரிவிக்கும் மறைமுக செய்தியாகும்.

முன்னர் இதே செய்தியைத்தான் ஹர்த்தால்கள், பகிஷ்கரிப்புக்கள் மூலம் கூட்டணியினர் பகிரங்கமாக சொன்னார்கள். ஆக, எறிந்த பந்து திரும்பிவரும் கதைதான் இது.

## கடந்த ஜூலைகளில் புலிகளின் தாக்குதல்கள்!

**க**டந்த 15 1/2 வருட மோதல்களில் முக்கியமாக ஜூலை மாதங்களில் புலிகள் நடத்திய தாக்குதல்கள்.

1983 ஜூலை 23 -13 படையினரைக் கொன்றது.

1987 ஜூலை 5-முதற் கரும்புலி கப்டன் மில்லரின் நெல்லியடி மத்திய கல்லூரித் தாக்குதல்.

1989 ஜூலை 13- அமிர்தலிங்கம், யோகேஸ்வரன் கொலை.

1993 ஜூலை 25- வெலிஓயாவிலுள்ள ஜனகபுர இராணுவமுகாம் தாக்குதல் அதே ஆண்டு ஜூலை 9ல் முன்னேறிப் பாய்ச்சலை படையினர் ஆரம்பித்தனர்.

ஜூலை 14ல் புலிப்பாய்ச்சல் நடவடிக்கை ஆர்ஜன்ரீனா தயாரிப்பான புக்காரா விமானம் தாக்கப்பட்டது.

இரண்டு நாட்களின் பின்னர்- காங்கேசன் துறையில் தரித்து நின்ற 'எடிதாரா' தற்கொலைப் படையினரால் தாக்கப் பட்டது.

1995 ஜூலை 28ல் வெலிஓயாவில் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டு தோல்வியில் முடிந்தது.

1996 ஜூலை 4 யாழ். ஸ்டான்லி வீதியில் அமைச்சர் ஸ்ரீபால டி சில்வா கரும்புலித்தாக்குதலில் சிறுகாயங்களுடன் தப்பினார்.

ஸ்ரீ.ஆனந்த ஹமன்கொட மற்றும் பொலிஸ் அதிகாரி காளாயில் டயஸ் கொல்லப்பட்டனர்.

1996 ஜூலை 19- கடற்படைக்குச் சொந்தமான 'ரணவீர' தாக்கி அழிக்கப் பட்டது.

ஜூலை 24- கொழும்பு- அளுத்கம ரயிலில்- தெகிவளையில்-குண்டு வெடித்தது.

1996 ஜூலை 17ல் முல்லைத்தீவு முகாம் தாக்கப்பட்டு ஆயிரத்துக்கு மேற்பட்ட படையினர் மரணம். கோடிக்கணக்கான ரூபாய் பெறுமதியான ஆயுதங்கள் வெடி மருந்துகள் காணமற்போயின. (புலிகள் பெரும் பாலானவற்றை எடுத்துச் சென்றனர்.)

(முன்பக்கத் தொடர்ச்சி...)

அமிர் கொலைக்கு பின்னர் முதலாவது மாவீரர் தினக் கூட்டத்தில் பிரபாகரன் கூறியது இது:

**"அமிர்தலிங்கம் மட்டுமல்ல நாளை பிரபாகரனே தமிழீழக் கோரிக்கையை கைவிட்டாலும் மரணதண்டனைக்கு உள்ளாக்கப்பட வேண்டும்."**

அமிர் கொலையில் பலியானவர்களில் ஒருவரான மேஜர் விசுவுக்கும் புலிகள் அஞ்சலி தெரிவித்தனர்.

முதலில் இக் கொலைகளை மறுத்ததும், மறுப்பதும் மக்களிடம் அதிருப்தி ஏற்படும் என்பதற்காக அல்ல. சர்வதேசரீதியான சில காரணங்களுக்காகவே புலிகள் அரசியல் தலைவர்கள் மீதான நடவடிக்கைகளுக்கு உரிமை கோருவதில்லை.

மக்களிடம் அதிருப்தி ஏற்படும் என்று நினைத்தால்: "தமிழீழத்தை கைவிடும் எவரும் துரோகிகளாக கருதப்பட்டு மரண தண்டனை விதிக்கப்படுவர்" என்று பகிரங்கமாக அறிவித்து இருக்கமாட்டார்கள்.

இன்னொரு விடயம்: அமிர் கொலைக்கு புலிகள் உரிமை கோரியபோதும்கூட இதுவரை கூட்டணியினர் அக் கொலைக்கு யார் காரணம் என்று கூறியதே கிடையாது.

புலிகளை பகைக்காமல், புலிகளுக்கு பாச்சா காட்டும் அரசியலை நடத்துவதில் தான் கூட்டணியினர் ஈடுபட்டு வருகின்றனர். ஆனால் இது மிகப் பழைய தந்திரம். சாயம் வெளுத்த நிலையில் காணப்படும் தந்திரம்.

நிற்க: சந்தேகப்பட்டியலில் அடுத்து இருப்பவர் சம்பந்தன். அவரது அரசியல் நிலைப்பாடு தந்திரமானதுதான். ஆனால் திட்டமிட்டு இப்படியொரு காரியத்தை செய்யுமளவுக்கு துணிவோ, பலமோ அவருக்கு கிடையாது.

**ஆனால் புலிகளுக்கு எட்டும் விதமாக தங்கத்துரை தொடர்பான புகார்கள் பலர் மூலமாக அனுப்பப்பட்டது என்பது முன்னர் பேசப்பட்ட விடயம்தான். எனினும் கூட்டணி விடயத்தில் ஏனைய தமிழ்க்கட்சிகள் போல அல்லாமல் தெளிவான பார்வையுடன் இருக்கிறார்கள் புலிகள். "உங்களை நம்பமாட்டோம். ஆனால் எங்களுக்கு உபத்திரவமாக இல்லாமல் இருங்கள்." என்று கிழக்கில் கூட்டணியில் முக்கியமான தூண்கள் சிலருக்கு புலிகள் சொல்லிவைத்திருக்கிறார்கள்.**

புலிகள் தங்கத்துரை கொலைக்கு காரணமாக இருப்பின் அவர்களைத் தூண்டியது எது?

கடந்த சில காலமாக கூட்டணியினர் விடயத்தில் காரசாரமான விமர்சனங்கள் புலிகளின் பத்திரிகைகளிலும் வெளியாகி வருகின்றன.

சகல தமிழ்க்கட்சிகளும் துரோகம் செய்கின்றன. ஆனால் தற்போதைய கட்டத்தில் கூட்டணியினர்தான் முன்னணிப் பாத்திரம் வகிக்கத் தொடங்கியுள்ளனர் என்பது புலிகளின் கருத்தாகும்.

ஏனைய தமிழ்க்கட்சிகளுக்கு சரணடைவைக்கூட கச்சிதமாகச் செய்யத்தெரியவில்லை. கூட்டணியினர் நாசூக்காக செய்கின்றனர்.

சமீபகாலமாக கூட்டணியினர் போக்கிலும் மாறுதல்கள் தெரிந்தன. முன்னர் மறைமுகமாகக் கூட புலிகளை சாடமாட்டார்கள். ஆனால் தற்போது மெல்ல மெல்ல தம்பிமாருக்கு புத்தி சொல்லும் நிலைக்கு வந்து கொண்டிருக்கின்றனர்.

புலிகளை போரில் பலவீனப்படுத்த அரசாங்கம் அரசியல் தீர்வுப்பொதி பற்றி பேசுவதற்கு சாட்சியம் கொடுக்கும் நிலையானது புலிகளின் அடி மடியிலேயே கைவைப்பது போன்றதாகும். சர்வதேச அரங்கில் தம்மை தனிமைப்படுத்தும் இந்த தந்திரத்துக்கு கூட்டணியினர் முன்னணியில் நின்று உதவியதுதான் புலிகளுக்கு கோபத்தை ஏற்படுத்தி இருக்கிறது.

**அது மட்டுமல்லாமல் கொழும்பு பத்திரிகைகளிலும் இலங்கைத் தமிழர்களின் அரசியல் தலைமை தாம்தான் என்பதுபோல தமது கடந்த கால அறிக்கை திட்டங்கள் பற்றி கூட்டணி பிரமுகர்கள் எழுதத் தொடங் கினர். ஆயுதப் போராட்ட எழுச்சியின் விளைவாக நடைபெற்ற பேச்சுவார்த்தை களைக்கூட தம்மால் பிரதான பாத்திரம் வகித்த நிகழ்வுகளாக உரிமை கோரத் தொடங்கினர்.**

தமிழ்க்கட்சிகளோ, கூட்டணியினரோ புலிகளுக்கு சவாலாக இல்லாவிட்டாலும், இக் கட்சிகளின் இன்றைய நிலைப்பாடுகள் புலிகளை சர்வதேசரீதியாக தனிமைப் படுத்த உதவுகின்றன.

**எனவே- புலிகளின் கவனம் தமிழ்க் கட்சிகள்மீது மறுபடியும் திரும்பியிருக்கிறது. இப்படியே போனால் அரை குறைத் தீர்வொன்றுக்கு இக்கட்சிகள் இணங்கக்கூடும். அதன் மூலம் அரசியல்ரீதியில் தமது நிலைப்பாடு பலவீனமாகலாம் என்பதால் தமிழ்க் கட்சிகள் தொடர்பாக மறுபடியும் கடும்போக்கான நிலையை புலிகள் எடுத்துள்ளதாக தெரிகிறது.**

தாங்கள் படையினருக்கு எதிரான தாக்குதல்களில் ஈடுபட்டுக்கொண்டிருக்க, மறுபுறம் தம்மை அரசியல்ரீதியில் ஓரம்கட்டும் வேலை தமிழ்க்கட்சிகள் மூலமாக செய்யப்படும் என்பதால், புலிகளின் கவனம் தமிழ் அரசியல் கட்சிகள்மீதும் திரும்பியிருக்கிறது.

**யுத்த அரங்கில் முற்றுகையை உடைக்க திட்டம் தீட்டும் அதே வேளையில், அரசியல் அரங்கில் முற்றுகைக்கு உள்ளாக்கும் திட்டங்களை முறியடிக்க புலிகள் நினைப்பதாக தெரிகிறது.**

இவ்வாறான நிலையில் கூட்டணியினருக்கு ஒரு எச்சரிக்கை கொடுப்பதற்காக நடத்தப்பட்ட தாக்குதல்தான் தங்கத்துரை மீதான தாக்குதல் என்று நம்ப இடமுண்டு.

சில மாதங்களுக்கு முன்னர் எதிர்க் கட்சித் தலைவரை பாராளுமன்ற தமிழ்க் கட்சிகள் சந்தித்தன. அப்போது தங்கத்துரையும் சென்று கலந்துகொண்டார்.

முஸ்லிம் காங்கிரசின் தனிமாகாணக் கோரிக்கை மற்றும் சில விடயங்களில் தங்கத்துரை விட்டுக்கொடுப்புக்களை வலியுறுத்தினார். சந்திப்பு முடிந்தபின்னர் தமிழ்க்கட்சி தலைவர் ஒருவர் அவரிடம் கேட்டாராம்: "அண்ணர் புலிகளுடன் அரசு பேசவேண்டும் என்கிறீர்கள். ஆனால் புலிகளுக்குமாறான கருத்துக்களை கூறுகிறீர்களே அவர்களுக்குத் தெரிந்தால் என்ன செய்வீர்கள்." என்று கேட்டாராம்.

**"புலிகள் என்னுடன் ஏற்கனவே கோபமாகத்தான் இருக்கிறார்கள். தகவலும் அனுப்பியுள்ளார்கள்" என்று தங்கத்துரை கூறியிருக்கிறார்.**

கடந்த வருடம் மூதூரில் ஒரு நாடகம் நடத்தப்பட்டது. அதில் தங்கத்துரையை கேலி செய்திருந்தார்கள். அந்த நாடகத்தை புலிகளும் இருந்து பார்த்து பாராட்டினார்கள்.

நாடகத்தில் நடித்த சிலர் திருமலைக்கு வந்தபோது தங்கத்துரையின் ஆதரவாளர்களால் மிரட்டப்பட்டனர். 'பொடியள் சொல்லித்தான் செய்தனாங்கள்.' என்ற வுடன் அவர்களை விட்டுவிட்டனர்.

இதுதவிர வேலை வாய்ப்புக்களுக்கு சிபாரிசுகள் போன்ற விடயங்களிலும் புலிகளுக்கு புகார்கள் சென்றனவாம். தங்கத்துரை மூதூருக்கு செல்வதில்லை. திருமலையில்கூட அதிக நாட்கள் தங்க மாட்டார். அதனால் புலிகளின் சில கோரிக்கைகளை அவர் கண்டுகொள்ளவில்லை என்றும் கூறப்படுகிறது.

கூட்டணிக்கு எச்சரிக்கை விடுப்பதற்கு தங்கத்துரையை இலக்காகக் கொள்ள அவர்மீதான கோபமும் தூண்டுதலாக இருந்திருக்கலாம்.

**அதுதவிர ஜூலை 5ம் திகதி கரும் புலிகள் தினம். ஆனால் தங்கத்துரை கட்டிடத் திறப்புவிழாவில் கலந்து கொண்டதோடு பாண்ட் வாத்தியங்கள் சகிதம் கொண்டாட்டமும் நடந்தது.**

இதனை முன்கூட்டியே அறிந்த புலிகளுக்கு அதுவும் கோபத்தை ஊட்டியிருக்கலாம். கட்டிட திறப்புவிழா அழைப்பிதழ் முன்னரே வெளியாகிவிட்டது. உள் தகவல்கள் மூலம் பிற விபரங்களை புலிகள் திரட்டியிருக்கலாம்.

**எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்தாற் போல தங்கத்துரை மீதான கோபத்திற்கு எண்ணெய் வார்ப்பதுபோல வந்தது சுதந்திரதின விழாச் செய்தி.**

**50வது சுதந்திரதின விழா கொண்டாட்டத்துக்கு அரசு நியமித்துள்ள குழுவில் கிழக்கு மாகாணத்தில் தங்கத்துரைதான் நியமிக்கப்பட்டிருக்கிறார். ஜோசப் பரராஜசிங்கம் மறுத்துவிடுவார் என்பதால் தங்கத்துரையின் பெயரை திரு. நீலன் திருச்செல்வம்தான் ஜனாதிபதியிடம் சிபாரிசு செய்தாராம்.**



படிப்பகம்

www.padippakam.com

# இலங்கை இனப் பிரச்சினை: ஹொங் கொங் விவகாரம் ஒரு முன்மாதிரி!

**அலசுவது- இராஜதந்திரி**

ஒரு நாடு: இரு நிர்வாக அமைப்புகள். **(One Country two Systems)**

இதுவே கடந்த ஜூலை முதலாந்திகதி பிரிட்டனிடமிருந்து சீனாவின் வசமான ஹொங் கொங் குறித்த அரசியல் நிலைப்பாடாகும்.

150 ஆண்டுகள் வரை பிரிட்டனின் ஒரு காலனித்துவ தேசமாகவே இருந்துவந்த ஹொங் கொங் தற்போது சீனாவின் வசமாகியுள்ளது.

இருந்தபோதிலும் ஹொங் கொங்கின் சுயாதிக்கத்தை அங்கீகரித்த நிலையிலேயே சீனா அதனை பிரிட்டனிடமிருந்து கையேற்றுள்ளது.

சுமார் 10 வருடங்களுக்கு முன்னர் அன்றைய பிரிட்டிஷ் பிரதமர் மார்கிரட் தட்சருக்கும் சீனத் தலைவர் டெங் சியா வோ பெங்கிற்குமிடையே ஹொங் கொங் கையளிப்புத் தொடர்பான ஒப்பந்தம் கைச்சாத்தாகியிருந்தது.

**அந்த ஒப்பந்தம் ஹொங் கொங்கில் ஜனநாயக நடைமுறைகளைப் பாதுகாப்பது, மனித உரிமைகளைப் பேணுவது, மற்றும் ஹொங் கொங்கில் வதியும் பிரிட்டிஷ் வம்சாவளியினரைப் பாதுகாப்பது, அரசியல் சுதந்திரங்களைப் பேணுவது, வர்த்தக கைத்தொழில் முதலீடுகளை ஒழுங்கமைப்பது போன்ற பல்வேறு விடயங்கள் சார்ந்ததாக அமைந்திருந்தது.**

எனவே ஹொங் கொங்கை வெறுமனே அதன் தனித்துவத்தை இழந்த நிலையில் பிரிட்டன் சீனாவிடம் கையளித்துவிடவில்லை.

ஹொங் கொங்கின் எதிர்கால நலன்களில் அக்கறை கொண்டு ஒரு சுயாதிக்க அரசியல் நிலைப்பாட்டைக் கொண்ட பிரதேசமாகவே சீனாவின் பொறுப்பில் ஹொங் கொங் விடப்பட்டுள்ளது.

இந்நிலையில் பாதுகாப்பு, வெளிவிவகாரம் ஆகியவை தவிர்ந்த அனைத்தையும் ஹொங் கொங் தானாகவே மேற்கொள்ளும் உரிமையைப் பெற்றதாகவே மாறியுள்ளது.

இம் மாற்றமே ஒரு நாடு இரு நிர்வாக அலகுகள் என்ற வார்த்தைப் பிரயோகத்தை அர்த்தப்படுத்துவதாகவும் இருக்கின்றது.

பிரிட்டனிடமிருந்து பல காலனித்துவ நாடுகள் பூரண சுதந்திரம் பெற்றுள்ளன.

அவ்வாறு சுதந்திரம் பெற்ற நாடுகளில் சில தற்போது சுதந்திரம் பெற்றதன் பொன்விழா ஆண்டுக்குள்ளும் பிரவேசித்துள்ளன.

இந்தியா, இலங்கை, பாகிஸ்தான் ஆகியவை பிரிட்டனிடமிருந்து சுதந்திரத்தைப் பெற்று 50 ஆண்டுகளைத் தற்போது பூர்த்தி செய்யும் தறுவாயிலுள்ள நாடுகளாகும்.

**இந்திய உபகண்டத்துக்கு சுதந்திரத்தை பிரிட்டிஷார் வழங்கியபோது-பாகிஸ்தான் முஸ்லிம்களின் தனித்துவமும் அங்கீகரிக்கப்பட்டு, பாகிஸ்தான் ஒரு தனி நாடாகப் பிரகடனப்படுத்தப்பட்டது.**

இதேவேளை, இந்தியா இந்துக்களை மட்டும் கொண்டதொரு நாடல்ல; பல்வேறு இன, மத, மொழிகளைக் கொண்ட இந்தியா மிக ஆரம்பத்திலேயே துணிச்சலாக அனைத்து மக்களதும் தனித்துவத்தைப் பேணும் அரசியல் யாப்பைக் கொண்டுவந்தது.

இந்த யாப்பின் காரணமாகவே இன்றுவரை இந்தியா- பல்வேறு அரசியல் பூசல்களைக் கொண்டிருந்தாலும்- தனி ஒரு நாடாகவும் தென் ஆசியாவில் ஒரு வல்லரசாகவும் மிளிர்ந்து வருகின்றது.

**ஆனால் இலங்கையின் விடயத்தில் பிரிட்டிஷார் கண் மூடித்தனமாகவே நடந்து கொண்டிருந்தனர். அதன் பிரதிபலனையே இலங்கை தற்போது அனுபவித்து வருவதை அவதானிக்க முடிகின்றது.**

பிரிட்டிஷாரின் ஆட்சியின் கீழ் பெட்டிப் பாம்பாக இருந்த பேரினவாத சக்திகள், சுதந்திரத்தின் பின்னரே தமது கொடிய விஷத்தைக் கக்க ஆரம்பித்தன. இவ் விஷம் தற்போது ஓர் ஆலகால விடமாக மாறி முழுநாட்டையும் பாழாக்கி வருவதையே அவதானிக்க முடிகின்றது.

இலங்கையின் இரு முக்கிய தேசிய இனங்களான சிங்களவர்களும், தமிழர்களும், மற்றும் முஸ்லிம்கள், பறங்கியர் போன்ற சமூகத்தவர்களும் அவரவர்களது தனித்துவத்தைப் பேணும் விதத்தில் பிரிட்டிஷார் இலங்கையை விட்டுச் சென்றிருக்கவில்லை.

**சுதந்திரத்தின் பின்னர் இலங்கையில் தயாரிக்கப்பட்ட அரசியலமைப்புகள் கூட பெரும்பான்மை இனத்தவர்களின் நலன்களைப் பேணுபவையாக அமைந்திருந்தனவே தவிர எவ்விதத்திலும் வேற்றுமைகளில் ஒற்றுமையைக் கொண்டிருப்பவையாகக் காணப்படவில்லை.**

மொழி, பிரதேச ரீதியான ஒடுக்குமுறைகளை சிறுபான்மையினரை நோக்கி மேற்கொண்ட அதேசமயம் கல்வி, தொழில் வாய்ப்பு போன்றவற்றிலும் குறுகிய மனப்போக்கையே இலங்கையின் பேரினவாத ஆட்சியாளர்கள் கையாண்டிருந்தனர்.

இதனையடுத்தே அரசியல் ரீதியாக தமிழர்கள் தமது தனித்துவத்துக்காகக் குரல் கொடுத்தனர்- சுயாட்சிக்கோரிக்கையை முன்வைத்தனர். அக்கோரிக்கையும் நசுக்கப்பட்ட நிலையிலேயே தனிநாடு கோரிய போராட்டத்தை தமிழ் மக்கள் ஆரம்பித்திருந்தனர்.

இந்நிலையில் இப்போராட்டத்தை முழுமையாக நசுக்கி, அதன் தாற்பரியத்துக்கு மதிப்பளிக்காது, தனது தரப்பு இழப்புக்களையும் துச்சமென மதித்து ஓர் அரைகுறையான- அதேசமயம்- ஒருதலைப்பட்சமான அரசியல் தீர்வொன்றைக் கொண்டுவருவதிலேயே இலங்கையில் இன்றைய ஆட்சியாளர்கள் ஆர்வங்காட்டுகின்றனர்.

இலங்கையின் வடக்கு-கிழக்குத் தமிழர்களது தனித்துவம் ஒரு விசேட பிரச்சனையாகக் கருதப்பட்டுத் தீர்க்கப்பட வேண்டியதாகவுள்ளது. ஆனால் அவ்வாறு செய்வதைத் தவிர்த்து தனது புதிய அரசியலமைப்புக்குள்ளேயே வடக்கு-கிழக்குப் பிரச்சினையையும் கையாள்வதில் அரசு ஆர்வங்காட்டுகின்றது.

பூரண சுயாதிக்கம் கொண்ட ஒரு நிர்வாக அலகையே வடக்கு-கிழக்குத் தமிழர்கள் எதிர்பார்க்கின்றனர்.

எனவே இலங்கையில் இனப்பிரச்சினை, அரசியல் தீர்வு என்பவை பற்றி நிறையவே பிரஸ்தாபிக்கப்படும் இத்தருணத்திலேயே ஹொங் கொங் நிர்வாக முறை ஒரு நல்ல முன்னுதாரணமாகக் காணப்படுகிறது.

எது எப்படியிருந்த போதிலும் இலங்கை ஹொங் கொங்கைப் போல ஒரு பொருளாதார வளர்ச்சிகண்ட நாடல்ல. அபிவிருத்தியடைந்துவந்த பொருளாதாரமும் போரினால் நாசமாகிப்போயுள்ளது.

இந்நிலையில் இலங்கையின் எதிர்காலத்தை நிர்ணயிப்பது ஒரு நிரந்தர அரசியல் தீர்வாகவே அமையமுடியுமே தவிர; அரசியல் அமைப்பல்ல.

**கொழும்பிலுள்ள தமிழ் அரசியல் கட்சிகளுடனும் சரிவரப்பேசாது, தமிழீழ விடுதலைப்புலிகளுடனும் பேசுவதற்கு முன்வராது, எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சி, மற்றும் ஏனைய அரசியல் சக்திகளையும் ஒன்றிணைக்க முடியாமல் இன்றைய பொதுஜன ஐக்கிய முன்னணி தடுமாறுகின்றது.**

மறுபுறத்தே சிங்கள ஆணைக்குழுவின் முன்பாக பேரினவாதிகளின் சுயரூபங்களும் வெளிவந்தவண்ணமிருக்கின்றன.

இவைதவிர யுத்தமென்ற கொடுமை இலங்கையின் இன்றைய சந்ததித் தமிழர்களையும், சிங்களவர்களையும் முடமாக்கியும், உயிர்ப்பலி எடுத்தும் வருகின்றது.

மரணத்தினுள் வாழ்வதுதான் நியதி என்ற நிலையில் இன்றைய சந்ததித் தமிழர்களும், சிங்களவர்களும் வாழ்ந்து வருகின்றனர்.

'சுரங்கத்தின் முடிவில் வெளிச்சம்' என்று கூறப்படுவதுண்டு. ஆனால் இலங்கையின் இனப்பிரச்சினை என்பது வெளிச்சத்தைக் காணமுடியாத சுரங்கத்தினுள் சிக்குண்டுள்ளதைப் போன்றே காணப்படுகின்றது.

சுயமாகவே ஒரு நல்ல தீர்வுக்கு முன்வர முடியாத ஆட்சியாளர்கள், சர்வதேச அரங்குகளில் நிகழும் நல்ல முன்னுதாரணமான மாற்றங்களைக்கூட ஏற்றுக்கொள்ள முடியாதவர்களாகவே இருக்கின்றனர்.

**ஹொங் கொங் ஒரு காலனித்துவ தேசமாக இருந்து தனது சுயாதிக்கத்தை நிலை நாட்டிய நிலையில் சீனாவுடன் இணைந்து கொண்டுள்ளது.**

ஆனால் இலங்கையின் வடக்கு-கிழக்குப் பிரதேசம் தனி ஒரு தேசமாக இருக்கவில்லை.



**இலங்கைத் தீவும் இரு தேசங்களைக் கொண்ட நாடாகும். நாடு என்பதும் தேசம் என்பதும் அரசியல் ரீதியில் ஒரே பொருள் கொண்டவையல்ல. ஒரு நாட்டில் ஒன்றுக்கு மேற்பட்ட தேசங்கள் இருக்கலாம்.**

வடக்கு-கிழக்கு பிரதேசமானது பொதுமொழி, பொதுப் பொருளாதாரம், நிலத்தொடர்ச்சியான பொதுப் பிரதேசம் என்பவற்றை கொண்ட மக்கள் வாழும் தேசமாக இருக்கிறது.

**இந்தத் தனித்துவங்களை பாதுகாக்கவே வடக்கு-கிழக்கில் அரசியல் போராட்டங்கள் முதலில் அமைதிவழியிலும், பின்னர் ஆயுதமேந்தியும் முன்னெடுக்கப்படும் சூழல் தோன்றியது.**

சீனா என்ற நாட்டுக்குள் ஹொங் கொங் என்ற தேசத்தை இணைக்கும்போது அதன் தனித்துவம் அங்கீகரிக்கப்படவேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது. சீன அரசும் அதனை ஏற்றுக்கொண்டுள்ளது.

சோசலிச நாடான சீனா தனது கொள்கைக்கு நேர்மாறான முதலாளித்துவ கொள்கை ஹொங் கொங்கில் தொடர்வதைக்கூட ஏற்றுள்ளது.

இலங்கை ஜனாதிபதியும் சீனாவுக்குள் ஹொங் கொங் இணைந்ததை பாராட்டியும் வரவேற்றும் உள்ளார்.

**இலங்கை இனப்பிரச்சனையிலும் சீனாவின் ஹொங் கொங் தொடர்பான அணுகுமுறையை ஆட்சியாளர்கள் ஒரு முன்னுதாரணமாக கொள்ள முன்வரவேண்டும்.**

இலங்கையில் ஒரே அரச நிர்வாகம் நிலவும் போதும் மனத்தளவில் வடக்கு-கிழக்கு மக்கள் தாங்கள் ஒரு தனியான தேசத்தைச் சேர்ந்தவர்கள் போலவே உணருகிறார்கள்.

சிங்கள மொழி பேசுவோரை மட்டுமே கொண்டு உருவாக்கப்பட்டுள்ள முப்படைகள் மற்றும் பொலிசார் வடக்கு-கிழக்கில் பெருமளவில் குவிக்கப்பட்டிருப்பதும் வடக்கு-கிழக்கு மக்களிடம் அந்நிய உணர்வை அதிகரிப்பதாகவே அமைந்துவருகிறது. கட்டாயமான பலப் பிரயோகம் மூலம் இரு தேசங்களை கொண்ட ஒரு சிறையாகவே இலங்கை விளங்குகிறது.

**வடக்கு-கிழக்கு மக்களின் தனித்துவத்தை அங்கீகரித்து அதற்கேற்ற அரசியல் தீர்வொன்று காணப்பட்டால் மட்டுமே சுயவிருப்பத்தின் பேரில் இரு தேசங்களும் இணைந்திருக்கும் ஒரு நாடாக இலங்கை விளங்க முடியும். அமைதி தோன்றவும் வழி திறக்கும்.**

மாறாக; வடக்கு-கிழக்கின் தனித்துவமான சுயநிர்ணயத்தை அங்கீகரிக்காத எந்தவொரு அரசியல் தீர்வும் சாத்தியமாகப்போவதில்லை என்பதே தெளிவாகியுள்ளது.

---

# அட்டைக் கத்திகளும் விட்டுக் கொடுப்புக்களும்!

பாராளுமன்ற தெரிவுக்குழு காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டது. இப்போது மீண்டும் கூடும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

திடீரென்று ஒத்திவைக்கப்பட்டது ஏன்?

ஐக்கிய தேசியக் கட்சிக்கும், தமிழ்க் கட்சிகளுக்கும் மறைமுக எச்சரிக்கை கொடுக்கத்தான்.

தீர்வு யோசனை விடயத்தில் அது குறைந்த பட்ச தீர்வாக இருந்தாலும்கூட ஐக்கிய தேசியக் கட்சி ஒத்துழைப்புக் கொடுக்காது. எனவே ஐக்கிய தேசியக் கட்சி ஒத்துழைக்காவிட்டாலும் தீர்வு திட்ட சட்டவரைபை தாம் முன்வைப்போம் என்று ஒரு மிரட்டல் விடுவதுதான் நோக்கம்.

ஆனால், பாராளுமன்றத் தெரிவுக் குழுவை ஒத்திவைத்தது பற்றி ஐக்கிய தேசியக் கட்சி அலட்டிக் கொள்ளவில்லை. கவலைப்படவும் இல்லை.

தமிழ்க் கட்சிகள் விடயத்தில்தான் மறைமுக மிரட்டல் பலித்திருக்கிறது.

அரசாங்கம் பாராளுமன்ற தெரிவுக்குழுவை ஒத்திவைத்த பின்னர் ஊகங்கள் கிளம்பின.

அரசாங்கம் தானாகவே ஒரு சட்ட வரைபை பாராளுமன்றத்தில் முன்வைக்கப் போவதாக ஒரு ஊகம் பரவியது.

இனிமேல் பாராளுமன்ற தெரிவுக்குழு கூடமாட்டாது என்றும் பேசப்பட்டது.

ஐக்கிய தேசியக் கட்சி கவலைப்பட்டதாகத் தெரியவில்லை.

தீர்வு முயற்சிகளுக்கு தாம் தடையாக இருப்பதாக கருதப்பட்டுவிடக்கூடாது என்பதுதான் ஐ.தே.கட்சியின் கவலை. அரசாங்கம் தானாகவே தம்மைத் தள்ளிவைத்தால் அக்கட்சிக்கு சந்தோசம்தான்.

நமக்கும் இதற்கும் தொடர்பில்லை என்று மூவின மக்களிடமும் கூறிவிடலாம். அரசே ஐக்கிய தேசியக் கட்சியை தள்ளிவைத்துவிட்டது என்பதால் தீர்வை குழப்புவதாக வெளியுலகமும் அக்கட்சிமீது குற்றம் சாட்ட முடியாது.

எனவே- தங்களை அரசு தள்ளிவைத்து விட்டு தீர்வு முயற்சிகளை செய்துவிடக்கூடாதே என்ற அச்சம் ஐக்கிய தேசியக் கட்சிக்கு கிடையாது.

ஆனால் தமிழ்க் கட்சிகளின் நிலை அப்படியல்ல. தமிழ்க் கட்சிகளை தள்ளிவைத்துவிட்டு தீர்வு முயற்சிகளை அரசு தொடருமானால் நஷ்டம் தமிழ்க் கட்சிகளுக்குத்தான். அரசுக்கல்ல.

என்ன நஷ்டம்?

1. அரசியல் நாடகத்தில் எந்தப் பாத்திரமும் இல்லாத நடிகர்களாகிவிடும் நிலை ஏற்படும்.
2. தீர்வு பற்றி கூடி ஆராய்வதாக பத்திரிகைகளுக்கு அடிக்கடி செய்தி கொடுப்பதுமூலம் தமது இருத்தலை மக்களுக்கு நினைவூட்ட முடியாமல் போகும். தாமும் தமிழ் மக்களைப் பற்றி கவலைப்படுவதாக காட்டிக்கொள்ள ஒரு அரங்கு இல்லாமல் போய்விடும்.
3. அரசாங்கமே தமிழ்க் கட்சிகளை கணக்கில் எடுக்கவில்லை என்று மக்கள் கேலியாக நினைப்பர்.

அதனால்தான் அரசாங்கம் தாமாக ஒரு தீர்வை முன்வைக்கப்போவதாக ஊகங்கள் கிளம்பியதும் தமிழ்க் கட்சிகள் கதிகலங்கிப் போய்விட்டன.

போதாக்குறைக்கு நீதியமைச்சர் ஜி.எல். பீரிசும் தமிழ்க் கட்சிகள் ஏற்றுக் கொண்டாலென்ன, ஏற்காவிட்டாலென்ன தீர்வு கொண்டு வருவோம் என்று ஒரே போடாகப் போட்டு விட்டார்.

உடனே ஐந்து தமிழ்க் கட்சிகளும் கடந்த வாரம் கூடி ஆராய்ந்தன.

தாங்கள் முன்வைத்த திட்டத்தை பற்றியோ அதன் கதி என்னவென்பதைப் பற்றியோ அவை கவலைப்படவில்லை.

சில வாரங்களுக்கு முன்னால் ஐந்து கட்சிகள் ஒன்றுகூடி தாம் முன்வைத்த தீர்வு யோசனை பற்றி பேசுவதற்கு அரசிடமும், எதிர்க் கட்சியிடமும் நேரம் கேட்டிருந்தன.

அதுபற்றி பத்திரிகைகளில் மட்டும்தான் செய்தி வந்ததே தவிர, அரசோ, எதிர்க்கட்சியோ கவனத்தில் எடுக்கவும் இல்லை. பேச அழைக்கவும் இல்லை. அதைப் பற்றியும் தமிழ்க் கட்சிகள் கவலைப்படவில்லை.

தங்கள் பலம் தமிழ்க் கட்சிகளுக்கு தெரியும் என்பதால், தங்கள் கருத்துக்கள் சபையேறாதது பற்றியும் அவை கவலை கொள்வதில்லை.

எனவே- அரசுக்கும், எதிர்க்கட்சிக்கும் தொல்லையில்லாத ஒரு புதிய திட்டம் பற்றி கடந்தவாரம் தமிழ்க் கட்சிகள் ஆராய்ந்துள்ளன. இனப்பிரச்சனைக்கு நிரந்தரமான தீர்வொன்றை காண்பதற்கான திட்டத்தைவிட, தங்கள்மீது கோபம் கொள்ளாமல் அரசும், எதிர்க்கட்சியும் தங்களை அழைத்துப் பேசக் கூடியதிட்டம் ஒன்றை முன்வைப்பதுதான் புதிய ஆராய்ச்சி.

அந்த ஆராய்ச்சியின் பயனாக ஒரு புதிய யோசனையை கண்டுபிடித்திருக்கிறார்கள்.

வடக்கு-கிழக்கு மேலும் பத்துவருடத்திற்கு இப்படியே இணைந்திருக்கலாம். 10 வருடத்தின் பின்னர் வடக்கு-கிழக்கை பிரிப்பதா, இணைப்பதா என்று முடிவுக்கு வரலாமாம்.

வடக்கு-கிழக்கு பிரிக்கப்பட முடியாத தமிழ் பேசும் மக்களின் தாயகம் என்ற கோரிக்கையை தமிழ்க் கட்சிகள் கைவிட்டுள்ளன என்பதே இதன் அர்த்தம்.

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தில் வடக்கு-கிழக்கு இணைப்புக்கு கருத்துக் கணிப்பு நடத்துவது என்று ஒரு ஷரத்து இருந்தது. அப்போது இதே தமிழ்க் கட்சிகள் என்ன கூறின?

"ஒப்பந்தத்தில் உள்ள குறைபாடு அதுதான். அதனை நாங்கள் ஏற்றுக் கொள்ள வில்லை. எனினும் இப்போது ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்கிறோம். அதன் குறைபாடுகளை நீக்கப் போராடுவோம்" என்று கூறின.

இப்போது அதே கட்சிகள் தாங்கள் குறைபாடு என்று கூறிய விடயத்தை நிறைவான தீர்வுக்கான அடிப்படையாக முன்வைப்பது பற்றி ஆராய்கின்றன.

இன்றைய சூழல் என்ன?

அரசியல் தீர்வொன்று அவசியம் என்பதை அகில உலகமும் அங்கீகரிக்கிறது. அரசுக்கும் நிர்ப்பந்தங்கள் இருக்கின்றன.

யுத்தத்தில் புலிகளை வெல்ல உலக உதவி அரசுக்கு தேவைப்படுவதால், இனப்பிரச்சனை தீர்வு விடயத்தில் உலக அபிப்பிராயத்தை அரசு கவனத்தில் கொள்ளவேண்டியிருக்கிறது.

இல்லாவிட்டால் ஜே.ஆர். ஒருமுறை வெளிநாட்டு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு சொன்னதுபோல "உங்கள் வேலையை நீங்கள் பாருங்கள்" என்று கூறிவிட்டு தமிழ் மக்களைப் பார்த்து 'போரா சமாதானமா?' என்று கேட்கும் நிலை இப்போதும் இருந்திருக்கக்கூடும்.

எனவே நிரந்தரமான அரசியல் தீர்வொன்றை பெறுவதற்கு இதுதான் தக்கதருணம்.

தமிழர் தரப்பிலிருந்து ஒரு அழுத்தம் இன்று இருந்துகொண்டிருக்கிறது. ஜே.ஆர். இன்றிருந்தால் கூட 'போரா சமாதானமா?' என்று அவரால் கேட்க முடியாது.

அப்படிக் கேட்டால் போருக்கு உலக ஆதரவும், உதவிகளும் கிடையாது. போர்வெறி கொண்ட அரசாக உலகம் கருதுமானால், அதனை தனக்கு சாதகமாக்கிக் கொண்டு தங்கள் பலத்தை மேலோங்கச் செய்யக்கூடிய ஒரு அமைப்பாக புலிகள் இருக்கிறார்கள்.

ஆக, இன்று அரசியல் தீர்வொன்றுக்கான அழுத்தத்துக்கு பிரதான காரணம் புலிகள்தான்.

ஆனால் தமிழ்க் கட்சிகளோ தமது குறுகிய நலன்களுக்காக புலிகளால் கொடுக்கப்படும் அழுத்தத்தை பயன்படுத்திக் கொள்கின்றன.

புலிகளைக் காட்டிக் காட்டியே தங்களுக்கான சலுகைகளையும், அங்கீகாரத்தையும் பெறுகின்ற நிலைக்கு தமிழ்க் கட்சிகள் வந்துள்ளன.

அதனால்தான், உறுதியான அரசியல் தீர்வொன்று தொடர்பாக அரசிடமும், எதிர்க்கட்சியிடமும் உள்ள திட்டம் என்னவென்பதை விரைவாக வெளிக்கொண்டுவரும் அரசியல் வியூகங்களுக்கு பதிலாக, மேலும் காலத்தை இழுத்தடிக்கும் திட்டங்களை இவர்களே ஒவ்வொன்றாக முன்வைக்க முயற்சிக்கிறார்கள்.

பத்துவருடத்தின் பின்னர் இன்றைய சூழல் இருக்குமா? தமிழ் பேசும் தரப்பு பலமாக இருக்குமா? அரை குறைத் தீர்வின் மாயையில் போராட்ட அமைப்புக்களின் முனை மழுங்கிப் போனால், பேரினவாத சக்திகள் தீட்டும் திட்டங்களை எதிர்கொள்ளும் பலம் நிலைக்குமா? இவை பற்றிய எவ்வித கவலையுமில்லாமல், பத்துவருடத்தின் பின்னர் வரும் அடுத்த தலைமுறையிடமும் அவலங்களை விட்டுச் செல்ல திட்டம் போடுகிறார்கள்.

காணி அதிகாரம் பற்றியே இன்னமும் முடிவாகவில்லை. மத்திய அரசு கேட்டால் பிராந்திய அரசாங்கம் தன் ஆளுகைக்குட்பட்ட காணியை கொடுக்க வேண்டும் என்று தீர்வு யோசனையில் இருக்கிறது.

அதாவது, மத்திய அரசு, சில காரணங்களைக் கூறி நிலத்தை எடுத்து குடியேற்றங்கள் நடத்துவதற்கான ஒரு பாதையை வைத்திருக்கிறது. அப்படிப் பார்த்தால் பத்து வருடத்தின் பின்னர் வடக்கு-கிழக்கில் தமிழ் பேசும் மக்கள் சிறுபான்மையினராகக்கூட மாறலாம். இணைப்பா, பிரிப்பா என்பதை தீர்மானிக்கும் உரிமைகூட கைவிட்டுப் போகலாம்.

குறைந்த பட்சம் இந்த காணி அதிகார விடயத்தில்கூட அரசிடம் தெளிவான முடிவைப் பெறமுடியாத தமிழ்க் கட்சிகள் விழுந்தடித்து விட்டுக் கொடுப்பானேன்?

போராட்டத்தில் இருந்தும், தமது முன்னைய கருத்து நிலைகளில் இருந்தும் விடுபட்டு அந்நியமாகிவிட்ட நிலையில் இப்படியான நிலைப்பாடுகளுக்கு தமிழ்க் கட்சிகள் வருவது எதிர்பார்த்ததுதான்.

போராடிக் களைத்துவிட்டோம் என்று கூலி கேட்கிறார்கள். மீதியை பத்து வருடத்தின் பின்னர் இருப்பவர்கள் பார்த்துக் கொள்ளட்டும் என்று சொல்லாமல் சொல்லுகிறார்கள்.

எனவே தக்க தருணத்தை தமிழ்பேசும் மக்களின் அடிப்படைக் கோரிக்கைகளுக்காக அல்லாமல், தாங்கள் ஒரு காலத்தில் ஆயுதம் ஏந்திப் போராடியதற்கான கூலியைப் பெறுவதற்கு பயன்படுத்த நினைக்கிறார்கள். அரசுக்கும், எதிர்க்கட்சிக்கும் இக் கட்சிகளிடம் இருப்பது அட்டைக் கத்திகளே என்பது தெரிந்துவிட்டது.

எனவே-மேலும் மேலும் கீழிறங்கிச் செல்வது தவிர தமிழ்க் கட்சிகளுக்கு வேறு வழியில்லை. ஏதாவது நன்மை செய்ய நினைத்தால் ஒன்று செய்யலாம்: தாங்கள் ஏற்கனவே கொடுத்த தீர்வு யோசனையுடன் நிறுத்திக் கொண்டு பேசாமல் இருக்கலாம். அதன் மூலமாக, எத்தனைதூரம் தமிழர் தரப்பு கீழிறங்கி வருகிறது என்பதை ஆளும்தரப்பும், எதிர்த்தரப்பும் ஆழம் பார்க்க உதவாமல் இருக்கலாம்.



படிப்பகம்

www.padippakam.com

# கொள்ளை ராணி பூலான்தேவி

பாகம் 02

52

தருவது ரசிகன்

தெருவின் குறுக்காக போலிஸ்காரர்கள் வழி மறித்து நின்றதைப் பார்த்ததும் பூலான்தான் பரபரப்படைந்தாள்.

லொறியை திருப்புமாறு பூலான் கூறியதை மல்லா கேட்கவில்லை.

பொலிசாரை நோக்கி லொறியை செலுத்திக் கொண்டிருந்தான்.

"உனக்கென்ன பைத்தியமா?" என்று கத்தினாள் பூலான். மல்லா அவள் கத்தியது காதில் விழாததுபோல லொறியைச் செலுத்திக்கொண்டிருந்தான். அவன் பார்வை முழுக்க தெருமீதும், எதிரே தூரத்தில் நின்ற பொலிசார்மீதும்தான் இருந்தது.

பொலிஸ்காரர்கள் ஐந்தாறுபேர் நின்று கொண்டிருந்தார்கள். அவர்களின் பின்னால் தெருவை மறித்து பாதைத் தடைக் கம்பம் போடப்பட்டிருந்தது.

பொலிஸ்காரர்கள் துப்பாக்கி வைத்திருந்தார்கள். எதிர்த்து சண்டைபோடுவது முடியாத காரியம் என்று நினைத்தாள் பூலான்.

இப்போது லொறி அவர்களை நெருங்கியது. வேகத்தைக் குறைத்தான் மல்லா. அவன் வேகத்தைக் குறைத்ததும் பூலான் முழுதாக நம்பிக்கை இழந்து போனாள். 'மல்லாவுக்கு பைத்தியம்தான் பிடித்துவிட்டது; இல்லாவிட்டால் இப்படியொரு ஆபத்தில் வலியப்போய் விழுவதுடன், என்னையும்....' பொலிசாரிடம் பிடிபடுவதை நினைத்துப் பார்க்கவே பூலானுக்குக் கலக்கமாக இருந்தது.

அப்படியே குதித்து ஓடிவிடலாமா என்று பூலான் நினைத்த நொடியில், சட்டென்று கியர் மாற்றி வேகத்தை அதிகப்படுத்திய மல்லாவின் கரம் ஒன்று இடுப்பில் இருந்த கைத்துப்பாக்கியை உருவிக்கொண்டதை பூலான் கவனித்தாள்.

"பூலான் குனிந்துகொள்!" என்று மல்லா கத்தினான். சடாரென்று பூலான் தலையைக் குனிந்துகொண்டாள்.

லொறி எதனுடனோ மோதிய சத்தம் கேட்டது. தொடர்ந்து மல்லாவின் கைத் துப்பாக்கி வெடிப்பதும் கேட்டது.

லொறி பயங்கரமாக குலுங்கிக் கொண்டு அசுரவேகத்தில் சென்று கொண்டிருந்தது.

"இனி தலையைத்தூக்கி பின்னால் வேடிக்கையைப் பார்!" என்றான் லொறியை வேகம் குறைக்காமல் மல்லா.

பூலான் தலையை உயர்த்தி பின்னால் திரும்பிப் பார்த்தாள். பாதைத் தடைக் கம்பம் பிளந்து கிடந்தது. பொலிஸார் ஓரிடத்தில் குழுமி நின்றுகொண்டிருந்தார்கள். லொறி வேகம் பிடித்துக் கொண்டிருந்ததால் அக் காட்சி மங்கலாகி, புள்ளியாகி தேய்ந்து மறைந்து போய்க் கொண்டிருந்தது.

"யாரைச் சுட்டாய்?" என்றாள் பூலான்.

"ஒரு பொலிஸ்காரனைச் சுட்டேன். அநேகமாக செத்திருப்பான்."

"குறுக்கே நின்றவர்கள்?"

"லொறியை வேகமாக்கியதுமே பூச்சிகளைபோல பறந்து ஓடிவிட்டார்கள்!"

மல்லாவை வியப்போடு பார்த்தாள் பூலான். அவளுக்கு மல்லாவின் துணிச்சல் பிடித்திருந்தது. ஆபத்தோடு விளையாடும் அவன் வேகம் பிடித்திருந்தது. ஒரு பொலிஸ்காரனைச் சுட்டுவிட்டு, ஏதோ குருவி சுட்டதுபோல அவன் அலட்சியமாக சொன்னவிதம் பிடித்திருந்தது.

லொறியின் பின்னால் வேரா அமர்ந்திருந்தான். அவன் முகத்திலும் பயமோ, பதட்டமோ கொஞ்சமும் இல்லாதது பூலானுக்கு மேலும் மகிழ்ச்சியாக இருந்தது. பொருத்தமான ஒருவனைத்தான் மல்லா துணைக்கழைத்து வந்திருக்கிறான் என்று நினைத்தாள்.

பொலிசாரைக் கண்டதும் தான் மட்டும் பரபரப்படைந்ததை நினைத்து பூலான் வெட்கப்பட்டாள். மல்லாவும், வேராவும் தன்னைப் பற்றி என்ன நினைத்திருப்பார்களோ என்று கூச்சமாக இருந்தது.

'நான் வீரமாக, தைரியமாக நடந்து கொண்டிருக்கலாம். எனது கைத்துப்பாக்கியையும் எடுத்து சுட்டிருக்கலாம். மல்லா பாராட்டியிருப்பான். 'அம்மாடி நீ பொல்லாத பெண் என்று கண்களை விரித்துப் பார்த்திருப்பான்,' என்று நினைத்து தன்னை நொந்து கொண்டாள் பூலான்.

"பயந்துபோனாயா?" என்று மல்லாவும் கேட்டுவிட்டான். அதனால் இன்னும் வெட்கமாகிப்போனது.

எங்கே தன்னைப் பற்றி குறைவாக நினைத்து விடுவானோ என்பதால், அவன் செய்தது பிடிக்காததுபோல பூலான் நடிக்க வேண்டியிருந்தது.

"பயம் என்ன பயம். நாமாகவே தேடிப்போய் ஆபத்தில் ஏன் விழ வேண்டும்? வலியச் சென்று வம்பிலாட்டுவதுதான் வீரமாக்கும்...!" உதட்டை சுழித்து பழிப்புக் காட்டினாள்.

அந்தத் தெருவில் லொறியை விரைவாகத் திருப்பிச் செல்லக்கூடிய விதித் ரணம் கிடையாது. அவசரப்பட்டு திரும்ப முயன்றிருந்தால் பொலிசாரிடம் மாட்டியிருப்பார்கள். மல்லா அதனை பூலானுக்கு சொல்லவில்லை. சொன்னாலும் அவள் வேறு ஏதாவது காரணம் கூறி தர்க்கம் செய்வாள் என்று நினைத்தவன் மௌனமாக இருந்துவிட்டான்.

"என்ன சத்தத்தையே காணோம்?" என்றாள் பூலான். தான் சொன்ன நியாயத்தை அவன் நம்பிவிட்டானா என்று அறியத்தான் அவனைக் கிண்டினாள்.

"இரண்டுபேருமே விட்டுக்கொடுக்காமல் மல்லுக்கு நின்றால் பிரச்சனைதீராது. நீ சொல்வதும் நியாயம்தான் என்று ஏற்றுக் கொள்வதால் எனக்கொரு நஷ்டமும் இல்லை!" மல்லா சிரித்தான்.

"எங்கே போகிறோம்?" என்று கேட்டாள் பூலான்.

மல்லா சொன்ன பதிலைக் கேட்ட பூலானுக்கு மறுபடி பரபரப்புத் தொற்றிக் கொண்டது.

"உனது கிராமத்திற்கு-உனது வீட்டுக்கு!" என்றுவிட்டு பூலானின் முகத்தைப் பார்த்தான் மல்லா.

"இப்போது ஏன், பிறிதொருநாள் பார்க்கலாம்." என்று சொன்னாளேதவிர, அவளுக்கும் வீட்டுக்கு செல்வதில் விருப்பம் இருந்தது.

லொறியை இடைநடுவே



பூலான்

கைவிட்டு விட்டு, பூலானின் கிராமத்துக்கு மூவரும் நடந்தே சென்றார்கள்.

பூலானுக்கு, தன் கிராமத்தில் காலடி வைத்தபோது உடம்பெல்லாம் சிலிர்த்தது. உள்ளம் பூரித்தது. கிராமத்துக் காற்று முகத்தில் பட்டபோது முதல் முத்தம்போல சிலிர்ப்பாக இருந்தது.

கிராமம் அப்படியேதான் இருந்தது. ஆனால் பூலானுக்கோ புதிதாகப் பார்ப்பது போல இருந்தது. தான் இல்லாத காலத்தில் கிராமம் மாறிவிட்டதுபோலத் தெரிந்தது.

நள்ளிரவாக இருந்தபடியால் கிராமம் முழுக்க தூங்கிக்கொண்டிருந்தது. எங்கோ ஒரு ஆந்தை கத்துவது மட்டும் கேட்க, இருள் போர்வைக்குள் சுருண்டு கிடக்கும் இந்தக் கிராமத்தின் அமைதியில் இருந்து, இந்தக் காற்றின் இதமான சுரங்களில் இருந்து, இந்த மண்வாசனையில் இருந்து, இந்த மக்களிடமிருந்து தான் பிரிக்கப்பட்டு-வேரோடு பிடுங்கப்பட்டுவிட்டதை நினைக்க பூலானுக்கு வேதனையாக இருந்தது.

எல்லாவற்றையும் விட்டுவிட்டு, இந்தச் சீருடையையெல்லாம் களைந்துவிட்டு, இந்தக் கிராமத்திற்குள்ளே மறுபடியும் கரைந்துவிட்டால் என்னவென்றும் தோன்றியது.

அந்த நினைப்புத் தோன்றிய மறுகணமே தன்னை இந்த நிலைக்கு ஆளாக்கியவர்கள் ஒவ்வொருவரும் பூலானின் மனக்கண் முன்பாகத் தோன்றினார்கள்; முன் தோன்றிய நினைப்பை பூலானிடமிருந்து துரத்தினார்கள்.

பூலானின் மனதில் எழுந்த எண்ணங்களை உணர்ந்ததுபோல, அவள் மனம் தத்தளிப்பதை அறிந்தவன்போல, மல்லா மெல்ல அவள் தோளை தன் கரமொன்றால் அழுத்தினான்.

பூலானைக் கண்டதும் அம்மா அழத் தொடங்கிவிட்டாள். பூலானின் உடம்பெங்கும் தொட்டுத் தடவினாள். "எப்படியம்மா இருக்கிறாய்? என் ராசாத்தி!" என்று கன்னம் கன்னமாக முத்தமிட்டாள்.

தம்பி சிவநாராயணுக்கு அக்காவைப் பார்க்கப் பயமாக இருந்தது. சீருடையுடன், தலையில் குறுக்காக கட்டிய துண்டுடன் நிற்பது தன் அக்காதான் என்று நம்புவதற்கே சிரமமாக இருந்தது.

"வாடா இங்கே!" என்றாள் பூலான். அவன் கண்களில் தயக்கம் தெரிந்தது. பூலான் அவன் அருகில் சென்று நெற்றியில் வாஞ்சையுடன் முத்தமிட்டாள். "என்னடா முழித்து முழித்துப் பார்க்கிறாய்?" என்று காதைத் திருகினாள். அவன் தயக்கம் விலகிக்கொண்டிருந்தது. முன்பு பார்த்ததைவிட வளர்ந்திருந்தான். அம்மாதான் மெலிந்து ஓடாகத் தெரிந்தாள். அப்பாவின் உடம்பில் எத்தனை நரம்புகள் என்று எண்ணிவிடலாம். அத்தனை மோசமாக உடைந்து போயிருந்தார்.

பூலானுக்கு கண்ணீர்வரும்போல தயாராக இருந்தது. ஆனால் அவள் அவர்கள் முன்பாக தன் உணர்ச்சிகளைக் காட்டிக் கொள்ள விரும்பவில்லை.

கடந்த வாரம்

தன் ஆட்களான
மாது சிங்கும்-பரத்சிங்கும்
சுட்டுக் கொல்லப்பட்ட செய்தியால்
மல்லாவும்-பூலானும்
பெரும் கவலையடைகின்றனர்.
கான்பூரிலிருந்து புறப்பட்டு
எட்டாவா என்னும் கிராமம்
அருகே உள்ள காட்டுப்பகுதியில்
பூலான்-மல்லா-வேரா ஆகியோர்
ஒளிந்திருக்கிறார்கள்.
லொறி ஒன்றைக் கடத்துகிறார்கள்.
பொலிஸ் வழி மறிக்கிறது. இனி....

தான் இப்போது தைரியமாகவும், உடலளவிலும், உள்ளத்தாலும் மிக நன்றாகவும் இருப்பதாக அவர்கள் உணரவேண்டும். அதுதான் அவர்களுக்கு தன்னால் கொடுக்கக் கூடிய நம்பிக்கை. தன்னைப் பற்றிய அவர்களின் தினக் கவலைகளுக்கு மருந்து என்று நினைத்தாள்.

மல்லா ஒரு ஓரமாக வேராவுடன் நின்று பார்த்துக் கொண்டிருந்தான். மல்லாவை முன்பே தெரியும் என்பதால், அப்பாவும், அம்மாவும் பரிச்சயமாக புன்னகைத்தார்கள். அவர்கள் அமருவதற்கு பாய் ஒன்றை விரித்துப்போட்டாள் அம்மா.

"உங்கள் தூக்கத்தை கெடுத்துவிட்டோம்!" என்று பரிவோடு மல்லா சொன்ன விதம் பூலானுக்கு நெகிழ்ச்சியாக இருந்தது. தன் வீட்டார்மீது அவனுக்குள்ள மரியாதை பூலானுக்கு இதமாக இருந்தது.

அப்பாவும், அம்மாவும் மல்லாவை தங்கள் வீட்டு மாப்பிள்ளையாக ஏற்றுக் கொண்டுவிட்டார்கள் என்பதே பூலானுக்கு திருப்தியாக இருந்தது.

விடிவதற்கு முன்னர் கிராமத்தை விட்டு அவர்கள் புறப்படவேண்டி இருந்தது.

அம்மா பூலானை தனியாக அழைத்துச் சென்று நாசூக்கான குரலில், "இதையெல்லாம் விட்டுவிட்டு நீயும் அவரும் எங்கேயாவது போய் வாழமுடியாதா தாயி? நிம்மதியாக இருக்கக்கூடாதா தாயி?" என்றாள்.

பூலான் தன் தாயின் தலையை தடவினாள். "நீ எதற்கும் யோசிக்காதே அம்மா. நான் இப்போதுதான் எப்போதுமில்லாத நிம்மதியுடன் இருக்கிறேன். அவர் நல்லவரம்மா. ரொம்ப நல்லவர். எங்கள் ஆட்களும் நல்லவர்களம்மா."

"பொலிஸ்காரர்கள் உங்களை விட்டு வைப்பார்களா தாயி?" கேட்கும்போதே அம்மாவின் உதடுகள் துடித்தன. அவள் கைகால்கள் நடுங்கின.

பூலான் உறுதியாக, திடமாகக் கூறினாள்: "அம்மா! நாய்கள் இருக்கிறவரை நாங்களும் இருந்தேயாக வேண்டும். இல்லாவிட்டால் நாய்கள் எல்லோரையும் கடித்துக் கொண்டிருக்கும்."

அதைச் சொன்னபோது பூலானின் கண்களில் தெரிந்த கோபத்தைக் கண்டு அம்மாவே பயந்துதான் போனாள். அதன் பின்னர் அதைப்பற்றி அம்மா பேசவில்லை.

புறப்படும்போது அம்மா தேம்பினாள். மல்லாவும், பூலானும் அவர்கள் காலில் விழுந்து ஆசிபெற்றார்கள்.

மல்லா தன்னிடமிருந்த பணத்தில் ஒரு கட்டை எடுத்து பூலானின் தம்பியிடம் கொடுத்தான். அவன் அதை வாங்காமல் பூலானை பார்த்தான்.

"வாங்கிக்கொள்!" என்றாள் பூலான். அதிலே ஐயாயிரம் ரூபாவரை இருந்தது.

பூலான் பக்கத்திலேயே சற்றுத்தூரம் நடந்துவந்த தம்பி சிவநாராயணனுடன் விடைபெறும் தருணத்தில் சட்டென்று: "என்னையும் உன்னோடு கூட்டிப்போ அக்கா." என்றான். பூலான் அவனை ஆச்சரியத்தோடு பார்த்தாள்.

"ஏனடா?"

"உ...உன்னை.. உன்னை கட்டிவைத்து அடித்தாங்களே அவங்களை.. அவங்களை என்கையாலேயே.. நான்.." சடாரென்று அவன் வாயை தன் கரத்தால் பொத்தினாள் பூலான்.

தன் தம்பி தன்மீது வைத்திருக்கும் பாசம் பூலானுக்கு நெகிழ்ச்சியாக இருந்தது. ஆனாலும் அவன் பழிவாங்கும் உணர்ச்சியால் தன்னைப்போல மாறுவதையும் அவள் விரும்பவில்லை.

"வேண்டாமடா.. வேண்டாம். அது தான் நான் இருக்கிறேனே. இதோபார் துப்பாக்கி. அவர்களையெல்லாம் நான் பார்த்துக் கொள்கிறேன். நீ நன்றாகப் படி.. அம்மா அப்பாவைப் பார்த்துக்கொள். எங்கே சத்தியம் பண்ணு!" கையை நீட்டினாள். அவன் தயங்கி "சரியக்கா" என்று அவள் கைமீது தன் கையை வைத்தான்.

கண்ணீரைக் கட்டுப்படுத்திக்கொண்டு வந்த பூலானை நிறுத்தி, "பூவா தலையா? சொல்லு" என்று கேட்டபடி ஒரு நாணயத்தை எடுத்துக் காட்டினான் மல்லா.

"பூ" என்றாள் பூலான்.

"பூ வந்தால் மையாதீன், தலை வந்தால் கிராம அதிகாரி. இருவரின் தலையில் இன்று யார் தலை உருளவேண்டும் என்று பார்க்கலாம்?"

நாணயத்தை சுண்டினான் மல்லா.

(தொடர்ந்து வரும்)

## அழகான பெண் சாமியாரிணிகள் படித்த பெண்களுக்கு வலை!



தமிழ்நாட்டை தற்போது கலக்கிக் கொண்டிருக்கும் சாமியார் விவகாரம் 'கல்கி' சாமியாரின் மர்மங்கள்தான். இவர்பற்றி ஏற்கனவே சொல்லியிருக்கிறோம்.

முன்னாள் பரம ஏழையான விஜயகுமார் என்பவர்தான் இப்போது கோடீஸ்வர கல்கி சாமியாராக இருக்கிறார்.

கல்கிச் சாமியாருக்கு இப்போது இந்தியா முதற்கொண்டு உலகில் பல நாடுகளிலும் கிளைகள் இருக்கின்றன.

கல்கி சாமியாரின் ஆசிரமத்தில் உள்ள பெண் சாமியார்களைப் பற்றி பல்வேறு கதைகள் உலவுகின்றன. இந்தியாவின் ஆங்கிலப் பத்திரிகை ஒன்று 'அழகிய பெண் சன்னியாசிகள்' என்ற தலைப்பில் ஒரு செய்தியை வெளியிட்டது.

கல்கி ஆசிரமத்தில் உள்ள சாமியாரிணிகள் அனைவருமே பெரிய பணக்காரக் குடும்பப் பெண்கள். படிப்பில் பட்டங்கள் பெற்றவர்கள். நன்றாகப் படித்த பெண்களாகப் பார்த்துத்தான் வளைத்துப் பிடிக்கிறார்களாம். ஆசிரமத்தில் சேர்ந்தவுடன் அந்த பெண் சாமியாரிணிகளுக்கு மொட்டை போட்டுவிடுகிறார்கள். பளீர் வெள்ளை உடை கொடுத்துவிடுகிறார்கள். அவர்கள் திருமணம் செய்ய முடியாது. குடும்பத்தினரைப் பார்க்கவோ பேசவோ முடியாது. என்று ஏகப்பட்ட கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.

பல நூற்றுக்கணக்கான பெண் சன்னியாசிகள் கல்கி ஆசிரமத்தில் இருக்கிறார்கள். சன்னியாசிகளை உருவாக்கும் கல்கி சாமியார் மட்டும் தன் மனைவியுடன் ஜாலியாக குடும்பம் நடத்துவதுதான் கொடுமை. அவர் மட்டும் குடும்ப சகிதம் இருக்கும்போது சன்னியாசிகளை உருவாக்குவது ஏன்? என்பதுதான் மர்மமாக இருக்கிறது.

இந்தியா படிப்பறிவில் முன்னணி வகிக்கக்கூடாது. விஞ்ஞானிகளும், பொறியியலாளர்களும், மருத்துவர்களும் புதிதாக உருவாகுவதைத் தடுத்து நிறுத்தவேண்டும் என்று விரும்பும் வெளிச்சக்தி ஒன்றுதான் 'கல்கி' சாமியாருக்கு பின்னணியில் நிற்கிறதோ என்று சந்தேகம் எழுந்திருக்கிறது. படிப்பாளிகளையெல்லாம் பிடித்து சன்னியாசிகள் ஆக்குவது அதனால் தான் என்கிறார்கள்.

கல்கி சாமியார் பற்றிய மர்மங்களை ஆராய தமிழக பொலிசார் விசாரணையொன்றை ஆரம்பித்தனர். அரசியல் தலையீட்டால் அந்த விசாரணை தடுக்கப்பட்டுவிட்டது.

ஆந்திர மாநில முதல்வர் சந்திராபாபு நாயுடு கல்கி பக்தராம். அவருக்கு கல்கி மீதும் பெண் சன்னியாசிகள் மீதும் பயங்கர பக்தியாம். கல்கி சாமியார் தற்போது தங்கியிருப்பதும் ஆந்திராவில்தான்.

சாமியார்கள் அழகான சன்னியாசினிகளை வைத்திருப்பதன் நோக்கமே அரசியல்வாதிகளையும், பெரும் புள்ளிகளையும் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருந்து ஆட்டுவிக்கத்தான் என்பது இரகசியமல்ல.

பிரேமானந்தா சாமியின் காதலியான திவ்யா சாமியாரிணியின் லீலைகளும், பெரும் புள்ளிகள் பலர் திவ்யா தரிசனத்துக்காக காத்துக் கிடந்ததும் பழைய கதைகள். பெரும் புள்ளிகளுக்கு அவர் கொடுக்க வேண்டிய வரங்களைக் கொடுத்ததும் தெரிந்த கதைகள்.

புதிய கதை 'கல்கி ஆசிரமங்கள் ஊடாக தொடர்கிறதா?' என்று சந்தேகிப்பது நியாயம்தானே.

தங்கள்மீது அபாண்டமாக பழி சொல்வதை கண்டித்து இந்தியா முழுக்க கல்கி சாமியாரின் பெண் சன்னியாசிகள் உண்ணாவிரதம் இருக்கப்போகிறார்களாம். அதுகூட கல்கி ஆசிரமத்துக்கு ஒரு இலவச ஈர்ப்பு விளம்பரம்தான்.

## "பெயரை மட்டும் சொல்ல மாட்டேன்"



யார் இந்த நடிகை என்று கேட்காதீர்கள்! இந்தக் கால் அழகியின் பெயர் சூகி டியாஸ். பெரு நாட்டின் நாடாளுமன்ற உறுப்பினர்.

பெருநாட்டு வாக்காளர்கள் இவர் கவர்ச்சியில் மயங்கியது ஒருபுறமிருக்க, சக நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் இவர்மீது மையல் கொண்டு கையை நீட்டி விட்டாராம். "விடமாட்டேன் அந்த ஆளை! எச்சரிக்கிறேன்! ஆனால் அவர் பெயரை மட்டும் சொல்லமாட்டேன். கட்டைப் பிரம்மச்சாரியாக சொல்லிக்கொண்டு கட்டுமீறி நடக்க முற்படுகிறார்!" என்று சக நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர்மீது குற்றம் சாட்டுகிறார் இந்தக் கால் அழகி.

அந்த சகா தன்னை 'கட்டியணைத்து முத்தமிட முற்பட்ட'தாகவும் இவர் சொல்லியிருக்கிறார்.

ரோய்டர் செய்தி நிறுவனத்துக்கு பேட்டி கொடுத்தபோது இவர் கொடுத்த போஸ்தான் இது.

இப்போதெல்லாம் இவரைக் கண்டால் பெரு நாட்டு அரசியல்வாதிகள் எட்ட நின்றுதான் பேசுகிறார்களாம். அப்படி ஒரு மரியாதை!

## மர்லின் உடைக்கு மவுசு!



மர்லின் மன்றோ-ஹொலிவூட் பட உலக கனவுக் கன்னி. அமெரிக்க ஜனாதிபதி கென்னடியையே ஆட்டிப் படைத்த அழகு சுந்தரி. மர்லின் மறைந்து விட்டார். ஆனால் இன்னமும் மர்லினை மறக்காத ஜொள்ளர்கள் உலகெங்கும் இருக்கிறார்கள். அந்த ஜொள்ளர்களில் பணக்கார ஜொள்ளர் ஒருவர் மர்லினின் இரவு உடையொன்றை வாங்கியிருக்கிறார்.

அமெரிக்காவில் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் உள்ள பிரபலமான ஏலக்கடையான கிறிஸ்டியில் அவர் அந்த இரவு உடையை வாங்கினார். கொடுத்த விலையைக் கேட்டால் தலை கிறுகிறுக்கும்; 35 இலட்சத்து இருபதாயிரம் ரூபாய்கள்! இந்த இரவு உடையை 'ஹவ் டு மேரி எ மில்லியனர்' என்ற படத்தில் மர்லின் அணிந்து நடித்தாராம்.

சரி, இரவு உடையை வாங்கி என்ன செய்யப்போகிறார்? யாருக்குத் தெரியும்.

## பின்னிரவில் போடலாம்!



விளம்பரங்கள் விதம் விதமாக செய்யப்படும் காலம் இது. நம் நாட்டிலும் தொலைக்காட்சி அலை வரிசைகளில் கவர்ச்சியை சற்று மிகையாகப் பூசிய விளம்பரங்கள் வரத் தொடங்கி விட்டன.

சமீபத்தில் இலண்டனில் ஒரு விளம்பரம் சர்ச்சையைக் கிளப்பியிருக்கிறது: அது ஒரு 'செண்ட்' விளம் பரம்.

குறிப்பிட்ட 'செண்ட்'டின் வாசனையை நுகர்ந்ததும் ஆண்களின் ஆண்மை சிலிர்த்துக் கொள்வதுபோல காட்டியிருக்கிறார்கள்.

விளம்பரப் படத்தில் அந்தக் காட்சியில் நிர்வாண ஆண் ஒருவர் சட்டென்று தோன்றி மறைகிறார்.

விளம்பரத்தைப் பார்த்த பலர் கொந்தளித்தனராம். கோபத்தில்தான் கொந்தளிப்பு. குறிப்பிட்ட விளம்பரத்தை தடை செய்யக்கோரி நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்கப்பட்டது.

தொலைக்காட்சி விளம்பரங்களை கட்டுப்படுத்தும் அமைப்பு, குறிப்பிட்ட விளம்பரப் படத்தை பார்த்தது. "பரவாயில்லை, ஆனால் பின்னிரவில் மட்டும் ஒளிபரப்பலாம்" என்று அனுமதி கொடுத்துவிட்டதாம்.

'பின்னிரவு நேரத்தில் செண்டே தேவைப்படாதே' என்கிறார்களாம் குறும்புக்கார இலண்டன் வாசிகள்.




படிப்பகம்

www.padippakam.com

தகவல் பெட்டி

## சூப்பர் ஸ்டைலுதான்



← முடி அலங்காரத்திலும் காலத்துக்கு காலம் பாஷன்கள் மாறிக்கொண்டே இருக்கின்றன. பெண்கள் மட்டுமல்ல, ஆண்களும் முடி அலங்காரத்தில் சளைத்தவர்கள் அல்ல. தற்போது நம்நாட்டில் ஆண்களின் முடி அலங்காரத்தில் புதிய பாஷன் என்ன தெரியுமோ? இரு புறமும் கோதி எடுத்துவிட்டு தலையின் மத்தியில் மட்டும் கத்தை கத்தையாக முடி குவிந்திருப்பது தான் பாஷன். சற்றுக் காலத்தின் முன்னர் ஆண்களும் நீளமாக வளர்த்து வாரிக்கட்டிக்கொண்டு திரிந்தது பாஷனாக இருந்தது. பின்னால் நின்று பார்த்து அவர்களை பெண்கள் என்று நினைத்து கிண்டலடிக்க, அவர்கள் திரும்பி மீசையோடு முறைக்க அசடு வழிந்த அனுபவங்களும் சிலருக்கு இருக்கலாம்.

சரி, அதெல்லாம் போகட்டும். படத்தில் பாருங்கள் புதுமையான முடி அலங்காரம். இவருக்கு வேறு வேலை இல்லை என்று நினைத்து விடாதீர்கள். டென்னிஸ் உட்பட பல விளையாட்டுகளில் கைதேர்ந்த வீரர் இவர். பெயர் வீனஸ் வில்லியம்ஸ். அமெரிக்காவைச் சேர்ந்தவர். பிரஞ்ச் டென்னிஸ் போட்டியில் இந்த முடி அலங்காரத்தோடு இவர் அசத்தியதால், இப்போது விளையாட்டு வீரர்கள் பலரும், அவர்களது ரசிகர்களும் தங்கள் முடிகளையும் இப்படித்தான் அலங்காரம் செய்யத் தொடங்கியுள்ளனர். படுவேகமாக ஜுரம்போல பரவி வருகிறது இந்தப் பாஷன். விரைவில் நம் நாட்டிலும் இவ்வாறான முடி அழகர்களை காணும் பாக்யம் கிட்டக்கூடும். ■



## மிக மிகச் சின்னது

↑ விரல் நக அளவுக்குள் அடங்கக்கூடிய பைபிள் இது. 'செக்' மொழியில் எழுதப்பட்டது. இதன் உயரம் ஆக ஏழு மில்லி மீட்டர். அகலம் மூன்று மில்லி மீட்டர். (இரு புறமும் விரிக்கப்பட்ட நிலையில் இருப்பதாலும், குளோசப்பாக எடுக்கப்பட்டதாலும் சற்றுப் பெரிதுபோலக் காணப்படுகிறது.)

இந்தச் சின்னம் சிறு பைபிள் செக் குடிமகன் ஒருவரால் அவரது வீட்டுப் பரணில் இருந்து கண்டெடுக்கப்பட்டதாம். அவரது முதாதையர் காலத்தைச் சேர்ந்ததாம். ■




## சுற்றி வளைப்பு!

← மொசு மொசுவென்று உடம்பெங்கும் முடியுடன் காட்சிதரும் இந்த மிருகத்தின் பெயர் பிகுணா. ஒட்டக இனத்தைச் சேர்ந்தது. பெரு நாட்டில் இந்த மிருகம் அதிகமாகக் காணப்படுகிறது.

இதன் உரோமத்துக்கு ஏகப்பட்ட மவுசு. அதனால் இவற்றை வேட்டையாடவும் போட்டா போட்டி. ஆனாலும் சுலபமாக இவற்றைப் பிடித்துவிட முடியாது. கடல் மட்டத்தில் இருந்து 1300 அடி உயரத்தில் உள்ள காட்டு மலைப்பகுதியில்தான் இவை வாழ்கின்றன.

இவற்றைப் பிடிக்க கூட்டமாகச் செல்லும் கிராமமக்கள் தங்கள் கைகளைக் கோர்த்து வட்டமான மனிதச் சங்கிலி அமைத்து இவற்றை வளைத்துப் பிடிக்கிறார்கள். மனிதனின் ஆசைக்காக இரையாகி அரிதாகி வருகின்றன இந்த விலங்குகள். ■

## ஆஹா வந்திடுச்சு




↑ ஆடிய களைப்பு மனிதருக்கு மட்டுமா என்ன? இந்தியாவில் கல்கத்தா தெருக்களில் வித்தை காட்டும் குரங்கார், களைப்புத்தீர கண்ணாடிக் குவளையில் தேநீர் அருந்துகிறார். சுவையான காட்சிதானே! ■

## புதுமையான சவாரி

எல்லோரும் தலை நேராக இருக்கத் ↓ தான் சைக்கிள் ஓட்டுவார்கள். இவர் மட்டும் வித்தியாசமான ஆள். தலைகீழாக சைக்கிள் ஓட்டி சாதனை செய்திருக்கிறார்.

ஜெர்மன் நாட்டைச் சேர்ந்த இவரது பெயர் டாம் ஆலன். சைக்கிளின்மீது அரை வட்ட வில் ஒன்றை இணைத்துக் கொண்டு தலை கீழாக செலுத்தி அதிசயிக்க வைத்திருக்கிறார். பயிற்சியும் முயற்சியும் கைகொடுத்ததால் புதுமை படைத்திருக்கிறார் இந்த மனிதர். அதற்காக நீங்கள் யாரும் முயன்றுபார்த்து கவிழ்ந்து போகவேண்டாம். ■



## இருவர்



← ஒட்டிப் பிறக்கும் இரட்டையர்களை 'சயாமிஸ்' இரட்டையர் என்றழைப்பர். மனிதரில் மட்டும்தான் 'சயாமிஸ்' தோன்ற முடியுமா? இதோ போட்டிக்கு வந்துவிட்டன இரண்டு பசுக் கன்றுகள்.

உகண்டா-அதுதான் இடி அமீன் ஆட்சியில் குலை நடுங்கிய நாடு- அந்த நாட்டில்தான் இந்த இரட்டைக் கன்றுகள் பிறந்துள்ளன. ஒனாருகினா என்னும் விவசாயியின் பசுதான் இந்த இரட்டைக் கன்றுகளை ஈன்றது. தலைகள் ஒட்டிப் பிறந்தன. அதனால் முன்புறமாகவோ, பின்புறமாகவோ நடந்து செல்ல முடியாது. பக்கவாட்டில்தான் இவை நடக்க வேண்டும். பிறந்த உடன் இறந்துவிடும் என்று நம்பினார்கள். ஆனாலும் இரு கன்றுகளும் திடகாத்திரமாக வளர்ந்துவருகின்றன. தலைகள் ஒட்டியபடி இருக்க கொம்புகள்கூட எடுப்பாக வளர்ந்துவிட்டன.

நல்லகாலம் இடி அமீன் இல்லை. இருந்திருந்தால் 'கொண்டுவா கொன்றுவா அதிசய பசுக்கறி வேண்டும்' என்று ஆணையிட்டிருப்பார் மனிதர். ■


படிப்பகம்

www.padippakam.com



# கை குலுக்கலில் நடிகையின் தந்திரம்!

மித்ரவாசு

## சீறி விழுந்தார் வாரிசு நடிகை!

மும்பையிலிருந்து வந்த குண்டு 'பு' நடிகைக்கு ஆரம்பத்தில் தமிழில் அவ்வளவாகப் படங்கள் வரவில்லை. அதனால் ஒரு யுக்தியை கையாண்டார். பொது இடங்களில் நடிகர்களை, சினிமாப் புள்ளிகளைச் சந்தித்தால் அவர்களிடம் கைகொடுத்து குலுக்கும்போது அவர்களது உள்ளங்கையில் சுரண்டுவார்.

'நான் எதற்கும் தயார்' என்பதே அந்த சுரண்டலுக்கு அர்த்தம். அந்த சுரண்டலில் ஒரு இயக்குநரும், ஏழு முன்னணி நடிகர்களில் ஒருவரும் பலியாகினர்.

அந்த இயக்குநரின் படங்களில் தொடர்ந்து நடித்துவந்தார் நடிகை. நடிகரின் படங்களிலும்தான்.

அந்த இயக்குநரின் படங்களில் நடிகையும் நடிகரும் சேர்ந்து நடித்தபோது ஒரே சமயத்தில் இயக்குநரையும், நடிகரையும் சமாளித்த விதமே தனி. அப்புறம் நடிகருக்கு விட்டுக் கொடுத்து விலகிப்போனார் அந்த இயக்குநர். (அந்த இயக்குநரின் பெயரை மாற்றிப்போட்டால் சுவாசம் என்பதை நெருங்கும்)

நடிகரோ நடிகையிடம் பைத்தியமானார். அதன் விளைவு; நடிகரை தன் ஆளுமைக்குள் கொண்டுவந்தார் நடிகை. நடிகர் ஏற்கனவே மணமானவர் என்றாலும் நடிகையின் வரவுக்குப் பின்னர் வீட்டைப் புறக்கணித்தார்.

நடிகைக்கு தனிவீடு வாங்கிக் கொடுத்தார். நடிகையின் வீடே கதியென்று கிடந்தார்.

ஒரு சமயம் நடிகையின் வீட்டில் வருமானவரி இலாகாவினால் ரெய்டு நடந்தபோது நடிகரும் அங்கே இருந்தார். "நீங்கள் சற்று வாசலில் இருங்கள். எங்கள் சோதனை முடிந்தபின் நீங்கள் வீட்டுக்குள் போகலாம்" என்று அந்த அதிகாரிகள் நடிகரிடம் கேட்டுக்கொள்ள, நடிகர் லுங்கியோடு வாசலில் தவம் கிடந்தார்.

ஒருநாள் நடிகர், நடிகையிடம் "இன்று என் மனைவியைப் பார்க்கப்போகிறேன். நாளை இங்கே வந்துவிடுகிறேன்" என்று கூறியிருக்கிறார்.

நடிகை கோபமுற்று, "நான் உங்கள் மனைவி இல்லையா? நீங்க கட்டின தாலியை (மறைந்திருந்ததை எடுத்துக்காண்பித்து) எத்தனை நாளைக்கு மறைப்பது? உங்களுக்கு அவள் வேணுமா, நான் வேணுமா? என்று முடிவு பண்ணுங்க" என்று ஆர்ப்பாட்டம் செய்தார்.

நடிகர் சமாதானம் செய்ய முயல, நடிகை அவரது சட்டையைப் பிடித்து இழுத்து பிராண்டிக் கிழித்தார். அதேவேகத்தில் நடிகரின் கார் சாவியையும் பறித்தார். "இப்ப எங்கே வேணுமின்னாலும் போங்க" என்று அறைக்குள் சென்று கதவை மூடிக்கொண்டார்.

நடிகர் தயங்கித் தயங்கி வெளியே வந்தார். அப்போது மோட்டார் சைக்கிள் ஒன்று அருகில்வந்து நின்றது. அதிலிருந்தவர் இரவு ரோந்துக்கு வந்த பொலிஸ் இன்ஸ்பெக்டர்.

கிழிந்த சட்டையோடு நின்ற நடிகரைப் பார்த்து அதிர்ந்துபோனார். ஒரு ஒட்டோவை ஏற்பாடு செய்து நடிகரை அவரது வீட்டுக்கு அனுப்பிவைத்தார்.

நடிகையின் அடாவடி தாங்காத நடிகர் மஹா பிரபோ என்னைக் காப்பாற்று என இறைவனை வேண்டியபடி நடிகையைவிட்டு விலகினார்.

### பகலில் தூக்கம்

கதாசிரியர், இயக்குநர், நடிகர் என்று பல கலைகள் கைவர 'பாக்யம்' பெற்ற 'ராஜா'வாகத் திகழ்பவர் அவர்.

அவருக்கு 'இரவினில் ஆட்டம் பகலினில் தூக்கம்' என்பது பொதுவான விஷயம்.

புகழும், வெற்றியும், பணமும் சேர டல்லாகிவிட்டார். பெண்கள் விஷயத்தில் மட்டும் சுறுசுறுப்பு.

பெரும்பாலும் வெளிப்புறப் படப்பிடிப்பு நடத்துவார். அவரது செயற்பாடுகளுக்கு அதுதான் வசதி. கதாநாயகியர் சரிப்பட்டு வரவில்லையென்றால் துணை நடிகையர் வசப்பட்டுவருவார்களே.

ஒரு படத்தின் படப்பிடிப்பை மேட்டூர் அருகே நடத்தினார். அதில் நடிகருக்கு ஜோடி ஒரு குள்ளமான நடிகை. (நடிகை இன்று உயரமான நடிகர் ஒருவரை மணந்துள்ளார்)

நடிகையை தனிமையில் சந்திக்க நேரம் அமையவில்லை. தவித்துப்போனார். ஒருநாள் 'வெளியே சாப்பிட்டுவருகிறோம்' என்று தன் உதவியாளரோடு நகர்ந்தார். ஒரு மணிநேரமாகியும் அவர் திரும்பவில்லை. யூனிட் காத்திருந்தது. அப்போதுதான் ஒரு உண்மை புரிந்தது. ஒப்பனை சரிசெய்து வருவதாகச் சென்ற குள்ளமான நடிகையையும் காணவில்லை.

பிற்பகல் கழிந்த பின்னரே இருவரும் திரும்பி வந்தனர்.

நடிகையும், நடிகரும் தனிமையில் சந்திக்க மேட்டூர் மலைப்பகுதியில் இடம் தேடியதில் நேரம் கழிந்திருக்கிறது.

### வாரிசு நடிகை

இதே நடிகரது இன்னொரு படத்தில் ஜோடியாக நடித்தவர் ஒரு வாரிசு நடிகை. இந்த நடிகைதான் பின்னர் தாயை எதிர்த்து வேறொரு மத வாலிபரை மணந்து ஒரு குழந்தைக்குத் தாயாகியவர். இப்போது தாயிடமே திரும்பியிருப்பவர்.

வாரிசு நடிகை கொஞ்சம் சிக்கலானவர். தான் விரும்பினாலே ஒழிய யாரிடமும் நெருங்காதவர். அதனால் நடிகர் நெருங்கச் சிரமப்பட்டார்.

எப்படியோ ஒருநாள் உதவியாளர் மூலம் நடிகையிடம் தன் விருப்பத்தை வெளியிட்டார். "அதற்கு வேறு ஆளைப்பார், நான் நடிக்கத்தான் வந்திருக்கிறேன். வேறு எதற்குமல்ல என்று போய்ச் சொல்!" என்று கோபமான குரலில் கூறிவிட்டார் நடிகை. நடிகருக்கு அவமானமாகிப்போய்விட்டது.

நடிகையை பழிவாங்க எத்தனையோ வழிகளில் முயன்றார். கடைசிவரை நடிகையிடம் எதுவும் பலிக்கவில்லை. அந்த- பாக்யமும் ராஜாவுக்கு கிடைக்கவில்லை



ராம்கி-சங்கவி
படம்: ஆஹா என்ன பொருத்தம்

# சினிவிசிட்

### வருகிறான் 'ரட்சகன்'

ஜூலை 31ம் திகதி 'ரட்சகன்' படத்தை திரையிடத் திட்டமிட்டுள்ளார் தயாரிப்பாளர் குஞ்சுமோன். நாகார்ஜுன் சுஷ்மிதாசென், எஸ்.பி.பாலசுப்பிரமணியம், வடிவேலு, ரகுவரன் ஆகியோரின் கூட்டணி அசத்தியிருக்கிறதாம்.

குஞ்சுமோனின் முந்தைய தயாரிப்புக்களான 'காதலன்', 'ஜென்டில் மேன்', 'காதல் தேசம்' படங்களைவிட 'ரட்சகன்' பிரமாண்டம். இந்தியாவிலேயே அதிக பொருட்செலவில் தயாரான படம் இதுதான் என்கிறார் மீசைக்கார குஞ்சுமோன். ஜூலை 31 ராசியான நாளாம். அன்றுதான் தமிழ்நாட்டில் 'ஜென்டில்மேன்' படமும் வெளியானதாம்.

முதன் முதலில் ஆங்கிலத்தில் 'டப்' செய்யப்படும் இந்தியப் படமும் ரட்சகன்தான்.

இசை; ஏ.ஆர்.ரகுமான். பாடல்கள்; வாலி, வைரமுத்து. வசனம்; கிரேஸி மோகன். நடனம் ராஜு சுந்தரம் (பிரபுதேவாவின் சகோதரர்). இயக்கம் பிரவீன்காந்தி. இவர் புதுமுகம். ஏற்கனவே பவித்ரன், ஷங்கர் போன்ற பிரபல இயக்குநர்களையும் அறிமுகம் செய்தவர் குஞ்சுமோன் தான்.

### உதட்டில் சிவப்பு

சிவாஜி-சரோஜாதேவி இணைந்து நடித்துள்ள படம் 'ஒன்ஸ்மோர்'. இப்படப்பிடிப்பில் நடைபெற்ற ஒரு சுவையான சம்பவம் இது;

சிவாஜிக்கும் சரோஜாதேவிக்கும் அறுபதாம் கல்யாணம் நடப்பதாக காட்சி படமானது. அப்போது சரோஜாதேவியின் உதட்டில் சிவப்புக் குறைவாக இருந்தது. அதனைப் பார்த்துவிட்டார் சிவாஜி. உடனே சிவாஜியே 'லிப்ஸ்டிக்' எடுத்து வந்து சரோஜாதேவியின் உதட்டில் பூசிவிட்டார். சரோஜாதேவி வெட்கத்துடன் 'ஐயைய்யோ' என்று கண்மூடிச் சிரித்தார். இதைப் பார்த்து யூனிட்டே கலகலத்தது. இந்தக் காட்சியையும் அப்படியே படமாக்கிவிட்டாராம் எஸ்.ஏ.சந்திரசேகர்.

'ஒன்ஸ்மோர்' ஜூலை 4ம் திகதி தமிழகத்தின் திரையரங்குகளுக்கு வந்துவிட்டது.



ரஸிகா
படம்: கபடி கபடி

### செத்தால் வெற்றி

தமிழ் சினிமாவில் செண்டிமெண்ட்டுக்குக் குறைச்சலே இல்லை. வேடிக்கையான செண்டிமெண்டுகள் விபரீதமான செண்டிமெண்டுகள் என்று பல ரகமாக இருக்கின்றன.

மீனா பற்றிய 'செண்டிமென்ட்' என்ன தெரியுமா? மீனா எந்தப் படத்தில் இறந்துவிடுவதுபோல நடித்தாரோ அந்தப் படமெல்லாம் சூப்பர் ஹிட். 'ராசாவின் மனசிலே' 'பாரதி கண்ணம்மா' இரண்டிலும் மீனா சாகிறார். இரண்டு படங்களுமே சூப்பர் ஹிட். இதனால் 'பாசமுள்ள பாண்டியரே' படத்திலும் மீனாவை சாகடித்தார்கள். 'செண்டிமெண்ட்' கைகொடுக்கவில்லை. படம் படுதோல்வி.

மீனா பற்றி மற்றொரு செய்தி. 'அவ்வை சண்முகி' படத்தில் ஒரு குழந்தைக்குத் தாயாக நடித்தார். இப்போது விஜயகாந்த்துடன் 'உளவுத்துறை' படத்திலும் ஐந்துவயதுக் குழந்தைக்கு தாயாக நடிக்கிறார். இப்படியே போனால் அம்மா நடிகையாக்கிவிடுவார்களோ என்று பயப்படுகிறார் மீனா.

### முதல்படம் தாமதம்

'பூஞ்சோலை' படத்தில் கங்கை அமரனால் அறிமுகமானவர் ரஸிகா. கங்கை அமரனின் மகன் வெங்கட் பிரபுவுடன் ஜோடியாக நடித்தார். அந்தப்படம் இன்னமும் வெளிவரவில்லை. என்ன காரணமோ இழுத்தடிக்கிறார்கள்.

மலையாளத்தில் ரஸிகா நடித்த 'கங்காத்ரி' என்னும் படம் நன்றாக ஒடுகிறது. தமிழில் பாண்டியராஜனுடன் 'கபடி கபடி' படத்தில் ஜோடியாக நடித்துக் கொண்டிருக்கிறார். எப்படியாவது முன்னுக்கு வரத்துடிக்கும் ரஸிகாவை தட்டிக்கொடுத்து ஊக்குவிக்கிறாராம் பாண்டியராஜன்.

### தேவதை

நாசர் இயக்கிய 'தேவதை' படம் திரைக்கு வந்துவிட்டது. படத்தின் வசூலை துடிக்கும் இதயத்துடன் கவனித்துக் கொண்டிருக்கிறார் நாசர்.

'அவதாரம்' படம்போல இல்லாமல் 'தேவதை' நாசருக்கு கைகொடுக்கும் என்கிறார்கள். படமும் பிரமாண்டமாக எடுக்கப்பட்டிருக்கிறது.

### மீன்பிரியை

தேவயாணி சரியான மீன் பிரியையாம். மீன் குழம்பு, மீன் வறுவல், மீன் குருமா என்றால் மூக்குமுட்ட பிடிப்பாராம். மீன் வகை எதுவும் இல்லாவிட்டால் உள்ளே இறங்காதாம் சாப்பாடு.

நெருங்கி நடிக்கும் நடிகர்களின் பலத்த வேண்டுகோள் காரணமாக மீன் சாப்பிடுவதை தவிர்க்கிறாராம். படப்பிடிப்பில் மட்டும்தான்.

### விஜய் முன்னணியில்

'பூவே உனக்காக', 'லவ்டுடே' படங்களின் வெற்றியா முன்னணிக்கு வந்து கொண்டிருக்கிறார் விஜய். 'ஒன்ஸ்மோ படமும் ஹிட்டானால் அடுத்து 'நேருக்கு நேர்'. அது ஓ.கேயா. விஜயை கையில் பிடிக்கவே முடியாது.

அஜித்குமாரின் சறுக்க விஜய்க்கு கைகொடுத்திருக்கிற அப்பாஸ் பிரபலமானாலு அவரது அடுத்த பட வந்தால் தா மார்க்கெட் நி வரம் தெ யும்



ரகுமான்-சுபாஸ்ரீ
படம்: போர்முழக்கம்



படிப்பகம்

www.padippakam.com

## …பரிசு பட்ட பாடு

தமிழ்நாட்டில் திருநெல்வேலி என்னும் …த்தில் இசை நிகழ்ச்சி நடத்தினார் …கை அமரன்.

"நடிகர்களில் யாரைப் பிடிக்கும்?" …று ரசிக மகாஜனங்களைக் கேட்க, …திக குரல்கள் 'ரஜினி' என்றனவாம்.

நடிகைகளில் எல்லோர் பெயரையும் …ான்னாராம் கங்கை அமரன். 'ரம்பா' …று சொன்னதும் பொடிசில் இருந்து …ரிசுவரை எழுந்தே நின்றுவிட்டனராம். … பெரிசு; 'காற்றோட்டமான நடிகை …பா வாழ்க' என்று கூச்சலிட்டாராம். …ந்தம்மாவுக்கு மட்டும் காத்து …கிருந்து அடிக்குதோ? எல்லாம் …க்கும்போது நாமளும்கூட பறந்துட …ம்.' என்று சொல்லியிருக்கிறார் …கை அமரன்.

## ஜெயராமுடன் மீனா-ஹீரா

'கோகுலம்' படத்தின்பின்னர் தமிழ்ப் பட உலகிலும் காலூன்றியவர் ஜெயராம். இப்போதும் மலையாளப் படவுலகில் ஜெயராம் படங்களுக்கு மவுசுதான்.

பிரபு-குஷ்பு உறவு முறிந்தபின்னர் குஷ்புவுடன் இணைத்துப் பேசப்பட்டவர் ஜெயராம். இருவரும் இணைந்து பல படங்களிலும் நடித்தனர். பின்னர் மெல்ல இந்த இணை பிரிந்தது. இப்போது பி.வாசு இயக்கும் 'பத்தினி' படத்தில் ஜெயராம்-குஷ்பு ஜோடி சேர்ந்திருக்கிறார்கள்.

இடையில் சில காலம் மலையாளத்தில் தீவிர கவனம் செலுத்திய ஜெயராம் தற்போது மீண்டும் தமிழில் பிஸியாகியுள்ளார்.

தெலுங்கில் ஜெகபதிபாபு, ரஞ்சிதா நடித்து மாபெரும் வெற்றிபெற்ற படம் 'மாவிச்சி குரு'. இதனை தமிழில் தயாரிக்கிறார்கள். பெயர் இன்னமும் சூட்டவில்லை.

இப்படத்தில் ஜெயராம் கதாநாயகன். கதாநாயகிகள் இருவர். ஒருவர் மீனா. இன்னொருவர் ஹீரா. மணிவண்ணன், வடிவேலு, விவேக், ஜெமினி கணேசன், சௌகார் ஜானகி ஆகியோரும் நடிக்கின்றனர். புதிய இயக்குநராக அறிமுகமாகிறார் ரமேஷ் கண்ணா. இவர் கே.எஸ். ரவிக்குமாரின் உதவியாளர். இசை: இளையராஜா.

நகைச்சுவைப் பாத்திரங்களில் நடிப்பது என்றால் ஜெயராமுக்கு கொள்ளை ஆசை. இதுவும் நகைச்சுவை கலந்த குடும்பப் படம்தானாம்.

## சிம்ரான் சொன்ன இரகசியம்

நடிகைகள் பற்றித்தான் கிசு கிசுக்கள் வருவதுண்டு. ஒரு நடிகையே கிசு கிசு சொன்னால் எப்படியிருக்கும்? சொல்லியிருக்கிறார் ஒரு நடிகை. அவர் சிம்ரான். அவர் சொன்ன கிசு கிசு இதுதான்:

நிறையத் தமிழ்ப் படங்களில் ஹீரோயினாக நடித்திருப்பவர் அந்த நடிகை. அவருடைய கணவரும் பெரிய ஹீரோதான். அவர்களுக்கு ஒரு 'சுட்டிக் குழந்தை' பிறந்தது. ஆனால் கணவர் இப்போது பாதை மாறுகிறாராம். மும்பாய் நாயகிகளின் மடியில் தவழுகிறாராம். அந்த நடிகை ரொம்ப வருத்தப்பட்டார். ஒரு நடிகரை கல்யாணம் செய்து கொள்ளக்கூடாது என்று நான் முடிவு செய்துவிட்டேன்" என்றாராம் சிம்ரான்.

உடனே அந்த நிருபர் சிம்ரானிடம் "அந்த நடிகை ஏன் உங்களிடம் தன் அந்த ரங்க விஷயத்தைச் சொன்னார்?" என்று கேட்டாராம்.


அதற்கு சிம்ரான் சொன்ன பதில்: "நடிகையின் கணவரோடு புதுப்படம் ஒன்றில் நடிக்க நான் ஒப்பந்தமாகியிருக்கிறேன். அவர் எங்கே என்னோடும் ஃப்ரண்ஷிப் வைத்துக்கொண்டு விடுவாரோ என்ற பயத்தில்தான் என்னிடம் அதனைச் சொன்னார்."

சிம்ரான் சொல்லும் நடிகை அமலமானவர். அவர் கணவர் தெலுங்கில் பெரிய ஹீரோ.

## ரஜினி படம்

'அருணாச்சலம்' படத்தில் இரண்டு பாடல்களை வெளிநாட்டில் எடுக்க திட்டமிட்டிருந்தாராம் ரஜினி. முடியாமல் போய்விட்டது.

தனது அடுத்த படத்தில் வெளிநாட்டில் பாடல்காட்சிகள், பிரமாண்ட அரங்குகள் என்று தூள்கிளப்ப உத்தேசித்துள்ளாராம்.



அரவிந்தசாமி
படம்: சாத் ரங்கே சப்னே (இந்தி)

## குஷ்புவுடன் மோதலா?

### சுந்தர் சொல்லும் விளக்கம்

இயக்குநர் சி.சுந்தருக்கும் குஷ்புவுக்கும் இடையே விரிசல் என்பது படவுலகில் பரபரப்பாகப் பேசப்பட்ட செய்தி. விரிசலுக்கு காரணம் ரம்பா.

ரம்பாவுக்கு இனிமேல் வாய்ப்பளிப்பதில்லை என்று சுந்தர் கொடுத்த உத்தரவாதத்தால் சுந்தருடன் சமரசமாகிவிட்டார் குஷ்பு என்பது லேட்டஸ்ட் தகவல்.

ஆனால் சுந்தரோ அதையெல்லாம் மறுத்திருக்கிறார். எல்லாமே கட்டுக்கதை. பத்திரிகைகள் செய்த வேலை என்று பேட்டியளித்திருக்கிறார்.

'ஜானகிராமன்' படப்பிடிப்பில் ரம்பா விவகாரத்தால் சுந்தருக்கும் நக்மாவுக்கும் இடையே பிரச்சனை எழுந்தது. ரம்பாவுக்கு சுந்தர் முக்கியவத்துவம் கொடுப்பதாக கூறிய நக்மா படப்பிடிப்புக்களுக்கு செல்லாமல் 'கட்' அடித்தார்.

சுந்தர் தனது பேட்டியில் அதனை மறுக்கவில்லை. ஆனால் நக்மாமீதுதான் குற்றம் சாட்டியிருக்கிறார்.

சுந்தர் என்ன சொல்கிறார் கேளுங்கள்;

"'ஜானகிராமன்' படத்தில் இரண்டு கதாநாயகிகள் ஒருவர் நக்மா. இன்னொருவர் ரம்பா. இருவரிடமும் கதையையும், அவரவர் காரெக்டர் பற்றியும் சொல்லித்தான் 'புக்' பண்ணினோம். ரம்பாமேல் தனிப்பட்ட முறையில் என்ன பிரச்சனையோ தெரியவில்லை, 'ரம்பாவுக்கு மட்டும் ஏன் அதிகமான 'க்ளோஸ்-அப்'புகள்? எனக்கு ஏன் இல்லை?' என்று ஆரம்பித்து, நான் வேண்டுமென்றே ரம்பாவுக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பதுபோல பேசுகிறார் நக்மா.

சொல்லப்போனால் படப்பிடிப்பில் நக்மா செய்த இந்தக் கலாட்டாவால்தான் என் தலையும், ரம்பாவின் தலையும் அநாவசியமாக உருளுகிறது" என்கிறார் சி.சுந்தர். ஆக, சுந்தரின் வாக்கு ரம்பாவுக்கே.



முகப்பில்: ஜெயராம், குஷ்பு, ரீவா
படம்: …ராஜாமலரே

### ஹீரா ராசி

சினிமாவில் நடிகை ஹீரா
ஒரு ராசியுண்டாம்.
அவர் ஒட்டி உற
வுக்கு யாருடன் அந்த நடிகர்
யாருடன் ஆடுகிறாரோ இந்தி
வாடுகிறாரோ முதலில்
அம்பேல். சஞ்சய்தத்.
நடிகர் சரத்.
பின்னர் தமிழில் அஜித்.
கடைசியாக பரவிய
இந்த விஷயம் நடிகர்கள்
தால் ஹீராவைக்
பலர் கண்டாலே
பயந்து ஓடு
கிறார்
களாம்.

வினீத்-கீர்த்திரெட்டி
படம்: தேவதை

## 'நீயென்றால் அது நீயல்ல'

பிரபுவும் மலையாள நடிகர் சுரேஸ்கோபியும் முதன்முதலாக இணைந்து நடிக்கும் படம் 'அமைதிப்பூங்கா'. பெயர் சூட்டப்பட்டு நீண்ட காலத்தின் பின்னர் இப்போது படப்பிடிப்புக்கள் நடந்துவருகின்றன.

பிரபுவும்-சுரேஸ்கோபியும் பாடுவதுபோல ஒரு பாடல் காட்சியும் படமாக்கப்பட்டுள்ளது.

"நண்பா நண்பா, நீயே என் நண்பா, நீ என்பது நீயே அல்ல நானே நண்பா.." என்று தொடரும் பாடலுக்கு இருவரும் நடித்தனர்.

இராணுவ பின்னணியில் பிரமாண்டமாக உருவாகிவரும் அமைதிப் பூங்காவை பிரபல மலையாளப்பட இயக்குநர் சிபிமலையில் இயக்க, ராஜீவ் மேனன் ஒளிப்பதிவு செய்கிறார். இசை: வித்யாசாகர். பாடல்கள்: வைரமுத்து. உஜாலா என்ற பெயருடன் மும்பாய் நடிகை அறிமுகமாகிறார். ஹீரா, சரத்பாபு, திலகன், நிழல்கள்ரவி, ரகுவரன், விவேக் ஆகியோரும் உண்டு.



சிவாஜி-விஜய்
படம்: ஒன்ஸ்மோர்

## மினி சினி

* சுப்பர் ஸ்டார் ரஜினி நடித்த 'அண்ணாமலை', 'வீரா','பாட்ஷா' ஆகிய படங்களை இயக்கியுள்ள சுரேஷ் கிருஷ்ணா, முதன் முறையாக தெலுங்கு சுப்பர் ஸ்டார் சிரஞ்சீவி கதாநாயகனாக நடிக்கும் தெலுங்குப் படமொன்றை இயக்கவுள்ளார்.

* 'பொற்காலம்' படத்தில் அஞ்சு அரவிந்த் நடிப்பதாக இருந்த ஊமை வேடத்தில் இப்போது பத்மஸ்ரீ நடித்து வருகிறார். இவர் 'சின்னத்தாய்' படத்தில் விக்னேஷிற்கு ஜோடியாக நடித்தவர்.

* இந்தியில் முன்னணியில் இருக்கும் ஷாருக்கான், 'டுப்ளிக்கேட்' என்ற படத்தில் முதன் முறையாக இரட்டை வேடத்தில் நடிக்கிறார். இதில் ஜூஹி சாவ்லாவும், சோனாலி பான்ட்ரேயும் கதாநாயகிகளாக நடிக்கின்றனர்.

* ராமராஜன் நடிக்கும் படமொன்றின் பெயர் 'கண்ணுபடப் போகுது'. இதே பாணியில் அஜித்குமார் நடிக்கும் படமொன்றிற்குப் பெயர் வைக்கப்பட்டிருக்கிறது. படத்தின் பெயர் என்ன தெரியுமா? 'மழை வரப்போகுது'.

* 'ஆத்மா' படத்திற்குப் பின்னர் பிரதாப் போத்தன், தற்போது படமொன்றைத் தயாரித்து இயக்கத் திட்டமிட்டிருக்கிறார். இந்தப் படத்தில் அப்பாஸ் கதாநாயகனாக நடிப்பார் என்று தெரிகிறது.

* நாகார்ஜுன்-சுஷ்மிதா சென் இணைந்து நடிக்க அதிகப் பொருட்செலவில் கே.டி.குஞ்சுமோன் தயாரிக்கும் 'ரட்சகன்' தெலுங்கில் கிட்டத்தட்ட நாலரைக் கோடி ரூபாய்க்கு விற்பனையாகி இருக்கிறதாம்.

* மனோஜ்குமார் இயக்கும் 'குருபார்வை' படத்தில் கதாநாயகியாக குஷ்பு நடிக்கிறார் என்பது தெரிந்ததே. குஷ்புவுடன் அஞ்சு அரவிந்த், ஈஸ்வரிராவ், இந்து, மதுசர்மா போன்றவர்களும் இப்படத்தில் நடிக்கிறார்கள்.

* சுப்பர் குட் பிலிம்ஸ் தயாரித்த 'சேரன் பாண்டியன்' படம் மூலம் இசையமைப்பாளராக அறிமுகமாகியவர் சௌந்தர்யன். நீண்ட இடைவெளிக்குப்பின் சுப்பர் குட் பிலிம்ஸ் தயாரிக்கும் படமொன்றுக்கு சௌந்தர்யன் இசையமைக்கவுள்ளார்.

* சுவலட்சுமி, ரக்ஷனா ஆகியோரைத் தொடர்ந்து கல்கத்தாவில் இருந்து புதிய கதாநாயகி ஒருவர் 'காதலே நிம்மதி' படத்தில் அறிமுகமாகவுள்ளார். இதில் சூர்யா கதாநாயகனாக நடிக்கிறார்.

* 'மாமியார் வீடு', 'சின்னத்தாய்' ஆகிய படங்களை இயக்கிய கணேஷ்ராஜ் விரைவில் புதிய படமொன்றை இயக்கவுள்ளார். இந்தப்படத்தில் நீண்ட காலத்தின் பின்னர் மோகன் கதாநாயகனாக நடிக்கவிருக்கிறார்.

## வருமானத்தில் கண்

இன்றைய நடிகைகள் முன்னைய நடிகைகள்போல் இல்லை. சம்பாதித்த சொத்தை பொத்தி பொத்திவைக்கப் பழகிக்கொண்டுள்ளார்கள்.

நடிகை ரோஜா பெங்களூரில் காலி நிலம் வாங்கி பின்னர் நல்ல விலைக்கு விற்பனை செய்யும் தொழில் செய்கிறார். செம லாபம் வருகிறதாம். செல்வமணியைக் காதலித்தாலும் வருமானத்துக்காக ஏனைய நடிகர்களோடு படு நெருக்கமாகவே தொடர்ந்து நடிக்கிறார். செல்வமணியும் அனுசரித்துப்போகிறார்.

## மற்றொரு வாரிசு

மணிரத்னம் தயாரிக்க வசந்த் இயக்கும் நேருக்கு நேர் படம் மூலம் சிவகுமாரின் மகன் சூர்யா அறிமுகமாகிறார். மற்றொரு வாரிசையும் மணிரத்னம் விரைவில் தனது புதிய படம் ஒன்றில் அறிமுகம் செய்ய உள்ளாராம். அதுயார் தெரியுமா? பாரதிராஜாவின் ஒரே ஒரு மகன் மனோஜ்.

பாரதிராஜா தன் மகனை மணிரத்னம் மூலம் அறிமுகம் செய்யவே விரும்புகிறார். அதனால் சம்மதம் சொல்லிவிட்டார். படத்தை இயக்கப்போவது 'மின்சாரக் கனவு' இயக்குநர் ராஜீவ் மேனன்.


படிப்பகம்

www.padippakam.com

# அளவான உணவும் அதன் பயனும்

(சென்ற வாரத் தொடர்ச்சி...)

9. குழந்தைகள் எந்தப் பொருளைக் கண்டாலும் வாயில் எடுத்து வைக்கவே ஆசைப்படுவார்கள், வயதாக ஆக- சிறுவர்கள் நிலையில்- கண்ட கண்ட உணவுப் பதார்த்தங்களை உண்ணவே விரும்புவார்கள். குழந்தைகள் ஆசைப்படுகின்றனவே என்று அவர்கள் விரும்பும் பண்டங்களை வாங்கிக்கொடுத்து அவர்கள் உண்ணும் அழகைப் பார்த்து இரசிப்பதை நிறுத்திக் கொள்ளுங்கள். உரிய உணவை உண்ட பின்னரும், அம்மா உண்ணும் போதும், அப்பா உண்ணும் போதும்-குழந்தைகள் வாங்கி உண்ணப் பின்தங்கப்போவதில்லை. அவர்களின் சீரண உறுப்புகள் சிறியவை. மென்மையான உணவை சமிபாடடைய வைக்கவே அவற்றால் முடியும். தொடர்ந்து உணவு ஊட்டும்போது, உண்பதை சீரணிக்க வைக்க முடியாமற் போய்விடும். குழந்தைகளின் உணவுத் தேவையின் அளவை அவர்களால் உணர முடியாது. ஆகவே உரிய கட்டுப்பாட்டை பெற்றார்தான் நிர்ணயிக்க வேண்டும். பசியால் அழும் குழந்தையின் அழுகையை தாய் அறிவாள்; அப்போது மட்டும் உணவு ஊட்டினால் போதும். கால அட்டவணையை ஏற்படுத்தி குழந்தைகளுக்கு உணவு ஊட்டிப் பழக்குங்கள்.

10. உங்கள் ஆரோக்கியத்துக்குக் கெடுதியில்லாத அளவில் கொழுப்பு உணவைச் சேர்த்துக் கொள்ளலாம். தினசரி 300 மில்லிகிராம் கொழுப்புத்தான் அளவானது.

முட்டையில் மஞ்சட் கருவில் 240 மில்லி கிராம் கொழுப்பும், கொழுப்பு நீக்கிய ஒரு கப் பாலில் 12 மில்லிகிராம் கொழுப்பும் ஒரு தேக்கரண்டி வெண்ணையில் 10 மில்லிகிராம் கொழுப்பும் காணப்படுகிறது.

ஒரே நாளில் இம்மூன்றையும் உட்கொண்டாலே மொத்தம் 262 மி.கி.கொழுப்புச் சேர்ந்து விடுகிறது. இவற்றுடன் ஏனைய உணவுகளையும் சேர்த்தால் சாதாரணமாக மேலதிகமான கொழுப்பே சேர்ந்துவிட நேரும்.

தினசரி உட்கொள்ள வேண்டிய 300 மி.கி.கொழுப்புடன் மேலதிகமாக 50 மி.கி. சேர்ந்தாலே ஒரே வருடத்தில் மொத்தம் 18,250 மில்லி கிராம் கொழுப்பு உடலில் சேர்ந்து விடும். ஒவ்வொரு வருடமும் இரத்த நாளங்களில் கொழுப்புச் சேர்ந்து விடும். இதனால்தான் இருதய நோய்ப் பிரச்சனைகள் தோன்றுகின்றன.

இத்தகைய அபாயம் உணவுப் பதார்த்தங்களால் நேரிடும் என்பதை உணர்ந்த பின்னராவது தீங்கு பயக்கும் உணவுப் பழக்கங்களை விட்டொழிக்கலாகாதா?



# கர்ப்பகாலத்தில் கவனிக்கவேண்டியவை!

பிரசவமான பிறகு கிட்டத்தட்ட அரை நாள் அளவுக்கு- அதாவது குறைந்த பட்சம் 12 மணி நேரத்திற்குத் தாய் உடல் அலுங்காமல், புரளாமல் நேராக மல்லாந்து படுத்து இருக்க வேண்டியது மிகவும் முக்கியமான ஒன்றாகும்.

பிரசவமான அன்று தாய்க்கு அதிகமான இரத்தப்போக்கு இருக்கும். அதன் பின்னரும் சில நாட்களுக்கு இரத்தக்கசிவு இருக்கக் கூடும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் தாய் அணிந்திருக்கும் உடையை அடிக்கடி மாற்ற வேண்டும்.

சில பெண்களுக்கு பிரசவத்திற்குப் பின் பத்து நாட்களில் இருந்து ஒரு மாதம் வரை கூட இரத்தக்கசிவு இருக்கும். இந்த விஷயத்தில் ஏதாவது அசாதாரண நிலை தென்படுவதாகத் தோன்றினால் உடனே மருத்துவரின் ஆலோசனையைப் பெற வேண்டும்.

பிரசவத்திற்குப் பிறகு உடனே கெட்டியான உணவு வகைகளைக் கொடுத்து விடக்கூடாது. திரவ ஆகாரம் கொடுப்பது தான் நலம். மருத்துவரின் அனுமதியைப் பெற்று பாண் போன்றவற்றை மிகவும் குறைவாகக் கொடுக்கலாம்.

பிரசவத்திற்குப் பிறகு தாயின் உடலில் ஜீரண சக்தி மிகவும் பலவீனமான நிலையில் இருக்கும். அந்த நிலையில் கடினமான உணவு வகைகளைக் கொடுத்தால் அது அவருடைய உடல் நிலையை மிக மோசமாகச் சீர்கெடச் செய்துவிடும்.

பிரசவமான சில நாட்கள் வரை தாயின் வயிறு எந்த அளவுக்கு மென்மையாகவும், கனமில்லாமலும் இருக்கின்றதோ அந்த அளவுக்குத் தாய்க்கு உடல்நலம் மிகவும் சரியாக இருக்கும். எந்தநோயும் அவரை அண்டாது.



பிரசவத்திற்குப் பிறகு தாய்க்குச் சிறுநீர் தாராளமாக இறங்க வேண்டும். இந்த விஷயத்தில் எந்தச் சிக்கலும் இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

தாயின் உடலுக்குள் பல்வேறு வகையிலும் தேங்கி இருக்கும் அசுத்த நச்சுப் பொருட்கள் சிறுநீர் மூலமாகத்தான் வெளியேற வேண்டும். தவிரவும் இரத்தம் வளம் பெறவும் சுத்தமடையவும் சிறுநீர் தாராளமாகக் கழிவது அவசியம்.

தாய்க்கு மலச்சிக்கல் இல்லாமல் கவனித்துக் கொள்ள வேண்டியது அவசியம்.

பிரசவமான மூன்றாவது நாள் தாய்க்குச் சிறிதளவு ஆமணக்கெண்ணெய் கொடுத்து வருவது பழங்கால வழக்கம். இது அவ்வளவு விரும்பத்தக்கதல்ல என்று நவீன மருத்துவத்துறையினர் கருதுகின்றனர்.

# அழகுபெற சுலப வழிகள்!



**நீர்:**

சுத்தமான நீரையே பருகவேண்டும். அதிகமாகக் கோப்பி, தேனீர் அருந்த வேண்டாம். உடலில் உள்ள கழிவை அகற்ற நீர் அவசியம். அதிக எடையுள்ளவர்கள் வழக்கமான 8 முதல் 10 டம்ளர் நீரைவிட அதிகமான அளவு நீரைப்பருக வேண்டும். சருமத்தின் நிறம், மிருதுவான தன்மை, பளபளப்பு என்பன நாம் சேர்த்துக் கொள்ளும் நீரின் அளவைப் பொறுத்தே இருக்கும்.

**ஓய்வு:**

இது மிக அவசியம். 8 மணிநேரத் தூக்கம் கட்டாயம் வேண்டும். மிகவும் களைத்திருக்கும்போது ஓய்வு, தியானம் உடலைக் களைப்பில் இருந்து மீட்கும்.

**உடற்பயிற்சி:**

20 முதல் 30 நிமிடம் வரை எளிய உடற்பயிற்சிகளைத் தினமும் செய்தல் வேண்டும். நல்ல உடல்கட்டு, உடல் நலம் போன்றவற்றிற்கு தினமும் அரைமணிநேரம் நடப்பது உதவும்.

**மூச்சுப் பயிற்சி:**

அவ்வப்போது ஆழ்ந்து மூச்சு விடுதல், மூச்சுப் பயிற்சி செய்வது உடலுக்குச் சிறந்த பலனைத் தரும். இதனால் உடலும் மூளையும் புத்துணர்ச்சி பெறும்.

**உணவு:**

சரிவிகித உணவே உங்களைப் புத்துணர்ச்சியோடும், அழகோடும் வைத்திருக்கும். பழங்கள், காய்கறிகள், பயறுவகைகள் உணவில் அதிகம் சேர்க்கப்பட வேண்டும்.

**சிரிப்பு:**

கடைசியாக நீங்கள் மனம்விட்டுச் சிரித்தது எப்போது? கவலை, பிரச்சனைகள் மறந்து குழந்தைபோல் மாறினீர்கள் அல்லவா? முகச் சுருக்கம் மாறவும், உடல் நலத்திற்கும் நல்லது. எனவே சிரித்துச் சிரித்து வாழ்க்கையை இனிமையாக்குங்கள்.

**நம்பிக்கை:**

செய்யும் எந்த வேலையிலும் ஒரு பிடிப்பும் பற்றுதலும் தேவை. திட்டமிட்டுச் செயற்பட்டு வந்தால், உடல் நலமும் அழகும் வீண் பாதிப்புக்குள்ளாகாது. நல்லதே நடக்கும் என்ற எண்ணம், மகிழ்ச்சி, எரிச்சல் இல்லாத மனம் யாவும் உடலுக்கு அழகைத் தரும்.

# எது அழகு?



* உயரமான பெண்கள் சேலையைத் தரையில் புரளுமாறு தழைய அணிந்து, முழங்கையைத் தொடுமாறு ஜாக்கெட்டும் அணிந்தால் அழகு.
* உடல் பருமனாக உள்ள பெண்கள் கடுமையான வர்ணச் சேலைகளை அணிந்தால் அழகு.
* கறுப்பு நிறப் பெண்கள் ரோஜா வண்ணம், இள நீலம் ஆகிய கலர்களில் உடை உடுத்தினால் அழகு.
* மாநிறமான பெண்கள் வெண்மையான உடை உடுத்தினால் அழகு.
* நவீன பாணி உடைகளை அணியும் பெண்கள் நேர்கோடுகளைக் கொண்ட உடை உடுத்தினால் அழகு.
* நவீன பாணி உடைகளை முழங்காலுக்கு மேல் அணிவதும், சேலைகளை இடுப்பு அதிகம் தெரியும்படி அணிவதும் அழகல்ல. ஆனால் கவர்ச்சியாக இருக்கும்.

# சமைப்போம் சுவைப்போம்

## ஃபிரைட் இட்லி

(தொகுத்துத் தருவது ~ சுகந்தினி)

**தேவையானவை:**

| | |
|---|---|
| இட்லி | - 10 |
| எண்ணெய் | - தேவையான அளவு |
| பெரிய வெங்காயம் | - 100 கிராம் |
| பச்சை மிளகாய் | - 4 |
| தக்காளி | - 100 கிராம் |
| பூண்டு | - 4 பல் |
| இஞ்சி | - சிறிது |
| சோம்பு | - சிறிது |
| மிளகாய்த் தூள் | - 1 தேக்கரண்டி |
| மல்லித்தூள் | - 1 தேக்கரண்டி |
| மஞ்சள் தூள் | - சிறிது |
| உப்பு | - தேவையான அளவு. |

**செய்முறை:**

முதலில் இட்லியை 4 துண்டுகளாக வெட்டி அதை எண்ணெயில் போட்டு பொன்நிறத்தில் பொரித்து எடுக்கவும். பின்னர் வாணலியில் சிறிது எண்ணெய் ஊற்றி அதில் சோம்பு போடவும். வெங்காயம், பச்சைமிளகாய், தக்காளி இவற்றை நறுக்கி அதனுடன்போட்டு நன்றாக வதங்கியதும் பூண்டு, இஞ்சி அரைத்த விழுதை இதனுடன் சேர்க்கவும்.

பின்பு மிளகாய்த்தூள், மல்லித்தூள், மஞ்சள்தூள், உப்பு ஆகியவைகளை அதனுடன் கலந்து நன்றாக வதங்கியதும் வறுத்த இட்லியை அந்தக் கலவையில் சேர்த்துக் கிளறவும். ஃபிரைட் இட்லி தயார்.

# இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை? திருகோணமலை வாசகிக்கு அதிஷ்டம்!

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்.

**ஏ. இராஜேஸ்வரி**
393, பிரதான வீதி, திருகோணமலை.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக-வாசகியர் சார்பில் வாழ்த்துகிறோம்.

உங்களுக்கும் பரிசு வரும். நம்பிக்கையோடு கூப்பன்களை அனுப்பியுங்கள்.

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

# அடித்தால் மட்டும் போதுமா?

'அடியாதமாடு படியாது' என்பதற்கமைய பிள்ளைகளை அடித்துத்தான் திருத்த வேண்டும் என்ற மனப்பான்மை தொன்று தொட்டே இருந்து வரும் பழக்கம். ஆனால் எந்தப் பிள்ளையையும் "அடித் தடித்தே திருத்தி இருக்கிறோம்!" என்று எந்தப் பெற்றாராவது கூற முடியுமா?

அடம் பிடிப்பது சிறு குழந்தைகளுடன் கூடப் பிறந்த குணம். துடுக்குத் தனமும் குறும்பும் குழந்தைகளின் இணைபிரியாச் சொத்து.



சில பிள்ளைகள் எப்போதும் துடுதுடுப்பாகவே காணப்படுவர். இதனால் தன் தாயாரிடம் எப்போதும் திட்டும் அடியும் வாங்கிக் கொண்டே இருப்பார்கள். ஆனால், எக்குற்றத்துக்காக அக்குழந்தை அடி வாங்குகிறதோ அதே குற்றத்தை மீண்டும் மீண்டும் செய்து கொண்டே இருக்கும். தாயார் அடித்ததும் தேம்பித்தேம்பி அழும் பிள்ளை, சில நிமிடங்களில் தாய் அடித்ததை மறந்து மீண்டும் போய்த் தாயுடனேயே ஒட்டிக் கொள்ளும்.

அடியினால் ஏற்பட்ட வலி மறைந்ததும் எப்படித் தாயிடம் ஒட்டிக் கொள்ளுகிறதோ, அதேபோல, தான் எதற்காக அடி வாங்கியது என்பதையும் மறந்து விடுகிறது.

அடிக்காமல் திட்டாமல், அக்குழந்தைக்கு- அதற்குப் புரியும் விதத்தில்-அன்பாக அறிவுறுத்தினால் மட்டுமே அவற்றைத் திருத்த முடியும்.

சில பிள்ளைகளை, எத்தகைய மார்க்கத்தைக் கடைப்பிடித்தும், அதன் குறும்புகளைக் களைய முடியாது. அவர்களை விட்டுப் பிடிக்க வேண்டும். எப்போதும் அவர்கள்மீது ஒரு கண் இருக்க வேண்டும்.

தவறு விடுவதற்கு இடமளியாமல் பார்த்துக் கொள்வதே மேலானது.

# கண்பார்வை சிறக்க...



பெண்களுக்கு கண்கள் அழகாகவும் கவர்ச்சியாகவும் இருக்கவேண்டும். அழகும் கவர்ச்சியும் இருந்தால் மட்டும் போதுமா? கண் பார்வை சீராக இருக்க வேண்டும்.

பல காரணங்களால் சிலருடைய கண் பார்வையில் கோளாறு ஏற்படுகிறது. வயதானவர்களுக்குத்தான் பார்வையில் சிக்கல் ஏற்படும் என்பதில்லை. சிறியவர்களுக்கே கண்பார்வை குறைவதுண்டு.

பிள்ளைகளுக்கான அன்றாட உணவில் கீரை வகைகளும் இடம் பெறவேண்டும். முக்கியமாக முருங்கைக் கீரையை கால் வேக்காட்டில் வேகவிட்டு சோற்றுடன் சேர்த்து உண்டு வந்தால் கண்பார்வை துலங்கும். பூசணி, அவரை, முள்ளங்கி, வெண்டைக்காய், பீட்ரூட், காரட், புடலங்காய் ஆகியவற்றை அரை வேக்காட்டில் வேக வைத்துச் சாப்பிடவேண்டும்.

பேர்ச்சம்பழம் தினசரி இரண்டாவது சாப்பிடலாம். பப்பாளிப்பழமும் கண்பார்வை துலங்க உதவும். காப்பி, தேனீர் ஆகியவற்றை விடுத்து பால் அல்லது பழரசம் சாப்பிடலாம்.

சீனி சேர்த்து எதையும் சாப்பிடுவதை விடுத்து பதிலாக வெல்லம், பனங்கட்டி ஆகியவற்றைப் பயன்படுத்தலாம். சீனி தயாரிப்பில் சில இரசாயனப் பொருட்கள் சேர்க்கப்படுவதால் சிலருக்கு அதிகம் *ஒத்துக்கொள்வதில்லை. (சீனியால் ஏற்படும் தீங்கு மிக மிகக் குறைந்ததே)

கண்பார்வை கெடாமலிருக்க தினசரி கரட்டைச் சாறு பிழிந்து சாப்பிட்டு வர வேண்டும். இதனை பச்சையாகவும் சாப்பிடலாம். ஈரவெங்காயம் சேர்த்து சம்பல் செய்து சோற்றுடன் சாப்பிடலாம்.

# திடீர் தாக்குதல்

குழந்தைகளானாலும் சரி பெரியவர்களானாலும் சரி வயிற்றோட்டம் திடீரென்று வந்து தாக்கிவிடுகிறது. வயிற்றுப் போக்குக்குப் பல காரணங்கள் இருக்கலாம். எதுவாக இருப்பினும் ஓமம் ஓர் உன்னதமான மருந்து எத்தகைய காரணத்தால் வரும் வயிற்றுப் போக்கையும் ஓமத்தால் குணப்படுத்தலாம்.

ஓமத்தை கழுவி உலர்ந்தபின் வாணலியில் இட்டு வறுக்க வேண்டும். ஓமம் வெடிக்கத் தொடங்கியதும் எடுத்து ஆறிய பின் பொடியாக்கி சர்க்கரை அல்லது பனை வெல்லம் சேர்த்து ஒரு டப்பாவில் எடுத்து வைத்துக் கொள்ளவேண்டும். வயிற்றுப் போக்கு ஏற்பட்டதும் ஒரு தேக்கரண்டி பொடியை தேனில் குழைத்துச் சாப்பிடலாம். வயிற்றுப்போக்கு நின்றுவிடும்.

ஒருவயதான குழந்தைகள் முதல் வயது முதிர்ந்தவர்கள் வரை இதனைப் பாவிக்கலாம். ஆனால் குழந்தைகளுக்கு ஓமப்பொடி சிறிதளவுமட்டும் எடுத்துக்கொண்டால் போதுமானது. தேன் இல்லாவிட்டால் சும்மாவே சாப்பிடலாம்.

வயிற்றில் கடுப்பு ஏற்பட்டு சீதத்துடனும் சிறிதளவு இரத்தத்துடனும் வயிற்றுப்போக்கு இருக்குமானால், வெந்தயத்தை வறுத்தெடுத்து பொடிசெய்து சீனி சேர்த்துச் சாப்பிட வயிற்றோட்டம் நின்றுவிடும்.


# பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

மகளிர் மட்டும் மகளிர் மட்டும்



☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** BZ

பெயர்:.............................

முகவரி:.............................

.............................

கையொப்பம்:.............................

உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 19-07-1997

அனுப்பவேண்டிய முகவரி- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரச வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.



தினமுரசு-அருள் ஜுவலர்ஸ் இணைந்து வழங்கும் தங்கமாலை பரிசுப்போட்டி

தினமுரசு— அருள் ஜீவலர்ஸ்

பரிசுக் கூப்பன் இல 19

❀ முதல் பரிசுக்குரிய அதிஷ்டசாலிக்கு அருள் ஜீவலர்ஸ் வழங்கும் தங்கமாலை பரிசாகக் காத்திருக்கிறது.
❀ 50 அதிஷ்டசாலிகளுக்கு ஆறுதல் பரிசுகள் காத்திருக்கின்றன.
❀ பெண்கள் மட்டுமே பங்குகொள்ள முடியும்.
❀ தொடர்ந்து 25 வாரங்களுக்கு வெளியாகும் பரிசுக் கூப்பன்களை சேகரித்துக் கொள்ளுங்கள். நாம் அனுப்புமாறு கூறும்போது மட்டுமே கூப்பன்களை அனுப்புங்கள்.




படிப்பகம்

www.padippakam.com

# இது உங்களுக்கு!

இது உங்களுக்கான நேரம்!
ஆடலாம்
பாடலாம்
ஆடைகளைக் கழற்றி விட்டு
ஆகாயத்தில் நீங்கள்
கும்மியடித்துப் பார்க்கலாம்....
எல்லாமே செய்யலாம்;
இது உங்களுக்கான நேரம்!
▫▫
மண்ணைக் காட்டி
பொன்னென்கலாம்,
மயிர்களை அள்ளிக் குவித்து
அதை-
மலையென்கலாம்,
மறுக்கவே மாட்டோம்...
மௌனிப்பதைத் தவிர!
ஏனெனில்-
இது உங்களுக்கான நேரம்!
▫▫
எங்களின் ஆகாரங்களை
நீங்கள் நிறுத்தலாம்!
எங்களுக்கான சுவாசங்களை
நீங்களே நிர்ணயிக்கலாம்!
உங்கள் அனுமதியின்றி
எங்கள் மனைவிகளோடு
புணர்வதைக் கூட
உங்களின் சட்டத்தால்
நீங்கள்-
தடை செய்து பார்க்கலாம்....!
▫▫
அப்போதும்
ஒரு தீர்க்கதரிசியின்
கல்லறை போல -நாங்கள்
மௌனமாகவேயிருப்போம்!
ஏனென்றால்
இது உங்களுக்கான நேரம்!
▫▫
நீங்கள்
ஆடலாம்
பாடலாம்
ஆடிக்கொண்டும் பாடலாம்....
அன்றில்
பாடிக்கொண்டும் ஆடலாம்....
எல்லாமே செய்யலாம்;
இது உங்களுக்கான நேரம்!
▫▫
உங்களின் நாய்கள்
உரத்துக் குரைத்தால்....
சலாம் போடுவோம்!
உங்களின் புழுக்கள்
சீறி எழுந்தால்....
மண்டியிடுவோம்!
உங்களின்-
ஓணான்
பல்லி
ஆமை
நண்டு
கரப்பான்
எது வந்தாலும்.....
எழுந்து நிற்போம்....!
எல்லாமே செய்வோம்!
▫▫
ஞாபகம் வைத்திருங்கள்!
இதுவெல்லாம்.....
எங்களுக்கானதொரு நேரம்
வரும்வரை-
மட்டும்.....!!!

யூயெல் மப்றூக்-
அட்டாளைச்சேனை.

**இ(ள)மை**
முதுமையின்
இமை.

**புன்னகை**
பெண்மையின்
பொக்கிஷம்.

**இசை**
பூலோக
பொதுமொழி.

**தாய்ப்பால்**
இலவச
காப்புறுதி.

**மனசாட்சி**
இல்லாத
வரைவிலக்கணம்.

**காமம்**
ஆயுள்
கள்வன்.

**காமசூத்திரம்**
இருட்டில்
படிக்கும் ஏடு.

**அமெரிக்கா**
பிரபஞ்ச
குத்தகைக்காரன்

**இறைவன்**
அட்டாவதானியின்
முற்றுப்புள்ளி.

கவியூரன்

## பசுக்குழிகளைப் பாசத்தால் பூரணப்படுத்து

இமைகளை மூடி
உறங்க முடியாத வேதனைகளின்
உச்சத்திலிருந்து
இந்தக் கவிதை கசிகிறது!
-0-
இந்த நிசப்த
இராத்திரியில்
நீரருவியைப் போல
எனது கண்ணீரும்
உறங்காமல் ஓடுகிறது!
-0-
வாழ்வுக்கு ஒளிவர இருந்த
எல்லாத் திசைகளையும்
இருள் மூடிய நாளில்,
இறப்பை யாசித்து
இறைவனிடம்
மண்டியிட்ட போது
மரணம் வரவில்லை!
-0-
உயிர் வசந்தங்கள்
எனை நோக்கி
வந்து கொண்டிருக்கும் வேளையில்,
மரணம் வந்து-என்
உயிரோடு போராட்டம் புரிகிறது!
இன்னதென்று கூறமுடியாத
சித்திரவதைகளால்
சித்தம் கலங்குகிறது!
-0-
எனது ஜீவன்
வற்றிப் போய்
வாழ்வின் சுடர்
நடுநடுங்கும் நாளில்
உனது வாழ்க்கையின்
தீபத்தை ஒளியூட்டுமாறு
என்னிடம் கேட்கிறாய்:
உன் எதிர்காலத்தின்
ஒளியையும் இருளையும்
என்னிடம் ஒப்படைக்கிறாய்!
-0-
எந்தப் பாடலைக் கொண்டு
உனை நான் வரவேற்பேன்?
எந்தக் கண்ணீர்த்துளியினால்
எனது இயலாமைகளை
உனக்கு
அடையாளப்படுத்திக் காட்டுவேன்?
-0-
இருள் என்னைப்
பின் தொடர்ந்து
வந்து விட முன்னர்
வாழ்க்கையை
அடைந்துவிட வேண்டுமென
ஆசைப்பட்டாலும்
கங்குல் எனை
முந்தி விடுமெனவே
கவலைப்படுகிறேன்!
-0-
உதய காலமொன்றில்
புறப்பட்ட பயணத்தில்
எனை வரவேற்கும்
கோலங்களைக் காணவில்லை!
தரையைப் புண்படுத்தித்
தோண்டி வைத்திருக்கும்
புதைகுழிகளைத் தாண்டியே
பயணிக்க வேண்டியுள்ளது!
-0-
அந்தப் படுகுழிகளை
உனது அன்பினால்
பூரணப்படுத்துவாயானால்
உனை நோக்கி வரும்
எனது பயணம் வெற்றியடையலாம்!

பஹீமா ஜஹான்-தெமடகொல்ல,
மெல்சிரிபுர.

## 'இந்த' மழை வேண்டாம்

உதயம் செத்துவிட்டது;
காலையில் அஸ்தமனம்
எழுகிறது!
**
இருள், காரிருள்,
கார்மேகம் இல்லாமலே
இருள்
டுமீல், டும், டுடும்
இடிச் சத்தம்தான்
ஆனால்,
நிச்சயமாய் முழக்கமில்லை!
**
கூடவே
பளீர், பளீர்
மின்னல்! இல்லை...
இல்லவே இல்லை!
**
வானம் பொழிகிறது;
மழை நீராய் அல்ல
கீழே,
வெள்ளம், பெருவெள்ளம்
ஆனால்,
தண்ணீரல்ல ஓடுவது!
**
வெள்ளம் வடியுமுன்னே
தூறல் தொடங்குகிறது;
நெருப்புப் பூக்களாய்!
திரும்பவும்
டுமீல், டுமீல்
பொழிகிறது வானம்!

ப. ராதா-வவுனியா.

## தேன்கிண்ணம்

## உனது புனர் நிர்மாணத்தில்...

இப்போது நீ..!
தீண்டாத செழுந்திரு!
▫▫
உனது புனர்நிர்மாணத்தில்
எனது பரிநாசம்!
▫▫
வலது கை கொடுத்ததை
இடது கை அறியாத காதல்
தேரோடும்போது,
சக்கரத்தில் படுத்திருந்த கதையாகி
வேரோடு சாய்ந்து
விறகாகி வெந்ததை
காதறிந்தால் கண்பனிக்கும்;
கவியறிந்தால் காவியமாகும்;
▫▫
நீயெறிந்த வேற்புண்
ஆறவில்லையாயினும்,
பெண்ணே....!
வெண்ணிலவை நீ
இப்போதும் சுகிக்கிறாயா?
உன்னால் நிச்சயம்
சுகிக்க முடியும்!

பாலபேராதரன்

# உயிர் வட்டம்



உன் 'மனதின்' முன்
நான் கைகட்டி நிற்பேன்!
வாழ்வு கதறியழும்
கவலை சிரிக்கும்
கற்பனை சிதறும்
கண்கள் குளமாகும்
கவிதைகள் தலைநீட்டும்!

என் மனதிற்கு நீ
பதில் சொல்வாய்!
தென்றல்கள் வீசும்
கவலைகள் பனிகளாகும்
கற்பனைகள் மாலையாகும்
கண்கள் மிதக்கும்
கவிதைகள் மறக்கும்!

இருவரின மனமும்
இறுகிக்கொள்ளும்
உடல்கள் பிணையும்
காவியம் உருவாகும்

கற்பனைகள் பூத்தூவும்
வாழ்வு கனமாகும்
இதயம் கீச்சிடும்

இருவரின் மனமும்
கைகட்டி நிற்கும்!
வாழ்வு சலிக்கும்
உடல்கள் அடங்கும்
உயிர்கள் துவழும்

இனி என்ன செய்ய
யோசனை அழுத்தும்!

ஏன் என்றால்
இனிமேல் வருவது
'எமது'
இலையுதிர் காலமும்
சந்ததியின்
இலைதுளிர் காலமும்!

சுபா வரன்-கண்டி.

# பரிசு மழையில் நனையும் அதிஷ்டசாலிகள்

முரசின் பரிசுமழைப்போட்டிக்கு வந்து குவிந்த கூப்பன் மழையில் மூச்சுத் திணறிப் போனது. அசத்திவிட்டீர்கள் போங்கள். பரிசு பெற்ற அதிஷ்டசாலிகளில் 200 பேரின் பெயர் விபரங்கள் தொடர்ந்து வெளியாகும். முதல் 160 பேரின் பெயர் விபரங்கள் கடந்த வாரங்களில் வெளியாகியிருந்தன. அடுத்த 20 பேரின் பெயர் விபரங்கள் இதோ:

161. திருமதி. ஸீனத் சாலிதீன்
625, பேராதனை வீதி,
கண்டி.
162. எஸ். பாண்டியன்
33/12, எதிரிசிங்க மாவத்தை,
ஆவஎலிய-நுவரெலியா.
163. திருமதி. எல். ஜெயபாலன்
42/10, மருத்துவமனை வீதி,
ஹட்டன்.
164. ரஹீமா நிஸாம்
148, மல்கமன்தெனிய,
அலவத்துகொட.
165. எம். கனகராஜா
பேர்ன்லன்ஸ் எஸ்டேட்,
பூண்டுலோயா.
166. எஸ். திருச்செல்வம்,
மேமலை, 2ம் பிரிவு,
ஸ்பிறிங்வெளி, பதுளை.
167. சி. அனோஜன்
42/2, சுவிசுத்தாராம வீதி,
கொழும்பு-6.
168. எல். ஷெரின் சித்தாரா
72, மோர்ஸா வீதி,
சாய்ந்தமருது-5, கல்முனை.
169. ரஸ்மினா நிஸார்
மருக்கொன கொலனி,
உக்குவளை.
170. எஸ். சதீஸ்குமார்
தேத்தாப்பளை, மாம்புரி,
புத்தளம்.
171. எஸ். சுரேகா சுஸந்திகாவித்தாரன
13, வெய்லி, 1ம் குறுக்கு வீதி,
மட்டக்களப்பு.
172. எஸ்.டி. பிரான்ஸிஸ்மணி
29/75, சப்பல் லேன்,
கொழும்பு-2.
173. ரி. அருள்நாயகம் குரூஸ்
8ம் வட்டாரம்,
பேசாலை.
174. எல். றிஸாட்
அடுறுகம்பை,
பொத்துவில்.
175. திருமதி. பி. மிருணாளினி
93/33, நீதிமன்ற வீதி,
கொய்யாத்தோட்டம், திருமலை.
176. திருமதி. திலீபா ஈஸ்வரன்
114, புதுச்செட்டித் தெரு,
கொழும்பு-13.
177. பைறூஸா முகம்மது இக்பால்
மோதினார் லேன், 30 பி,
சாவியா வீதி, காத்தான்குடி-1.
178. பி. அஜிந்துகி
70/1, நாவலர் வீதி,
பண்டாரிக்குளம், வவுனியா.
179. எஸ். நவனீதன்
SELJEVEG-13
6880 STRYN, NORWAY.
180. எம். யோகன்
P.O.BOX- 25809
CODE-13119, KUWAIT.

(ஏனைய விபரங்கள் அடுத்தவாரம்)

# யார் இவர்

இந்த சுட்டிப்பையன் இன்று தமிழ்ப் பட உலகில் பிரபல நடிகர். துருதுரு முழியை வைத்தே கண்டுபிடிக்கலாம். முயற்சித்துவிட்டு பக்கம் 18 இல் சரிபாருங்கள்.



# இந்த வாரம் உங்கள் பலன்

(13.07.1997 தொடக்கம் 19.07.1997 வரை)

சோதிட மாமணி
'தில்லை'

## மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | |
|---|---|
| ஞாயிறு- மனக் கவலை, கடன் தொல்லை. | பகல் 12 மணி |
| திங்கள்- தொழில் விருத்தி, இனசன நன்மை. | மு.ப. 10 மணி |
| செவ்வாய்- பெரியோர் நட்பு, மன மகிழ்ச்சி. | பி.ப. 1 மணி |
| புதன்- புதிய முயற்சி, பணக் கஷ்டம். | பி.ப. 2 மணி |
| வியாழன்- காரிய சித்தி, தொழில் நன்மை. | பகல் 12 மணி |
| வெள்ளி- வீண் முயற்சி, அந்நியர் நட்பு. | பி.ப. 1 மணி |
| சனி- பலவித நன்மை, செலவு மிகுதி. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-1

## மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | |
|---|---|
| ஞாயிறு- பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| திங்கள்- தொழில் மந்தம், இனசன விரோதம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- புதிய முயற்சி, பணக் கஷ்டம். | பி.ப. 1 மணி |
| புதன்- பெரியோர் பகை, மனக் கலக்கம். | பி.ப. 3 மணி |
| வியாழன்- பிரயாண மிகுதி, செலவு அதிகம். | பகல் 11 மணி |
| வெள்ளி- வீண்குறை கேட்டல், அந்நியர் நட்பு. | பி.ப. 1 மணி |
| சனி- உயர்ந்த எண்ணம், பண வரவு. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-1

## இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | |
|---|---|
| ஞாயிறு- இனசன மகிழ்ச்சி, கடன் பயம். | பி.ப. 3 மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, மன மகிழ்ச்சி. | பகல் 11 மணி |
| செவ்வாய்- பெரியோர் நட்பு, பணவரவு. | பி.ப. 2 மணி |
| புதன்- வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | பி.ப. 3 மணி |
| வியாழன்- பலவித பேறு, மனக்கிலேசம். | பி.ப. 1 மணி |
| வெள்ளி- எதிர்பார்த்த நன்மை, கடன் சுமை. | பி.ப. 2 மணி |
| சனி- காரியானுகூலம், கௌரவம். | பகல் 11 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

## மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | |
|---|---|
| ஞாயிறு- பொருள் விரயம், மனக் கலக்கம். | பி.ப. 1 மணி |
| திங்கள்- தூரஇடப் பிரயாணம், அந்நியர் உதவி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- கடன் சுமை, காரியத்தடை. | பகல் 11 மணி |
| புதன்- மனக்குறை நீங்கும், காரியானுகூலம். | பி.ப. 2 மணி |
| வியாழன்- பெரியோர் உதவி, பண வரவு. | பகல் 12 மணி |
| வெள்ளி- புதிய முயற்சி, பலவிதபேறு. | பி.ப. 3 மணி |
| சனி- உயர்ந்த நட்பு, மன மகிழ்ச்சி. | பகல் 11 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

## கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | |
|---|---|
| ஞாயிறு- செலவு மிகுதி, மனக் கலக்கம். | பி.ப. 1 மணி |
| திங்கள்- துயர் நீங்கும், பண வரவு. | பகல் 12 மணி |
| செவ்வாய்- எதிர்பார்த்த நன்மை, பிரயாணக் கஷ்டம். | பி.ப. 1 மணி |
| புதன்- செலவு அதிகம், கடன் படல். | பி.ப. 2 மணி |
| வியாழன்- உறவினர் உதவி, மன மகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| வெள்ளி- மனக்குறை நீங்கும், தொழில் விருத்தி. | பி.ப. 3 மணி |
| சனி- பிரயாண மிகுதி, தொழில் கஷ்டம். | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-4

## நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| மிதுனம் | - சூரியன். |
| கர்க்கடகம் | - வெள்ளி, புதன். |
| சிம்மம் | - இராகு. |
| கன்னி | - செவ்வாய். |
| மகரம் | - வியாழன். |
| கும்பம் | - கேது. |
| மீனம் | - சனி. |

சந்திரன்- துலாம், விருட்சிகம், தனு ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

## கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | |
|---|---|
| ஞாயிறு- பயனற்ற செயல், காரியத்தடை. | பி.ப. 1 மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, பண வரவு. | பகல் 12 மணி |
| செவ்வாய்- வீண்குறை கேட்டல், காரியானுகூலம். | பி.ப. 3 மணி |
| புதன்- மன மகிழ்ச்சி, பொருள் வரவு. | பி.ப. 1 மணி |
| வியாழன்- தொழில் கஷ்டம், மனக்கிலேசம். | பி.ப. 2 மணி |
| வெள்ளி- எதிர்பார்த்த நன்மை, மன மகிழ்ச்சி. | பி.ப. 1 மணி |
| சனி- தொழில் விருத்தி, முயற்சி பலிதம். | பி.ப. 3 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

## மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | |
|---|---|
| ஞாயிறு- முயற்சி பலிதம், தொழில் சிறப்பு. | பி.ப. 3 மணி |
| திங்கள்- இனசன நன்மை, காரியானுகூலம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- வெளியிட வாழ்க்கை, உயர்ந்த நட்பு. | பி.ப. 2 மணி |
| புதன் - இனசன உதவி, பொருள் வரவு. | பகல் 12 மணி |
| வியாழன்- கடன் சுமை, மனக் கலக்கம். | பி.ப. 3 மணி |
| வெள்ளி- புதிய முயற்சி, அந்நியர் நட்பு. | பி.ப. 1 மணி |
| சனி- வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-3

## சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | |
|---|---|
| ஞாயிறு- பிரயாண மிகுதி, மனப் பயம். | பி.ப. 3 மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். | பி.ப. 1 மணி |
| செவ்வாய்- கடன் தொல்லை, பெரியோர் பகை. | பி.ப. 2 மணி |
| புதன்- உயர்ந்த நிலை, பண வரவு. | பி.ப. 3 மணி |
| வியாழன்- மனக்குறை நீங்கும், குடும்ப சுகம். | பகல் 12 மணி |
| வெள்ளி- அந்நியர் உதவி, கௌரவம். | பகல் 11 மணி |
| சனி- பெரியோர் நட்பு, மன மகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-4

## தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | |
|---|---|
| ஞாயிறு- புதிய முயற்சி, செலவு அதிகம். | பி.ப. 2 மணி |
| திங்கள்- தொழில் கஷ்டம், அந்நியர் நட்பு. | மு.ப. 10 மணி |
| செவ்வாய்- வீண்குறை கேட்டல், மனக் கலக்கம். | பி.ப. 2 மணி |
| புதன்- துயர் அதிகம், பெரியோர் உதவி. | பி.ப. 1 மணி |
| வியாழன்- தொழில் சிறப்பு, பண வரவு. | பி.ப. 3 மணி |
| வெள்ளி- புதிய முயற்சி, கௌரவம். | பகல் 12 மணி |
| சனி- பலவித பேறு, அந்நியர் உதவி. | பி.ப. 1 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-4

## விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | |
|---|---|
| ஞாயிறு- பயனற்ற செயல், செலவு மிகுதி. | பி.ப. 1 மணி |
| திங்கள்- வீண் முயற்சி, பணக் கஷ்டம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- இனசன நன்மை, காரியத்தடை. | பி.ப. 2 மணி |
| புதன்- உறவினர் உதவி, மன மகிழ்ச்சி. | பகல் 11 மணி |
| வியாழன்- உயர்ந்த நிலை, கௌரவம். | பி.ப. 2 மணி |
| வெள்ளி- தொழில் நன்மை, மனக் கலக்கம். | பகல் 12 மணி |
| சனி- இனசன மகிழ்ச்சி, ஆடம்பரச் செலவு. | பகல் 11 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-2

## துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | |
|---|---|
| ஞாயிறு- வீண்குறை கேட்டல், மனக் கலக்கம். | பி.ப. 2 மணி |
| திங்கள்- தொழில் கஷ்டம், பணச் செலவு: | பகல் 12 மணி |
| செவ்வாய்- எதிர்பார்த்த நன்மை, மன மகிழ்ச்சி. | பி.ப. 1 மணி |
| புதன்- உயர்ந்த நிலை, உறவினர் உதவி. | பி.ப. 3 மணி |
| வியாழன்- இனசன நன்மை, காரிய சித்தி. | பி.ப. 2 மணி |
| வெள்ளி- துயர் நீங்கும், பெரியோர் உதவி. | பகல் 11 மணி |
| சனி- வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

## கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | |
|---|---|
| ஞாயிறு- துயர் நீங்கும், பலவித பேறு. | பி.ப. 4 மணி |
| திங்கள்- காரியானுகூலம், பண வரவு. | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- இனசன நன்மை, மன மகிழ்ச்சி. | பி.ப. 3 மணி |
| புதன்- தொழில் சிறப்பு, உறவினர் உதவி. | பகல் 12 மணி |
| வியாழன்- பிரயாண மிகுதி, மனக்கிலேசம். | பி.ப. 1 மணி |
| வெள்ளி- மனக்குறை நீங்கும், அந்நியர் நட்பு. | பகல் 12 மணி |
| சனி- செலவு மிகுதி, கடன் படல். | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-3



படிப்பகம்





# சவாரி செய்வோம் வாரீர்!

சைக்கிள் நல்ல சைக்கிள்
சக்கரம் உள்ள சைக்கிள்
பெட்ரோல், டீசல் வேண்டாம்!
பெடல் மட்டும் போதும்!



ஓட்ட மிக எளிது
ஓடி வாங்க விரைந்து!
சைக்கிள் மீது ஏறி
சவாரி செய்வோம் வாரீர்!

பள்ளம் உள்ள இடத்தில்
பார்த்துப் போக வேண்டும்!
பெல் அடித்துச் செல்வோம்
பிரேக் போட்டு நிறுத்துவோம்!

இடது புறம் செல்வோம்
இடறுகளைத் தள்ளுவோம்!
சாலை விதியை மதித்து
சைக்கிளையும் மிதிப்போம்!

-எஸ்.சிமி-

துச்சமாக எண்ணி நம்மைத்
தூறு செய்த போதிலும்
அச்சமில்லை அச்சமில்லை
அச்சமென்பதில்லையே!

-சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறுகதை



# அறிந்தது எப்படி?

அந்த நாட்டின் எல்லையில் ஒரு காடு இருந்தது. அந்தக்காட்டின் வழியாக ஓர் அறிஞர் வந்து கொண்டிருந்தார். அவரின் எதிரே சிலர் ஏதோ ஒன்றைத் தேடிக் கொண்டு வந்தனர்.

அறிஞரைக் கண்ட அவர்கள்,

"இந்தப் பக்கமாக குதிரை ஒன்றைப் பார்த்தீர்களா?" என்று கேட்டனர்.

"நீங்கள் தேடிக் கொண்டிருக்கும் குதிரைக்கு ஒரு கால் சற்று நொண்டி. அதற்கு ஒற்றைக் கண் குருடு. அதன் முன்பல் ஒன்று இல்லைத்தானே!" என்று அந்த அறிஞர் குதிரையின் அடையாளங் களை விளக்கினார்.

குதிரையைத் தேடி வந்தவர்களுக்கு ஒரே வியப்பு 'இவர் குதிரையின் அடையா ளங்களை எவ்வாறு அறிந்தார்' என்று திகைத்தனர்.

"ஐயா! அதுதான் எங்கள் குதிரை. அது இப்போது எங்குள்ளது?" என்று கேட்டனர் அதற்கு அந்த அறிஞர்.

"அது எனக்குத் தெரியாது!" என்று கூறினார்.

'குதிரையின் அடையாளங்களைச் சரியாகக் கூறுகிறார். ஆனால் குதிரையைத் தனக்குத் தெரியாது என்று கூறுகிறார். குதிரையைத் தெரியாவிட்டால் இவருக்கு எப்படி அதன் அடையாளங்கள் தெரியும்? இவர்தான் குதிரையை மறைத்து வைத்திருக்கிறார்; இவரை விடக்கூடாது', என்று அறிஞரை அந்நாட்டு அரசரிடம் அழைத்துச் சென்றார்கள்.

அரண்மனையில்- குதிரையைத் தொலைத்தவர்கள் அரசரிடம்,

"அரசே! எங்கள் குதிரை ஒன்று காணாமற் போய்விட்டது. இப்பெரியவர் அந்தக் குதிரையின் அடையாளங்களைச் சரியாகச் சொல்கிறார். ஆனால் குதிரையைத் தனக்குத் தெரியாது என்று சொல்கிறார்.

குதிரையைப் பார்க்காமல் இவரால் எப்படி இதன் அடையாளங்களைச் சரியாகச் சொல்லமுடியும்? எனவே இவரை விசாரித்து எங்களது குதிரையை மறுபடிப் பெற்றுத் தாருங்கள்!" என்று முறையிட்டனர்.

அரசர் அந்த அறிஞரைப் பார்த்து,

"பெரியவரே! குதிரையைப் பார்க்காது அதன் அடையாளங்களை அறிந்தது எப்படி?" என்று கேட்டார்.

"அரசே! நான் குதிரையைக் கண்டறியேன். அதன் அடையாளங்களை மட்டும் அறிவேன். நான் வரும் வழியில் குதிரை ஒன்றின் அடிச்சுவட்டைக் கண்டேன். அதன் கால்களில் ஒன்று பூமியில் நன்றாகப் பதியவில்லை. அதனால் குதிரையின் ஒரு கால் நொண்டி என்று அறிந்தேன்.

ஒரு பக்கத்துப் புல்லையே மேய்ந்திருந்தது. அதனால் ஒரு கண் குருடு என்று அறிந்தேன். மேய்ந்த புல்லின் நடுப்பகுதி விடப்பட்டிருந்தது. அதனால் அதற்கு ஒரு பல் இல்லை என்று அறிந்தேன்," என்று கூறினார் அந்த அறிஞர்

அரசர் அந்த அறிஞரின் மதிநுட்பத்தைக் கண்டு பெரிதும் வியந்தான். அவருக்குத் தண்டனை அளிக்காது பாராட்டிப் பரிசளித்தான்.

# வாரம் ஒரு நாடு

## ஹொண்டுராஸ்



**தலைநகர்–** தெகுசிகால்பா
**பரப்பு–** 1,12,088 சதுரகிலோமீட்டர்
**மக்கள் தொகை–** 57 இலட்சம்
**மொழி** – ஸ்பானிஷ் மற்றும் சில இந்திய வழக்குகள்.
**எழுத்தறிவு** – 73%
**சமயம்** – கிறிஸ்தவம்
**நாணயம்** – லெம்பிரா
**தனிநபர் வருமானம்** – 590 டொலர்.

**அமைவிடம்:**

மத்திய அமெரிக்க நாடு. பசிபிக் கடலிலும், கரீபியன் கடலிலும் கடற்பரப்பைக் கொண்டுள்ளது. இதன் மேற்கே கௌத்தமாலாவும், தென்மேற்கே எல்சல்வடோரும், தென்கிழக்கில் நிக்கரகுவாவும் எல்லைகளாக அமைந்துள்ளன.

**வரலாறு:**

1838ல் மத்திய அமெரிக்க ஃபெடரேஷனில் இருந்து சுதந்திரம் பெற்றது. அதிபர் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். அடுக்கடுக்காகப் பல புரட்சிகள், சர்வாதிகார ஆட்சி, இராணுவ ஆட்சி எனப் பலவற்றைக் கண்டது.

**பொருளாதாரம்:**

ஏற்றுமதியில் 65 சதவீதமும் வாழைப் பழமாகும். தங்கம், வெள்ளி செம்புச் சுரங்கங்கள் உள்ளன. கால்நடை வளர்ப்பு முக்கிய தொழில் ஆகும்.

# திசைகாட்டி

சீனமக்களுக்குப் புதிய புதிய கருவிகளைக் கண்டுபிடிப்பது முற்காலத்தில் ஒரு



பொழுதுபோக்கு என்றே கூறலாம். இன்றும் நாம் அதிகமாகப் பயன்படுத்தும் காகிதம் முதல் வெடிமருந்துகள் வரையான பல்வேறு பொருட்களையும், கருவிகளையும் சீனர்களே கண்டு பிடித்தனர்.

இதேபோல் உலக போக்குவரத்திற்கு வழிகாட்டியாக உள்ள காந்தத் திசை காட்டியைக் கண்டுபிடித்ததும் சீனர்களே. இந்தத் திசைகாட்டிகள் கப்பல், விமானம் ஆகியவற்றில் தற்போதும் பயன்படுத்தப் பட்டு வருகின்றன.

அத்துடன் எளிய முறையில் இயற்கைச் சீற்றமான பூகம்பத்தை அளக்கும் கருவியையும் சீனர்கள் தான் முதலில் கண்டுபிடித்தனர்.

# சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 19.07.1997.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 201
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 199

பரிசுக்குரியவர்:
பாத்திமா நிஷ்மா நஜீம்,
ஒக்ஸ்.*.போட் சர்வதேச பாடசாலை, பலாங்கொடை.

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| என். சுஹான் முகம்மத், தமிழ் மத்திய கல்லூரி, அப்புத்தளை. | ரிஷிஷ் கிருஷாந், செல்வநாயகபுரம் அரசினர் த.வி. திருமலை. |
| வி. கௌரிசங்கர், சிவன்கோவிலடி, கே.கே.எஸ். வீதி, இணுவில். | பி. பாலரஞ்சனி, கிரன்லி தமிழ் வித்தியாலயம், அக்கரபத்தனை. |
| சண்முகராஜா மயூரன், கோணேஸ்வரா இந்துக்கல்லூரி, திருகோணமலை. | நர்மதா வேல்முருகு, வின்சன் தேசிய உயர்தர பெண்கள் பாடசாலை, மட்டக்களப்பு. |
| செல்வன் அம்ஜட், ஹுனுபிட்டிய, வத்தளை. | ரூபினி ஏபிரகாம், சன்பிளவர் விலேஜ் பாடசாலை, முல்லேரியா. |
| தர்ஷன் ஸ்ரீகாந்த குமார், இந்து கல்லூரி, மந்தண்டாவளை, மாத்தளை. | எஸ். அருண் வெங்கடேஷ், றோயல் கல்லூரி, கொழும்பு-07. |

# லித்தியம்

**★ லித்தியம் என்றால் என்ன?**

வெள்ளி போன்று பளபளப்பாக இருக்கும் ஓர் உலோகம். உலோகங்களிலேயே இது மிகவும் இலேசானதாகும்.



அவெட்சன்

**★ லித்தியத்தைக் கண்டுபிடித்தவர் யார்?**

சுவீடன் நாட்டைச் சேர்ந்த வேதியியல் விஞ்ஞானியான ஜோகன் ஆகஸ்ட் அவெட்சன் என்பவர்– 1817ல் கண்டு பிடித்தார். இவரது ஆலோசகரும், சக விஞ்ஞானியுமான ஜோன் ஜேக்கப் பெர்சிலியஸ் என்பவர் இதற்கு லித்தியம் என்று பெயரிட்டார்.

**★ லித்தியம் எவ்வாறு கிடைக்கின்றது?**

லித்தியம் எளிதாக மற்றப் பொருட்களுடன் சேரும் தன்மை உடையதால், தனியே லித்தியமாகக் கிடைப்பதில்லை. உருகிய நிலையில் லித்தியம் குளோரைட்டாகக் கிடைக்கும். இவற்றின் மீது மின்சாரத்தைச் செலுத்தி லித்தியத்தைத் தனியாகப் பிரித்தெடுப்பர்.

**★ லித்தியம் எதற்குப் பயன்படுகின்றது?**

கலப்பு உலோகங்களைக் கடினப்படுத்தவும், சிலவகை பற்றரிகள் தயாரிக்கவும் பயன்படுகிறது. அத்துடன் மன அழுத்த நோயைக் குணப்படுத்தும் மருந்தாகவும் பயன்படுகிறது.

**★ உயிருள்ள பொருட்களில் லித்தியம் உள்ளதா?**

ஆம். பொதுவாக லித்தியம் ஒரு வகைப் பாறைகளில் இருந்துதான் எடுக்கப்படுகிறது. ஆயினும் தாவரம் மற்றும் மிருகங்கள், மனிதர்களின் பற்களில் லித்தியம் பொஸ்பேட் உள்ளது.

# மலைக்காகம்

சிறிய காகம் போல தோற்றமளிக்கும் இந்தப் பறவையின் பெயர் அல்பைன் சோக். இதுவும் காகத்தின் குடும்பத்தைச் சேர்ந்தது தான். இது கறுப்பு நிறமாக இருந்தாலும் இதன் அலகு பளிச்சென்று மஞ்சள் நிறத்தில் இருக்கும்.



செங்குத்தாகக் கீழ்நோக்கிப் பாய்ந்து பூச்சி, புழுக்களை இரையாகப் பிடித்துச் சாப்பிடுவதில் அல்பைன்சோக் கில்லாடியானது. ஒரு கூட்டத்தில் 20 பறவைகள் வரை வாழும். ஐரோப்பா, ஆசியாக் கண்டங்களில் இவை வாழ்கின்றன. ஸ்பெயின், சீனா ஆகிய நாடுகளில் இவை அதிகம் உள்ளன.

இந்தப் பறவைக்கு ஒரு பெரும் சிறப்பு உண்டு. அதிக உயரமான இடத்தில் வாழும் ஒரே பறவை இதுதான். இமயமலையில் 25 அடி உயரத்தில் கூட அல்பைன்சோக்கைப் பார்க்க முடியும்.

# உடலின் இயக்கம்



மனிதனின் எண்ணமும், கை வேலைப்பாடுகளுமின்றி உடலில் தானாக இயங்கும் சில முக்கிய செயல்கள் பின்வருமாறு:

மூச்சு விடுதல், இரத்த ஓட்டம், சமிபாடு, கழிவகற்றல், சுரப்பிகளின் பணி, இரத்த அழுத்தம், உடல் வெப்ப நிலையை ஒரே நிலையில் வைத்திருத்தல் போன்ற பல செயல்கள் இவையாகும். மனிதன் தூங்கும் போதும் கூட இவைகள் தானாகவே இயங்கிக்கொண்டிருக்கும்.

ஓர் ஆரோக்கியமான, நடுத்தர மனிதனின் உடலில், 24 மணி நேரத்தில் பின்வரும் செயல்கள் நடைபெறுகின்றன:

அவனது இதயம் 103,680 தடவைகள் துடிக்கின்றது. உடலில் உள்ள இரத்தம் 23 வினாடிகளில் ஒரே தடவையில் 68.8 மில்லியன் கிலோமீட்டர் நீளம் சுற்றி வருகின்றது. 23 ஆயிரம் தடவைகள் மூச்சு விடப்படுகின்றது. 438 கன அடி காற்று உட்செலுத்தப்படுகின்றது. 7.15 கிலோகிராம் உணவு உட்கொள்ளப் படுகின்றது. 2 1/2 லீட்டர் தண்ணீர் உட்கொள்ளப்படுகின்றது.

4.4 கிலோகிராம் தண்ணீர் கழிவாக வெளியேற்றப்படுகின்றது. 98.4பாகை ஃபரன்ஹிட் வெப்பத்தை உருவாக்குகின்றது. 450 தொன் சக்தியை உருவாக்குகின்றது. 750 தசைகளை இயக்குகின்றது. சுமார் 2 மில்லிமீட்டர் நீளம் முடி, ஒரு மில்லி மீட்டர் நகம் என்பனவும் வளர்கின்றன.

# நீளமான ஆறுகள்

உலகிலேயே மிக நீளமான 10 ஆறுகளும், அவை அமைந்துள்ள இடங்களும், அவற்றின் நீளங்களும் வருமாறு:

| பெயர் | இடம் | நீளம்(கி.மீ) |
|---|---|---|
| 1. நைல் | ஆபிரிக்கா | 6,695 |
| 2. அமேசன் | தென் அமெரிக்கா | 6,437 |
| 3. சாங் ஜிங் | சீனா | 6,379 |
| 4. மிஸிசிப்பி மிசூரி | அமெரிக்கா | 6,019 |
| 5. ஒவ் இர்திஷ் | ரஷ்யா | 5,410 |
| 6. ஹுவாங் | சீனா | 4,672 |
| 7. சாயிர் | ஆபிரிக்கா | 4,667 |
| 8. அமூர் | ஆசியா | 4,416 |
| 9. லேனா | ரஷ்யா | 4,400 |
| 10. மக்கென்சீ | கனடா | 4,240 |

www.padippakam.com







குட் ஈவினிங்' சொன்ன அட்மினிஸ்ட்ரேஷன் ஆபீசரை ஒரு அலட்சியப் பார்வை பார்த்து மெல்லிய குரலில் கேட்டாள் மைத்ரேயி.

"எம்.டி.ரூம் பூட்டியிருக்கா... திறந்திருக்கா...?"

"பூட்டியிருக்கு மேடம்..."

"போய் ஒப்பன் பண்ணுங்க..."

"எஸ் மேடம்...." ஏ.ஓ முன்னால் ஓடிப்போய் தினேஷின் ஏ.ஸி. அறையைத் திறந்து வைக்க மைத்ரேயி உள்ளே போய் எக்ஸிக்யூடிவ் நாற்காலியில் சாய்ந்தாள்.

"ஜி.எம்.இருக்காரா...?"

"இருக்கார் மேடம்...."

"அவரை ரூமுக்கு வரச் சொல்லுங்க... பேசணும்."

"எஸ். மேடம்...."

அட்மினிஸ்ட்ரேஷன் ஆபீஸர் வெளியே வந்து சற்றுத் தள்ளியிருந்த பக்கத்து கேபினின் காட்போர்டு அறைக் கதவைத் தட்டினார்.

"எஸ்...."

ஏ.ஓ.உள்ளே நுழைய பைலைப் புரட்டிக் கொண்டிருந்த ஜி.எம் நிமிர்ந்தார்..

"என்ன கிருஷ்ணமூர்த்தி...?"

"ஸார் மேடம், வந்திருக்காங்க..."

"மேடமா....?"

"ஆமா ஸார்... மிஸஸ் மைத்ரேயி தினேஷ்..."

"ஆச்சர்யமாயிருக்கே..."

"அதே ஆச்சர்யம்தான் ஸார் எனக்கும்...! எம்-டி. டெல்லிக்கு போன ரெண்டுமணி நேரத்துக்குள்ளே அவங்க ஆபீஸ் வந்திருக்காங்க. என்ன காரணம்ன்னு தெரியலை..."

"அவங்க ஏதும் சொல்லலையா?"

"உங்களை வரச் சொன்னாங்க... ஏதோ பேசணுமாம்."

ஜி.எம்.தன் கழுத்து டையை இறுக்கிக் கொண்டு எழுந்தார். "ஆபீஸுக்கு வராதவங்க.... வந்திருக்காங்க.. என்ன பிரச்னையோ தெரியலை..."

வாய்விட்டு முனகிக் கொண்டே அறையினின்றும் வெளிப்பட்டு மைத்ரேயி இருந்த அறைக்கதவைத் தட்டிவிட்டு, உள்ளே நுழைந்தார்.

"குட் ஈவினிங் மேடம்....."

நாற்காலியில் அரை வட்டம் சுழன்ற மைத்ரேயி அவரை ஏறிட்டு "ப்ளீஸ் பீ ஸீட்டட்" என்றாள்.

அவர் உட்கார்ந்தார்.

மைத்ரேயி புன்னகையோடு கேட்டாள்.

"நான் ஆபீஸ் வந்தது உங்களுக்கு ஆச்சர்யமாயிருக்கும்?"

"கொஞ்சம்."

"வந்ததுக்கு பெரிய காரணம் எதுவும் கிடையாது. வீட்ல போரடிச்சுது.... அப்படியே ஆபீஸ் பக்கமாய் வந்தேன்.."

"நீங்க ஆபீஸுக்கு வந்தது குறித்து ரொம்பவும் சந்தோஷம் மேடம்."

"ஆபீஸ் எப்படி போயிட்டிருக்கு?"

"வெரி ஃபைன்... மத்த கம்பெனிஸ் எதுவும் நம்ம தரத்துக்கு வரலை மேடம்..."

"நம்ம கம்பெனியில் மொத்தம் எத்தனை பேர் வேலை பார்க்கிறாங்க...?"

"ஆபீஸ் நிர்வாகம் வொர்க்ஷாப் நிர்வாகம் ரெண்டிலும் சேர்த்து கிட்டத்தட்ட முன்னூறு பேர்..."

"அதில் பெண்கள் எவ்வளவு...?"

"எழுபது பேர்...."

"இதுல புதுசா அப்பாயிண்ட்மெண்ட் செய்யப்பட்டவங்க யாராவது இருக்காங்களா..?"

"ஆறு மாசத்துக்கு முந்தி ஒரு டைப்பிஸ்ட்டையும், க்ளரிகல் கேடரில் ரெண்டு பேரையும் எம்.டி அப்பாய்ண்ட் பண்ணினார்."

"ஆபீஸையும் வொர்க்ஷாப்பையும் கொஞ்சம் சுத்திப் பார்க்கலாமா...?"

"வெல்கம்.... வாங்க... மேடம்...."

ஜி.எம் மைத்ரேயியை கூப்பிட்டுக் கொண்டு வெளியே வந்தார் "மொதல்ல வொர்க்ஷாப்புக்கு போயிடலாம் மேடம்."

போனார்கள்.

வழியில் ஆங்காங்கே பெண்கள் தெரிந்தார்கள்.... டைப் தட்டிக் கொண்டு ஃபைலைப் புரட்டிக் கொண்டு, கம்ப்யூட்டரின் மானிட்டர் திரையை உற்றுப் பார்த்துக் கொண்டு....!

'டெலிஃபோனில் மிரட்டுகிறவள் அந்தப் பெண்களில் யாராவது ஒருத்தியாக இருக்கலாமோ...?'

'எப்படி கண்டு பிடிப்பது...?'

மொத்தம் எழுபது பெண்கள்.

'இதில் யார்...?'

"ஜி.எம்.ஸார்..."

"சொல்லுங்க மேடம்..."

"எம்.டி.டெல்லிக்குப் போயிருக்கிற விஷயம் நம்ம கம்பெனியில் இருக்கக்கூடிய அத்தனை பேர்க்கும் தெரியுமா...?"

"வொர்க்ஷாப்பில் இருக்கிற ஸ்டாஃப்க்கு தெரியாது. பட் ஆபீஸ் அட்மினிஸ்ட்ரேஷனில் இருக்கிற அத்தனை பேர்க்கும் தெரியும்."

"ஆபீஸ் அட்மினிஸ்ட்ரேஷன்ல மட்டும் எத்தனை பெண்கள் வேலை பார்க்கிறாங்க...?"

"நாற்பத்தியொரு பேர்..."

**கிரைம் சக்கரவர்த்தி ராஜேஷ்குமார்**

இருவரும் வொர்க்ஷாப் செக்ஷனுக்குள் நுழைந்தார்கள். மெஷின்கள் ஆங்காங்கே இரைச்சல் போட்டு ஸ்பேர் பார்ட்ஸ்களை உருவாக்கும் முயற்சிகளில் இருந்தன. நீலநிற ஓவர்கோட்களில் ஆண்களும் பெண்களும் பார்வைக்குக் கிடைத்தார்கள். மைத்ரேயியைப் பார்த்ததும் கும்பிட்டு விலகி நின்றார்கள்.

அரைமணி நேரம் வொர்க்ஷாப்பில் இருந்து விட்டு ஆபீஸ் அட்மினிஸ்ட்ரேஷனுக்கு வந்தபோது ஏ.ஓ. வேகவேகமாய் எதிர் கொண்டார்.

"மேடம்... டெல்லியிலிருந்து எம்.டி. பேசறார்... நவ் ஹி ஈஸ் ஆன் த லைன்..."

"நான் இங்க இருக்கிறதைச் சொன்னீங்களா...?"

"ஆமா மேடம்."

"ஃபோன் எங்கே...?"

"கம் வித் மீ மேடம்."

ஏ.ஓ. பக்கத்து கேபினுக்குக் கூட்டிப் போக மேசையின் மேல் மல்லாந்திருந்த ரிஸீவரை எடுத்து காதுக்குக் கொடுத்தாள்.

"ஹலோ..."

மறுமுனையில் தினேஷின் குரல் உற்சாகமாய்க் கேட்டது.

**இதுவரை**

தினேஷ்–மைத்ரேயி தம்பதிக்கு சிறந்த தம்பதி என்று விருது கிடைக்க இருக்கிறது. அத்தகவலை மைத்ரேயிடம் மகிழ்ச்சியுடன் சொல்கிறான் தினேஷ். மைத்ரேயிக்கும் பாஸ்கர் என்ற இளைஞனுக்கும் இடையே இரகசியத் தொடர்பு இருக்கிறது. தினேஷை கொல்ல பாஸ்கருடன் திட்டம் போடுகிறாள் மைத்ரேயி. அப்போது ஒரு ஃபோன் வருகிறது. ஃபோனில் ஒரு பெண்குரல் மைத்ரேயி–பாஸ்கர் தொடர்பை தெரிந்து வைத்து மிரட்டுகிறது. ஃபோனில் மிரட்டுவது யார் என்று தெரியாமல் மைத்ரேயியும், பாஸ்கரும் குழம்புகின்றனர்.

வேலை விடயமாக தினேஸ் டெல்லி போய்விட மீண்டும் மீண்டும் அதே பெண்குரல் பாஸ்கர் தொடர்பை மறந்து விடும்படி போனில் மிரட்டுகிறது. பாஸ்கரின் திட்டப்படி அந்தப் பெண் யாரென ஆராய தினேஷின் ஆபீஸ் செல்கிறாள் மைத்ரேயி.

**இனி...**

"மைத்ரேயி...."

"என்னங்க....?"

"மெட்ராஸ்ல இப்போ மழை பெஞ்சுட்டிருக்கா?"

"இல்லையே...."

"வெளியே எட்டிப்பாரு மைத்ரேயி.... கண்டிப்பா மழை கொட்டி மூழ்க்கிக்கிட்டிருக்கும்...."

"இல்லீங்க.... வெய்யில்தான் அடிக்குது...."

"என்ன மைத்ரேயி... அதிசயத்திலும் அதிசயமா ஆபீஸ் வந்திருக்கே.... மழை பொளந்து கட்டியிருக்க வேண்டாமோ?"

"ஓ... அதைச் சொல்றீங்களா...? நீங்க டெல்லி கிளம்பிப் போனதுமே எனக்கு வீட்ல இருக்க முடியலை. ஒரே போர். அதனால்தான் ஆபீஸுக்கு வந்தேன்."

"வெல்கம்.... வெல்கம்... இதே மாதிரி நான் ஒவ்வொரு தடவையும் வெளியூர் போகும் போது ஆபீஸுக்கு வந்து என்னோட வேலைகளை கவனிக்கலாம்."

"சரியாப் போச்சு... இன்னிக்கு ஏதோ ஒரு மூடு வந்து ஆபீஸ் வந்திருக்கேன். இதே மூடு மறுபடியும் வரும்னு சொல்ல முடியாது.... ஆமா! நீங்க எத்தனை மணிக்கு டெல்லி போய்ச் சேர்ந்தீங்க...?"

"இப்பத்தான் ஜஸ்ட் அரைவ்ட்... ஏ.ஓ. கிட்ட ஒரு பிஸினஸ் மேட்டர் பேச வேண்டியிருந்தது. ப்ளைட்டை விட்டு இறங்கினதுமே ஏர்போர்ட்டில் இருந்து ஃபோன் பண்ணிட்டிருக்கேன்... அவர் கிட்ட பேசிட்டிருக்கும் போதுதான் நீ ஆபீஸ் வந்திருக்கிற விஷயத்தை அவர் சொன்னார்..."

"டெல்லியில் வேலை நாளைக்கு மத்தியானத்துக்குள்ளே முடிஞ்சுடும் இல்லையா...?"

"அநேகமா...."

"லேட் பண்ணிடாதீங்க...."

"ஏன் தனியா இருக்க கஷ்டமாயிருக்கா...?"

"பின்னே....!"

"சரி.... எப்படியும் நாளைக்கு மத்தியான ப்ளைட்டைப் பிடிச்சுடறேன். போதுமா....?"

"போதும்.... போதும்...."

"நான் டெல்லியிலிருந்து வர்றவரைக்கும் ஆபீஸ் வேலையை கொஞ்சம் ஒழுங்கா பார்த்துட்டிருங்க முதலாளியம்மா." தினேஷ் சிரித்துக் கொண்டே மறுமுனையில் ரிஸீவரை வைத்துவிட மைத்ரேயியும் ரிஸீவரைச் சாத்தினாள்.

★ ★

**ரா**த்திரி மணி பத்து.

மைத்ரேயியின் பங்களா.

படுக்கையறையின் ஜீரோ வாட்ஸ் வெளிச்ச மழையில் பாஸ்கரும் மைத்ரேயியும் நனைந்து கொண்டிருந்தார்கள். பாஸ்கரின் வலுவான தோளில் மைத்ரேயியின் தலை.

பாஸ்கர் கேட்டான்,

"ஆபீஸ்ல எத்தனை மணி வரைக்கும் இருந்தே?"

"ஆறு மணி வரைக்கும்...."

"அங்கே வேலை செய்ற பெண்களைப் பார்த்தியா?"

"பார்த்தேன்."

"யார் மேலயாவது சந்தேகம் தட்டினதா.."

"சந்தேகம் தட்டறமாதிரி யாருடைய பார்வையும் இல்லை. ஆனா, ஆபீஸ் போனதுக்கு உருப்படியா ஒரு காரியம் பண்ணினேன். அங்கே வேலை செய்யற எல்லாப் பெண்களைப் பத்தின விபரங்களைக் கொண்ட ஒரு பைல் இருந்தது. அதை முழுசுமா படிச்சேன்... ட்யூட்டியை ஒழுங்கா பார்த்து கம்பெனிக்கு விசுவாசமா நடக்கிற பெண்கள் யார் யார்ன்னு ஒரு சின்ன லிஸ்ட் ப்ரிப்பேர் பண்ணினேன்."

"அதுல என்ன உபயோகம்....?"

"இருக்கு.... எனக்கு ஃபோன் பண்ணி மிரட்டறவ பணம் காசு கேட்காமே.... நான் என் புருஷனுக்கு துரோகம் பண்ணக் கூடாதுன்னு நினைக்கிறவளா இல்லையா?"

"ஆமா"

"பணம் காசை விரும்பாத பெண் நேர்மையானவளாகத்தானே இருக்கணும்?"

"ஆமா."

"அதுக்காகத்தான் அந்த லிஸ்ட்...."

"லிஸ்ட்ல எத்தனை பேர் வர்றாங்க...?"

"பதினொரு பேர்..."

"அட்ரஸை நோட் பண்ணிக் கொண்டு வந்திருக்கியா?"

"கொண்டு வந்திருக்கேன்."

"கொண்டா பார்க்கலாம்."

மைத்ரேயி எழ முயன்ற விநாடி டெலிஃபோன் அலறிக் கூப்பிட்டது.

பாஸ்கரை சற்றே கலவரமாய் ஏறிட்டாள் மைத்ரேயி.

"இந்த ஃபோன்கால் அநேகமா அவகிட்டயிருந்துதான்..."

"சரி... நீ.... இங்கே ரிஸீவரை எடுத்துப் பேசு... நான் பக்கத்து ரூமுக்குப் போய் அங்கிருக்கிற ஃபோனில் கேட்டுக்கிறேன்."

பாஸ்கர் பக்கத்து அறைக்குப் போக, மைத்ரேயி லேசான நடுக்கத்தோடு ரிஸீவரை எடுத்தாள்.

"ஹலோ..."

மறு முனையில் பெண்குரல் சிரித்தது.

"என்ன மைத்ரேயி... நான் யார்ன்னு கண்டுபிடிக்க ஆபீஸுக்கே வந்துட்டே போலிருக்கு....?" **(தொடர்ந்து வரும்)**

**பேனா நண்பர் அரங்கம்**



பெயர்: ஏ. இராமகிருஷ்ணன்.
வயது: 22
முகவரி: புனாகலை-2, புனாகலை அஞ்சல்.
பொழுதுபோக்கு: வானொலி, பத்திரிகை.



பெயர்: எம். சுஹைர்.
வயது: 22
முகவரி: 245, நீர்கொழும்பு வீதி, இகல கொட்டாரமுல்ல.
பொழுதுபோக்கு: பத்திரிகை, வானொலி.



பெயர்: கே. ரகுபதி.
வயது: 23
முகவரி: SEENO FEYDHOO 19-04 ADDU ATOLL, REPUBLIC OF MALDIVES.
பொழுதுபோக்கு: பேனா நட்பு.



பெயர்: எஸ். சந்திரகலா.
வயது: 25
முகவரி: MARKET NO-22, BLOCK NO-03, SHOP NO.18, CODE NO.92000 AL ANDULAS, KUWAIT.
பொழுதுபோக்கு: பத்திரிகை.



பெயர்: எம். முகமது நஸீம்.
வயது: 25
முகவரி: 114, நெடுங்குளம் வீதி, புத்தளம்.
பொழுது போக்கு: வானொலி, நண்பர் தொடர்பு.



பெயர்: எம். ஜிப்ரி.
வயது: 23
முகவரி: ENGGASSEE 29 A 76877 OFFENBACH/ QEICH, GERMANY.
பொழுதுபோக்கு: தொலைக்காட்சி.

பெயர்: முகமது இர்பான்.
வயது: 19
முகவரி: 477 சி, உலஹிட்டுவல, மல்வானை.
பொழுதுபோக்கு: பத்திரிகை, உதைபந்து.

பெயர்: ரி. சுதாகர்.
வயது: 16
முகவரி: சத்துருக்கொண்டான், மட்டக்களப்பு.
பொழுதுபோக்கு: வழமையானவை.

பெயர்: சி. சமந்தன்.
வயது: 27
முகவரி: 60/1, மாணிக்கவாசகர் வீதி, திருகோணமலை.
பொழுது போக்கு: பேனா நட்பு.

பெயர்: என். பயஸ்.
வயது: 22
முகவரி: 65/364, காக்கை தீவு, மட்டக்குளிய, கொழும்பு-15.
பொழுது போக்கு: பத்திரிகை, தொலைக்காட்சி.

பெயர்: கே. சுரேஷ்குமார்.
வயது: 22
முகவரி: கொக்காகல, மெட்டிகாதன்ன.
பொழுது போக்கு: ரீ.வி., பேனா நட்பு.

பெயர்: எம். றிஸ்வி.
வயது: 17
முகவரி: 51/3, தொம்புகல்ல, தொடகஸ்வத்த.
பொழுது போக்கு: பத்திரிகை, வானொலி.



படிப்பகம்

www.padippakam.com

# கனவு மெய்ப்பட வேண்டும்

**அத்தியாயம் 19**

**பிரபஞ்சன்**

**இதுவரை**

சுமதி அமைதியான பெண். தமிழாசிரியரான தந்தை ஒரு நண்பர் போல அவளுடன் பரிவாக, இயல்பாக பாசம் காட்டினார். சுமதியை கணேசனுக்கு மணம் செய்து வைத்தார். சுமதி ஓர் அரசாங்க அதிகாரி. கணேசன் தமிழ்த் துறைப் பேராசிரியர். கணேசனுக்கு தாழ்வு மனப்பான்மை. சுமதியின் வேலை மீது, அழகு மீது, அறிவு மீது பொறாமை. அதனால் பிரச்சனைகள் ஏற்படுகின்றன.

ஓரிரவு சுமதியை நிர்வாணமாக அடித்து விரட்டுகிறான். பக்கத்து வீட்டு பங்கஜம் மாமியின் ஆடையணிந்து, பெரியவரின் உதவியால் ஸ்டேஷன் வந்துசேர்கிறாள்.

கணேஷனும் தேடிவருகிறான். கூட்ஸ் வேனுக்குள் நுழைந்து பதுங்கும் சுமதி அவன் சென்றதும், ரயிலில் ஏறிப்போகிறாள்.

உயிர்த்தோழி கல்பனாவிடம் வந்துசேர்கிறாள். பீறிட்டு அழுகிறாள். சுமதியை அமைதிப்படுத்துகிறாள் கல்பனா. கடைக்குச் சென்று புதிய ஆடைகள் வாங்கிக் கொடுக்கிறாள்.

சுமதி பழையதை நினைக்கிறாள்.

இனி...

"பாருங்கள், பெண்கள் எவ்வளவு படித்தால் என்ன? எவ்வளவு பெரிய உத்தியோகம் பார்த்து என்ன? ஆண் காலில் கசங்கும் மலராகத்தான் இன்னும் இருக்கிறோம் நாம்."

சச்சு படியேறி மேல் வந்தான்.

"மிஸஸ் சுமதி. உங்கள் கணவர் அதிகாலையில் அறையைக் காலி செய்து விட்டுப் போய்விட்டாராமே!" என்றான் அவன்.

"என்ன போய்விட்டாரா?" என்றாள், ஹீனஸ்வரத்தில். ஜெய்சியின் முகம் இறுகியது.

"சரி. நீங்கள் எதற்கும் கவலைப்படாதீர்கள். நன்றாக ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள். நான் மதியம் திரும்பி வந்து விடுவேன். அடுத்து என்ன செய்யலாம் என்று யோசிப்போம். தயவு செய்து மறக்காமல் இந்த மாத்திரைகளை இப்போது ஒன்றும் மதியம் ஒன்றுமாகப் பயன்படுத்திக் கொள்ளுங்கள். நாங்கள் வருகிறோம்," என்றாள் ஜெய்சி. பிறகு தன் கணவன் பக்கம் திரும்பி அவள் சுமதியின் கல்வி, பதவி ஆகியவைகளைச் சொன்னாள், அவன் ஆச்சர்யமுடன் சொன்னான்,

"போனவாரம் நீ ஒரு கூட்டத்தில் பேசியது போலவே இருக்கிறது பார். 'பெண்கள் எந்த. உயரத்துக்குப் போனாலும், அவர்கள் கால்களுக்கு விலங்குகள் என்னவோ அவர்களின் கணவர்மார்களிடம் மண்ணில் இருக்கவே செய்கின்றன' என்று பேசினாய். இப்போது இந்த அம்மாள்- மிஸஸ் சுமதி, கவலைப்படாதீர்கள். உங்கள் வீடாக இதைப் பாவித்துக் கொள்ளுங்கள். உங்கள் துன்பம் எங்கள் துன்பம். உலகத்தில் மனிதர்கள் இருக்கவே செய்கிறார்கள். சுமதி, எங்களையே எடுத்துக் கொள்ளுங்கள். நான் ஹரிஜன் வகுப்பைச் சேர்ந்தவன். ஜெய்சி மேல் ஜாதி என்று சொல்லப்படுபவள். நாங்கள் காதலித்தோம். இரு வீட்டிலும் எதிர்ப்பு. ஆனால், நான் வேலை பார்த்த கிராம மக்களே முன் நின்று எங்கள் திருமணத்தை முடித்து வைத்தார்கள். எனக்கும் மக்களுக்கும் இருந்த நெருக்கமும், பரஸ்பர மரியாதையுமே இதற்குக் காரணம்; ஆகவே மக்களிடம் எனக்கு மரியாதை உள்ளதே போல; நீங்களும் என்னை, எங்களை, நம்பலாம் என்று சொல்ல வந்தேன். வருகிறோம். ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள்."

அவர்கள் சென்றார்கள்.

**போ**லீஸ் துறையின் உயர் அதிகாரியின் முன் அவள் அமர்ந்திருந்தாள். அவர் கேட்ட கேள்விகளும் அவள் சொன்ன பதில்களும் வருமாறு:

"உங்கள் பெயர்?"

"சுமதி."

ஒரு கான்ஸ்டெபிள் அவர்கள் பேச்சைக் குறிப்பெடுத்துக் கொண்டிருந்தான்.

"தொழில்?"

சொன்னாள்.

"கணவர் பெயர்?"

"திரு. கணேசன்.

"தொழில்?"

"பேராசிரியர்."

"உங்களுக்கு திருமணம் ஆன ஆண்டு?"

சொன்னாள்.

"உங்கள்மேல் அவர் சொன்ன புகார் என்ன தெரியுமா?"

"தெரியாது."

"நீங்கள் அவர் வீட்டில், அவர் தங்களுக்குச் செய்த நகைகளைத் திருடினீர்களாமே...?"

"இல்லை, அவை என் நகைகள்."

"ஆதாரம்?"

"அந்த நகைகளை என் பெயரில் நான் வாங்கினமைக்கு சாட்சியமாக அந்தக் கடை 'பில்' என்னிடம் உள்ளது."

"பின் ஏன் அவர் உங்கள் மேல் பழி சுமத்துகிறார்?"

"பழி சுமத்துவதுதான் நோக்கம்."

"அதற்கு என்ன காரணம்?"

"தெரியாது."

"உங்களுக்குள் தகராறு உண்டா?"

"குடும்பப் பிரச்சனை உண்டு."

"நீங்கள் பிரியப் போகிறீர்களா?"

"இன்னும் முடிவு செய்யவில்லை."


"அம்மணி! என்னை மன்னியுங்கள். நீங்கள் பெரிய அதிகாரி. நான் இப்படியெல்லாம் கேட்பது உங்களைப் புண்படுத்த அல்ல. நான் விசாரணை செய்ய வேண்டிய பொறுப்பில் இருக்கிறேன்.

உங்களுக்கும் மேல் அதிகாரிக்கும் தொடர்பு உண்டு என்று உங்கள் கணவர் கூறுகிறார்."

"இந்தத் திருட்டு வழக்கிற்கும் அதற்கும் என்ன சம்பந்தம்?"

"நகைகள் அவர் வீட்டில்தான் இருப்பதாக அவர் சொல்கிறார்."

"நகைகள் என்னிடம்தான் இருக்கின்றன.



அந்த மேலதிகாரிக்கும் அவைகளுக்கும் சம்பந்தம் இல்லை."

"சரி மிக்க நன்றி. நான் நகைகளைப் பார்க்கலாமா?"

கணேசன் கொடுத்த நகைப் பட்டியலுக்கும் அவள் வைத்திருந்த நகைகளுக்கும் சம்பந்தம் இல்லை.

இது நடந்த சில தினங்களில் தலைமைச் செயலர் அவளை வரச் சொன்னார். சுமதியும் போயிருந்தாள். அவர் சொன்னார்:

"மிஸஸ் சுமதி. உங்கள் சொந்த வாழ்க்கையில் எனக்குப் பொறுப்பு இல்லை. ஆனால் விவகாரம் என்று வந்த பிறகு பேசித்தான் ஆகவேண்டியுள்ளது."

அவர் கேட்ட கேள்விகளின் சாராம்சங்கள்:

"உங்களுக்கும் சபேசனுக்கும் தொடர்பு உண்டு என்று உங்கள் கணவர் எனக்கு எழுதியிருக்கிறார்."

"அப்படியா, சார். அப்புறம்?"

"இப்படிச் சொன்னால் எப்படி? பதில் சொல்லுங்கள்."

"அப்படி எதுவும் இல்லை."

"ஒரு பொது இடத்தில் உங்களை அவர் பார்த்தாராமே?"

"என்னையும் அவரையுமா?"

"ஆம்."

"ஒரே ஒரு முறை, நானும் அவரும் முதலமைச்சர் வரவேற்புக்காக இணைந்து வேலை செய்தோம். அது நடந்த இடம் மாங்காடு. அதை ஒட்டி ஒரு கருத்தரங்கம். அது கோவிலுக்குள் நடந்தது. என் கணவர் பார்த்ததாகச்சொல்லும் இடம் அந்த இடம் தான். தவிர, அது பற்றிய குறிப்புக்கூட நானே எழுதி பைல் செய்திருக்கிறேன்."

"பார்த்தேன்."

கடைசியாக அவர் சொன்னார்:

"எப்படியோ நாம் அதிகாரிகள். கூடுமானவரை நம் மேல் எந்தப் புகாரும் வராமல் பார்த்துக்கொள்வது நம் கடமை. மக்களுக்காகவும், அமைச்சர்களுக்காகவும் நாம் அவ்வாறு இருக்கக் கடமைப்பட்டவர்கள்."

**இ**ரண்டு நாட்களுக்குப் பிறகு, சுமதியும், ஜெய்சியும் ஊர் திரும்பினார்கள்; வீடு சேர்ந்தார்கள்.

கணேசன் வாசலிலேயே அமர்ந்திருந்தான்.

"என்ன?" என்றான் ஜெய்சியைப் பார்த்து.

"உங்கள் மனைவியை உங்களுடன் சேர்த்துவிட்டுப் போகவந்தேன்."

"யார் என் மனைவி? இவள் என் மனைவி இல்லை. எங்கோ இரண்டு இரவுகள் தங்கிவிட்டு வந்த இவளை என் மனைவியாக ஏற்க எனக்குச் சம்மதம் இல்லை," என்றான் கணேசன்.

கணேசனின் அந்தக் கோரமுகம் ஜெய்சியைக் கூடத் திடுக்கிட வைத்தது. மனைவியைத் துன்புறுத்தும் கயவர்களும்கூட, மூன்றாம் மனிதர் முன், தர்மத்துக்குக் கட்டுப்பட்டு, தன்செயலுக்கு ஏதேனும் நியாயம் தேடுவார்கள் என்பதை அவள் அறிவாள். சுமதியைப்போல, ஒரு பாவமும் அறியாத பெண்ணை மூன்றாம் மனிதர் முன் இப்படி அவமானப்படுத்த ஒரு மனிதன் எப்படித் துணிய முடிகிறது என்பது அவளுக்கு வியப்பாகவே இருந்தது. ஆகவே, அவள் அவனிடம் கேட்டாள்,

"என்ன காரணத்தைக் கொண்டு இந்தப் பெண்ணை நீங்கள் விலக்குகிறீர்கள் என்பதை நான் அறியலாமா?" என்றாள் ஜெய்சி அவனிடம்.

"இதைபெல்லாம் கேட்க நீ யார்?"

"நான் யார் என்பது போகப் போக உங்களுக்கே தெரியவரும். இப்போதைக்கு என்னை ஒரு மனுஷியாக நினைத்துக் கொள்ளுங்கள். சக மனுஷி ஒருத்தி துன்பத்தில் இருக்கையில், அது பற்றிக் கவலைப்படவும், கவலையைப் போக்க முன்வரவும் யாருக்கும் உரிமையும் கடமையும் உண்டு. அதன் அடிப்படையில்தான் கேட்கிறேன்! மீண்டும் கேட்கிறேன். எந்தக் காரணத்தால் இவளை நீங்கள் விலக்குகிறீர்கள்?"

"அதான் சொன்னேனே. இரண்டு முழு இரவுகள் வெளியே தங்கியிருந்துவிட்டு திரும்பி வந்திருக்கிறாள். அப்படிப்பட்டவளை எந்த மானமுள்ள கணவன் ஏற்றுக் கொள்வான்?"

சுமதி உறைந்து போய் நின்றிருந்தாள். அந்தக் கணமே உயிர் பிரிந்துவிடக் கூடாதா என்றிருந்தது. அப்படியே சிலையாகி விட மாட்டோமா என்றும் இருந்தது. இரண்டுமே நிகழவில்லை. மாறாக, கொஞ்சம் கொஞ்சமாக உணர்வு மரத்துப் போக, அவன் பேசுகிற ஒவ்வொரு வார்த்தையும் கல்லைப் போல் வந்து அவளைத் தாக்க, அவள் நின்றிருந்தாள்.

"இரண்டு நாட்கள் ஒரு பெண் வெளியில் தங்கியிருந்தாள் என்றால், உடனே அவள் ஒவ்வொரு இரவிலும் ஒருவனோடு படுத்தாள் என்பீர்களா? சுமதியைத் திருமணம் செய்தபின் எத்தனை நாட்கள் வெளியூர் போயிருக்கிறீர்கள்? எத்தனை நாட்கள் வெளியே தங்கியிருந்தீர்கள். அப்போதெல்லாம் சுமதி உங்களைத் தெருவில் நிறுத்தி வைத்து விசாரித்திருக்கிறாளா?"

அவனுக்கு எரிச்சல் மிகுந்தது. எப்போதும் உண்மை. அதை மறைக்க முயல்பவருக்கு, பிறரால் சுட்டிக் காட்டப்படுகையில் எரிச்சல் மிகவே செய்யும். கணேசனுக்கும் எரிச்சல் மிகுந்தது.

"உனக்குப் பதில் சொல்ல வேண்டிய கட்டாயம் எனக்கு இல்லை." என்றான் அவன்.

"அது சரி. நீங்கள் தெருவில் போவோர் வருவோர் மீதெல்லாம் சேற்றை வாரி இறைப்பீர்கள். யாரும் உங்களைக் கேட்கக் கூடாதா?"

"நான் என் மனைவியைப் பற்றிப் பேசுகிறேன். பிறரைப் பற்றிப்பேசவில்லை. தவிரவும் இது எங்கள் குடும்ப விஷயம்."

அவள் சிரித்தாள்.

"என்ன சிரிப்பு?"

"மனைவி என்கிறீர்கள். குடும்பம் என்கிறீர்கள். ஆனால், அவளை விபசாரி என்றும் குற்றம் சாட்டுகிறீர்கள். சுமதியை என்னவென்று நீங்கள் நினைக்கிறீர்கள்? உங்கள் மனைவியென்றா? அப்படியெனில் அவளை விபசாரி என்பது போல் பேசக்கூடாது. விபசாரிதான் என்கிறீர்களா? அப்புறம் அவர்களுக்கு உங்கள் வீட்டில் இடம் இல்லை. சொல்லுங்கள். நாங்கள் திரும்பிப் போய்விடுகிறோம்."

ஒரு கணம் அவன் திகைத்தான். பதில் சொல்ல முடியாமல் குழம்பினான்.

அந்த நேரத்தைப் பயன்படுத்திக் கொண்டு ஜெய்சி சொன்னாள்:

"மிஸ்டர் கணேசன்....! நான் ஒரு கல்லூரியில் பேராசிரியையாக இருக்கிறேன். உத்தியோகம், வீடு, சம்பளம், கணவன் என்று நாலு சுவர்களுக்குள் வாழ்பவள் அல்ல நான். என்னைப் போன்ற சக மனுஷிகளுக்கு நேரும் துன்பங்களை எதிர்த்து குரல் கொடுப்பவள் நான். என்னைப் போன்றே சிந்திக்கும் பெண்கள் பலரையும் இணைத்து சக்தி மிக்க மாதர் சங்கம் ஒன்றையும் நாங்கள் நடத்துகிறோம். ஒரு அரசியல் கட்சியோடு, நேராக இல்லையென்றாலும், மறைமுகமாக எங்களுக்குத் தொடர்பு உண்டு. எங்கள் அணியைச் சேர்ந்த பல எம்.பி.கள் பாராளுமன்றத்தில் இருக்கிறார்கள். வழக்கறிஞர்கள் சுப்ரீம் கோட்டில் இருக்கிறார்கள். பெண்களுக்கு ஆதரவாக நாங்கள் நடத்தும் பல வழக்குகளை இலவசமாக அவர்கள் அங்கு நடத்திக் கொண்டிருக்கிறார்கள். நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள் என்பதை உடனே எனக்குத் தெரிவிக்க வேண்டும். அதற்கேற்றாற் போல நான் நடவடிக்கை எடுத்துக் கொள்ள வசதியாக இருக்கும்."

கணேசன் பயந்துதான் போனான்.

"சரி. சரி. சுமதி உள்ளே போ... நீங்கள்...." என்றான் ஜெய்சியைப் பார்த்து.

ஜெய்சி சொன்னாள்,

"மீண்டும் நாளைக் காலை பஸ்ஸில் தான் நான் திரும்ப வேண்டும். அதுவரை சுமதியிடம் தான் தங்கியிருக்க வேண்டும். உங்களுக்கு ஆட்சேபனை ஒன்றும் இல்லையே...?"

மிகுந்த தயக்கத்துடன் "இல்லை" என்றான் அவன்.

சுமதியும் ஜெய்சியும் உள்ளே போனார்கள்.

அம்மா பாய்ந்து வந்து சுமதியை அணைத்துக் கொண்டு அழுதாள். அப்பா ஸ்தம்பித்துப்போய் அமர்ந்திருந்தார்.

**(தொடர்ந்து வரும்)**

---

# பொய்முகங்கள்

**இதே கடற்கரை மணலில்**
**தடம் பதித்த**
**அந்த நான்கு சுவடுகளில்**
**இரண்டு எங்கே.....?**



**யாழ். ஞானகணேசன்**

**அ**கோரக்காற்றின் ஆவேசத்தால் எழுந்த அலைகள் கரையில் சடாரென முட்டிமோதின. மனத்துயரங்களை கடற்கரை மணலுக்குள் புதைத்துவிட வந்த துளசிக்கு கால்பாதங்களில் ஒட்டிக் கொண்ட மணற்துணிக்கைகள் போலவே அகற்ற முடியாமல் அவள் நெஞ்சில் ஒட்டிக்கொண்டன நினைவுத்துணிக்கைகள்.

தன் காற்பாதங்களை கடல்நீரில் கழுவினாள். ஆனால் தலைமுழ்கிவிட்ட அந்த துயரச்சம்பவங்களை மட்டும் அவளால் கைகழுவி விடமுடியவில்லை.

இதே கடற்கரை மணலில் தடம் பதித்த அந்த நான்கு சுவடுகளில் இரண்டு சுவடுகள் எங்கே? இதயம் கனத்தது. தலைசுற்றுவது போலிருந்தது துளசிக்கு. அப்படியே அந்த மணல்மேட்டில் அமர்ந்தாள்.

"சங்கர், உங்களுடைய காற் பதிவுகளின் மேல் என் பதிவுகளும் இடம்பெற வேண்டுமென்பதால் தான் இப்படி நடக்கிறேன்." அவதானமாக அவன் பாதச் சுவடுகள்மேல் தன் தடயங்களைப் பதித்த படியே வந்து கொண்டேயிருந்த துளசி சொன்னாள்.

"ஏன் தான் அப்படி ஒரு ஆசை?" கேட்டான் சங்கர்.

"இருவரின் பாதைகளும் ஒன்றாய்த் தானே இருக்கவேண்டும்." என்றவள் சிரித்தாள். சங்கர் சிலிர்த்தான்.

இப்போது...!

நேற்றுக் காலை மணி ஒன்பதுக்குச் சற்று அதிகமாக இருக்கும் வாசற்படியில் நின்று தபாற்காரனின் கையிலிருந்து பெற்ற சங்கரின் கடிதத்தில் கிறுக்கப்பட்ட வார்த்தைகள் அவளின் மனவுடைவுக்குக் காரணமாக அமைந்திருந்தன.

"எங்களுடைய உறவைத் தொடரமுடியாத இக்கட்டான சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டேன். என்னை மன்னித்துவிடு!"

அதற்குள்- அதற்கான காரணத்துடன் துளசியின் படமும் அவளால் முன்னர் அவனுக்கு அனுப்பப்பட்ட கடிதங்களும் இருந்தன.

காரணங்கள் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லை. பிழைகளைச் செய்தவர்கள் தாங்கள் செய்தவை சரியெனச் சமர்ப்பிப்பதற்காகவே சில காரணங்களை குறிப்பிடுகின்றார்கள். அந்த வகையிலே சங்கரின் குறிப்புகளும் அமைந்திருந்தன.

அன்று முழுவதும் துளசி அறையைப் பூட்டி விட்டு படுக்கையில் விழுந்து கிடந்து அழுதாள்.... அழுதாள்...! ஆறுதல் வார்த்தை கூற ஆண்டவன் வந்தாலும் சில சமயங்களில் அழுகை தேவைப்படுகின்றது. அவ்வாறே துளசியும் ஆறுதல் வார்த்தைகளால் ஆவது எதுவுமில்லை என அழுதாள்.

சில சமயங்களில் இன்பக்கிளர்ச்சியால் இரவு நித்திரையை இழந்தவள், இன்றும் இழந்தாள்; துன்பக் கோடுகளால் துவண்டாள்.

தற்கொலை செய்யலாமோ என்று கூட எண்ணியவள், தவிர்த்துவிட்டாள். வாழத் தெரியாதவர்களும், துன்பங்களை எதிர்த்துப் போராடத் தெரியாதவர்களும் செய்கின்ற இத்தகைய பொறுக்கித்தனமான வேலை வேண்டாம்.

ஆடையில் ஒட்டியிருந்த மணற்துணிக்கைகளை தட்டிவிட்டு எழுந்தவள், உடனடியாகப் புறப்பட்டாள் வீடு நோக்கி. ஆவேசமாக கொப்பித்தாள்களை இழுத்துக் கிழித்தவள் மேசையில் இருந்தவாறே எழுதத் தொடங்கினாள்.

சங்கருக்கு,

நான் முன்பு உனக்கு கடிதம் எழுதும் போது பயன்படுத்திய அந்தப் போலி வார்த்தைகளை விலக்கிவிடுகிறேன். அன்பில்லாதோரிடம் நலம் விசாரிப்பதும், என் நலம் பற்றிக் கூறுவதும் நயமாக எனக்குத் தோன்றவில்லை.

கடிதம் கிடைத்தது. ஆரம்பத்தில் அழுதேன். ஆனால் இப்போது சந்தோசப் படுகிறேன். ஏனென்றால் இலட்சிய மற்ற உன்னிடம் என் இதயத்தை கொடுத்தது மட்டுமல்லாமல், கழுத்தையும் நீட்டிக் காணிக்கையாகும் கட்டத்தில் இருந்து என்னைக் காப்பாற்றிவிட்டாய்!

முடிந்துவிட்ட உறவொன்றிற்காய் முட்களைச் சுமக்க நினைக்கும் பழைய பெண் அல்ல நான். ஆகவே எனக்குத் தேவையற்ற உன் புகைப்படத்தை இத்துடன் அனுப்புகிறேன்.

நீ குறிப்பிட்டிருந்த காரணங்களை எல்லாம் உன் கயமைத்தனத்தின் சாஸ்த்திரங்களாக வைத்துக்கொள். காத்திரமான எந்த மனிதனாலும் இவை ஏற்றுக் கொள்ளக்கூடியவை அல்ல.

நீ உன் ஆற்றாமைக்காக குறிப்பிட்டிருந்த காரணங்கள் எவற்றையும் மீளாய்வு செய்யவேண்டாம். அதில் எவ்வித பயனும் கிடையாது.

உன்னிடம் பதில் கடிதத்தை எதிர்பார்த்திருந்த காலங்கள் நிறையவே உண்டு. ஆனாலும் இக்கடிதத்திற்கான உன் பதில் கடிதம் எதுவும் வேண்டாம்.

இப்படிக்கு,
உனக்குத் தேவையற்றவள்.

எழுதிமுடித்தவள் நிமிர்ந்தாள். மேசைமீது இருந்த ஒரு கிளாஸ் தண்ணீரையும் மடமடவெனக் குடித்தாள். கண்ணாடி முன்னின்று முகத்தைப் பார்த்தவள் புன்புறுவல் பூத்தாள்.



படிப்பகம்

www.padippakam.com

இடைவேளைக்கு இன்னும் ஒரு சில நிமிடங்களே இருந்தன. கணித ஆசிரியர் இன்னும் அறுத்துக்கொண்டிருந்தார்.

கொப்பிய அவசிட்ட கொடுத்து பேச்சுக்கு இரண்டு வார்த்தையாவது சொல்லிடணும் என்று எண்ணியவனாய் பாடம் முடியும் வரை காத்திருந்தேன்.

டிங்...டிங்...டிங்...டிங்....

# பேச்சுக்கு..!



அக்குறணை - நவ்ரஜி

இடைவேளை மணி ஒலித்துக்கொண்டிருந்தது. கையில் கொப்பியுடன் வகுப்பை விட்டு வெளியேறி அடுத்த வகுப்பை எட்டிப் பார்க்கிறேன்.

ரோஷனும் சிற்றூண்டிச் சாலைக்குச் செல்லவோ என்னவோ வெளியே வந்து கொண்டிருந்தாள். அவள் படியைத் தாண்டியபோது....

நான்...

"எக்ஸ் கியூஸ் மீ...." அழைத்தேன்.

நின்று பார்த்தாள்.

"இந்தாங்கோ உங்கட கொப்பி..."

"தாங்க் யூ..." என்று கூறிப் புன்னகைத்தாள்.

"நீங்க கொப்பிய நேர்த்தியா வைத்திருக்கிறீங்க.... வெரி ஃபைன். கையெழுத்துன்னா ஏ வன். படங்கள் எல்லாம் நேர்த்தியாக வரைந்திருக்கிறீங்க. கொப்பிக்கு கவர் போட்டு... முன்பக்கத்தில நற்சிந்தனைகள் எல்லாம் எழுதி- வெரி வெரி ஃபைன். இப்படித்தான் இருக்கணும். உங்கள பார்த்த போதே நினைச்சிட்டேன். உங்கள மாதிரித் தான் உங்கட வேலைகளும் இருக்குது. என் ஊகம் எப்படி சரிதானே....?" அவளைப் பார்த்துக் கேட்டேன்.

அவள் மெதுவாக சிரித்தாள்.

"பிரதர்! உங்கட பாராட்டெல்லாம் எனக்கு உரித்தல்ல. இது என் ஃபிரெண்ட் நிரோஷாட கொப்பி. அவளுக்குத்தான் உரித்து. ஐ....ஸீ... அவ ஒரு மிஸ்டேக் செய்திருக்கா. அவட பேர கொப்பியில எழுதவில்லை போலிருக்கு."

அவள் கூறுவது எனக்குக் கீறலாகக் கேட்கிறது. என் முகத்தில் அசடு எக்கச்சக்கமாய் வழிந்து கொண்டிருந்தது..... ■

# மொழிபுரியாத எந்தன் காதலிக்கு...!

விரதமிருந்து-

காதலை வணங்கி-

ஜாதி விட்டுக் காதல் கொண்ட, மர வேலிகளுக்குள் சிக்கித் தவித்துப் பிரிந்து போன (தமிழ்) மொழிபுரியாத என் காதலிக்கு இக் கவிக் (கதையை) கடிதத்தை ஆரம்பிக்கின்றேன்.

"ஜாதிகள் இல்லையடி பாப்பா"

என்று சொன்ன பாரதி மட்டும் இருந்திருந்தால்.... இப்படியொரு கவிக் (கதை) கடிதம் எழுதும் நிலை எனக்கு வந்திருக்காது. ஏனெனில்-பாரதி சொன்ன 'ஜாதி' காதலிலும் தோற்றிருக்கும்.

இன்று!

பாரதி இல்லாத பொழுதில்-ஜாதிபேத உலகில் என் காதல் தான் தோற்றிருக்கிறது.

பாரதி என்ன செய்வார் பாவம்...!

நான் புரிந்ததோ 'காதல்' பாவம்.

கடவுளை வணங்குவதற்காகத் துயிலெழும் மானிடர்க்கு மத்தியில், இன்று அதிகாலை இப்பிரபஞ்சத்தில் காதலை வணங்குவதற்காகத் துயிலெழுந்த முதல் மனிதன் நானோ?

கடவுளை வணங்குபவன்-மனிதன்.

நான் காதலை வணங்குபவன்-காதலன்.

மனிதனுக்குள் சில வேளை 'மிருகம்' உண்டு.

காதலனுக்குள் என்றும் காதல் மட்டும் தான்.

-நான் காதலன்.

காதலை வணங்கி/விரதமிருந்து இக் கவிக் (கதையை) கடிதத்தை ஆரம்பிக்கின்றேன் தோழி!

சிங்கள மொழி படித்த என் பௌத்த மதக் காதலியே...!

மொழிபுரியாத போதும்.....

உனக்கொரு கடிதம் எழுதக் காரணம் இருக்கு கண்ணே...!

லட்சோப லட்சம் "தினமுரசு" வாசகர்களில் ஒருவராவது, உனக்கு இதையொரு நாள் மொழிபெயர்த்துத் தராமலா போவார்கள்?

காலம் சென்று-நான் காலனிடம் சென்று, என் கல்லறையில் புல் முளைத்த பின்னராவது இதன் மொழிபெயர்ப்பு உனக்குக் கிடைத்தால் அது என் பாக்கியம் கண்ணே!

காதலின் பாக்கியம்!

கடவுள் என்னைக் கைவிட்டாலும்..

காதல் என்னைக் கைவிடாது. ஏனெனில்-

நான் கடவுளை விடவும் காதலை வணங்குபவன்- காதலன்.

புழுக்கமாயிருந்த நேற்றைய பகலும்-

குளிராயிருந்த நேற்றைய இரவும்-

தனிமையில் நான் நிரம்பவும் சிந்தித்தேன் தோழி...

எத்தனை வருடங்களாச்சு?

-எனை நீயும்-உனை நானும் பிரிந்து எத்தனையெத்தனை வருடங்களாச்சு?

நேற்று நடந்தது மாதிரியிருக்கிறது எல்லாமே, என்று நான் பொய்சொல்ல விரும்பவில்லை யதார்த்தமாய்...

இன்று காலையில் நடந்தது மாதிரியிருக்கிறது நம் காதலின் சம்பவங்கள்.

நம் முதல் சந்திப்பிலேயே-

நம்மிருவர் கண்களும் மோதிக்கொண்டு, இதயங்கள் காயப்பட்டு, காதல் ஔடதத்திற்காகத் தவித்து... பசித்திருந்து/தகித்திருந்து/தனித்திருந்து/ விழித்திருந்து....

கல்வி கற்க எந்தன் ஊருக்கு வந்து உன்னிடத்தில் நான் கற்றுக்கொண்டது காதல் அல்லவோ? தேவதையே...!

கல்விக்காக எந்தன் ஊருக்கு வந்த நீ கல்வியை விடக் காதலித்தது என்னையல்லவோ?

ஞாபகம் விட்டுப் போயிருக்கிறதா?

இல்லை.... உறுதியான என்னைப்போல் அப்படியேயிருக்கிறதா?

எத்தனை-

எத்தனையெத்தனை கனாக்கள் கண்டோம் தோழி...

அத்தனையும் புஸ்வானமாய்...

கர்ப்பப்பையினுள் வெள்ளைப் பனிக்குடத் திரவத்தில் இருக்கும் குழந்தைபோல, சமூகத்தில் 'ஜாதிபேதம்' இருப்பதை நாம் அறிந்தும் அறியாமலல்லவோ இருந்தோம். இல்லை காதலின் சக்திக்கு கட்டுப்பட்டிருந்தோமா?

'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்கிறார்களே... அது பொய். நம்மைப் பீடித்திருந்ததும் காதல் நோய்தானே...? அப்போது செல்வங்களின் செல்வமாய் எமக்கு மகாவிசாலமாய்த் தெரிந்ததும் காதல்தானே? காதல் மட்டும்தானே?

காதலி...!

கலைக் கல்லூரியை நம் காதலுக்காகத் தொலைத்தவள் நீ!

என் உறவுகளை நம் காதலுக்காகத் தொலைத்தவன் நான்!

"தம்பியாத்தெக்க ஆசிரேத?" (தம்பியாவுடன் பழக்கமா?)

-என்று உன் கல்லூரியதிபர் நம் காதலறிந்து கேட்டபோது, நீ நிரம்பவும் கலங்கிப் போனதாக உன் நண்பி குமாரி சொன்னபோது நானும் கலங்கித்தான் போனேனடி.

ஜாதி மதம் விட்டு நாம் காதல் பண்ணுவது நம் ஊர் முழுக்கத் தெரிய வந்தபோதுகூட, எனது 'உம்மா' ஒன்றும் சொல்லவில்லையே! ஆரம்பத்தில்....

"சிங்களப் பெண்ணென்றாலும் நம் மதத்துக்கு வர்றதுன்னா சம்மதம்தான்!" என்று சொன்ன என் உம்மாவை...

"சிங்களப் பொண்ணு மட்டுமல்ல... உங்க மகனை விடவும் அவளுக்கு வயது அதிகம் மாதிரி... உங்க் மகனோட ராத்தா மாதிரியவள்" என்று 'கோள்' மூட்டிவிட்டது எங்கவூர்ப் பொண்ணுகள்தான் என்பதை நீ அறியமாட்டாய்.... அப்படியிருந்தும்-

ஊரையே பகைத்து- உனக்கு நான் 'தம்பி' மாதிரி என்று சொன்ன,

உறவுகளையே வெறுத்து-நமக்கிடையே வயது வித்தியாசம் பாராமல்,

உன்னை நான் 'பதிவு' செய்யவிருந்த நேரம்....

"நீ அந்த சிங்களப் பொண்ணக் கட்டினால், என் மையித்துக்காவது வரக்கூடாது... தொலைஞ்சுபோ..."

என்று உம்மா சொன்னபோது-

முடியவில்லயடி தோழி!

சர்வாதிகார ஹிட்லரை "முதுகெலும்பில்லாத கோழை" என்று சர்ச்சில் வர்ணித்ததை நான் எனக்குள் உணர்ந்துகொண்டது அப்போதுதான்.

"கோழை உனக்கு காதல் ஒரு கேடா?"

-என்று நீ என்னைக் கேட்கவில்லை. அப்போது..

ஏனெனில்- நீ என்னைப் புரிந்தவள்- நல்லவள்.

என்னை உயிராய் நேசித்தவள். (இன்னும் நேசிப்பவள்?)

இப்போதைய 'ராகயே உனுசும', 'எக்கே வைரய' போன்ற தப்பான சிங்கள சினிமாப் படங்கள் அப்போது இல்லை. சிங்கள மொழியில் நல்ல/ தரமான காதல் படங்கள் இருந்தன. காத்திரமான படங்கள்.

உனக்கு ஞாபகமிருக்கிறதா?

ஒரு சினிமாக் கொட்டகையின் கறுப் பிருட்டுக்குள்தான் நீயும் நானும் கடைசியாய் சந்தித்துக்கொண்டோம்... ஞாபகமிருக்கிறதா தோழி....?

கண்களில் கண்ணீரோடு/மனதில் சூறாவளியோடு காற்றுப்போக இடைவெளியில்லாமல் நாம் கட்டிப்பிடித்திருந்தோமே...! இப்போதும் உடம்பு சில்லிடுகிறது.

எவ்வளவு பேச நினைத்தோம்?

என்னென்னமோவெல்லாம் பேச நினைத்தோம்?

ஆனால் முடிந்ததா நம்மால்...?

அணையத் துடிக்கும் மெழுகுவர்த்தி ஆர்வமாய் எரிவதுபோல.... நான் பேச வாய் திறந்தபோதெல்லாம் நீ என்னைப் பேசவிடாமல் உதடுகள் கவ்வி தித்திப்பூட்டினாய். என்ன வேகம்? எத்தனை ஆர்வம்? அந்தக் கணத்தில்-உனது உணர்ச்சிக் குவியலின் உஷ்ணத்தில் நான் கொஞ்சம் தடுமாறித்தான் போனேன். அந்த உணர்வுகளின் வேகமும் ஆர்வமும் நமது கடைசி சந்திப்பின் அடையாளமென்று அப்போது எனக்குப் புரியாதது ஏனோ?

முத்தத்தோடு சரி...

தழுவல்களோடு சரி... தவிர-

தப்பாய் நாம் எப்போதும் தொட்டுக் கொண்டதில்லை. நம் காதலுக்குள் அப்படியொரு நாகரிகம் வேர்விட்டிருந்தது.

நீயும் நானும் சேர்ந்து பார்த்த நூற்று சொச்ச சினிமாக்களில் முதல் சினிமாவும், கடைசிச் சினிமாவும்தான் இன்னமும் என் மனசுக்குள் இருக்கிறது. ஏனெனில்-நீ தந்த அந்த முதல் முத்தம், கடைசி முத்தமும்தான் இன்னும் என்னை வாழ வைத்துக்கொண்டிருக்கிறது. இடைப்பட்ட ஆயிரமாயிரம் முத்தங்களும் நம் காதலின் முத்திரைகளாக இருந்த போதும் அவை வெறுமனே 'போனஸ்'களாயின. கடைசியில்-

"நான் போறேன்!" என்றாய்.

"எங்கேயடி?" என்றேன்.

சிரித்தாய். விரக்தியாய்ச் சிரித்தாய். சோகமாய்ச் சிரித்தாய். கண்ணீரோடு...

"சோகத்தில் ஏன் சிரிக்கிறேன் என்கிறாயா-? இருள் சூழும் போதுதானே விளக்கேற்ற வேண்டும்!"

-என்று ஒருபோது நான் சொன்ன (அப்துல் ரகுமானின்) கவி வரிகளையே எனக்கு ஞாபகமூட்டினாய்.... அப்படியே போய்விட்டாய். அன்றுதானே நான் புகைக்கப் பழகினேன்....?

போயே போய் விட்டாயடி தோழி... நான் நிக்கோடினுக்குள் கரைந்துபோனேன்.

நீ போயிருக்கலாம்...

உன் நினைவுகளையும் எடுத்துப் போயிருக்கலாம்.

என்னைத் தனியே விட்டுப்போக.... நானென்ன பாவம் செய்தேன்?

எத்தனை வருடங்களாச்சு?

எனை நீயும்-உனை நானும் பிரிந்து எத்தனையெத்தனை வருடங்களாச்சு?

எங்கேயிருக்கிறாய் தோழி? எப்படியிருக்கிறாய்?

நீ போனதில் இருந்து விபரங்கள் ஏதும் உன்னைப்பற்றியில்லை.

நலமாக இருக்கிறாயா?

திருமணம் ஆச்சா? குழந்தைகள் உண்டா?

நானென்றால் இன்னும் தனிக்கட்டையடி.... மனசை உன்னோடும் உடம்பை வேறொரு (அந்நியப்) பெண்ணோடும் பங்குபோட்டுக்கொள்ள நானொன்றும் காதல் வியாபாரி அல்லவே.... சொல்லடி எப்படியிருக்கிறாய்? நலமாய் இருக்கிறாயா?

உனக்குத் தெரியுமா? நான் நலமாயில்லை! நலமாகவேயில்லை.

தீராத நோயினால் அவதிப்பட்டபோது 'ஹாம்லெட்' நாடகம் எழுதிய ஷேக்ஸ்பியர் போல.... சர்க்கரை வியாதியால் அவஸ்தைப் பட்ட போதும் சாதனை புரிந்த 'இப்ஸன்' போல.... இன்னும் சில மாதங்கள்தான் உயிருடனிருப்போம் என்று மருத்துவர்கள் சொன்ன பிறகும் சிறப்பான இசையெழுதிய 'ஹாண்டல்' என்ற மேதைபோல....

மொழிபுரியாத போதும்- என்றாவது- யாராவது உனக்கு மொழிபெயர்த்துத் தருவார்கள் என்ற நம்பிக்கையில்,

இன்றைக்கோ நாளைக்கோ மரணித்தும் போவேன் என்கிற நிலைமையிலும் இதையுனக்கு எழுதிக்கொண்டிருக்கிறேன் கண்ணே! என் காதல் கண்மணியே!! ஏன்?

எனக்கு 'இரத்தப் புற்றுநோயாம்'

'முற்றிக் கருகிவிட்டதாம்- நம் காதல்போல'

-நல்லனுபவமுள்ள வைத்தியர்கள் கூறுகிறார்களடி தோழி...

நான் மரணிப்பதற்கு முன்னால் இதையெழுதி முடித்தாகவேண்டும்!

விரதமிருந்து-

காதலை வணங்கிக் கேட்கிறேன். ஒன்று செய்வாயா என் கண்மணியே....?

காதல் சாட்சியாக, நீ தந்த முத்தங்களும்/ போதி மரத்திலையும் என்னிடம் காலம் கடந்தும்/ உலர்ந்துபோன நிலையிலும் பத்திரமாய் அப்படியேயிருக்கிறது.

நான் தந்த கைக்குட்டைக்கு என்னாச்சு?

கிழிஞ்சல் விட்டிருக்கிறதா? பரவாயில்லை! முடிந்தால்.... என் தேவதையே....!

என்றைக்காவது...என் கல்லறையில் ஒரு கம்பத்தில் அதைக் கொடியாய் நாட்டிவிட்டுப் போவாயா? கைக்குட்டையல்லடி அது....

-நம் காதல் கொடி! காதல் காயங்களின் கொடி!!

கடவுள் என்னைக் கைவிட்டாலும் காதல் என்னைக் கைவிடாது. ஏனெனில் நான்....



— மாவனல்லை —

ரிஸ்கி ஷெரீப்

# நெஞ்சு வலிக்கவில்லை!

"இப்பொழுது அந்த ரீச்சரை இந்த தேசத்தில் பார்த்தபோது அதிர்ந்துபோனேன்"



களுவாஞ்சிக்குடி யோகன் - அவுஸ்திரேலியா

கபிலுக்குக் கிட்டத்தட்ட உலகையே சுற்றி வந்தது போன்றதொரு நினைப்புத் தோன்றியது. எண்பத்தொன்பதுகளில் கிளர்ந்தெழுந்த பிரச்சனைகளால் தாயக மண்ணைவிட்டு வெளியேறினான்.

முந்தநாள் லண்டன், நேற்று சுவிஸ், இன்று அவுஸ்திரேலியா நாளை எந்தநாடு என்று அவனுக்கே தெரியாது. இப்படித்தான் காலங்கள் கழிந்துகொண்டிருந்தன. 'சொந்த நாட்டில் இன்னமும் போர் சூழ்ந்திருக்கிறதனால்தானே இந்த நாட்டையெல்லாம் தன்னைப் போன்றவர்கள் காண வாய்ப்பு வந்தது' என்று அவன் அடிக்கடி எண்ணுவதுண்டு. எது எப்படியோ- இங்கும் கால் பதித்தாயிற்று. சொந்தமாகக் காலூன்ற ஒரு வேலை தேடியே ஆகவேணும் என்று அதற்கான முயற்சியில் ஈடுபட்டான் கபில்.

அப்பொழுது "சிட்னி" புகையிரத நிலையத்தில்தான் அந்த இந்தியனைக்கண்டு கதைத்தான்.

"இந்த முதியோர் இல்லத்தில் வேலை இருக்கிறது, நேரில் போய்க் கேட்டால் கிடைக்கலாம்," என்று அவன் ஒரு விலாசத்தைக்கொடுத்தான். வேலையே தேவை என்றிருந்த கபிலுக்கு இது ஒரு வரப்பிரசாதமாக இருந்தது. மறுநிமிடமே 'ரெயின்' எடுத்து அந்த இடத்திற்குப் போனான்.

நகரமாக இருந்தாலும் ஓர் ஒதுக்குப்புறத்தில் அமைதியாக அமைந்திருந்தது அந்த முதியோர் இல்லம். வேலை கிடைக்க முன்னமே அவனுக்கு அந்த சூழ்நிலை பிடித்துப் போயிற்று.

மெதுவாக உள்நுழைந்து அலுவலகத்திற்குள் புகுந்தான். வரவேற்புப் பெண் சிரித்துக் கொண்டு வினவினாள். வந்த விடயத்தைப் பற்றி பணிவாகச் சொன்னான் அவன்.

"மன்னிக்கவேணும். அந்த இடம் நிரப்பப்பட்டுவிட்டது. விண்ணப்பத்தைத் தந்து விட்டுப் போங்கள்; வெற்றிடம் வந்தால் அறிவிக்கின்றோம்," என்று அந்தப் பெண் வருத்தத்துடன் கூறினாள்.

அவனுக்கு மனம் சோர்ந்து போயிற்று. இருந்தும் 'முயற்சி திருவினையாகும்' என்று தனக்குத் தானே சொல்லிக்கொண்டு அந்த அலுவலகத்தைவிட்டு வெளியேறத் திரும்பினான்.

அப்பொழுதுதான் ஒரு மூலையில் அமர்ந்திருந்த அந்த மூதாட்டியைப் பார்த்தான். கட்குழிக்குள் முற்றாக உள்வாங்கப்பட்ட கண்கள், ஒடுங்கிச் சுருங்கி வழிந்த முகம், கரிய தேகம்.

எலும்புக் கூட்டை தோலால் போர்த்துவிடப்பட்ட உடம்பு. அமைதியாக கபிலையே பார்த்துக் கொண்டிருந்தாள் அந்த மூதாட்டி.

அவனும் சாதாரணமாகத்தான் பார்த்து விட்டு வெளியேற முனைந்தான். ஏனோ தெரியவில்லை, கறுப்பு நிறம் என்றதும் விசாரிக்கவேணும்போல் தோன்றியது. திரும்பியவன் மூதாட்டியின் பக்கத்தில் நெருங்கிவந்தான். அவரின் முகத்தை உற்றுநோக்கியதும் அவனுக்குள் ஓர் உந்துதல்.

எங்கேயோ- எப்போதோ பார்த்தது போன்ற பரிதவிப்பு.

மூளையைக் குழப்பி யோசித்தான்.

அந்த முக அமைப்பு, நெற்றி இவைகளை வைத்து, "நீங்கள் மிஸ்ஸிஸ் சதாசிவம் ரீச்சர் தானே?" சந்தேகத்துடன் கேட்டான் கபில். அவர் வாய் திறக்கவில்லை.

மெதுவாக தலையை மேலும் கீழும் ஆட்டி 'ஆம்' என்று ஆமோதித்தார்.

கபில் ஆச்சரியத்தால் உறைந்து போனான். அவனுக்குச் சில நிமிடங்கள் எதுவுமே கதைக்க முடியாமற் போயிற்று.

அவன் எட்டாம் வகுப்புப் படித்துக் கொண்டிருந்த காலத்தில் தமிழ்ப்பாடம் கற்பித்தவர் இவர். அந்த மாவட்டத்தையே இவரது தமிழ், சொற்பொழிவுகள் கலக்கிக்கொண்டிருந்தன. நேரம் கிடைக்கும் வேளைகளில் பத்திரிகைகளுக்குக்கூட எழுதிக்கொண்டிருந்தார்.

அவனைப் பொறுத்தளவில் இந்த ரீச்சர் திடீரென ஒருநாள் காணாமல் போயிருந்தார். "மாற்றம் கிடைத்துப் போய்விட்டார்" என்று சிலர் சொன்னார்கள். "இல்லை இல்லை வேலையை ராஜினாமா பண்ணிவிட்டார்" என்று இன்னும் சிலர் சொன்னார்கள். கபிலுக்கு எது உண்மை என்று இன்றுவரை தெரியாது.

இப்பொழுது அந்த ரீச்சரை இந்தத் தேசத்தில் பார்த்தபோது அதிர்ந்து போனான். அதுவும் இந்த இடத்தில், இந்தக் கோலத்தில் கண்டபோது அவனது கண்கள் பனித்தன.

"ரீச்சர் என்ன ஞாபகம் இருக்கிறதா?" மெதுவாகக் குனிந்து அவரின் காதருகில் கேட்டான். அவரின் முகத்தில் ஒரு மலர்ச்சி தோன்றியது.

"எங்கே படித்தநீர்?" என்று கேட்டார்.

"கடைசியாகக் களுவாஞ்சிக்குடி மகா வித்தியாலயம்," என்று கபில் சொன்னான்.

"அதுதான் நானும் கடைசியாகக் கற்பித்த பாடசாலை," என்றவர் சிறிது நேரம் சிந்தனையில் ஆழ்ந்தார். பின்,

"கபிலோ ரவியோ அப்படித்தானே உமது பெயர் வரும்," என்று கேட்டார்.

"ஆமாம் கபிலரவி" என்றான் அவன்.

"நீரும் யாழ்ப்பாணம் தானே?" உமது அப்பாதானே அங்கு போஸ்ற் மாஸ்டராக இருந்தவர்?" என்று விபரத்தையும் சொன்னார் அவர்.

அவரின் ஞாபக சக்தி கபிலை அசர வைத்தது. "இதுதான் ஆசிரிய மூளையோ?" என்று வியந்துகொண்டான் அவன். அந்த வியப்பினூடே "நீங்கள் எப்படி ரீச்சர் இங்கு?" என்று தனது சந்தேகத்தையும் கேட்டான்.

இந்தக்கேள்வியை உள்வாங்கியவர், ஓசைப்படாமல் சிரித்தார். அந்தச் சிரிப்பில் பல அர்த்தங்கள் இருப்பதுபோல கபிலுக்குத் தோன்றியது.

"எல்லாம் காலம் செய்யும் விளையாட்டு!" என்றவர் மெதுவாகத் தொடர்ந்தார். "எனக்கு ஒரே பெண். மிகவும் பாசமாகவும் செல்லமாகவும் வளர்த்தேன். பருவ வயதில் அவளுக்குப் பொருத்தமான இடத்தில் திருமணமும் பேசி முடித்து வைத்தேன். மகளும், மருமகனும் அப்போது இங்கு வந்து குடியேறினார்கள். அந்த நேரம் எனது கணவரும் இறந்து போனார். தனிமையில் இருந்த என்னை தலைப்பிரசவத்திற்காக என் மகள் இங்கே கூப்பிட்டாள். மகளின் அழைப்பு உதறமுடியாமல் பாசம் தடுத்தது. வேலையை ராஜினாமாச் செய்துவிட்டு இங்கு பறந்து வந்தேன்." ஒரு பெருமூச்சு வெளியேறியது.

"இப்பொழுது என் மகளுக்கு நான்கு பிள்ளைகள். அந்த நான்கு பிள்ளைகளும் இன்று வளர்ந்து ஆளாகிக் கொண்டிருக்கிறார்கள். என் மகளும் வேலைக்குப் போவதால் இந்த நான்கு பிள்ளைகளையும் சிறுவயதில் வளர்த்து ஆளாக்க வேண்டிய பொறுப்பு என்னையே சார்ந்தது. மலசலம் கழுவி, குளிப்பாட்டி, சாப்பாடு கொடுத்து, பாடசாலைக்கு அழைத்துக்கொண்டு போய்... இப்படி அத்தனை வேலைகளையும் நான் ஒருத்தியே செய்தேன். அதுமட்டுமல்ல, சமையல் வேலைகளைக்கூட நானே கவனிக்க வேண்டி நேர்ந்தது. அப்போது என் உடம்பில் வலு இருந்தது. என் மகளின் வீட்டில் நான் சாறாகப் பிழியப்பட்டேன். இதையிட்டு நான் பெரிதாகக் கவலைப்பட்டது கிடையாது. ஆனால் இப்பொழுது நான் பிரயோசனமற்ற சக்கையாகிப்போனேன். அதனால் வீட்டுக்கு வரும் பேரக்குழந்தைகளின் சினேகிதர்களுக்கு நான் இடைஞ்சலாகத் தெரிகிறேனாம், வரும் விருந்தாளிகளுக்கு நான் அசிங்கமாம்; அந்த நேரம் வீட்டில் இருந்த தாராள இட வசதி இப்பொழுது நான் இருப்பதனால் போதவில்லையாம், என்று என் அருமை மகள் நியாயப்படுத்தினாள்." ரீச்சரின் கண்கள் பனித்தன. அழுகையை அடக்கிக் கொள்கிறார்.

"அம்மாவிற்கு ஓய்வு தேவை. அதற்கு இந்த இடந்தான் பொருத்தமாக இருக்கும் என்று காரணப்படுத்தி என்னை இங்கு கொண்டு வந்து சேர்த்தார்கள். நான் இன்றோ நாளையோ மறையப் போகிறவள். என்னைப் பொறுத்தவரை இங்கு அனாதையாகத்தான் என்னுயிர் பிரியப்போகிறது. அப்படி என்னுயிர் பிரிந்த பிற்பாடு அவுஸ்திரேலியா, அமெரிக்கா, கனடா, சுவிஸ் இப்படியெல்லாம் அங்கிருப்பவர்களெல்லாம் என் இறப்பிற்கு வருந்தி மரண அறிவித்தல்களாக தங்களை விளம்பரம் செய்வார்கள். வருடா வருடம் கண்ணீர் அஞ்சலி என்று வேறு கொடுப்பார்கள்!" விரக்தியாய் சிரித்தார்.

"உயிருடன் இருக்கும்போது அவர்களின் கண்ணீரைத் துடைக்க மறப்பவர்கள் இறந்த பிற்பாடு கண்ணீர் அஞ்சலி என்று செலவு செய்வதில் என்ன லாபம்? சொந்த நாட்டிலே நான் கஷ்டப்பட்டு என் மகள் இங்கே இருந்தால் அது சாதாரணம். ஆனால் இந்த அந்நிய தேசத்திற்கு என்னை வரவழைத்து இந்த நிலைக்குத் தள்ளிய என் மகளை நான் என்னவென்று சொல்வது? பெற்றோர் ஒரு பிள்ளையை வளர்த்து ஆளாக்குவதற்கு எவ்வளவோ சிரமங்கள் படவேண்டி இருக்கிறது. ஆனால் வயதான காலத்தில் அந்தப் பெற்றோரைக் கவனிக்க வேண்டிய பிள்ளை அதை மறந்து விடுகின்றது. இதுதான் உலகம்!" என்று ரீச்சர் சொல்லிமுடித்துவிட்டு அணிந்திருந்த அங்கியால் கண்களைத் துடைத்துக் கொண்டார்.

கேட்ட கபிலுக்கு கண்கள் இரத்தமாய்ச் சிவந்து நீர் தேங்கியது. அவனுக்கு எதுவும் சொல்லத் தெரியவில்லை. மேலும் அங்கிருக்கவும் முடியாமல் போனது. "நான் அடிக்கடி உங்களை வந்து பார்க்கிறேன் ரீச்சர்," என்று சொல்லிவிட்டு வெளியேறி நடந்தான்.

'எப்படியோ இருந்த ரீச்சருக்கு இன்று இப்படியொரு நிலைமையா?' என்று அந்த இரவு அவனுக்குத் தூக்கமே வரவில்லை. மெதுவாக எழுந்தவன் பேனாவையும், பேப்பரையும் எடுத்து எழுதத் தொடங்கினான். ■







படிப்பகம்

www.padippakam.com

# இலக்கிய நயம்



# சமரச சறுக்கல்



வயதைக் கணக்கிட்டால்
வாலிபம் தாண்டிய கணக்குத்தான்!

"வற்றாத காதல் உள்ளபோது-ஆசையும்
முற்றாது கண்ணே! முற்றுப்பெறாது பெண்ணே!
ஊற்றாக பொங்குமடி இளமை
காற்றாக அசைக்குமடி மனதை"

வெள்ளி நரை முடி சுமக்க
கள்ள நகை முகம் சுமக்க
தள்ளிப் போனவளை
அள்ளக் கரம் விரித்தான்!

"தோளுக்கு மேலே வளர்ந்தது பிள்ளை
மாளவில்லையோ இன்னும் ஆசை
வந்துவிடுவான் அந்தப் பிள்ளை
வழி விடுங்கள் இது என்ன தொல்லை?"

"தோளுக்கு மேலே பிள்ளை இருப்பினும்
வாளுக்கு ஓய்வு கொடுக்கவே இல்லை.
நாளுக்கு நாள் ஏறுகிறது வீரம்
தோளுக்கு நீ மாலையாவதுதானே நியாயம்!"

புஜம் தட்டிக் காட்டினான் பரமன்
நிஜம்தான் பலம் எனப் புடைத்தது புஜம்!

"தட்டிப்பார் எத்தனை கெட்டி
தட்டிப்போகிறாயே வயதைக் காட்டி!"

"இந்த வயதிலும்
வந்து விழுகிறதோ ஆசை?"
பழிப்புக் காட்டி நகைத்தாள்.

"நேற்றுப்போல் இருக்கிறது கண்ணே
நிலாவொளியில் நாம்
உலாப்போன முதலிரவு!

நினைவிருக்கிறதா பெண்ணே
உனக்கு நினைவிருக்கிறதா?

மதன பானம் மனதைத் துளைத்தது
மன்மத விழா மஞ்சத்தில் முளைத்தது.
மதம் கொண்ட யானைகள் போல்
மனம் கொண்டு மோதினோமே!

"முன்னிரண்டு இதழில்
முத்து நகை
முன்னிரண்டு எழிலில்
மோகக் கணை
என் இரண்டு கண்ணும்
போதவில்லை பெண்ணே!
எண்ணிரண்டு கண்கூட
காணாது கண்ணே!"
நான் புலம்ப, நீ பிணங்க
வான் நிலவும் சிலித்ததேயடி!

துகில் மெல்ல நான் விலக்க
துயில் போல கண் அடைத்தாய்.
வெயில் நேர காற்றாக மூச்சுவிட்டால்
முகில் போல வெட்கத்தை சூடிக்கொண்டாய்.

நினைவிருக்கிறதா பெண்ணே-அந்த
இனிப்பிருக்கிறதா இன்னும்?"

தடுக்காமல் கேட்டு சுவைத்தவள்
விரும்பாமல் கேட்பதுபோல் நடித்தாள்.

"வெட்கமும் இல்லை-உங்களுக்கு
விவஸ்தையும் இல்லை!"

"துக்கம்தான் வருகிறது கண்ணே
ஏக்கம்தான் எழுகிறது!"

"துக்கம் ஏன்? பொல்லாத
ஏக்கம்தான் ஏன்?
போய்வாரும் பிள்ளாய்-எங்கள்
சேய் வரும் நேரம் இது!"

"சேய் என்கிறாயே அவனை
பேய்கூட நடுங்கும் உருவத்தான்
சேய் என்றாயோ அவனை!"

"பேர் வெற்றால் என்ன-பெரு
உருப் பெற்றால் என்ன
தாய் எனக்கென்றும்
சேய்தானே பிள்ளை!"

"பிள்ளைக்கு முதலிடமா-மனதை
கொள்ளையிட்ட புருசனுக்கு முதலிடமா?"
போட்டான் கேள்வி முடிச்சாக.

"இரு கண்ணுக்கும்
ஒரே இடம்தான்
எதுபெரிதென்று
எவர்தான் பிரிப்பார்?"
விடை தொடுத்து வாயடைத்தாள்.

"என் வாளைவிட நீளமடி
உன் நாக்கு!"

"மாலையிட முன்னர்
சொல்லியிருக்க வேண்டும்
இப்படியொரு வாக்கு!"

"சொல்லியிருந்தால்
நடந்திருக்குமோ தாக்கு?"

"கிள்ளியெறியப்பட்டிருக்கும்
காதல் நோக்கு!"

"அள்ளியெடுத்துக் கொள்ள
துள்ளி வந்திருப்பர் கன்னியர்
தெரியுமோ உனக்கு?"

"ம்ஹும்..
இந்த முகத்துக்கும்
மிரட்டும் மீசைக்கும்
எந்த பெண் வருவாள்?
புலி கண்ட மானாக
மிரண்டோடிப் போயிருப்பார்"

"ஐயா புகழ் அறியவில்லையடி நீ!
கையணைத்துக் கொள் என்று
கால் பிடித்தோர் எத்தனைபேர்?
மெய் மகிழச் செய் என்று
வேல் விழி எறிந்தோர் எத்தனை பேர்?"

அவன் சொல்லச் சொல்ல
முகம் கறுத்தாள்.
முறுவல் நயம் தொலைத்தாள்.

"பொத்திவைத்த கதையெல்லாம்
மொத்தமாய் கொட்டிவிட்டீர்.
கட்டுக் கதையுமல்ல-நீர்
கெட்ட கதையிதுவே!

உத்தமனார் என்றிருந்தேன்-பெண்
பித்தனானீர் என்றறியேனே.
சத்தியமாய் ஏமாந்தேன்-நல்
சித்திரமாய் நான் இருக்க
பைத்தியமாய் ஏன் அலைந்தீர்?

என்ன குறை, ஏது குறை
நான் வைத்தேன்?
எப்போது கேட்டாலும்
தட்டாது விருந்து வைத்தேன்.
என் கண்ணுக்குள் மணியாக
காத்துவைத்து மகிழ்ந்தேனே!
கிணற்று நீர் என்றெண்ணி
உவந்து நான் இருந்தேனே
பிறழ்ந்து நீர் ஏன் போனீர்?

சேய் பிறந்த பின்னாலும்
மடிமீதில் உம் தலை சாய்த்தீர்
சேய் இரண்டு என்றிருந்தேன்
பேய் எவள் உம்மைக் கெடுத்தாளோ?"

தேம்பித் தேம்பி அழத்தொடங்க
பரமன் நிலை பரிதாபமானது

சரணடைந்தான் எனினும்
சமரசமாக மறுத்துவிட்டாள்.

சமரச முயற்சியில்
விடியும் போதுதான்-நல்
முடிவு தெரிந்தது!

சமரசம் முடிந்தது-இனி
சரசத்தில் இனிக்கட்டும் என்று
மெல்ல நெருங்கியவன்
"கண்ணே கண்ணே
வயது எட்டித்தான் போயினும்
என்றும் நீ எனக்கு
கட்டிக் கரும்பே"
என்றான்-என்றதுடன் விட்டானா
இன்னொன்றும் உரைத்தான்;
"ஞானப் பெண்ணே
யாரையும் விட நாம்
மாபெரும் காதல் கொண்டவர் நம்பு"

சொன்னதும் முறைத்தாள்.
பரமன் திகைத்தான்.
இனிக்கும் வார்த்தைக்கு
ஏன் எரிக்கின்ற பார்வை?
விடை தெறித்தது சூடாக.

"யாரையும்விட
என்றல்லோ சொன்னீர்
யாரைவிட- யாரைவிட?
யாரை நினைத்து உரைத்தீர்?"
சீறினாள்-சினந்தாள்.

வெண்ணெய் திரள்கையில்
தாழி உடைந்த கதையாக
சோர்ந்துதான் போனான்
செத்தாரைப் போல!

இக் கதைக்கு
திருவள்ளுவர் காட்டும் குறள் காண்மின்;
"யாரினும் காதலம் என்றேனா ஊடினாள்
யாரினும் யாரினும் என்று"

குறள்:- 1314. அதிகாரம்-132

தருவது ரசிகன்

ஸ்போர்ட்ஸ்

## விக்கெட் 300

டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இதுவரை 12 பேர் 300 விக்கெட்டுக்களுக்கு மேல் வீழ்த்தியுள்ளனர். கடைசியாக இந்தப் பட்டியலில் இணைந்துள்ளவர் மேற்கிந்தியத்தீவு அணியின் வேகப்பந்து வீச்சாளர் கேர்ட்லி அம்புரோஸ்.

கபில் தேவ் மற்றும் றிச்சர்ட் ஹாட்லி ஆகிய இருவர் மட்டுமே 400 விக்கெட்டுக்களை வீழ்த்தியுள்ளனர். 300 விக்கெட்டுக்களுக்கு மேல் வீழ்த்திய 12 பேரில் தற்போது கொட்னி வோல்ஷ், வாஸிம் அக்ரம், கேர்ட்லி அம்புரோஸ் ஆகிய மூவர் மட்டுமே விளையாடி வருகின்றனர். ஏனையோர் ஓய்வு பெற்றுவிட்டனர்.

300 விக்கெட்டுக்களுக்கு மேற்பட்ட விக்கெட்டுக்களை வீழ்த்தியுள்ள 12 பேரின் விபரப்பட்டியல் பின்வருமாறு:

| வீரர் | நாடு | விக்கெட்டுக்கள் | போட்டிகள் | சிறந்தபந்துவீச்சு |
|---|---|---|---|---|
| 1.கபில் தேவ் | இந்தியா | 434 | 131 | 9/83 |
| 2.றிச்சர்ட் ஹாட்லி | நியூஸிலாந்து | 431 | 86 | 9/52 |
| 3.இயன் பொத்தம் | இங்கிலாந்து | 383 | 102 | 8/34 |
| 4.மல்கம் மார்ஷல் | மே.இந்தியத்தீவு | 376 | 81 | 7/22 |
| 5.இம்ரான்கான் | பாகிஸ்தான் | 362 | 88 | 8/58 |
| 6.டென்னிஸ் லில்லி | அவுஸ்திரேலியா | 355 | 70 | 7/83 |
| 7.கொட்னி வோல்ஷ் | மே.இந்தியத்தீவு | 333 | 92 | 7/37 |
| 8.வில்லிஸ் | இங்கிலாந்து | 325 | 90 | 8/43 |
| 9.வாஸிம் அக்ரம் | பாகிஸ்தான் | 311 | 72 | 7/119 |
| 10.லான்ஸ் கிப்ஸ் | மே.இந்தியத்தீவு | 309 | 79 | 8/38 |
| 11.ஃபிரெட்றி ட்ரூமன் | இங்கிலாந்து | 307 | 67 | 8/31 |
| 12.கேர்ட்லி அம்புரோஸ் | மே.இந்தியத்தீவு | 303 | 71 | 8/45 |

### வருகிறார் அமீர் சொகைல்

இலங்கையில் நடைபெறும் 'ஆசியக் கோப்பை' போட்டியில் விளையாடுவதற்காக பாகிஸ்தான் அணியில் அமீர் சொகைல் சேர்க்கப்பட்டுள்ளார்.



பாகிஸ்தான் அணியில் 2 ஆண்டுகள் அமீர் சொகைலுக்குத் தடை விதிக்கப்பட்டது. கடந்த மே மாதம் அமீர் சொகைல் மன்னிப்புக் கேட்டதை அடுத்து அவர் மீண்டும் அணியில் சேர்ந்து விளையாடுவதற்கு பாகிஸ்தான் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை ஒப்புதல் அளித்துள்ளது.

தடை செய்யப்பட்ட காலத்தில் அமீர் சொகைல் 10 ஒரு நாள் மற்றும் 2 டெஸ்ட் போட்டிகளில் பங்கேற்கும் வாய்ப்பை இழந்தார்.

### பட்டம் வென்ற வீராங்கனை

விம்பிள்டன் டென்னிஸ் பெண்கள் ஒற்றையர் பட்டத்தை சுவிஸ் வீராங்கனை மார்ட்டினா ஹின்ஜிஸ் வென்று சாதனை படைத்துள்ளார்.

ஜூலை 5ம் திகதி பெண்கள் ஒற்றையர் இறுதியாட்டம் நடைபெற்றது. இதில் உலகின் நம்பர் வண் வீராங்கனையான 28 வயதான சுவிட்ஸர்லாந்தின் ஜனா நவோட்னாவும், நான்காவது நிலை வகிக்கும் 16 வயதான ஹின்ஜிஸும் மோதினார்கள்.

இறுதியில் ஹின்ஜிஸ், நவோட்னாவை 2-6, 6-3, 6-3 என்ற கணக்குகளில் வென்றார். இதன் மூலம் மிக இளம் வயதில் விம்பிள்டன் பட்டத்தை வென்றவர் என்ற சாதனையை படைத்துள்ளார் மார்ட்டினா ஹின்ஜிஸ்.

#### இவர்தான் அவர்



முரளி

இதுவரை ஸ்டெபி கிராப் தான் இந்த சாதனையைத் தக்க வைத்திருந்தார். இவர் தனது 18 வயதில் 1987ம் ஆண்டு விம்பிள்டன் பட்டம் வென்றவர்.

## சிந்தியா பதில்கள்

★ டியர் சிந்தியா! இன்றைய இலங்கையின் உடனடித் தேவை என்னவோ?

ஏ.எம். அனூஸ், நேகம.

உண்மையான அரசியல் தீர்வு மூலமாக உறுதியான சமாதானம்!

★ சிந்தியா! பொறுமைக்கு எல்லை எது வரைக்கும்?

க. சுதர்சன், செங்கலடி.

அது பலவீனமாகக் கருதப்பட்டு சிறுமை செய்யப்படும்வரைக்கும்!

★ நடிகர் திலகத்துக்கு தாதாசாகேப் பால்கே விருது கிடைத்திருப்பதைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

செ. நந்தகுமார், மட்டக்களப்பு.

தாமதமாகவென்றாலும் தகுதியான வரிடம் சேர்ந்தது மூலம் அந்த விருது பெருமை பெற்றிருக்கிறது.

★ 'பந்த்' நடைபெற்றபோது கலைஞர் கருணாநிதி ஆதரவு கொடுக்க மறுத்தது ஏன்?

சி. ஜெயந்தன், கண்டி.

தமிழ்நாட்டில் நடைபெற்ற ஜாதிக் கலவரங்களைக் காரணம் காட்டியிருந்தார் கலைஞர். அதே கலைஞர்தான் சில நாட்களுக்கு முன்னர் தமது கட்சி மாநாட்டை மகா ஆடம்பரமாக, ஆட்டமும் பாட்டுமாக சேலத்தில் நடத்தி முடித்திருக்கிறார். அனுதாபம் தெரிவிக்க ஜாதிக் கலவரம் தடையானாலும் அமர்க்களம் செய்யமட்டும் எப்படி மனம் ஒப்பியதோ?! இதுதாங்க அரசியல்!

★ சிந்தியா! வடக்கு-கிழக்கில் இராணுவ ஆட்சி ஏற்படப்போகிறதா?

கோ. யோகராணி, இரத்தினபுரி.

போகிறதாவா? அடடே..... இரத்தினபுரியில் இருந்துதானே கேட்டிருக்கிறீர்கள்.

★ நியூஸிலாந்துக்கு எதிராக இந்தியாவின் ஆட்டம் எப்படி?

அ. பரமேஸ்வரன், நவிண்டில்.

பிரமாதம்தான். ம்...(பெருமூச்சு) என்ன ஆடி என்ன? பொறுத்த கட்டத்தில் பொசுக்கென்றாகிவிட்டதே!

★ இராமாயணத்தில் இத்தனைகாலமாக முயன்றும் ஒரு பிழைதானே பிடித்திருக்கிறார்கள் என்று 'சண் அரட்டை அரங்க'த்தில் விசு கூறியிருக்கிறாரே? வேறு பிழைகளே இல்லையா?

வீ. தாமோதரன், கொழும்பு-06.

நானும் கேட்டேன். வாலியை மறைந்திருந்து கொன்றதை குறைகூறுவதையே விசு குறிப்பிட்டுக் காட்டினார். அதைக்கூட ஒரு கொரில்லாவை (மனிதக் குரங்கை) கெரில்லா தந்திரம் மூலம் இராமன் கொன்றதாக வைத்துக்கொள்ளலாம். அனுமானிடம் சீதையைப் பற்றிய அடையாளங்கள் என்று கூறி சொல்லக்கூடாத அடையாளம் யாவும் இராமர் சொல்வதாக பாடல்கள் வருகிறதே! அது தப்பு. யாரோ ஒருத்தனின் வசையை நம்பி சீதையை தீக்குளிக்கச் சொன்னாரே இராமன்! அது மகாமகாத் தப்பு. இப்படி ஒரு பட்டியலே போடலாம்.

★ டியர் சிந்தியா! பரபரப்பான செய்திகள் என்றால் என்ன? எப்படியிருக்கும்? ஒரு உதாரணம் சொல்லுங்களேன்?

இ. ரவிமாறன், திருக்கோணமலை.

"நேற்றிரவு திருடர்கள் ஒரு வங்கியில் நுழைந்து ஐந்து இலட்சம் ரூபாயை கொள்ளையடித்துக் கொண்டு மறைந்துவிட்டார்கள். காவல்துறையினர் திருடர்களின் கொள்ளையடித்தலுக்கான நோக்கம் என்னவென்று கண்டுபிடிக்க இயலாமல் திணறிக் கொண்டிருக்கிறார்கள்."

★ அரசியல்வாதிகள் ஒருவரை ஒருவர் தாக்கிப் பேசுவதில் நாகரிகத்தையே கடைப்பிடிக்க மறக்கிறார்களே?

எம். நவாஸ், அக்கரைப்பற்று.



சிவாஜிகணேசன்-'ஒன்ஸ்மோர்'

எங்கும் அதுதான்கதை.

பிரிட்டிஷ் மந்திரி ஒருவர் தனது நாயுடன் வோக்கிங் போய்க்கொண்டிருந்தார். எதிர்க்கட்சி அரசியல்வாதி ஒருவர் எதிரே வந்தார். விசாரித்தார்:

"ஏன் இந்தக் கழுதையுடன் வோக்கிங் போகிறீர்கள்?"

மந்திரிக்கு வந்தது பாருங்கள் கோபம்;

"என்ன உங்களுக்கு கண்பார்வை மங்கிவிட்டதா? கழுதையா இது? இது நாய், தெரிகிறதா நாய், நாய்!" என்றார்.

எதிர்க்கட்சி அரசியல்வாதி உடனே சொன்னார்;

"நான் உங்களைக் கேட்கவில்லை; நாயிடம் அல்லவா பேசிக்கொண்டிருந்தேன்!"

★ தொலைபேசியை ஏன் தொல்லைபேசி என்றழைக்கிறார்கள்?

பி. ஹலீல்தீன், காத்தான்குடி

ஃபோன்மணி அடித்தது, எடுத்தபோது;

"உங்கள் ஃபோன் நம்பர் 6040226?"

"இல்லை இது 6040227"

"அப்படியா? கொஞ்சம் பக்கத்துவீட்டில் இருக்கும் மிஸ்டர் ஜினோவைக் கூப்பிடுகிறீர்களா?"

★ விபரம் அறியாமல் கோபப்படுபவர்கள் பற்றி என்ன நினைக்கிறீர்?

சி. மேகலா, கொழும்பு-11.

அதனால் சில சமயங்களில் தங்களைத் தாங்களே தாழ்த்தியும் கொள்வார்கள். உதாரணக் கதை ஒன்று:

தன் மனைவியை அழைத்துக்கொண்டு டாக்டரிடம் சென்றார் ஒருவர்.

"என் மனைவி கர்ப்பமாக இருக்கிறாள் டாக்டர். அவள் வயிற்றில் உள்ள குழந்தை ஆணா, பெண்ணா என்று அறிந்து சொல்லுங்கள்," என்றார்.

டாக்டர் அவளைப் பரிசோதித்தார். "அவள் கர்ப்பிணி இல்லை. வாயுத் தொல்லையால்தான் வயிறு பெரிதாகி இருக்கிறது," என்றார் டாக்டர்.

அந்த ஆளுக்கு ஆத்திரம் பொத்துக் கொண்டுவந்துவிட்டது.

"டாக்டர் நீங்கள் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள்? அப்படியென்றால் நான் என்ன வெறும் சைக்கிள் பம்புதானா?"

★ மைக் டைசன் ஹொலி ஃபீல்ட்டின் காதைக் கடித்தது நியாயமா?

சி. தர்மா, பதுளை.

'அவர் எப்போது பார்த்தாலும் கண் புருவத்தில் கும் கும்மென்று குத்துவது முறையா? அதை மட்டும் கண்டிப்பார் இல்லையா?' என்று கேட்டிருக்கிறாரே டைசன். எப்படியோ இனிமேல் டைசனுடன் யார் மோதினாலும் எதையெதைக் கடிப்பாரோ என்று உளவியல்ரீதியாக ஒரு பயம் இருக்கச் செய்யும்.

★ சமீபத்தில் வெளியாகியுள்ள தமிழ்ப் படங்கள்?

பி. அபிராமி, வத்தேகம.

'ஒன்ஸ்மோர்', 'தேவதை', 'வி.ஐ.பி', 'ஓம்', 'சூர்யவம்சம்', 'பகைவன்'.

★ டியர் சிந்தியா! தமிழ்நாட்டில் தற்போது கலக்கல் நடத்தும் படம் எது?

ஆர். வாமதேவன், கல்லாறு.

'பிஸ்தா' பிய்த்துக்கொண்டு கொட்டுகிறது வசூலை!

★ தமிழ் சினிமா உலகின் எதிர்காலம் எப்படி இருக்கும்?

கு. கதிரேசன், கண்டி.

எதிர்காலம் எப்படியிருக்குமோ தெரியாது; நிகழ்காலம் சொல்லிக்கொள்ளும்படி இல்லை. ஒரே ரகளை. நடிகர்கள் சங்கத்தில் அடி தடி. அது முடிந்த கையோடு சினிமா கிளைமாக்ஸ் மாதிரி இயக்குநர்கள் பாலசந்தர், பாரதிராஜா ஆகியோரை துரத்தித் துரத்தி அடித்திருக்கிறார்கள் துணை நடிகர்கள் சங்கத்தினர். இனிமேல் நிஜமான சண்டைக் காட்சிகளையே படமாக்கலாம் போலிருக்கிறது.



கீர்த்தி ரெட்டி - 'தேவதை'

★ தற்பெருமை பேசுபவர்கள் பற்றி என்ன நினைக்கிறீர்கள் சிந்தியா?

திருமதி வசுமதி மனோகரன், ஆரையம்பதி.

சில நேரம் அவர்களே அசடுவழிய வேண்டியிருக்கும்.

ஒரு தற்பெருமைக்காரர் வீட்டில் தேநீர் பரிமாறப்பட்டது. வீட்டுக்காரர் தேயிலையின் சிறப்பைப் பற்றி பெருமை அடித்துக் கொண்டார்.

"இந்த ரீயை நான் வெளிநாட்டில் இருந்து தருவித்தேன்."


விருந்தினர் நிதானமாகச் சொன்னார்;

"தெரிகிறது. அதனால்தான் இப்படி ஜில்லென்று இருக்கிறது!"

www.padippakam.com

# இராமாயணம் அங்கம் 91

## முதற் போர் முழக்கம்



இராமபிரான் பர்ணசாலையில் இடம் பெற்ற ஆயுதபூஜையில் கலந்து கொண்டார். புதிய ஆயுதங்கள் அனைத்துக்கும் மந்திர உச்சாடனங்கள் மூலம் உரிய சக்தி ஊட்டப்பட்டது. படை அணிகளைச் சேர்ந்த தளபதிகள் அனைவரும் வெளிப்புறத்தே இருந்த பரந்த வெளியில் அணிவகுத்து நின்றிருந்தனர்.

சடங்குகள் முடிவடைந்ததும் இராமபிரான் வெளியே வந்து தளபதிகளின் அணிகளைப் பார்வையிட்டார். சமுத்திரம் போல் பரந்து செறிந்து காணப்பட்ட தளபதிகள் அனைவரும் இராமபிரானுக்கு தமது மரியாதையுடன் கூடிய வணக்கத்தைத் தெரிவித்தனர். "இராமஜெயம்! இராமஜெயம்! இராமஜெயம்!" என்ற வாழ்த்தொலி வானை முட்டி எதிரொலித்தது.

இலக்குமணன், சுக்கிரீவன், விபீடணர் மற்றும் ஆஞ்சநேயர் ஆகியோர் பயபக்தியுடன் ஆயுதங்களைக் கொண்டு வந்து இராமபிரான் முன்னிலையில் குவித்தனர். அவற்றிலிருந்து ஒவ்வொரு ஆயுதமாகப் பொறுக்கி எடுத்த இராமபிரான், தானைத் தளபதிகள் ஒவ்வொருவருக்கும் கொடுத்தார். அவர்களும் பயபக்தியுடன் முன்வந்து இராமபிரானின் தாள் தொட்டு வணங்கி ஆயுதங்களைப்பெற்றுக் கொண்டனர். வைபவ ரீதியாக ஆயுதம் வழங்குவது முடிவடைந்ததும் இராமபிரான் சில விளக்கங்களை எடுத்துரைத்தார்.

"ஏற்கனவே கூறியிருப்பதுபோல் அதர்மத்தை ஒழித்து தர்மநெறியைத் தளைக்க வைக்கும் நோக்குடன் போரிடவே நாம் முன்வந்துள்ளோம். போர் என்று முடிவான பின்னரும்கூட தர்ம விதிப்படி இராவணனிடம் இளவரசன் அங்கதனைத் தூதனுப்பியுள்ளோம். எத்தகைய சமாதானமான நிலைப்பாட்டையும் இலங்கை வேந்தன் ஏற்றுக் கொள்ளப்போவதில்லை என்பது திண்ணம். ஆகவே போர் நிச்சயமாகிவிட்டது. தூது சென்ற அங்கதன் எத்தகைய முடிவுடன் வருவான் என்பதனை எதிர்பார்த்தே போர் முரசறையப்படும். ஆகவே உங்கள் அணிகளைத் தயார் நிலையில் வைத்திருங்கள்!"

### பாறைகளும் மரங்களும்

இவ்வாறு இராமபிரான் கூறியதும் அணித்தளபதிகள் தத்தமது அணிகளை நோக்கிப்புறப்பட்டனர். அணித்தளபதிகளிடம் மட்டுமே வேல் போன்ற ஆயுதங்கள் இருந்தன. வானரப் படையின் ஏனைய வீரர்களிடம் ஆயுதங்கள் இருக்கவில்லை. மலைகளிலிருந்து பெயர்த்தெடுக்கப்பட்ட பெரும் பாறைகளும் வேரோடு பிடுங்கப்பட்ட பெருமரங்களும் மலைகளாகக் குவிக்கப்பட்டிருந்தன.

படைமுகத்துக்குச் செல்லும் வீரர்கள் ஒருபுறமிருக்க, மற்றுமோர் அணி பிறிதோர் பணியினைத் தொடங்கச் சித்தமாயிருந்தது. அவர்களும் பெருவிருட்சங்களையும் பெருங் கற்பாறைகளையும் தம்மருகில் குவித்து வைத்துக்கொண்டு, கட்டளைகளுக்காகக் காத்திருந்தன.

***

இலங்கை மாநகரின் அரியணையிலிருந்து படிகளின் வழியே கீழிறங்கி வந்த இராவணன், அங்கதன் அமர்ந்திருந்த ஆசனத்தருகே நின்றான். அங்கதனும மரியாதைக்காக தனது ஆசனத்திலிருந்து எழுந்து நின்றான்.

அங்கதனைப் பார்த்து இராவணன் சொன்னவற்றை கவிஞர் பெருமான் இவ்வாறு கூறுகிறார்:

**உந்தை என் துணைவன் அன்றே**
**ஒங்கறச் சான்றும் உண்டால்**
**நிந்தனை இதன் மேல் உண்டோ**
**நீ அவன் தூதன் ஆதல்**
**தந்தனன் நினக்கு யானே**
**வானரத் தலைமை தாழா**
**வந்தனை நன்று செய்தாய்**
**என்னுடை மைந்த! என்றான்.**

*(யுத்த காண்டம்-939)*

பொருள்:

***"உன்னுடைய தந்தை எனது நண்பன். இதற்குத் தக்க சான்றுகளும் இருக்கின்றன. அவ்வாறு இருக்கும்போது நீ அந்த நரனுக்குத் தூதனாக வருவது கேவலம் அல்லவா? அது பெரும்பழியும் ஆகும். அப்பணியை விட்டு விடு. தக்க தருணத்தில் வந்திருக்கிறாய். என் மகனே! வானர இனத்துக்கு உன்னைத் தலைவனாக்கி விட்டேன்," என்று அங்கதனிடம் இராவணன் கூறினான்.***

* * *

### அங்கதன் கூற்று

"வானர இனத்துக்கு உன்னைத் தலைவனாக ஆக்குகிறேன்!" என்று இலங்கேஸ்வரன் கூறியதும் தன் இரு கைகளையும் தட்டி, அந்த அரசவையே அதிரும் வண்ணம், பலமாகச் சிரித்தான் அங்கதன். தொடர்ந்து இராவணனைப் பார்த்து,

"என் தந்தைக்கு நிகரான இலங்கை மாநகரின் அதிபதியே! நீர் இதுவரை புரிந்துள்ள அக்கிரமங்கள் அனைத்துக்கும் மொத்தமாக உம் அரக்கர் இனத்தையும் உம்மையும் சேர்த்து வேரோடு அழித்தொழிக்கவே எமது தலைவன் இராமச்சந்திரப் பிரபு அவதாரம் எடுத்துவந்திருக்கிறார். உம் இனத்தைச் சேர்ந்த பராக்கிரமசாலிகளான பலரை தன் கணைகளால் வீழ்த்தியவர் எம் தலைவர். நீர் உமது இனத்தையே பேரழிவுக்கு இட்டுச் செல்ல வழி வகுத்துவிட்டதைக் கண்டு உம்மைவிட்டு உமது அன்புத் தம்பியான விபீடணரே எமது அணி நாடி வந்துவிட்டார்! இதுவரை நடந்து முடிந்துவிட்ட சம்பவங்களையாவது நினைத்துப் பார்த்து, சீதாப்பிராட்டியாரை இராமபிரானிடம் சேர்ப்பித்து அன்னாருடைய மன்னிப்பைப் பெறுவாயாக! இல்லையேல் உடனே போருக்குப் புறப்படுவீராக! இதற்குமேல் என்னிடம் சொல்வதற்கு வேறு எதுவுமில்லை!" என்று கூறி முடித்தான் அங்கதன்.

இராவணன் முன்னிலையில் இத்தகைய வார்த்தைகளை-ஆஞ்சநேயரைத் தவிர வேறு எவரும் துணிந்து கூறியதில்லை. ஆஞ்சநேயரைத் தொடர்ந்து வந்த இந்தச் சின்னஞ்சிறு குரங்கு கூறிய வார்த்தைகளால் இராவணன் அவமானத்தால் கூனிக் குறுகிப் போனான். உடனடியாக அங்கதனைப் பிடித்து நிலத்தில் ஓங்கி அடித்துவிடலாமா என்று அவன் கைகள் துடித்தன. ஆனால் இந்தச் சின்னஞ்சிறு பிராணியைத் தானே கொல்வது தனது பெருமைக்கே இழுக்காகி விடும் என்று கருதி கனவேகமாகச் சென்று அரியணையில் ஏறுவதற்கு முதலாவது படியில் நின்றவாறே அங்கதனை முறைத்துப் பார்த்தான். கோபக் கனலால் அவனுடைய இருபது கண்களும் சிவந்து தீச்சுவாலையைக் கக்கின.

தன் இருகைகளையும் இரு முறைதட்டி ஒலி எழுப்பியதும் இருகாவலர்கள் ஈட்டிகளை ஏந்திய வண்ணம் வந்து நின்றனர். தனது வாயால் எந்த வார்த்தையும் பேசாமல், அங்கதனை இழுத்துச் சென்று கொன்றுவிடுமாறு சைகை மூலம் உத்தரவிட்டான். காவலர்கள் அங்கதனை இரு புஜங்களில் பிடித்தவாறு வெளியேறினர்.

மூவரும் அரண்மனையை விட்டு வெளிவாயிலுக்கு வந்ததும் அங்கதன் இரு காவலர்களையும் தன் இருகைகளாலும் இறுக்கமாகப் பிடித்த வண்ணம் ஆகாயவெளியில் பாய்ந்தான். அடுத்த கணம் அந்த இரு காவலர்களின் தலைகள் வேறாகவும் முண்டங்கள் தனியாகவும் நிலத்தில் வீழ்ந்தன. இக்காட்சியைக் கண்ட வெளிப்புறக்காவலர்கள் நடுநடுங்கினர். சிலர் ஓடிச் சென்று இராவணனிடம் முறையிட்டனர். இராவணன் கற்சிலை போல் தன் அரியாசனத்தில் அமர்ந்திருந்தான். அவன் சிந்தனையில் பலதரப்பட்ட எண்ணங்களும் சிறகடித்தன. பெரும்பாலும் அவனுடைய எண்ணங்கள் சீதையிடமே மையங் கொண்டிருந்தன. எப்படியாவது சீதையை அடைந்தே தீருவது என்ற முடிவு தான் மேலோங்கியது.

### அமைதிக்கு வழியில்லை

விண்ணிலே தாவிய அங்கதன் நேராக இராமபிரான் இருந்த பாசறையின் அருகே சென்று தரை இறங்கினான். ஓடிச்சென்று அன்னாரின் முன்னிலையில் சாஷ்டாங்கமாக விழுந்து தாள் தொட்டு வணங்கினான். இராமபிரான் அங்கதனின் தோள் தொட்டுத் தூக்கி நிறுத்தினார்.

இலங்கையர்கோன் அரசவையில் இடம் பெற்ற சம்பவங்களை இராமபிரானிடமும் ஏனையோரிடமும் விபரமாக எடுத்துக் கூறியதும் சகலரும் போர் புரியும் கோலம் பூண்டனர்.

முதற் கட்டமாக இலங்கை மா நகரைச் சுற்றி அமைக்கப்பட்டிருந்த அகழியினைத் தூர்ப்பதற்காக நியமிக்கப்பட்டிருந்த வானர வீரர்கள் தம்பணியினைத் தொடங்கினர். பெரு மரங்களையும், குவித்து வைக்கப்பட்டிருந்த பாறாங்கற்களையும் கொண்டு அகழிக்குள் போட ஆரம்பித்தனர்.

பெருவாய் திறந்த வண்ணம் அகழிக்குள் கிடந்த முதலைகளும் மீனினங்களும் அகழிக்குள் அமிழ்ந்தன. நீரில் நிறைந்திருந்த நீலோற்பலச் செடிகளும் தாமரை, அல்லி போன்ற தாவரங்களும் அப்படியே மறைந்தன. பல்லாயிரக்கணக்கான வானர வீரர்கள் ஒரேகாலத்தில் தொடங்கிய அகழி தூர்க்கும் பணி ஒரு சில நாளிகைகளுள் முடிவுற்றது. வானரவீரர்கள், மூடிக்கிடந்த கோட்டை வாயிற் கதவுகளையும் கோட்டை மதில்களையும் பெருமரங்களால் முட்டி மோதி உடைக்கத் தொடங்கினர்.

வானரப் படைகள் முரசு, கொம்பு குழல் முதலானவற்றை ஒலியெழுப்பி போர் தொடங்கிவிட்டதைத் தெரிவித்தன. இதே வேளை இலங்கை மாநகரக் கோட்டையின் வடபுறத்தே இருந்த வாயிலை ஒட்டிய மதில் இடிந்து விழுந்தது. வானர வீரர்களால் இடித்துத் தகர்க்கப்பட்ட மதில் சாய்ந்ததும் கோட்டையினுள்ளிருந்து வானரப் படைகள் புற்றீசல்போல் பறந்து வெளிவந்தன. திடீரென வெளிவந்த அரக்கர் சேனையில் யானை, குதிரை, தேர் முதலானவற்றுடன் ஆயுதங்களை ஏந்திய காலாட்படையும் வருவதைக் கண்ட-அகழியைத் தூர்க்கவும் மதிலை இடிக்கவும் முன்னின்ற வானரப் படைகள் அச்சங்கொண்டு பின்வாங்கின.

வானரப் படைகளின் தளர்வு நிலை கண்ட சூரியன் மகன் சுக்கிரீவன், ஏற்கனவே வேருடன் பிடுங்கி வைக்கப்பட்டிருந்த வெண்கடம்ப மரத்தினை இரு கைகளாலும் தூக்கிப் பிடித்த வண்ணம் அரக்கர் படை நடுவே புகுந்தனன். பம்பரம் போல் சுழன்ற வண்ணம் சுக்கிரீவன் அங்குமிங்கும் பாய்ந்து தாக்கியமையினால், அவன் எங்கே நின்று போரிடுகிறான் என்று தெரியாமல் அரக்கர் வீரர்கள் தடுமாறினர்.

(தொடர்ந்து வரும்)

இராஜகுமாரன்

### இராமாயணப் போட்டி: 89

**சரியானவிடை:- ஆஞ்சநேயர் அல்லது அனுமன்**

1. நிரஞ்சலா சத்தியநாதன், 105,7/B தூவவத்தை, ராகமம.
2. செல்வி என். ராஜம், 30,2 ஆம் வட்டாரம், களுதாவளை, மாத்தளை.
3. செல்வி ஐ. சிவோனி செல்வரட்ணம், இல 262/15 அளுத்மாவத்தை,கொழும்பு-15.
4. கேசக மூர்த்திதனுஷன், 49/14 புகையிரத நிலைய வீதி, மட்டக்களப்பு.
5. செல்வன் க.கருணாகரன், ம.மா கொத்/இறம்பொடை த.ம.வி., இறம்பொடை.

**போட்டி இல. 91** கேள்வி:- **இராவணன் அங்கதனுக்கு எத்தகைய பதவி தருவதாக வாக்களித்தான்?**

*ஜூலை. 19 க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:*

**இராமாயணப் போட்டி–இல.91, தினமுரசு வாரமலர், த.பெ.இல–1772, கொழும்பு.**

# மணமகள் இல்லாத -கல்யாணம்-

காதிலை பூகந்தசாமி

இதனால் சகலமானவர்களுக்கும் தெரிவிப்பது என்னவென்றால் அரசியல் தீர்வு விவாதங்களுடன் இதனை யாராவது தொடர்புபடுத்திப் பார்த்தால் நாம் அதற்கு பாத்திரவாளிகளல்ல என்பதை இத்தால் அறியத்தருகிறோம். டும்.டும்.டும்.



**பாத்திரங்கள்**

**புரோக்கர் சீலன்**
**அண்ணர் சபா சிதம்பரம்**
**தம்பி குமாரர்**
**மற்றும் சுற்றத்தாரான முன்னாள் தம்பிமார்கள்**
**பெண் வீட்டார்**

சபாசிதம்பரமும் ஒரு நாற்காலியை கெட்டியாகப் பிடித்தபடி அமர்ந்திருக்கிறார். ஏனையோர் அங்கு வந்து அமர்கின்றனர். புரோக்கர் சீலன் ஓடியாடி அனைவரையும் வரவேற்கிறார்.

**புரோக்கர் சீலன்:** வாங்கோ. வாங்கோ. மணமகளை காண வந்துள்ள உங்கள் அனைவரையும் வருக, வருக என்று வரவேற்கிறேன்.

**குமாரர்: வரவேற்பது இருக்கட்டும். மணமகள் எங்கே காட்டும்?**

**புரோக்கர் சீலன்:** இதற்காகத்தான் இவரை நாங்கள் அழைப்பதில்லை. மணமகள் ரெடியாக இருக்கிறார். அணிகலன்கள் பூட்டவேண்டாமா. அலங்காரம் செய்ய வேண்டாமா? அணிகலன் என்ன வேண்டும்? அலங்காரம் எப்படி வேண்டும் என்று முதலில் நாம் ஒரு முடிவுக்கு வந்தால்தானே பெண் வீட்டாருடன் நான் போய் பேசி மணமகளை கலாதியாக கொண்டுவரலாம்.

**தம்பிமார்:** (ஒரே குரலில்) என்னண்ணை சொல்லுறியள்? இன்னமும் மணமகளே ரெடியாக வில்லையோ?

**சபாசிதம்பரம்:** (உணர்ச்சிவசப்பட்ட குரலில்) தம்பிமாரை நான் மனமுருகி கேட்டுக் கொள்கிறேன்: தயவுசெய்து குழப்பாதேங்கோ! இப்படித்தான் 1957ல் திடகாத்திரமான மணமகள் ரெடியாக இருந்தவள். என் இளமைத்துடிப்பாலே அந்தக் கலியாணத்தை குழப்பிப்போட்டேன். காலம் காலமாக இப்ப கவலைப்பட்டுக்கொண்டிருக்கிறேன்.

**புரோக்கர் சீலன்:** ஐயா அனுபவத்தைச் சொல்லுறார். பெண்வீட்டார் பெரிய இடம். நாங்கள்தான் கொஞ்சம் அனுசரித்துப் போகவேணும்.

**குமாரர்: குறுக்கிடுவதற்கு மன்னிக்கவேணும் மிஸ்டர் சீலன். தன்னால்தான் கலியாணம் குழம்பினதாக மிஸ்டர் சிதம்பரம் சொல்லுறதை நான் ஆட்சேபிக்கிறேன்.**

**புரோக்கர் சீலன்:** சட்டப்படி ஐயா சொல்லுறது சரி: நீர் ஏதோ திட்டப்படி பேசுகிறீர்!

**குமாரர்: ஐ நோ த லோ! இவர் கூடாது என்று சொன்னதற்காக அல்ல, பெண் வீட்டார் கொடுக்க விரும்பாததால்தான் அன்று கலியாணம் நடக்கவில்லை. மிஸ்டர் சிதம்பரம் தன்னை ஒரு இளமைத்துடிப்புள்ள அழகன் என்று நினைப்பதை நான் எதிர்க்கவில்லை. ஆனால் அன்று இவரைவிட அப்பனான அழகர்கள் பலர் இருந்தார்கள் என்பதால், கல்யாணம் நடக்க இருந்தது தனக்கு என்றும், நடக்காமல் போனது தன்னால் என்றும் இவர் கூறுவது தன்னடக்கமற்ற கூற்றேயல்லாமல் வேறொன்றுமில்லை. அன்று சுயம் வரத்துக்கே இவரை யாரும் அழைக்கவில்லை. இவரோ: திருமணம் நடக்காதது தன்னால்தான் என்று புலம்புகிறார்.**

**சபா சிதம்பரம்:** (கோபம் கொப்பளிக்க) ஐசே குமாரர், 77ல் நாங்கள் தனிக்குடித்த னத்துக்கு சம்மதித்தால்தான் கல்யாணம் என்று சொன்னபோது நீர் அதனைக் கிண்டலடித்ததை மறந்து போனீரோ?

**குமாரர்: தவறுதான் ஒப்புக்கொள்ளுகிறேன்! ஆனால் அந்தத் தவறு எனக்கு மட்டும் சொந்தமல்லவே! தமிழரசுக் கட்சியில் இருந்து பிரிந்து சென்று சுயாட்சிக்கழகம் தொடங்கினாரே ஊர்காவத்துறை நவரத்னம். தனித் தமிழ்நாடு அவர் கேட்டபோது விழுந்தடித்து கிண்டல் பண்ணியவர்தானே நீங்கள். பின்னர் 77 தேர்தலில் 'தமிழீழம், தமிழீழம், போனால் கிடைக்காது, வாக்கு போடா விட்டால் கிட்டாது. போடு புள்ளடி' என்று தமிழ்த்தை ஏதோ சுண்டல்பொதி மாதிரி கூவி விற்றவர்கள்தானே நீங்கள்! கிண்டல் பண்ணிய கோரிக்கையை பின்னர் உங்கள் கோரிக்கை என்று நீங்கள் உரிமை கோர முடியுமானால், என்னை மட்டும் அன்று மறுத்தவன் இன்று ஏன் ஏற்றுக் கொள்கிறாய் என்று கேட்பது என்ன நியாயம்?**

**சபா சிதம்பரம்:** (தம்பிமாரைக் காட்டி) இவையும்தான் ஒருகாலத்தில் தனிக் குடித்தனம் கேட்டு சண்டைபிடிச்சவை. எங்களை மட்டும் ஏன் சொல்லுகிறீர்?

**தம்பிமார்:** ஐயா! நீங்கள்தானே சண்டைபிடிக்கச் சொன்னனியள்?

**சபா.சி:** எனக்கு கெட்ட கோபம் வரும் சொல்லிப்போட்டேன். நாங்களே உங்களைக் கத்தியைத் தூக்கச் சொன்னனாங்கள்.

**தம்பிமார்:** ஐயா கோபிக்கக்கூடாது: கத்தியை தூக்கிய சிவகுமாரனை இவனே மணமகன், நல்ல ஆண்மகன் என்று நீங்கள் வாய்கொள்ளாமல் புகழ்ந்ததைக் கேட்டால் யாருக்குத்தான் ஆசை வராது? ஐயா கோபிக்கக்கூடாது, நீங்கள் கேட்கிறது என்ன மாதிரி இருக்குது தெரியுமோ, கட்டழகி ஒருத்தி அங்கங்கள் காட்டி ஆடிப்போட்டு, காளைகள் உணர்ச்சி வசப்பட்டதற்கு நானோ காரணம் என்று கேட்பதுமாதிரி இருக்கிறது!

**சபா.சி:** (டென்ஷனாகிறார்) நாங்கள் என்ன காபரேயோ ஆடினனாங்கள்?

**தம்பிமார்:** இல்லை ஐயா கர்ஜித்து ஆடினனீங்கள்.

**சபா.சி:** நாங்கள் துரோகிகளை கொல்லக்கூடிய கோபம் வருமளவுக்கு பேசியிருக்கலாம், காரணங்கள் கூறியிருக்கலாம், ஒருநாளும் கொல்லச் சொன்னதில்லை. ஆயுதம் ஏந்த வேண்டிய அளவுக்கு ஆவேசமாகப் பேசி இருக்கலாம், ஒருநாளும் ஆயுதம் ஏந்தச் சொன்னதில்லை. தமிழ்ழமே முடிந்த முடிவு என்று பேசியிருக்கலாம், பேசி முடித்த பிறகு முடிவை மாற்றமாட்டோம் என்று சொல்லியிருக்கிறோமா?

**புரோக்கர் சீலன்:** ஐயா சொல்லுறது சரி, சட்டப்படி பார்த்தால் நாங்கள் செய்தது, பேசியது எதுவும் தப்பேயில்லை. சரி விடுங்கோ, கலியாண விஷயத்துக்கு வாங்கோ, மணமகளுக்கு என்னென்ன அலங்காரங்கள் செய்யவேணும் அதைச் சொல்லுங்கோ.

**குமாரர்: மணமகள் திருமண வயதுடையவராக உள்ளாரா? மணமகள் திருமணத்துக்கு சம்மதிப்பாரா? மணமகள் மணமகனுக்கு சமமானவர்தானா? மணமகளுக்கு குடித்தனம் நடத்தத் தெரியுமா? இந்த நாலு கேள்விக்கு முதலில் பதில் சொல்லுங்கோ?**

**புரோக்கர் சீலன்:** இதெல்லாம் பழைய கேள்விகள். மணமகள் ஒரு பெண்ணாக இருந்தால் போதும். சட்டப்படி ரைட்.

**குமாரர்: ஐ நோ த லோ. மைனராக இருந்தால் மணமகளே அல்ல. மேஜராக இருக்கவேணும்! செல்லாத கலியாணத்தைப் பற்றி பேசி நேரத்தை செலவழிக்க வேண்டாம் மிஸ்டர் சீலன்.**

**புரோக்கர் சீலன்:** கலியாணத்துக்கு சம்பந்தமில்லாத விஷயங்களை பேசவேண்டாம். இதே விஷயங்களை 56ல் 66ல் 76ல் 86ல், 96ல் என்று அந்தக் காலத்திலேயே நாங்கள் பேசிய போது நீர் எங்கிருந்தீர்? எனவே இப்போது அதை பேசவேண்டாம்?

**தம்பிமார்:** எங்களைக் கொஞ்சம் பேசவிடுங்கோ, கட்டின புடவையோடு வந்தாலும் சம்மதம் தான். முதலில் மணமகளைக் காட்டுங்கோ?

**சபா.சி:** மணமகளிடம் எத்தனை அம்சங்கள் இருக்குது தெரியுமோ? நல்ல நல்ல அம்சங்கள் எல்லாம் இருக்கிறது. சமைக்கத் தெரியுமாம். சரசம் தெரியுமாம். சாப்பிடவும் தெரியுமாம். இப்படியொரு மணமகள் கிடைப்பதை இளமைத் துடிப்பில் கெடுத்துப்போடாதேங்கோ.

**தம்பிமார்:** அதுதான் கட்டின புடவையோடு வந்தாலும் ஓ.கே என்று சொல்லுறம்தானே. பிறகு ஏன் லேட் பண்ணுறியள்?

**ஒரு குரல்:** புடவை இல்லாமல்கூட வரட்டும். முதலில் மணமகள் இருக்காளா இல்லையா? கொஞ்சம் கேட்டுச் சொல்லுங்கோ

**குமாரர்: (கோபத்தோடு வெளிநடப்பு செய்கிறார்)**

**(பெண்வீட்டாரிடம் புரோக்கர் சீலன் எல்லோரையும் அழைத்துப் போகிறார்)**

**அணிலண்ணர்:** வாங்கோ, வாங்கோ, இந்தக் கலியாணத்துக்கு நான் எதிர்ப்பில்லை. நல்ல பேஷா நடக்கட்டும். சுபகாரியங்களுக்கு நாங்கள் குறுக்கே நிற்கமாட்டோம்.

**பலகுரல்கள்:** (ஆஹா.. ஓஹோ ஓஹோ.. வரவேற்று ஒரு விளம்பரம் போடவேணும்.. அணிலண்ணா இது நல்ல பதிலண்ணா)

**அணிலண்ணா:** பொறுங்கோ, நான் இன்னமும் சொல்லி முடிக்கேல்லை. எப்படிப்பட்ட மணமகள் தேவை, என்ன ரைப்பிலே தேவை, நகை நட்டு என்ன அயிட்டத்தில் இருக்க வேணும் எண்டெல்லாம் முடிவு பண்ணிப்போட்டியளோ?

**பல குரல்கள்:** இல்லை. இல்லை. இல்லை.

**அணிலண்ணா:** அப்பாடா நல்லாதாய் போச்சு. முதலில் அதையெல்லாம் முடிவு பண்ணினால்தானே மணமகளை ரெடி பண்ணலாம்.

**(முப்பதுநாளின் பின்னர் மீண்டும் போகிறார்கள்)**

**பல குரல்கள்:** கட்டின புடவையோடு வந்தாலும் சம்மதமே. தேவை மணமகள்தான்.

**அணிலண்ணா:** (சற்று யோசித்துவிட்டு) **அதெப்படி ஏற்றுக் கொள்கிறது. நீங்கள் மட்டும் சொன்னால் சரியோ? முக்கிய சம்பந்தியை காணேல்லையே. என்ன முழிக்கிறியள்? புலியண்ணாவும் வரட்டும்.**

**(இறுதியாக மணமகளின் தந்தையிடம் செல்கிறார்கள் தந்தையார் சிலருடன் பேசிக்கொண்டிருப்பது இவர்கள் காதில் விழுகிறது!)**

மணமகள் விடயத்தில் மணமகனின் உறவினர்களிடம் ஒரே கருத்து கிடையாது. மணமகனே விரும்பாவிட்டால்கூட இந்த கல்யாணம் நடந்தேதீரும். நடந்தே தீரும். நடந்தே தீரும்.

தம்பிமார் திரும்பி புரோக்கர் சீலனை தேடுகிறார்கள். அவர் மணமகளின் தந்தையார் வீட்டு மாடியில் நின்று கையசைக்கிறார். தம்பிமாருக்கு தலை சுற்றுகிறது. பாடல் ஒலிக்கிறது.

*"சட்டி சுட்டதடா கை விட்டதடா*
*புத்தி கெட்டதடா நெஞ்சைத் தொட்டதடா*
*நாலும் நடந்து முடிந்த பின்னால்*
*நல்லது கெட்டது தெரிந்தடா"*



படிப்பகம்

Regd. as a News Paper at the G.P.O.(QD/43/NEWS/97)
www.padippakam.com




அருள் ஜுவலர்ஸ்
ARUL JEWELLERS
பெண்களின் அழகோ இரகசியம்! அதை எங்களது வண்ண நகைகள்மின்னிப்பேசுகின்றன
கிளை:
105. காலி வீதி.வெள்ளவத்தை.கொழு-06 580230
3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு. கொழும்பு
436331


# தொங்குமான்



# கலைநயம்

'தேனீர் கேத்தல்' போலவே கச்சிதமாக வடிவமைக்கப்பட்டுள்ள ↓ ஒரு பெற்றோல் நிலையம் இது. இதற்கு சொந்தமானவர் கலாரசிகர் மட்டுமல்ல, அரசியல்வாதிகள்மீது அபாரமான கோபமும் கொண்டவர்.

எப்படி என்கிறீர்களா?

1920ம் ஆண்டில் அமெரிக்க ஜனாதிபதியாக இருந்தவர் வாரன் ஹார்டிங். அவரது உள்துறை செயலாளராக இருந்தவர் அல்பேட் ஃபால். அரச உடமையான எண்ணெய் வளத்தை தனியார் கம்பனிகளுக்கு கொடுத்தபோது ஏராளமான பணத்தை சுருட்டி தன் பையில் போட்டுக் கொண்டார். அதனால் மாட்டிக்கொண்டு சிறைவாசம் அனுபவித்தார். 'ரீ பொட் டோம்' என்ற இடத்தில் சேகரிக்கப்பட்ட எண்ணெய் வளத்தில்தான் சுருட்டல் இடம்பெற்றது. அதனால் 'ரீ பொட் ஊழல்' என்று அழைக்கப்பட்டது. 'ரீ பொட்' என்பது தேனீர் கேத்தலுக்கான ஆங்கிலப் பெயர்.

அந்த ஊழல் நடந்து அரைநூற்றாண்டுக்கு மேலாகிவிட்டது. நேற்று நடந்ததையே மக்கள் இன்று மறந்து விடுகிறார்கள். மக்களின் இந்த மறதிதானே உயிரோடு இருந்தபோது மோசமாக இருந்த அரசியல்வாதிகளையும் பின் ஒரு காலத்தில் ஓஹோ என்று போற்றச் செய்கிறது. அதனால் மக்கள் எப்போதுமே 'ரீ பொட்' ஊழலை மறக்காமல் இருப்பதற்காக தேனீர் கேத்தல் வடிவத்தில் தனது எரிபொருள் நிரப்பு நிலையத்தை வடிவமைத்துள்ளார். 'ரீ பொட்' எரிபொருள் நிலையம் இரண்டையும் இணைத்துப் பார்த்தவுடன் நடந்த ஊழல் நினைவுக்கு வருமல்லவா? அதுதான்!






ஸ்ரீ கல்யாணி ஜுவல்ஸ்
SRI KALYANY JEWELLS
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு
5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
323657


← கண்டதுண்டா, நீங்கள் இதைக் கண்டதுண்டா? காண்பதென்ன அணிலோ? என்று நினைக்கிறீர்கள் தானே. அல்ல அல்ல இது குரங்கு! ஆனால் குட்டிக் குரங்குமல்ல. இதன் பூரண அளவே இதுதான். பிடித்து உள்ளங்கைக்குள் ஒளித்துவைக்கலாம். இக் குரங்கின் பெயர் 'பிக்மி மாமொ செட்'. இந்த இனக் குரங்குகளின் எடை ஆக 125 கிராம் மட்டும்தான். பாருங்கள் ஒரு சிறு புல்லின்தாளில் பிடித்துத் தொங்கிக்கொண்டிருக்கிறது. புல்லும் தாங்கும் மென்மையான பாரம்.

உலகிலுள்ள குரங்கினங்களில் 133 வகைகள் உள்ளன. மற்றொரு சமாச்சாரம் யாதெனில்: பல மிருகங்களுக்கு தாம் காணும் காட்சியின் வர்ணபேதம் தெரியாது. ஆனால் குரங்குகளின் கண்கள் சகல வர்ணங்களையும் கிரகிக்கக் கூடியவை. அதாவது கலர் பார்க்கும் கண்கள்.

↓தென் ஆபிரிக்காவின் குருகர் தேசியவனம் வனவிலங்குகளின் சரணாலயம். ஆண்டொன்றுக்கு ஏறத்தாழ ஏழு இலட்சம் உல்லாசப்பயணிகள் இங்குவந்து மிருகங்களின் இயற்கையுடன் இயைந்த வாழ்க்கையைப் பார்த்து வியந்து செல்கின்றனர்.


மானினத்தைச் சேர்ந்த மறிமான் என்றவகை இளமான்கள் ஒன்றாக நின்று ஓடையில் நீர்பருகுவதை இப்படம் காட்டுகிறது. மறிமான்களிலும் ஆண்மான்களுக்கே கொம்பு முளைக்கும். இவை அத்தனையும் பெண்மான்கள் என்பது தெளிவாகத் தெரிகிறது.

இம்மான்கள் வருடத்தில் எக்காலத்தில் கருத்தரித்தாலும் மழை பெய்யும் வரை குட்டி ஈனுவதை இரண்டொரு வாரங்களுக்குத் தள்ளி வைக்கும் தன்மை கொண்டவை என்று கூறப்படுகிறது.

எல்லாமானும் ஒரே விதமாய் தெரிவதால் எந்த மான் இதில் அழகு? என்று தனியாக கூறமுடியாது. மான்கூட்டம் கண்டுவிட்டால் விழிகளுக்கு கொண்டாட்டம்தானே!




# அணிவகுப்பு



# காலடியில் அபாயம்

→ கண்ணிவெடிகள் பற்றிய செய்திகளை கேள்விப்பட்டிருப்பீர்கள். கண்ணிவெடிகளை பார்த்திருக்கிறீர்களா? படத்தில் குவித்து வைத்திருக்கின்றன பாருங்கள், இவைதான் அந்தப் பயங்கர கண்ணிவெடிகள்.

மத்திய ஆபிரிக்காவில் உள்ள நாடு ருவண்டா. அங்கே ஆட்சியைக் கைப்பற்றிய 'ஹுட்டு' இனத்தவர்கள் சிறுபான்மை இனமான 'ருட்சி' இனத்தாரை இனப்படுகொலை செய்ய ஆரம்பித்தனர். இனப்படுகொலை ஆயுதங்களில் ஒன்றாக கண்ணிவெடியும் பயன்படுத்தப்பட்டது. ருட்சி இனத்தவரின் வயல்களிலும், பண்ணைகளிலும் பல்லாயிரக்கணக்கான கண்ணிவெடிகளை புதைத்தனர். இதனால் ஆயிரக்கணக்கான மக்கள் பலியாகியும், ஊனப்பட்டும் போயினர்.

கண்ணிவெடிகள் புதைக்கப்பட்ட பகுதி 'எரிமலை தேசிய வனம்' என்றழைக்கப்படுகிறது. இப்போது ருட்சி இனத்தவர் போராடி அதிகாரத்தை கைப்பற்றியுள்ள இடங்களில் கண்ணிவெடிகளை அகற்றும் பணி நடக்கிறது. கண்டெடுக்கப்படும் கண்ணிவெடி ஒவ்வொன்றுக்கும் 'ருட்சி' அரசு 8 டொலர் சன்மானம் கொடுக்கிறது. அப்படிக் கண்டெடுக்கப்பட்டவைதான் இவை.


## 200 புலமைப் பரிசில்கள்

அமெரிக்க ஜனாதிபதி கிளின்டன் தேர்தல் விஞ்ஞாபனத்தின் போது கூறியது: "நம் நாட்டிலுள்ள அனைத்துக் குழந்தைகளுக்கும் கம்பியூட்டர் அறிவை புகட்டுவேன்!"

பெற்றோர்களே! உங்கள் குழந்தைகளையும் கம்பியூட்டர் உலகிற்கு அழைக்கின்றோம்.

உங்கள் குழந்தைகள் ஆண்டு 5 படித்துவிட்டார்களா என்றால், ரூபா 5,000 பெறுமதியான கீழ்கண்ட பாடநெறியை இலவசமாக—புலமைப்பரிசில் மூலம் கற்கலாம். உங்கள் குழந்தைகளும் கம்பியூட்டர் உலகிற்கு காலடி எடுத்து வைப்பதற்கு **இது ஓர் அரிய சந்தர்ப்பம்!**

இப்பாடநெறியிலுள்ள சிறப்பம்சங்கள்:

** Computer Technology
Types of Computer System,
Printer etc.

** Use of Software Packages
Using a text processing programme
Using a spreadsheet programme
Using graphics packages
Studying about Email, Internet

** Setting up hardware and Software
Text Processing mouse, use of communication ect.
Adjust a monitor display.
Adjust printer.
Care of Equipment.

** Application of Micro Processor-based technology in the feild of Music.

வயதெல்லை 10—16, * வயது 10—12 பரீட்சை—1, வயது 13—16 பரீட்சை—2 புலமைப்பரிசை உங்கள் குழந்தையும் பெறுவதற்கு நீங்கள் செய்யவேண்டியது இதுவே:

கீழே உள்ள கூப்பனை நிரப்பி அத்துடன் ரூபா 100 காசுக்கட்டளையாக மேற் கண்ட முகவரிக்கு (18.07.97) அன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ அனுப்பி, உங்கள் குழந்தையும் புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்ற வாய்ப்பளியுங்கள். பரீட்சைக்கான நேரம், திகதி, இடம், பரீட்சார்த்திகளுக்கு தபால் மூலம் அறிவிக்கப்படும்.

METRO COMPUTER WORLD
NO. 17, Charlemont Road, Colombo-06. Tel: 501424

Speciman Form
Full name :- ..........................
Address :- ..........................
School :- ..........................
Sex :- .............. Age:- .............. Phone:- ..............